நவம்பர் 21: டெல்லியில் சோவியத் கலைவிழாவின் நெஞ்சைக்க[illegible]

துவக்க விழா

இந்தியாவில் சோவியத் கலை விழா வரும் நவம்பர் 21ஆம் தேதி துவங்க இருக்கிறது. டெல்லியில் நடைபெறும் இதன் துவக்க விழா நிகழ்ச்சியில், புகழ்பெற்ற போல்ஷாய் பாலே நாட்டிய மன்றத்தின் நிகழ்ச்சிகளும், சோவியத் சர்க்கஸ் நிகழ்ச்சிகளும், பல்வேறு சோவியத் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், சோவியத் ஓவியர்களின் படைப்புக்க[illegible] கொண்ட கண்காட்சிகளும் இடம் பெறும். இந்தத் தகவலை சோவியத் கலைவிழாவின் தலைமை அமைப்பாளர் விலேன் கோமோவ்கோ தெரிவித்தார்.

இந்த வருடம் ஜூலை 3ஆம் தேதி, கிரெம்ளின் சதுக்கத்தில் நடைபெற்ற இந்தியக் கலைவிழாவின் துவக்க நிகழ்ச்சியைப் போலவே, நவம்பர் 21ஆம் தேதி டெல்லி விஜய் சதுக்கத்தில் சோவியத் கலைவிழாவின் துவக்க விழா நடைபெறும். சோவியத் நாட்டில் உள்ள 15 சோவியத் குடியரசுகளின் மக்கள் வாழ்க்கையைச் சித்தரிக்கும் 26 அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெறும். மோட்டார் சைக்கிள்களில் விளையாட்டு வீரர்கள் பவனி வருவா[illegible] அதனைத் தொடர்ந்து சோவியத் கலைவிழாவில் பங்கேற்கும் அனைத்து சோவியத் குடியசுகளையும் சேர்ந்த கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், போல்ஷாய் நாட்டிய மன்றத்தின் நடனக்காரர்கள் அனைவரும் சிறப்பு ஊர்திகளில் நிகழ்ச்சிகளை நடத்தியபடி ஊர்வலத்தில் வருவார்கள். நடனக்கா[illegible] தொடர்ந்து இளைஞர்களும், சர்க்கஸ் கலைஞர்களும் வருவார்கள். ஒரு பெரிய சோவியத் இசைக்குழு வாசிக்கும் இசைக்கேற்பவே அனைவரும் அணிவகுத்து, ஆடிப்பாடி வருவார்கள். ஊர்வலம் ராஜ்பாத் வழியாக இந்தியா கேட் சென்றடையும்.

வந்தேமாதரம்

"ஜோதி"

மூன்றாவது சுடர் முதற் பகுதி

பொருள் அடக்கம்

அரசியல்

	சுடர்—பக்கம்
அடுத்த காங்கிரஸ்	5 – 8
ஆங்கிலோ-ருஷ்ய ஒப்பந்தம் நிறைவேறுமா?	1 – 94
ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்!	6 – 86
இந்திய தேசிய இயக்கம் எப்படி ஆரம்பித்தது?	2 – 44
இந்திய தேசிய இயக்கம் எப்படி வளர்ந்தது?	4 – 26
இலங்கையில் இந்தியர்கள்	3 – 17, 4 – 54
இன்றைய சமுதாயம் சீரழிந்து கொண்டு வருகிறதா?	2 – 22
உலக சமாதானத்தை அளிப்பது எது? காந்தியமே	1 – 24
உலக வல்லரசுகளின் படை பலம்	4 – 16 6 – 73
உலகத்தின் விஸ்தீரணம்	6 – 73
எந்தெந்த நாடுகளில் எத்தனை எத்தனை தபாலாபீஸ்கள் இருக்கின்றன?	1 – 12
ஐரோப்பிய நாடுகளின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும்	3 – 56
ஓ! இந்தியனே!	5 – 50 6 – 58
கண்டங்களின் விஸ்தீரணம்	6 – 25
காங்கிரஸ் கமிட்டி தீர்மானங்கள்	4 – 12
காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம்	5 – 25
காங்கிரஸ் வழி காட்டுகிறது	6 – 16
காந்தியடிகளும் காங்கிரஸும்	6 – 9
சமஷ்டி அரசியலின் நிருவாகம்	2 – 69
சமுத்திரங்களின் விஸ்தீரணம்	6 – 31
சரியான தலைமை வேண்டும்—ட்ரோட்ஸ்கியின் கருத்து ...	2 – 17
சீன ஜப்பானிய யுத்தம்-ஒரு பரிசீலனை	1 – 13
சுதந்திரத்தின் தேவைகள் யாவை? ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்	2 – 55, 3 – 46, 4 – 46, 6 – 75
சோவியத் ருஷ்ய வரலாறு	5 – 9
டான்ஸிக்	2 – 113
தென்னாப்பிரிக்க ஏழை இந்தியர்களின் உரிமைகள்	4 – 17
நாமும் நமது நாடும்	6 – 21
பார்லிமெண்ட் எப்படி நிருவாகம் செய்கிறது?	2 – 49
பின்லாந்து—என்ன அக்கிரமம்!	6 – 29

கதிர்—பக்கம்

பொதுவுடமைக் கொள்கை-ஒரு வியாக்கியானம்	1 – 17
போலந்தைப் பற்றி	3 – 13
போலந்திலுள்ள முக்கிய நகரங்களின் ஜனத்தொகை	4 – 53
ருஷ்யா, ஏன் ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்துகொண்டது?	6 – 32
யுத்தமும் இந்தியாவும்	3 – 26
யுத்தத்தைப்பற்றி சில விவரங்கள்	4 – 31
யுத்தச் செய்திகளில் நகைச்சுவை	4 – 79
வல்லரசுகளின் படை பலம்	2 – 107
வில்ஸனுடைய பதினான்கு தத்துவங்கள் என்ன?	1 – 67
ஜெர்மன் ஏகாதிபத்தியத்திலுள்ள முக்கிய நகரங்களின் ஜனத்தொகை	4 – 61
ஜெர்மன்—ருஷ்ய ஒப்பந்த விவரம்	6 – 35
ஸம ஸமாஜம்	5 – 60

அன்றாட உலகம்

தினசரி நிகழ்ச்சிகள் 1 – 99, – 2 – 108, 3 – 61, 4 – 73, 5 – 77, 6 – 82

இலக்கியம்-கலை முதலியன

இருவகை மனிதர்	1 – 56
எண்ணினால் மட்டும் போதாது—செய்யவும் வேண்டும்	3 – 24
எனது சகோதரர்—ஜவஹர்	4 – 68
ஒழுக்கத்திற்கு உயர்வு கொடு	1 – 60
கண்ணன் என்று ஏன் கூறினர்?	1 – 63
கம்பர்— 1 – 49, 2 – 41, 3 – 42, 4 – 39,	5 – 44
கவுண்ட் லியோ டால்ஸ்டாய்-அவர் தம் மனைவிக்கு எழுதின கடைசி நிருபம்	2 – 97
காதலர் இருவர்	1 – 91
காதற் பிரிவு	2 – 105
சங்கீதத்தின் பெருமை	6 – 47
சிந்தனையை அடக்குந்திறன்	3 – 22
சோர்வு கொள்ளாதே	6 – 44
நவராத்திரி	4 – 20
நாலடி வள்ளுவர்	1 – 89
புலவர் பாடும் புகழாளர்	5 – 23
மனக் கோயில்-கடவுள் வாழிடம்	2 – 101
மன நிலையும் உறுதிப்பாடும்	6 – 74
மானிட சமூகத்தின் தீர்க்கதரிசி	3 – 7

சரித்திரம்

அம்பிகா சரண் மஜூம்தார்	3 – 57

கதிர்—பக்கம்

அன்னி பெஸண்ட் .... 4 – 62
இராமகிருஷ்ண சங்கத்தின் இலட்சியங்களும் அது
செய்துவரும் சேவைகளும் .... 5 – 71
தந்தையைக்காத்த தனயன் .... 6 – 65
திலகரும் சரித்திர ஆராய்ச்சியும் .... 3 – 38
பாலகங்காதர திலகர் .... 6 – 62
புராதன எகிப்து .... 1 – 57, 2 – 99
பூபேந்திர நாத்வசு .... 1 – 54
மானிட சமூகத்தின் வளர்ச்சி .... 4 – 5
ஜோன் ஆப் ஆர்க் .... 4 – 57
ஸத்யேந்திர பிரசன்ன சின்ஹா .... 2 – 91
ஸையத் ஹாஸன் இமாம் .... 5 – 66
ஹைதர் அலியின் உயரிய தன்மைகள் .... 1 – 105

சிறுகதைகள்

அக்கா 2 – 33, 3 – 33, 4 – 33, 5 – 33, 6 – 49
கேசவன் ஊமிரி .... 5 – 28
நல்லபுத்தி .... 1 – 83
நான்கு பரிசுகள் .... 1 – 46
நெப்போலியன் எங்கே? .... 3 – 53
மணி அடிப்போன் .... 3 – 74
வீர பாலகர்கள் .... 6 – 19

ஞானக் களஞ்சியம்

வேதாந்த ரகசியங்கள் 1 – 42, 4 – 23, 5 – 40, 6 – 54

துலாக்கோல் (புத்தக விமரிசனம்)

அரசகுல தூதன் .... 2 – 93
அரவிந்தரும் அவரது யோகமும் .... 2 – 95
உயிரின் உண்மை-அல்லது நாம் உயிரா? உடலா? 2 – 94
கப்பிப் தர்பார் .... 3 – 70
கன்யா குமாரி முதலிய கதைகள் .... 5 – 70
கூட்டுறவு .... 2 – 95
சக்தி .... 3 – 72
சுகந்தா அல்லது காதலின் சோதனை .... 3 – 69
தானே தமிழ் கற்கும் முறை .... 3 – 72
தேவி சௌதுராணி .... 3 – 68
படுகளத்தில் பாரத தேவி .... 5 – 70
மங்கையர்க் கரசியின் காதல் முதலியன .... 5 – 69
லெனின் .... 5 – 68
ஹிட்லரும் மகா யுத்தமும் .... 5 – 68

கதிர்—பக்கம்

தமது நியாய சபை

தலையங்கம் .... ஒவ்வொரு கதிரின் முதற் பக்கத்தில்

பாடல்கள்

உடலும் உயிரும் .... 2 – 104
குழந்தைகள் காண்பதுஎன்ன? .... 3 – 60
குழந்தை மகாராஜா .... 2 – 54
காதல் வேதனை .... 6 – 40
சட்டம் .... 1 – 104
தமயனின் கடிதம் 1 – 87, 2 – 31, 4 – 67, 5 – 31, 6 – 88

பொருளாதாரம்

இந்தியாவில் தொழில்வரி .... 1 – 62
இந்தியாவும் மூலப் பொருள்களும் .... 5 – 56
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் .... 1 – 45
உலகத்தில் எத்தனை டெலிபோன்கள் இருக்கின்றன? 3 – 21
உல்கத்தில் உற்பத்தியாவதென்ன? .... 1 – 48
எந்தெந்த நாட்டில் எவ்வளவு எவ்வளவு தங்கம் இருக்கிறது? 1 – 12
கல்வி யறிவும் இலக்கறிந்து இலாபம் பெறுதலும் 6 – 26
மோட்டார் உற்பத்தி .... 1 – 98
வியாபாரக் கப்பல்களின் விவரம் .... 2 – 96
ஜப்பானுடைய வியாபாரப் போட்டி .... 1 – 66

விஞ்ஞானம்

கண்ணால் காண்பதுவும் பொய்யா? .... 2 – 83
சந்திரன் .... 5 – 4
நட்சத்திரங்கள் 6 – 40
பூமி அசைவதேன்? .... 1 – 73
மனிதனுடைய வருங்கால வாழ்க்கை எப்படி இருக்கும்? .... 1 – 110

ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 பிரமாதி௵ ஆடி௴ ஆகஸ்ட் 1939 கதிர் 1

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	1
சீன ஜப்பானிய யுத்தம்—ஒரு பரிசீலனை —தே. ஏகாம்பரம்	13
பொதுவுடைமைக் கொள்கை—ஒரு வியாக்கியானம்	17
உலக சமாதானத்தை அளிப்பது எது?—காந்தீயமே —பரதன் குமரப்பா	24
நல்ல புத்தி —எஸ். கிருஷ்ணன்	33
வேதாந்த ரகசியங்கள் —ரா. சீனிவாசன்	42
நான்கு பரிசுகள் —ஸ்ரீ. ராமச்சந்திரன்	46
உலகத்தில் உற்பத்தி யாவ தென்ன?	48
கம்பர் —நா. லக்ஷ்மீநரசிம்மம்	49
பூபேந்திரநாத் வசு —'ஒரு காங்கிரஸ்வாதி'	54
இருவகை மனிதர்	56
புராதன எகிப்து —'துரோணன்'	57
ஒழுக்கத்திற்கு உயர்வு கோடு —வ. பார்த்தசாரதி	60
இந்தியாவில் தொழில் வாரி	62
கண்ணன் என்று ஏன் கூறினர்! —எஸ். கே. நாராயண ஐயர் B. A. B. L.	63
ஜப்பானுடைய வியாபாரப் போட்டி —மா. செ.	66

பூமி அசைவதேன்?
—'விஞ்ஞான போதகர்' 73

தமயனின் கடிதம்—5
—'தேவிதாசன்' 87

நாலடி வள்ளுவர்
—மு. முத்துராமலிங்கம் 89

காதலர் இருவர்
—சங்கர நடராஜன் 91

ஆங்கிலோ—ருஷ்ய ஒப்பந்தம் நிறைவேறுமா?
—ஹென்ரி உல்ப் 94

அன்றாட உலகம் 99

சட்டம்
—ரா. ஸ. சி. 104

ஹைதர் அலியின் உயரிய தன்மைகள்
—வி. எம். நாகேசுவர சாஸ்திரி 105

வருங்கால வாழ்வு எப்படி இருக்கும்?
—ச. முனிஸ்வாமி பிள்ளை 110

அனுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி, ஒரு வருடப் பலன் யெழுத ரூ. 5. ஆயுள் பூராவாகப் பலன் யெழுத ரூ. 25. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

Lt col. கிரஹாம் சேடன் ஹட்சிசன் D. S. O. M. C. 'W. பிளான்' 'சாபு' இவைகளின் ஆசிரியர் லண்டன், 19-12-38-ல் தெரிவிப்பதாவது:

இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள் மிக அதிசயிக்கத் தக்க, உண்மையான அனுபவத்திலிருந்து வருகின்றன. எனக்கு மிகவும் முக்கியமான சில விஷயங்களில் இவர் மிகத் தெளிவான அடையாளங்களைத் தெரிவித்தார். அதன் மூலமாக நான் சௌகரியம் அடைந்து வருகிறேன்.

விலாசம்:—பிரபசர் காழியூர்-

கோவிந்தாச்சாரி,

3-2, பிராமின் ரோட், மயிலாப்பூர், சென்னை.

ஜோதி பிரஸ்,

47—31வது வீதி, இரங்கூன்.

இங்கிலீஷ், தமிழ், பர்மா பாஷைகளில் அச்சு வேலைகள் செய்யப்படும். பர்மா பாஷையிலும் அண்டிமாண்ட் நகைச்சீட்டு முதலியவைகள் செய்து கொடுக்கப்படும்.

அழகிய சுத்தமான வேலைப்பாடு.

நியாயமான சார்ஜ்.

விவரங்களுக்கு எழுதுக

பாபு ராஜேந்திர பிரசாத்

நமது ராஷ்ட்ரபதி

ஜோதி

சுடர் 3 ஆகஸ்ட்-1939 கதிர் 1

மூன்றாவது 'ஜோதி' இரண்டு வயதைக் கடந்து, மூன்றாவது வருஷத்தின் முதற் படியை மிதிக்கிறது. அதன் நடையிலே ஒரு வேகம்; அதன் பார்வையிலே ஒரு தன்னம்பிக்கை; அதன் புன் சிரிப்பிலே 'எந்நாளும் இடர்ப் படோம்' என்ற ஓர் உறுதி. இவைதான் 'ஜோதி'யின் ஆயுதங்கள்; ஆபரணங்கள் கூட.

கழிந்து போன வாழ்க்கையைக் கண்டு இரக்கப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள், எதிர் காலத்தில் இறக்கு முகத்தில் போக வேண்டியவர்கள்தான். எவனொருவன், நம்பிக்கையோடு முன்னோக்கிப் பார்க்கிறானோ அவனே தனது பின்னோக்கிய பார்வையிலும் திருப்தி கொள்கிறான். இந்த நம்பிக்கையும் திருப்தியும் இல்லா விட்டால் நிகழ் காலத்தில் யாருமே வாழ்ந்து கொண்டிருக்க முடியாதல்லவா?

'ஜோதி'யின் இரண்டாவது வருஷத்தில் உலகத்தில் எத்தனையோ சம்பவங்கள் நடைபெற்று விட்டன. ஒரு சில நாட்டார் ஆனந்த பாஷ்பம் பொழிந்தனர்; இன்னொரு சில நாட்டார் துக்கக் கண்ணீர் விட்டனர். ஜெக்கோ ஸ்லோவேகியர்கள் துக்கக் கண்ணீர் பெருக்கினார்களானால், ஜெர்மானியர்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். அல்பேனியா அழுததானால், இத்தலி சிரிக்க வில்லையா? ஆனால் ஸ்பெயினில் மட்டும் அடிவயிற்றுக் குமுறலோடு, உரத்த சிரிப்பும் கேட்டது. ஏனென்றால் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளின் போராட்டமல்லவா இது? இந்த அழுகையிலும் சிரிப்பிலும் முறையே ஜன நாயக வல்லரசுகளின் ஈனஸ்வரத்தையும் பாசிஸ சக்திகளின் போர் முழக்கத்தையும் நாம் நன்றாகக் கேட்டோம். யுத்த தருமம், மானிட உணர்ச்சி, வாக்குப் பிறழாமை, மனவமைதி முதலியவெல்லாம் எங்கேயோ காற்றாய்ப் பறந்தோடிப் போய் விட்டன. பயமுறுத்தல்களினாலேயே பாசிஸப் பிரதிநிதிகள் காரியங்களைச் சாதித்துக் கொண்டு வருவதைக் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

'ஜோதி'யின் சென்ற ஆண்டிலே நாம் மறந்தாலும் நம்மை மறக்க

விடாமல் நமது இதயத்திலே—ஏன்? நியாய புத்தியுள்ள எல்லாருடைய இதயத்திலேயுந்தான்—சதா வந்து முட்டுவது ம்யூனிக் ஒப்பந்தந்தான். 'ம்யூனிக் ஒப்பந்தம்' என்ற இந்தச் சொற்றொடரானது, 'ம்யூனிக் துரோக'மாகப் பரிணமித்து விட்டது. ஸ்ரீ நெவில்லி சேம்பர்லேன், ஜெர்மனியின் கூடலையே விரும்புகிறார். இடையிடையே ஊடல் நிகழ்ந்து வருகின்றதேயானாலும், அஃது இறுதியில் கூடலுக்குத்தான். ஆஸ்திரியாவை, ஜெர்மனி ஏப்பம் விட்ட காலத்திலேயே, பிரான்ஸும், பிரிட்டனும் அதனைச் சிறிது எச்சரிக்கை செய்திருந்திருக்குமானால், ஜெக்கோஸ்லோவேகியாவும், அல்பேனியாவும் இந்தக் கதிக்கு ஆளாகியிரா. ஆனால், 1932ம் வருஷம் மஞ்சூகோவை, ஜப்பான் ஆக்ரமித்துக் கொண்டதல்லவோ இதன் மூல காரணம்?

ஜெக்கோஸ்லோவேகியா, அல்பேனியா முதலிய நாடுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு, பால்கன் நாடுகளில் ஒரு வித திகில் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாகவே, உலகத்தில் விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் சுருங்கியுள்ள சிறிய நாடுகள் இனிச் சுதந்திரமாக வாழ முடியுமா, அல்லது பெரிய ஏகாதிபத்தியங்களின் ஆடற் கருவிகளாகவே இவை இனி இருக்க வேண்டுமா வென்கிற பல கேள்விகள் இப்பொழுது எழுப்பப்படுகின்றன. இந்த நிலையில் ஐரோப்பாவின் கீழ்ப் பாகத்திலே யுள்ளவையும், 1918ம் வருஷத்திற்குப் பிறகு சிருஷ்டிக்கப் பட்டவையுமான சிறிய நாடுகள் எந்த நிமிஷத்திலும் தமது குரல்வளை நெருக்கப்படலா மென்று மனங் குழம்பி யிருப்பதில் என்ன ஆச்சரியம்? ஜெர்மானிய அரசாங்கத்தின் உயர்தர உத்தியோகஸ்தர் சிலர், வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொள்வதாகவும், ஏற்கனவே இருந்த சிநேகிதத்தை ஊர்ஜிதப் படுத்திக் கொள்வதாகவும் காரணங்கள் சொல்லிக்கொண்டு ஜெர்மனிக்குத் தென் கிழக்கிலுள்ள எல்லா நாடுகளுக்கும் சென்று வந்திருக்கிறார்கள். இதன் விளைவு என்ன வாகு மென்று மேற்படி சிறிய நாடுகள் ஏக்கத்திலே மூழ்கி யிருக்கின்றன. ஏனென்றால், ஜெர்மனியின் சிரிப்பிலே, அதன் கை குலுக்கலிலே இவை அவ்வளவு அச்சங் கொண்டிருக்கின்றன. ஜெர்மானிய ஏகாதிபத்தியம், ஐரோப்பாவின் தென் கீழ்ப் பக்கமாக விஸ்தீரணமடைய வேண்டுமென்று பிஸ்மார்க், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே வகுத்து வைத்துப் போயிருக்கிற திட்டத்தை நடைமுறையில் கொணர்ந்து காட்டவேண்டுமென்ற ஹிட்லருடைய ஆவலை இவை நன்கு உணர்ந்திருக்கின்றன. அச்சங்கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்? பொதுவாகப் பார்க்கிற போது, சென்ற ஒரு வருஷத்தில், பொதுவுடைமைக் கொள்கையை பரவவிடாமல் செய்வதாகிற வியாஜத்தை வைத்துக் கொண்டே நாஜீப் பிரசார மானது, உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நடைபெற்று வந்திருக்கிறது. ஜனநாயக சக்திகளும் இதற்குத் துணை செய்த வண்ணமாயிருக்கின்றன.

மத்திய ஐரோப்பாவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் அடிக்கடி ஏற்பட்டு வருகிற அமளி குமளிகளைக் கண்

டோ, கொந்தளிப்புகளைக் கண்டோ, ருஷ்யா, சிறிது கூட அசைய வில்லை. ஐரோப்பிய வல்லரசுகளை யெல் லாம் அமைந்து ஓர் அசட்டைப் பார்வை பார்க்கிற தென்று, அதனுடைய மௌனத்தினால் நன்கு தெரிகிறது. தன்னைப் பற்றிச் செய்யப்படும் தவருன பிரசாரங்கள் பலவற்றையும் பார்த்து அது பரிகாசச் சிரிப்பு சிரிக் கிறது. 1918ம் வருஷம் லெனின் தலைமையில் தொடங்கப் பெற்ற புரட்சியை அநுஷ்டானத்தில் கொண ர்ந்திருப்பதோடு ஸ்டாலின் திருப்தி யடையவில்லை. அதனை ஸ்திரப் படுத்திக் கொள்வதிலும், அதன் மூலமாக ருஷ்ய மகா ஜனங்களுக்கு ஒரு புதிய வாழ்வைக் காட்டிக் கொடுப்பதிலும் அவன் கவன மெல்லாம் சென்று கொண்டிருக் கின்றன.

ஸ்பெயினில் பாசிஸம் வென்று விட்டது. ஜன நாயக சக்திகள், நடு நிலைமை வகிப்பதாக வியாஜம் வைத் துக் கொண்டு, இந்த வெற்றிக்குத் துணை செய்தன. பிராங்கோ தனது சகோதரர்களின் ரத்த வெள்ளத் திலே தன் வெற்றிக் கொடியை நாட்டியிருக்கிறன். ஆனல் இவன் தனியனுகவே இருந்து இந்தக் கொடி யைப் பாது காத்துக் கொண்டு வரு வானு அல்லது ரோம்—பெர்லின் அச்சின் ஒரு கருவியாக இருந்து வரு வானு என்பது வெகு சீக்கிரத்தில் தெரிந்து விடும். ஏனென்றல், இவன் சமீபத்தில் விடுத்த ஓர் அறிக்கையில் ஐரோப்பிய யுத்தம் ஏற்படுமே யானல், ஸ்பெயின் நடுநிலைமை வகிக்கும் என்று கூறியி ருக்கிறன். இப்படி இவன் கூறுவது ஸ்பெயினுடைய புராதன சரித்திரத்தி லிருந்து கற்றுக் கொண்ட பாடமா யிருக்கலாம். ஆனல், இவனுடைய வெற்றிக்கு, பிரிட்டன், பிரான்ஸ் முத லிய நாடுகள் எப்படி நடுநிலைமை வகித் துத் துணை செய்தனவோ அதைப் போலவே, இவனும் நடுநிலைமை வகி த்து ரோம், பெர்லின் அச்சின் வெற் றிக்குத் துணை செய்ய மாட்டானு? இந்த அர்த்தத்தைத்தான், ஸ்பெயின் நடு நிலைமை வகிப்பதாகச் சொல்லப் படும் வார்த்தைக்கு நாம் கொள்ள முடியும். பாசிஸ சக்தி வேறே, ஜன நாயக சக்தி வேறே என்று பிரித்துக் காட்டாத நிலைமை ஏற்பட்டிருக்கிற போது, அந்தச் சக்திகளின் தாசானு தாசனுயிருக்கிற பிராங்கோ, நடுநிலை மை வகிப்பதாகச் சொல்வதில் என்ன அர்த்தமிருக்கிறது? மேற்கு ஐரோப் பிய வல்லரசுகளுக்கும் மத்திய ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் யுத்தம் அவ்வளவு லேசில் ஏற்பட்டுவிடா தென்பதை இவன் நன்குணர்ந்திருக் கிறன். ஏனென்றல் இவையாவும், ஒரு முனையி லிருந்து பிரிகிற கயிறு கள் தானே! இந்தக் கயிறுகளுக் குள்ளே ஏதேனும் பிணக்கு ஏற்படு மானல் அப்பொழுதுதான் ஸ்பெயின் பாடு ஆபத்தாயிருக்கும். ஏனென் றல் அதன் பூகோள அமைப்பு அந்த மாதிரி அமைந்திருக்கிறது. இந்தப் பிணக்கு ஏற்பட வேண்டுமென்று தான் ருஷ்யா விரும்புகிறது. ஆனல் இந்தப் பிணக்கு எப்பொழுதாகிலும் ஏற்பட்டுத்தானுக வேண்டும். அதற்கு ஸ்பெயினே காரணமா யிருக்கும்.

1938ம் வருஷம் நவம்பர் மாதம் கமால் அத்தாதுர்க் இறந்துவிட்ட பிறகு, துருக்கி சிதறிப்போய், பழைய படி தங்களுக்கு ஆகாரப் பொருளாக அமையுமோ வென்று எதிர் பார்த்

துக் கொண்டிருந்த ஐரோப்பிய வல்லரசுகள் ஏமாந்து போய்விட்டன. கமாலின் ஜீவிய தசையிலேயே, துருக்கியர்களின் நம்பிக்கையைப் பெற்றுவிட்ட இஸ்மெத் இனோனு, துருக்கியக் குடியரசின் தலைமைப்பதவியை ஏற்றுக்கொண்டு, கமாலின் புகழை மாய்க்கவிடாமல் பாதுகாத்து வருவது யாவராலும் போற்றப் படத்தக்கதாகும். துருக்கி விஷயத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் அடைந்துள்ள ஏமாற்றம் ஸ்திரப்பட்டுப் போக வேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

வறண்ட பாலை வனத்தில் தாகத்திற்காக அலைந்து திரியும் ஒரு பிரயாணியைப் போல், பாலஸ்தீனத்தில் அராபியர்கள், தங்கள் சுதந்திர தாகத்தைத் தணித்துக் கொள்ள வேண்டி, இல்லாத அல்லல்களை அநுபவிக்கிறார்கள். சென்ற மூன்று வருஷ காலமாகவே, இங்கு அடக்குமுறை தேவதை தனது உக்கிர ஸ்வரூபத்துடன் திருவிளையாடல் புரிந்து வருகிறாள். அடக்கினாலும் அடங்குவோராயில்லை அராபியர்கள். விடுதலையில் விழைவு கொண்டோர் அனைவருடைய அநுதாபமும் இவர்கள்பால் இருக்கிறது.

இத்தலியின் பலாத்கார சக்தியானது, எதியோப்பியாவை ஆக்ரமித்துக் கொண்டு விட்டதேயானாலும் எதியோப்பியர்களின் இதயம் இன்னும் பொங்கிக் கொண்டுதானிருக்கிறது. ஒரு சில முக்கியமான நகரங்களிலேதான் இத்தாலியர்களின் அதிகாரம் சென்று கொண்டிருக்கிறதாகவும், பெரும் பாகத்தில் எதியோப்பியர்கள் தங்கள் பாரம்பரைச் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முனைந்து நிற்கிறார்களென்றும் சொல்லப்படுகின்றன. இவற்றிலெல்லாம் உண்மை இருக்கிறதா இல்லையாவென்பதைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை. இந்தச் சம்பவங்களிலிருந்து ஒரு விஷயம் மட்டும் தெளிவாகிறது. பிறருடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதற்காகவும், உலகத்தில் தருமத்தை நிலைநாட்டுவதற்காகவுமே வாழ்ந்து கொண்டிருப்பதாகப் பறை சாற்றிக் கொண்டிருப்பதில் ஓயாத மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளான பிரான்ஸும் பிரிட்டனும், பரம்பரையாக அநுபவித்துக் கொண்டிருக்கும் சுதந்திரம் எங்குப் பறிமுதல் செய்யப்பட்டு விடுமோவென்று ஏங்கி நிற்கும் ஜாதியாரையும், இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற முயற்சி செய்யும் ஜாதியாரையும் பார்த்து ஒதுங்கியே நிற்கின்றன. ஓர் அநுதாப வார்த்தை கூட இவைகள் வாயிலிருந்து எழவில்லை. அப்படியானால் இவைகளின் நியாய உணர்ச்சியும், தருமத்தைக்காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணமும் சுயநலத்திலேதான் வந்து முடிகின்றன என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

1937ம் வருஷம் ஜூலை மதாம் 7ந் தேதி தொடங்கப் பெற்ற சீன-ஜப்பானிய யுத்தமானது, இன்னும் ஓய்ந்தபாடில்லை. சீனாவுக்கு ஆள் பலம் அதிகம். ஜப்பானுக்கு ஆயுத பலம் அதிகம். இவை இரண்டுக்கும் ஏற்பட்ட போராகவே இதனைக் கொள்ள வேண்டும். ஜப்பானுடைய ஏகாதிபத்திய ஆசையானது, மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளின் அதைரியத்தினால் வரவர விருத்தியடைந்து

வருகிறது. அது மட்டுமல்ல; அந்த ஐரோப்பிய வல்லரசுகளையே ஒரு துரும்பாக மதிக்கிறது. இல்லாவிட்டால், டீன்ஸ்டீன் நகரத்தை முற்றுகை போட்டுக் கொண்டு, பிரிட்டனை தனக்கு இணங்கிப் போகுமாறு நிர்ப்பந்தப் படுத்துமா? கீழைப் பிரதேசத்தில் இந்தோ-சைனா, பிரான்ஸுக்குச் சொந்தமாயிருந்த போதிலும், தன்னை அஃது ஒன்றுஞ் செய்ய முடியாதென்று துணிந்து தானே, அதற்குச் சொந்தமான ஹைனன் தீவை ஜப்பான் ஆக்ரமித்துக் கொண்டது? சிலர் தெரிந்தோ தெரியாமலோ ஒருவனைத் திடீரென்று கன்னத்தில் அடித்து விடுவார்கள். அடிபட்டவன் திரும்பிப் பார்த்தால் 'ஓ! உன்னையா அடித்தேன்! தெரியாமல் கைபட்டு விட்டது. மன்னிக்கவும்' என்பார்கள். இவர்கள் கேட்கும் மன்னிப்புக்கோ, இவர்களுக்குக் கொடுக்கும் மன்னிப்புக்கோ ஏதேனும் அர்த்த மிருக்கிறதா? இதைப்போல் தான் இருக்கிறது ஜப்பான், ஐரோப்பிய வல்லரசுகளிடம் நடந்து கொள்கிற மாதிரியும். இந்த வேடிக்கை,—ஆம்; லட்சக்கணக்கான சீனர்களின் துயரத்தின் மீது நடைபெறும் இந்தக் கேளிக்கை—இன்னும் எவ்வளவு காலம் நடைபெறும் என்பது தெரியவில்லை. ஆனால் சீனா, நீண்ட காலம் வரை ஜப்பானுடைய ஆயுத பலத்தை எதிர்த்துக் கொண்டிருக்க முடியுமாவென்று நாம் அஞ்சுகிறோம். தவிர, சீனாவுக்கு வெளி உதவி ஒன்றும் கிடைக்கக் கூடாதவகையில் ஜப்பான் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. பிரிட்டன் சீனாவுக்கு ஏதோ உதவி செய்து வருவதாக நினைத்துத் தானே, ஜப்பான் டீன்ஸ்டீனை முற்றுகை யிட்டது கூட? எப்படியாயினும், சீனாவில் ஜப்பான் ஏதோ ஒரு விதமாக ஆதிக்கங் கொண்டு விடலாம். சமீபத்தில் இல்லாவிட்டாலும் இன்னுஞ் சிறிது காலத்திற்குள் என்று வைத்துக் கொள்ளலாமே. ஆனால் இந்த ஆதிக்கத்தை பிரிட்டனோ அமெரிக்காவோ மனப் பூர்வமாக ஏற்றுக் கொண்டு, அதனை நீடித்து நிற்க வைக்குமா? அப்படி நிற்க வைக்குமானால், அது, பிரிட்டன், கீழ் நாட்டிலே வகித்து வரும் ஆதிக்கத்திற்குப் போட்டியா யிராதா? இந்தப் பிரச்னைகளை பிரிட்டனோ, ஜப்பானோ சிந்திக்காமலில்லை. இந்தச் சதுரங்க ஆட்டத்தில், யாருடைய காய் முன்னே தள்ளி வைக்கப்படுகிறதென்பது போகப் போகத் தான் தெரியும்.

அமெரிக்கா, சமாதானப் பேச்சை வாயால் முழக்கிக் கொண்டு, யுத்த தளவாடங்களை எல்லா நாடுகளுக்கும் விற்று பணச் செழிப்பிலே புரண்டு வருகிறது. தென்னமெரிக்க நாடுகளிலே நாஜீயப் பிரசாரம் தீவிரமாக நடந்து வருகிறது. மெக்ஸிகோவில், அந்நியர்களின் எண்ணெய்க் கிணறு சம்பந்தமான உரிமைகளை அந்த நாட்டின் சர்வாதிகாரியான லஜாரோ கார்டெனாஸ், பறிமுதல் செய்து விட்டது கூட இந்தப் பிரசாரத்தின் விளைவு என்று சொல்லப்படுகிறது. பொதுவாக, அமெரிக்கா கண்டத்தில் அமைதி குலையவில்லை. ஆனால், அது நாகரிகத்தின் மேலேணியில் துணிந்து ஏறி நிற்பதால் அமைதி குலைந்து எந்த நிமிஷத்திலும் சரிந்து

விழலாம் என்ற அச்சம் அந்நாட்டாருக்கே ஏற்பட்டிருக்கிறது.

பொதுவாக உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும்—இந்தியாவைத் தவிர—யுத்தத் தளவாடங்கள் குவிக்கப்பட்டு வருகின்றன. தொழில் முதலாளிகள், கூடவே பணத்தையும் குவித்துக் கொண்டு வருகிறார்கள். இங்ஙனம் ஆயுதங்கள் குவிக்கப் படுவது, உலக சமாதானத்தைக் காப்பதற்குத்தான் என்று ஒவ்வொரு தேசத்து ராஜதந்திரிகளும் சொல்லிக் கொள்கிறார்கள். இப்படி இவர்கள் சொல்லிக்கொள்கிற போது, அறிவு உலகத்தைப் பார்த்து பரிகசிக்கிறார்களோ என்று நாம் கருத வேண்டியிருக்கிறது. பலாத்காரத்தின் மூலமாக அமைதியை நிலைநாட்ட முடியுமென்றால், நாகரிகம் என்ற சொல்லுக்கே அர்த்தமில்லாமல் போய் விடுகிறது. ஆனால், நிராபராதிகளான ஜனங்களின் மீது ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதும், நேர்முகமாக நின்று சத்துருக்களை வெல்ல முடியாத நிலைமையில் விஷப்புகைகளைப் பிரயோகித்து அவர்களைச் சித்திரவதைக்குட்படுத்துவதும் நாகரிகமாகக் கருதப்படுகிறபோது, அமைதி என்பதற்கு ஆயுதப் பெருக்கம் என்று பொருள் கூறப்படலாமோ என்னவோ?

இவ்வளவு ஆயுத மிடைவுகளிடையில், ஆகாய விமானங்களின் விர்ரென்ற சப்தத்துக் கிடையில் சர்வதேச சங்கம் எங்கே, என்ன செய்து கொண்டிருக்கிற தென்பது தெரியவில்லை. சமாதானத்தைக் காப்பாற்ற இந்தச்சங்கம் செய்துவரும் வேலைக்காகச் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட தேசங்கள், இதற்குக் காணிக்கை செலுத்தி வருகின்றன. ஒரு பாவத்தையுமறியாத இந்தியா கூட, வருஷா வருஷம் இதற்குக் காணிக்கை செலுத்தி வருகிறது. இந்தக்காணிக்கையில், ஏதோ ஒரு சிறு தொகை, பிரஸ்தாப வருஷத்தில் குறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. காணிக்கையைக் கூட்டுவதும் குறைப்பதும் இந்தியப் பொது ஜன அபிப்பிராயத்தின்படி நடைபெற வில்லை. ஆகையால், இந்தக்குறைவைப் பற்றி நாம் மகிழ்ச்சியடைய முடிய வில்லை. சர்வதேச சங்கத்தின் புதிய கட்டிடம் விசாலமாக்கப்பட் டிருப்பதை கொண்டு வேண்டுமானால் மகிழலாம். அந்த மகிழ்ச்சிக்குக் கூட இடங் கொடுக்க வில்லை நாஜீய உறுமல். ஏனென்றால், சர்வதேச சங்கம், தற்போது ஸ்விட்ஜர்லாந்திலுள்ள ஜினீவா நகரத்தில் இருக்கிறது. ஜெர்மனி, ஸ்விட்ஜர் லாந்தை ஆகாய விமானக் குண்டுகள் போட்டுத் தாக்கினால் என்ன செய்வதென்று, சர்வதேச சங்க அதிகாரிகள், சங்கக் கார்யாலயத்தை வேறெங்கேனும் மாற்றிக் கொள்ள உத்தேசித் திருப்பதாகச் சொல்லப் படுகிறது. அப்படியானால், சமாதான தேவதை, தான் ஒளிந்துக் கொள்வதற் கென்று ஓர் ஒதுக்கிடம் தேடிக்கொள்கிறாள் போலிருக்கிறது. சுருங்கக்கூறுமிடத்து, அதிகார மில்லாத பதவிபோலவும், ஈரமில்லாத இதயம் போலவும், பணமில்லாத பையைப்போலவும், பிரகாச மில்லாத விளக்கைப் போலவும் தற்போதைய சர்வதேச சங்கம் இருந்து கொண்டு வருகிறது.

இனி பாரத தேசத்தைச் சிறிது கண்ணெடுத்துப் பார்ப்போம். 'அடி

மைக்கு அரசியலே கிடையாது' என்று யாரோ ஒருவன் எப்பொழுதோ சொன்னானாம். இந்தியாவை மனத்தில் வைத்துக் கொண்டுதான் அவன் இவ்வாறு சொன்னானோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் தற்போதைய இந்திய அரசியல் நிலைமையை நாம் சிறிது மேற்போக்காகப் பார்த்தால் கூட, அரசியல் வாழ்வில் நாம் பாடங்கற்றுப் பண்படவேண்டிய அம்சங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றனவென்ற முடிவுக்கு வரவேண்டி யிருக்கிறது. இந்திய ராஜீய வாழ்வில், பிரஸ்தாப வருஷத்தில், குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் இரண்டு. ஒன்று திரிபுரி காங்கிரஸ். மற்றொன்று ராஜகோட்டை. இவ்விரண்டும், இந்திய அரசியல் உடலிலே அழுங்கியிருந்த பல புண்களை மேலே கிளப்பிவிட் டிருக்கின்றன. ஆனால் நம்மை நாம் அலசிப்பார்த்துக் கொள்ளக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தையும் இவை அளித்திருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் எவ்வளவு தூரம் உபயோகித்துக் கொண்டிருக்கிறோம் என்பது இனி மேல் தான் தெரிய வேண்டும். ஆனால் தற்போழ்து, இந்தியாவின் அறிவையும் இதயத்தையும் இருட்படலமே கவிந்து கொண்டிருக் கிறது. புதிது புதிதான அரசியல் கட்சிகள் தோன்றி, எப்படியோ ஒரு விதமாகக் கட்டுக் கோப்பாக அமைந்த காங்கிரஸைக் குலைத்து விடுமோ வென்று நாம் அஞ்ச வேண்டி யிருக்கிறது. ராஜகோட்டை நிகழ்ச்சிகள், காந்தீயத்திலே ஜனங்களுக்கு இருந்த நம்பிக்கையில் ஒரு தளர்ச்சியைக் கொடுத்துவிட்டன. திரிபுரி காங்கிரஸ் நிகழ்ச்சிகள், தீவிரவாதிகளின் தடுமாற்றத்தை அம்பலத்திற்கு இழுத்து விட்டன. ஆக, தேசத்தில், சரியான தலைவர் தோன்றுவதற்குரிய நிலைமையே ஏற்படவில்லை யென்ற உண்மையை நமக்கு இவை நன்றாக எடுத்துக் காட்டுகின்றன. நிலைமைக்குத் தகுந்தவாறு தலைவர் தோன்றுவாரா, அல்லது தலைவர் தோன்றி நிலைமையைச் சிருஷ்டிப்பாரா வென்பது ஒரு பெரிய பிரச்னைதான். ஆனால் இந்த இரண்டுமே நமது நாட்டில் உண்டாகவில்லை யென்பதுதான் நமது அபிப்பிராயம். தேசத்தின் ரத்தத்தில் ஊறிப் போயிருக்கிற 'கர்மம்', 'விதிப்பயன்' என்ற எண்ணங்களை இன்னும் நம்மை விட்டகலவில்லை. கடவுள் பேரிலே, கடவுளின் பிரதிநிதியாக அவதரித்திருப்பதாக நாம் யாராரைக் கருதிக் கொண்டிருக்கிறோமோ அவர்கள் பேரிலோ பாரத்தைப் போட்டுவிட்டு, 'கைகட்டிச் சும்மா யிருக்கிற சுபாவமும் நம்மை விடவில்லை. இவை மட்டுமல்ல. 'இவர்களாலேயே முடியாத காரியம் வேறு யாரால் முடியப்போகிறது' என்ற அவநம்பிக்கையும், 'இன்னாருக்குப்பிறகு தலைவராக வரத்தகுதியுடையவர் யாருமே இல்லையே' யென்ற ஏக்கமும் நம்மையறியாமலே நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த அவநம்பிக்கை, இந்த ஏக்கம் ஆகியவற்றிற்கும், 'பிரிட்டிஷார் இந்தியாவினின்று அகன்று விடுவாரானால், அதனைப் பரிபாலிப்பார் யார்? ஒரே ரத்தக்களரிதான்' என்று சர்ச்சில் கோஷ்டியார் கூறும் வாதத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை யென்றே நாம் கருதுகிறோம். இந்திய தேசிய மனப்பான்மையானது, சட்டநீதி என்கிற தண்ட

வாளத்தின் மீது போகத் தொடங்கி விட்டதுதான் இவை யனைத்திற்கும் காரணம். எந்த மிதவாத மனப் பான்மையி லிருந்து இருபது வருஷங் களுக்கு முன்னர் காங்கிரஸை விடு வித்ததாகக் கூறி வந்தோமோ, அதே மிதவாத மனப்பான்மையில்தான் இப் பொழுது இந்திய தேசிய வாழ்வு புகுந்து கொண்டிருக்கிறது. முன்னர் ஒரே ஒருவிதமான ஆட்சி முறைக்குத் தான் இந்தியப் பொது ஜனங்கள் உட் பட்டிருந்தார்கள். அதுதான் பிரிட் டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி முறை. இப்பொழுது, அந்தப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட காங் கிரஸ் ஆட்சிமுறையும் சேர்ந்து நம்மை ஆண்டு வருகின்றது. சட்டத்திற் குள்ளே சட்டம்! வட்டத்திற் குள்ளே வட்டம்! ஆக, ஏகாதிபத்தி யத்தின் இரும்புப்பிடி சிறிது கூடத்தளரவில்லை. அது நம்மைக் கொண்டே நம்மை இறுக்குகிறது. இதுதான், தற்போதைய இந்திய தேசிய வாழ்விலே நாம் காணும் விந்தை!

ஆயினும், பாரத தேசத்தின் நித்திய வாழ்விலே நமக்கு நிரந்தர நம்பிக்கையுண்டு. அந்த நம்பிக்கை யிலேதான் நாம் வாழ்ந்து வருகிறோம். கண்ணனையும் புத்தர் பிரானையும், மகாராணா பிரதாப சிம்மனையும் சிவாஜி யையும், ராமதாஸையும் விவேகா னந்தரையும் ஈன்று பெருமையடைந்த நமது தாய்த் திருநாடு, இப்பொழுது ஒரு வறண்ட பாலைவனமாகப் போய் விட்டதென்று நாம் கருதவில்லை. தற்பொழுது நமக்கு விழிப்பை அளித்ததாகச் சொல்கிற தலைவர் களைப் போல், நமக்கு விடுதலையை யளிக்கப் போகிற தலைவர்கள் இன் னும் எத்தனையோ பேர் தோன்றப் போகிறார்கள். அப்படித் தோன்ற மாட்டார்கள் என்ற சூசகம் ஏதே னும் ஏற்பட்டிருக்குமானால், பீஹார் பூகம்பத்தின் போதே, நமது பாரத தேசம் மண்ணோடு மண்ணாகிப் போயிருக்க வேண்டும். ஆகையால், நமது நாட்டின் எதிர் காலத்தைப் பற்றி நமக்கு எப்பொழுதுமே அவ நம்பிக்கை ஏற்பட்டது கிடையாது. துரதிருஷ்ட வசமாக ஜனங்களிடத் தில் பரவியுள்ள இந்த அவநம்பிக்கை யைப் போக்கி, தன்னம்பிக்கையை ஊட்டுவதுதான் 'ஜோதி' ஏற்றுக் கொண்ட தொண்டு. தன்னம்பிக்கை ஏற்பட்ட விடத்தில்தான், புதிய வாழ்வு உதயமாகும். இந்தப் புதிய வாழ்விலேதான் உலகனைத்தையும் நாம் காண விரும்புகிறோம். உலகம் சுபிட்சமடைய வேண்டுமானால் இந் தியா விடுதலையடைய வேண்டும். இந்த விடுதலைச் சங்கைத்தான், 'ஜோதி' சதா ஊதிக் கொண்டிருக் கிறது. இந்தச் சங்கநாதம், சிலரு டைய தூக்கத்தைக் கலைத்திருக்க லாம். அதனால் அவர்கள் நம்மீது ஆத்திரமும் படலாம். அதற்கு நாம் என் செய்வோம்?

'ஜோதி' வாசகர்களுக்கு நாம் ஒரு வார்த்தை கூற விரும்புகிறோம். அழகாக பைண்ட் செய்து அலங் காரமாக அலமாரியில் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க 'ஜோதி'யை நாம் வெளியிடவில்லை. இதனை வெளியிட்டு வயிற்றுப் பசி யைத் தீர்த்துக் கொள்ள வேண்டு மென்ற எண்ணமும் நமக்கு இல்லை. பிறரைத் தாக்கி இன்பமடையப்

வேண்டு மென்ற நோக்கமும் இல்லை. அத்தகைய இன்ப உணர்ச்சியே நமக்குக் கிடையாது. ஏதோ ஒரு கட்சியை அல்லது ஒரு தலைவரை, தூபதீபங் காட்டி ஆராதித்து, அதன் மூலமாக நம்முடைய செல்வாக்கை வளர்த்துக் கொள்ள வேண்டு மென்ற விருப்பமும் நமக்கு இல்லை. எனவே, நமது எழுதுகோல், புகழ்ச்சியிலோ, இகழ்ச்சியிலோ வரம்பைத் தாண்டிச் செல்லவே செல்லாது. ஏனென்றால் நாம் வாழ்வது 'நியாய சபை'யிலே அல்லவா?

'ஜோதி'யின் மூன்றாவ தாண்டு பிறந்து விட்டது. 'ஜோதி'யின் வாசகர்களும் முந்நூறு மடங்கு பெருக வேண்டும். ஏனென்றால் முப்பத்தைந்து கோடி மக்களுக்கும் நல்வாழ்வு நல்க வேண்டுமென்பது நமது பெரு விருப்பம்.

வந்தேமாதரம்.

* * *

சென்ற ஜூன் மாதம் கடைசியில் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம், வழக்கம் போல, பெல்ஜியன் காங்கோ, இலங்கை முதலிய இடங்களி லுள்ள இந்தியர்களுக்கு அநுதாபங் காட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றியதோடு கூட, காங்கிரஸ் விதிகளையும் சீர்திருத்தி யமைத்தது. சீர்திருத்தி அமைக்கிற இந்த முயற்சியானது, காரியத்தை அரண் செய்வதாகவே இருக்கிறது. காங்கிரஸைக் கறைப்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் ஊழல்கள், இந்த விதிச் சீர்திருத்தங்களினால் ஒழிந்து போகுமானால், அதற்காக நம்மை நாம் பாராட்டிக் கொள்ளவே வேண்டும். இதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

ஸ்ரீ போஸ்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில், கருத்து வேற்றுமைக்காளாகி யிருக்கிற தீர்மானங்கள் இரண்டு. ஒன்று, மாகாண மந்திரி சபைக்கும், மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும் எவ்வித தொடர்பும் இல்லாமற் செய்திருப்பது; மற்றொன்று, தனிப்பட்ட நபர்கள் காங்கிரஸ் பெயரால் சத்தியாக்கிரகம் செய்யக்கூடாதென்பது. இந்தத் தீர்மானங்களை அ. இ. கா. கமிட்டி கூட்டத்திலேயே, தீவிர வாதிகள் என்று அழைக்கப்படுகிற இடது சாரிகள் எதிர்த்தார்கள். ஆனால் அ. இ. கா. கமிட்டியில் காந்தியர்கள் என்று அழைக்கப்படுகிற வலது சாரிகளுக்குப் பெரும் பான்மை பலம் இருப்பதால், இடது சாரிகளின் எதிர்ப்பு ஒன்றும் பயன் அளிக்கவில்லை. எனவே, இவர்கள் மேற்படி இரண்டு தீர்மானங்களையும் தாங்கள் அங்கீகரிக்க வில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு ஜூலை மாதம் 9ந் தேதியன்று நாடெங்கணும் பொதுக்கூட்டங்கள் கூட்ட ஏற்பாடு செய்தார்கள். அ. இ. கா. கமிட்டி நிறைவேற்றிய தீர்மானங்களை எதிர்த்து, அக்கமிட்டியிலுள்ளவர்களே, கமிட்டிக்கு வெளியில் பிரசாரம் செய்யக்கூடா தென்றும், அப்படிச் செய்வது காங்கிரஸ் ஒழுங்குக்கு மாறுபட்டதாகு மென்றும், ராஷ்ட்ரபதியான பாபு ராஜேந்திர

பிரசாரத் தெரிவித்தார். ஆயினும், இதனை மீறி சுபாஷ் போஸைத் தலைமையாகக் கொண்டு, இடதுசாரிகள் பல இடங்களிலும் கூட்டங்கள் நடத்தினார்கள். இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்படுகிறது. அடுத்து கூடும் காரியக் கமிட்டி கூட்டத்தின் போதுதான் இது தெரியவரும்.

அ. இ. கா. கமிட்டி கூட்டத்தை எதிர்த்துக் கூட்டங்கள் கூடியதில் எல்லாத் தீவிர வாதிகளும்—அதாவது இடதுசாரிகள்—கலந்து கொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. முன்னணிக் கட்சியொன்றுதான் இதில் கலந்து கொண்டிருக்கிறது. நாமறிந்த வரையில், தீவிர வாதிகள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள், நான்கு கட்சிகளாகப் பிரிந்திருக்கிறார்கள். ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸைத் தலைமையாகக் கொண்ட முன்னணிக் கட்சி; எம். என். ராயைத் தலைமையாகக் கொண்ட தீவிரவாத காங்கிரஸ் கட்சி; காங்கிரஸ் அபேதவாதக் கட்சி; பொதுவுடைமைக் கட்சி. இந்தக் கட்சிகள் ஒன்றுக்கொன்று முரணிக் கொண்டிருக்கின்றன. இதனால் என்ன தெரிய வருகிறதென்றால், தேசத்தில் தீவிர சக்திகளெல்லாம் ஒன்றுதிரளவில்லையென்பதுதான். இந்த நிலையில், அ. இ. கா. கமிட்டி தீர்மானங்களை எதிர்த்து நடைபெற்ற கூட்டங்கள் முதலியன, வலிவிழந்தும் பொலிவிழந்தும் போயினவென்பதே நமது அபிப்பிராயம். இந்த எதிர்ப்புக் கூட்டங்களைக் கண்டு காங்கிரஸ் சேனாதிபதித்துவம் சலசலப்புக் கொள்ளாது.

ஸ்ரீ போஸ், இப்பொழுது இந்த எதிர்ப் பிரசாரத்தை ஆரம்பித்திருக்க வேண்டியதில்லை. அவர் இப்பொழுது செய்ய வேண்டிய முக்கியமான வேலை, தேசத்தின் தீவிர சக்திகளையெல்லாம் ஒன்றுசேர்ப்பதுதான். போர் முகத்திலே இறங்குகிற ஒரு சேனைத்தலைவன், முதலில் தனக்குப் படைபலம் சரியாக இருக்கின்றதாவென்று பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தக் காரியத்தை ஸ்ரீ போஸ் செய்யவில்லை. தவிர, கல்கத்தாவில் கூடிய அ. இ. கா. கமிட்டி கூட்டத்தில் ஸ்ரீ போஸ், தமது ராஷ்டிரபதி பதவியை ராஜீநாமா செய்துவிட்ட பிறகு அவருடைய முதல் வேலை வங்காள மாகாணத்தை ஒழுங்குபடுத்துவதாயிருக்க வேண்டும். அவர் அகில இந்திய சுற்றுப்பிரயாணஞ் செய்து, தமது முன்னணிக் கட்சிக்கு வலுத்தேடிக் கொள்வதில் நமக்கு ஆட்சேபமில்லை. ஆனால், நம் வீட்டை முதலில் சுத்தப்படுத்திக் கொண்டால்தான், மற்றவர்களுடைய வீட்டை நாம் சுத்தஞ் செய்ய முடியும். அதில்தான் மதிப்பும் இருக்கிறது. தவிர, பம்பாய் மந்திரிச் சபையினர் 1-8-39 லிருந்து அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்போகும் மதுவிலக்குச் சட்டத்தை ஆட்சேபித்து ஸ்ரீ போஸ் ஓர் அறிக்கை வெளியிட்டு, இது காரணமாக தம் மீது வந்து மோதும் ஒரு புயற்காற்றை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார். ஸ்ரீ போஸ் இந்த அறிக்கையை வெளியிட்டது ராஜதந்திரமாகாது. தவிர இந்த மாதிரி அறிக்கை வெளி

யிட்டது, தம்மை அடிக்க தாமே ஓர் ஆயுதத்தைச் சிருஷ்டித்து எதிரிகள் கையில் கொடுத்த மாதிரி இருக்கிறது. இதையும், அ. இ. கா. கமிட்டி தீர்மானங்களைக் கண்டித்து 9—7—39ல் கூட்டங்கள் நடக்குமாறு செய்ததையும் ஆதாரங்களாகவைத்துக்கொண்டு, காங்கிரஸ் அதிகார வர்க்கம், இவரை காங்கிரஸி லிருந்து வெளியேற்ற முறைகள் செய்யலாம். இவைகளுக்கெல்லாம் ஸ்ரீ போஸ், இடங்கொடுத்திருக்கக் கூடாது. காங்கிரஸில் தாம் மெஜாரிட்டிபலம் பெற வேண்டுமானால், அதற்குள்ளே யிருந்து கொண்டு தான் போராடவேண்டும். இந்த விஷயத்தில் ஸ்ரீ எம். என். ராய் மிகவும் ராஜதந்திரமாக நடந்து கொண்டிருக்கிறார். தற்போதைய காங்கிரஸ் தளகர்த்தர்களுக்கும் இவருக்கும் அடிப்படையிலேயே வேற்றுமை இருக்கின்றது. ஆனாலும், இவர் காங்கிரஸினின்று விலகிக் கொள்ளாமலும், தம்மை விலக்குவதற்குச் சந்தர்ப்பம் கொடாமலும் நடந்து வருகிறார். பண்டித ஜவஹர்லால் நேரு கூறுகிற மாதிரி ஸ்ரீ எம். என். ராய் போகிற போக்கு இன்னதென்று நமக்குப் புலப்படுகிறது. அந்தப் போக்கிலே நாமும் போகவேண்டுமென்ற அவசியமில்லாம லிருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் ஸ்ரீ போஸ் எந்தவழியில் செல்கிறார் என்பது நமது ராஜதந்திர அறிவுக்குப்புலனாக மாட்டேனென்கிறது. இவர் தன்னந்தனியராயிருந்து—அதாவது தமக்கென்று ஒரு கட்சி வகுத்துக்கொண்டு—வினையாற்றும் திறல்பெற்றாரில்லை. காந்தியத்தின் பூரண அருளைப் பெற்றாருமில்லை. எந்தெந்தத் தத்துவங்களை அஸ்திவாரமாகக் கொண்டு காந்தியக் கட்டிடம் சமைக்கப்பட்டிருக்கிறதோ அதே அஸ்திவாரத்தின் மீதுதான் இவர் ஒரு புதிய கட்டிடத்தைச் சமைக்க விரும்புகிறார். ஒரே அஸ்திவாரத்தின் மீது இரண்டு கட்டிடங்கள் எழும்ப முடியாதென்று ஸ்ரீ போஸ், எவ்வளவு விரைவில் உணர்ந்து கொள்கிறாரோ அவ்வளவு இந்திய தேசிய வாழ்வுக்கு நல்லது.

ஸ்ரீ போஸின் முன்னணிக் கட்சியின் எதிர்ப்புக்கு ஆஸ்பதமாயிருந்த அ. இ. கா. கமிட்டியின் மேற்படி இரண்டு தீர்மானங்களைப் படிக்கிறபோது நமக்குச் சில எண்ணங்கள் உண்டாகின்றன. அதாவது, தேசத்திலே எவ்வித கிளர்ச்சிகளும் நடைபெறக் கூடாதென்று காங்கிரஸ் தளகர்த்தர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அப்படிக் கிளர்ச்சிகள் ஏற்படுவது, காங்கிரஸ் மந்திரிகளின் நிருவாகத் திறமையைப் பாதிக்கு மல்லவா? சட்டநீதி, சட்ட சம்பிரதாயம், சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றுதல் முதலிய சொற்றொடர்களிலேதான் ஜனங்களின் மனம் பதிந்து கிடக்க வேண்டுமே தவிர, எண்ணத்தில் புரட்சி ஏற்பட வேண்டுமென்பதோ கிளர்ச்சி செய்ய வேண்டுமென்பதோ கூடாது என்று காங்கிரஸ் சேனாதிபத்தியம் மனங் கொண்டுவிட்ட பிறகு அதனை யார் தான் மாற்றவோ எதிர்க்கவோ முடியும்? இதன் வெளித் தோற்றங்கள் தான் மேற்படி இரண்டு தீர்மானங்களும். சென்ற இருபது ஆண்டுகளாகக் காங்கிரஸில் புதிய ஜீவிய சக்தி புகுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டதே, அதன் பலன் தானா இது? ஆயிரக்கணக்

கான பேர் சிறை சென்றதும் தடியடி பட்டதும், சொத்துக்களை இழந்ததும், தேசம் இப்பொழுது போராட்டத்திற்குத் தயாராயில்லை யென்று காங்கிரஸ் தளகர்த்தர்கள் முடிவு கட்டுவதற்குத்தானா? அவ்வாறு தேசம் தயாராயில்லையானால் அது யாருடைய குற்றம்? எப்படியோ, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தயவிலேயே நாம் சுயராஜ்யத்தைச் சம்பாதித்து விடலாமென்ற மனப்பான்மை நமது தற்போதைய தலைவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. இதனை ஜனங்களிடத்திலும் புகுத்தி ஊர்ஜிதப்படுத்தி விட வேண்டுமென்பதற்காகவே, இந்த மாதிரியான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு இதைவிட வேறுவிதத்தில் நாம் அநுசரணையாக நடந்து கொள்ள முடியாது. இத்தச்சந்தர்ப்பத்தில், தேசத்தின் தீவிர சக்திகளை ஒன்று படுத்துவது எவ்வளவு அவசியமென்பதை நாம் சொல்லத்தேவையில்லை. அங்ஙனம் உருவகப்படுத்த வேண்டிய பொறுப்பை காங்கிரஸ்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படியானால் காங்கிரஸின் தலைமை ஸ்தானத்தில் சில மாற்றங்களும் சீர்திருத்தங்களும் செய்யப்பட வேண்டும்.

எந்தெந்த நாடுகளில் எத்தனை எத்தனை தபாலாபீஸ்கள் இருக்கின்றன?

அமெரிக்கா	47,590
ருஷ்யா	6,652
ஜெர்மனி	45,994
சீனா	42,686
இந்தியா	24,146
இங்கிலாந்து	23,853
பிரான்ஸ்	17,033
கானடா	12,069
இத்தலி	11,605
ஜப்பான்	10,891
ப்ரேஜில்	4,416
ஐர்லாந்து	2,213
தென்னாப்பிரிக்கா	3,182
நியூஜீலந்து	1,771
துருக்கி	804
டான்ஸிக்	107
ஜிப்ரால்டர்	2

சீன-ஜப்பானிய யுத்தம்-ஒரு பரிசீலனை

—தே. ஏகாம்பரம்

சீன ஜப்பானிய யுத்தம், சட்ட ரீதியாக யுத்தந் தொடுக்காத யுத்த மல்லவா? 1937ம் வருஷம் ஜுலை மாதம் 7ந் தேதி பீகிங் நகரத்திற் கருகாமையில் உள்ள மார்க்கோ போலோ பாலத்தருகில் சீனத்துருப்புகளுக்கும் ஜப்பானிய துருப்புகளுக்கும் ஏற்பட்ட கைகலப்புத்தான், இந்த யுத்தத்தின் ஆரம்பம். எனவே, 1939ம் வருஷம் ஜுலை மாதம் 7ந் தேதியோடு இரண்டு வருஷங்களாகின்றன. இப்பொழுது மூன்றாவது வருஷம் நடக்கிறது. யுத்த ஆரம்பத்தின் போது, இதனை ஒரு சில மாதங்களுக்குள்ளேயே முடித்து விடலாமென்று ஜப்பானியர்கள் கருதினார்கள். ஆனால் ஜப்பானிய யுத்த மந்திரியின் வாக்குப்படி, இன்னும் பத்து வருஷமல்ல, இருபது வருஷம் வரைக்குக் கூட சீனாவில், ஜப்பான் யுத்தஞ் செய்ய நேரிடும் போலிருக்கிறது. ஆனால் சீனாவின் சர்வாதிகாரியான தளபதி சியாங்-கை-ஷேக் என்பவன் 'வெற்றி யெமதே' என்று முழக்கஞ் செய்து கொண்டிருக்கிறான்.

இந்த யுத்தத்தில் சீனர்கள் முக்கியமான பல நகரங்கள், ரெயில்வேக்கள் முதலியவற்றை இழந்து விட்டார்கள். இவையெல்லாம் இப்பொழுது ஜப்பானியருடைய ஆதிக்கத்தில் இருக்கின்றன. ஆயினும் சீனர்கள் கொஞ்சங் கூட நம்பிக்கை தளரவில்லை. 'காலங் கடத்துவதற்கு நாங்கள் இடத்தைத் தியாகஞ் செய்கிறோம். ஜப்பானியர்களை ஆழ்ந்த சகதியிலே விட்டு விட்டோமானால், அவர்களைக் கடைசியில் தோற்கடித்து விடலாம்' என்பது சீனர்களின் தளராத நம்பிக்கை.

இந்த யுத்தத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் எவ்வளவு சேதம் உண்டாயிற்றென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஒவ்வொரு கட்சியினரும் எதிர்க் கட்சியினருடைய சேதம் அதிகமென்று கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆயினும் இரண்டு பேருடைய புள்ளி விவரங்களையும் வைத்துக் கொண்டு பார்த்தோமானால் சராசரி சேதம் இன்னதென்று நிர்ணயிக்கலாமல்லவா?

	இறந்தவர்	காயமடைந்தவர்	மொத்தம்
சீனா	1,000,000	1,000,000	2,000,000
ஜப்பான்	400,000	600,000	1,000,000

ஜப்பானியப் படையில் இறந்து போனவர்களில் பெரும் பாலோர், நோயினால் இறந்து போனவர்கள். இவர்கள் பக்கம் தொத்துநோய்

அதிகமாகப் பரவியிருக்கிறது. ஆனால் சீனர்கள் கட்சியிலோ, நோயினால் இறந்து போனவர்களின் தொகை மிகக் குறைவென்று சொல்லப்படுகிறது. யுத்த களத்தில் ஏற்பட்ட காயங்களைச் சரியாக ஆற்றிக் குணப்படுத்துவோர் இல்லாமையினால் இறந்து போனவர் மிக அதிகம்.

சீனாவிலுள்ள முக்கியமான கீழ்க்கண்ட நகரங்கள் ஜப்பானியர் வசமிருக்கின்றன:—அவை முறையே, காண்டன், அமாய், ஷாங்காய், நாங்கிங், ஸிங்டோ, ஹாங்கோ, பீபிங், டீன்ஸ்டீன் முதலியன. இங்ஙனமே முக்கிய ரெயில்வேக்களும். 'ஜப்பானியர்கள் ஒரு தேன் புட்டியில் கை விட்டுக் கொண்டு விட்டார்கள். அவர்கள் விரல் அளவு பிரமாணம், சீனாவில் அவர்களுடைய ஆதிக்கம் இருக்கிறது. கையைச் சுற்றி தேன் எப்படி இருக்கிறதோ அப்படியே, சீனர்களும் சுற்றி யிருக்கிறார்கள்.'

தாங்கள் பிடித்துக் கொண்ட பிரதேசத்தை நிருவாகஞ் செய்வதற்காக ஜப்பானியர்கள், பீகிங்கிலும், நாங்கிங்கிலும் இரண்டு பொம்மை அரசாங்கங்களை நிறுவி யிருக்கின்றனர். ஆனால் எந்த அந்நிய அரசாங்கமும்-ஜப்பான் கூட—இவற்றை முதல் தரமான அரசாங்கங்களென்று அங்கீகரிக்க வில்லை. இவ்விரண்டு அரசாங்கங்களையும் ஒன்று சேர்க்க, ஜப்பானியர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். ஆயினும் முதல் தரத்து சீன ராஜதந்திரி யொருவரும், இவர்கள் கையில் சிக்கமாட்டேனென்கிறார்கள்.

இந்த இரண்டு வருஷ காலத்தில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சமாதானப் பிரயத்தனங்கள் நடைபெற்றன. நாங்கிங் நகரம் வீழ்ந்து படுவதற்கு முன்னர், ஜெர்மன் தூதரான ட்ரவுட்மான் என்பவர், சீனர்களுக்குச் சில சமாதான ஏற்பாடுகளைக் கூறினார். ஆனால் சீனர்கள் இவற்றை நிராகரித்து விட்டார்கள். 1938ம் வருஷம் டிசம்பர்மாதம், ஜப்பானின் பிரதம மந்திரியா யிருந்த கோனோயி என்பார், சீனாவுக்குச் சில சமாதான ஏற்பாடுகளைக் கூறினார். இவற்றையும் சீனர்கள் நிராகரித்து விட்டார்கள். கோனோயியும் இது காரணமாக ராஜீநாமா செய்து விட்டார்.

சீனாவுக்குப் பல இடங்களி லிருந்தும் யுத்த உதவிகள் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆயினும் ஜப்பானை எதிர்த்துப் போராடக் கூடிய அவ்வளவு அதிகமான யுத்த தளவாடங்கள் சீனாவுக்கு இல்லை என்பதை யாருமே ஒப்புக்கொள்ள வேண்டும். சீனாவின் முக்கிய துணையா யிருப்பது அதனுடைய ஆள் பலம்தான். சீனப் படைகளின் வசத்திலிருக்கும் யுத்த ஆயுதங்கள் பலவும் பழைய முறையில் சீனாவிலேயே தயாரிக்கப் பட்டவை. நவீன விஞ்ஞான சாதனங்களோடு தயாரிக்கப்படுகிற ஜப்பானிய ஆயுதங்களோடு இவை எப்படிப் போட்டி போட முடியும்? சீனாவுக்கு ருஷ்யாவிலிருந்து ஆகாய விமானங்களும், இவை சம்பந்தமான பிறவும் உதவி செய்யப்படுகின்றன என்பதை உண்மையாகக் கொண்டாலும் சீனாவினுடைய யுத்த பலம் அதனால் அதிகரிக்கவில்லை.

ஜப்பானியரின் படை யெடுப்பினால் சீனாவில் உள் நாட்டுக் குழப்பங்களைச் சதா உண்டாக்கிக் கொண்டிருந்த

இரண்டு முக்கிய அரசியல் கட்சிகள்—ஒன்று சேர்ந்து விட்டன. 'கோமின் டாங்' என்ற சீன தேசியக்கட்சியும், பொதுவுடைமைக் கட்சியும் ஒன்றாகச் சேர்ந்து விட்டதின் பயனாக சியாங்—கை—ஷேக்குக்கு விரோதமா யிருந்த அநேக யுதத தளகர்த்தர்கள் இப்பொழுது அவன் தரப்பில் தேசிய கௌரவத்தைக் காப்பாற்ற ஜப்பானியருடன் போர் புரிந்து வருகிறார்கள். ஜப்பானியர்கள் யுத்தம் தொடுத்ததின் பயனாக வேறு எந்த நன்மை உண்டாகா விட்டாலும், சீனாவில் பெரிய ஒற்றுமை உண்டாகி யிருக்கிறது. சீனர் அனைவரும் 'நாமிருக்கும் நாடு நமதே' என்ற உணர்ச்சியைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்த யுத்தத்தின் விளைவாக சீனாவின் துரோகிகள் யார்? அதன் நண்பர்கள் யார்? என்பதைச் சீனப் பொது ஜனங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டார்கள். சீனக் குடியரசை ஸ்தாபித்த டாக்டர் சன்யாட் சென் என்பவனுடைய அரசியல் வாரசுதார் என்று கருதப்பட்டவனும், சீனாவின் பிரதம மந்திரியா யிருந்தவனுமான வாங்—சிங்—வை என்பவன் ஜப்பானியர்கள் பக்கம் சேர்ந்து கொண்டு விட்டான். இவனை எவ்வளவு தூரம் உபயோகப்படுத்திக் கொள்ளலாமோ, அவ்விதம் உபயோகித்துக் கொள்ள ஜப்பானியர் முயன்றும் அடைந்தபயன் ஒன்றும் இல்லை. பொதுவாகவே, எதிர்க் கட்சியில் போய் யாரும் சேர்ந்து விடாதபடி சீனர்கள் கொஞ்சம் சந்தேகிக்கப்பட்ட நபர்களையுங் கூட கொலை செய்தும், வேறு பல பயங்கர முறைகளைக் கையாண்டும் வருகிறார்கள். இந்த மாதிரி பிரபலஸ்தர்கள் என்று கருதப்பட்டவர்கள் சுமார் நூறு பேர் வரை கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள்.

சியாங்—கை—ஷேக், சீன ராணுவத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்தக் கண்டிப்பான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுவருகிறான். முக்கிய தளகர்த்தர்கள் சுமார் 12 பேர் இதுவரை பீரங்கிவாயில் வைத்துச் சுடப்பட் டிருக்கிறார்கள். இன்னும் பலர் எமனுலகுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். சீன—ஜப்பானிய யுத்தத்தில் அந்நிய நாடுகளில் ஏதேனும் ஒன்று தலையிட்டு ஒரு சமரசத்தைச் செய்து வைக்கலா மென்றும் இது காரணமாக யுத்தம் விரைவில் முடிந்து விடலா மென்றும் சீனத் தலைவர்கள் கருதி வருகிறார்கள். ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் யுத்தம் மூண்டு விடுமானால் தாங்கள் தப்பித்துக் கொண்டு விடலா மென்ற மனப்பான்மையும் சீனாவில் இருக்கிறது ஆனால் இது வரை ஒன்றும் நிறைவேறவில்லை.

சென்ற இரண்டு வருஷ யுத்தத்தில் ஜப்பானுக்கும் ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் அடிக்கடி பிணக்குகள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. 1937ம் வருஷம் டிஸம்பர் மாதம் அமெரிக்காவின் 'பானே' என்ற யுத்தப் படகை ஜப்பானிய ஆகாய விமானங்கள் யாங்ட்சி நதியில் மூழ்கடித்து விட்டன. 1938ம் வருஷம் ஆகஸ்டுமாதம் பிரிட்டிஷ் தூதர், நாங்கிங் நகரத்திலிருந்து ஷாங்காய் நகரத்திற்கு மோட்டாரில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது அவர் மீது ஜப்பானிய ஆகாய விமானங்கள் குண்டுகள்

போட்டு காயப்படுத்தின பிரான்ஸுக்குச் சொந்தமான ஹைனான் பிரதேசத்தை ஜப்பானியர்கள் ஆக்கிரமித்துக்கொண்டதுதான் ஒரு விசேஷ சம்பவமாகும். பிரான்ஸ், இதற்கு ஒரு கண்டனத்தை அனுப்பி விட்டு சும்மாயிருந்து விட்டது. சமீபத்தில் ஐரோப்பிய வல்லரசுகளின் பொது நகரமாயிருக்கிற—சிறப்பாக பிரிட்டிஷாருக்கு அதிக உரிமையுள்ள—டீன்ஸ்டீன் நகரம் ஜப்பானியர்களால் முற்றுகையிடப்பட்டது. இவை எல்லாவற்றிற்குமே ஐரோப்பிய வல்லரசுகள் கண்டன அறிக்கைகளை அனுப்பி விடுவதோடு திருப்தியடைந்து வருகின்றன.

சென்ற இரண்டு வருஷ யுத்தத்தில் தங்களிடமிருந்து இழந்து போன எந்த முக்கிய நகரத்தையும் சீனர்கள் திரும்பக் கைப்பற்றிக் கொள்ளவில்லை. ஆனால் ஒளிமறைவாக இருந்து எதிரிகளைத் திடீர் திடீர் என்று தாக்கும் சீனப்படைகள்—இதற்கே கொரில்லா சண்டை என்று பெயர்—பீகிங், டீன்ஸ்டீன், ஷாங்காய் முதலிய முக்கிய நகரங்களின் சுற்றுப் புறங்களில் இருந்து கொண்டு ஜப்பானியர்களுக்கு அதிகத் தொந்தரவை உண்டு பண்ணி வருகின்றன. இதே மாதிரி ஜப்பானியர்களுடைய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கிற பிரதேசங்களில் இந்த் சீன கொரில்லாப் படைகள் அதிக சேதத்தை உண்டு பண்ணி வருகின்றன.

சீன ஜப்பானிய யுத்தத்தின் மூன்றாவது வருஷம் ஆரம்பமாகி விட்டது. ஆயினும் சீனர்கள் பணிந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. ஜப்பானியர்களும் தங்கள் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொடுக்கவில்லை. ஐரோப்பிய வல்லரசுகளும் கண்டனங்கள் செய்வதில் சலிப்புக் காட்டவில்லை. இந்த யுத்தம் இன்னும் எவ்வளவு காலம் நடக்குமென்று யாருமே திட்டமாகக் கூற முடியாது.

சீனாவின் சர்வாதிகாரி
சியாங்-கை-ஷேக்.

பொதுவுடைமைக் கொள்கை— ஒரு வியாக்கியானம்

'கம்யூனிஸம்' என்பதைப் பொதுவுடைமைக் கொள்கை யென்றும், 'சோஷலிஸம்' என்பதை அபேதவாதம் என்றும் அழைக்கிறார்கள் பலரும். பொதுவாக, இந்த இரண்டு பெயர்களைக் கேட்ட மாத்திரத்திலேயே பலருக்கு அநேக சந்தேகங்களும் அச்சங்களும் ஏற்படுகின்றன. இதற்குக்காரணம், இவைகளைப்பற்றிச் சரியான தமிழ்நூல்கள் வெளிவராமைதான். இந்தக் கட்டுரையில் 'கம்யூனிஸம்' என்றால் என்ன வென்பதற்குச் சுருக்கமான வியாக்கியானம் தரப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டுரையில், பொருள் தெளிவுக்காக, 'கம்யூனிஸம்'என்ற ஆங்கில வார்த்தையே உபயோகிக்கப் பட்டிருக்கிறது.

கம்யூனிஸம் என்பது, மாற்றியமைக்கப்பட்ட ஜன சமுதாயம் மட்டுமல்ல; அஃதொரு புதிய நாகரிகமுமாகும். பண்பட்ட சமுதாய வாழ்க்கையின் அமைப்பைத்தான் நாம் நாகரிகம் என்று கூறுகிறோம். மானிடவாழ்க்கையின் முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலா யிருக்கும் சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி நாகரிகம் என்று சொன்னால் அதுபொருத்தமாகவே இருக்கும். முற்காலத்தில் பலவித நாகரிகங்கள் இருந்தன. ஹிந்து நாகரிகமென்றும், முஸ்லிம் நாகரிகமென்றும், கிறிஸ்தவ நாகரிகமென்றும் பலவிதமாக அழைக்கிறோம். அந்தந்த மதத்தின் பெயராலேயே இந்த நாகரிகங்களையெல்லாம் அழைக்கிறோம். ஏனென்றால், இவை, வளர்ச்சியடைந்ததற்கெல்லாம் மூல காரணமாயிருந்தது மதமல்லவா? ஆனால், கம்யூனிஸ நாகரிகமானது, மேற்படி நாகரிகங்களினின்று மாறுபட்டது. எப்படியென்றால், கம்யூனிஸமானது, மதத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. அடிப்படையில் இந்த வித்தியாசம் இருந்தாலும், கம்யூனிஸமும், மானிட வாழ்க்கையின் எல்லா அம்சங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவே இருக்கிறது. சுமார் நூறு வருஷத்திற்கு முன்னர் மார்க்ஸ் என்பவரும், ஏங்கெல்ஸ் என்பவரும் இதனை ஒரு தத்துவமாகச் சிருஷ்டித்தார்கள். இப்பொழுது மேற்படியார்களுடைய சிஷ்யர்கள், ருஷ்யாவில் இந்தத் தத்துவத்தை நடை முறையில் கொணர்ந்து காட்டியிருக்கிறார்கள்.

கம்யூனிஸத்தின் நோக்கந்தானென்ன? மனிதனோடு மனிதன் வைத்துக் கொண்டிருக்கிற சம்பந்

த்தில் நியாயம் நிரந்தரமாக நிலவ வேண்டுமென்பது. பொருளாதாரவிஷயத்தில் பாகுபாடுகள் இல்லாத ஒரு ஜன சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்பது. பாகுபாடற்ற இந்த ஜன சமுதாயத்தில், அவனவனும் தனது திறமைக்குத் தகுந்தபடி உழைக்கவும், தேவைக்குத் தகுந்தபடி ஊதியம் பெறவும் சந்தர்ப்பம் உண்டு. இந்த நோக்கத்தை அல்லது லட்சியத்தை யடையவேண்டுமானால், கம்யூனிஸ்ட்டுகள்- பொதுவுடமை வாதிகள்-கூறுகிறபடி லாபஞ் சம்பாதிக்கும் முறையை நிறுத்த வேண்டும். நிலத்தையும் மூலதனத்தையும் தேசிய மயமாக்குதல் வேண்டும். இந்த இரண்டினையும் பற்றிச் சிறிது கவனிப்போம்.

முதலாவது லாபஞ் சம்பாதிக்கும் முறை. முதலாளித்துவ நாடுகளில் பொருளை உற்பத்தி செய்து பணத்தைக் குவிப்பதற்குத் தூண்டுதலாயிருப்பது எது? தனிப்பட்ட நபர்கள் லாபஞ் சம்பாதிக்கச் சந்தர்ப்பம் இருப்பதுதான். லாபஞ் சம்பாதிக்கிற இந்தத் தூண்டுதலானது, கைத்தொழில்கள் பெருகுவதற்கு உதவி செய்கிறது. முதலாளியும், தனக்கு அதிகமான லாபம் கிடைக்குமென்று எதிர் பார்க்கிறான். லாபஞ் சம்பாதிக்கிற இந்தத் தூண்டுதலின் விளைவாக, ஒருபுறம், மலிவான மார்க்கெட்டிலே சரக்குகளை வாங்கி, கிராக்கியான மார்க்கெட்டிலே விற்று பணத்தைக் குவிக்கிற ஒரு கூட்டத்தினர் உண்டாகின்றனர். இவர்கள் பொருள் உற்பத்திக்கு எவ்வித் உதவியும் செய்யாமலே, பணத்தைச் சம்பாதித்து விடுகின்றனர். மற்றொரு புறத்தில், சுரண்டுவதையே முக்கிய தொழிலாகக் கொண்ட ஒரு கூட்டத்தினர், வேலையாட்களைக் கூலி கொடுத்து அமர்த்தி அவர்களின் உழைப்பினின்று உற்பத்தியான பொருள்களை விற்று, தாங்கள் பணக்காரர்களாகிறார்கள். இந்த இரண்டு அம்சங்களும், அதாவது ஒரு பொருளின் விலையை ஒரு நிர்ணயத்துக் குட்படுத்தாமல், ஏற்றியும் இறக்கியும் லாபங் கரத்தக்க விதமாக விற்பனை செய்தல், பிறருடைய உழைப்பின் மேல் அதிகமான பொருளைக் குவித்தல் என்ற இரண்டு அம்சங்களும் தற்போதைய ருஷ்யாவில் குற்றங்களாகக் கருதப் படுகின்றன.

கம்யூனிஸத்தினுடைய பொருளாதார திட்டத்தில் 'மிஞ்சிய மதிப்பு' என்றதோர் அம்சம் உண்டு. இதைப் பற்றிச் சிறிது விளக்கமாகத் தெரிந்து கொள்வது நல்லது. நான் ஒரு நாற்காலியைச் செய்வதற்கு ஒரு தச்சனை மூன்று நாள் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறேன். அதற்கு பாலிஷ் கொடுப்பதற்காக, ஒரு பாலிஷ் காரனை ஒரு நாள் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறேன். இவர்களால் தயாரிக்கப்பட்ட அந்த நாற்காலியைக் கடைசியில் நான் பதினெட்டு ரூபாய்க்கு விற்கிறேன். எனக்குப் பதினெட்டு ரூபாய் கிடைத்து விட்டதே யானாலும், இதற்காக நான் செலவழித்திருக்கிற பணம் எவ்வளவு? மரத்திற்காகவும், வார்னீஷ்க் காகவும் ஆறு ரூபாய்; தச்சனுக்கும் பாலிஷ் காரனுக்கும் கொடுத்த கூலி நான்கு ரூபாய்; இந்தச் சாமான்களை வைத்துச் செய்யும் இடத்திற்கு வாடகை கொடுக்க வேண்டுமல்லவா? அதற்கு ஒரு

ரூபாய் ஆக மொத்தம் பதினொரு ரூபாய் செலவழிந்தது. இந்த பதினொரு ரூபாய் பொருள், பதினெட்டு ரூபாய் பொருளாகா மாற்றப் பட்டது. லாபமாக மிஞ்சின ஏழு ரூபாய் எப்படி வந்தது? சாமான்களைச் செய்ய இடங் கொடுத்த வீட்டுக்காரன், ஒரு ரூபாய் குடிக்கூலியாக வாங்கிக் கொண்டானல்லவா? அவன் எவ்வித உழைப்பையும் மேற் கொள்ளாமலேயே, ஒரு ரூபாயைச் சம்பாதித்து விட்டான். இவன் மேற்படி, பதினொரு ரூபாய் பொருள், பதினெட்டு ரூபாய் பொருளாக மாறிய தற்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. இதே மாதிரி ஏழு ரூபாய் லாபஞ் சம்பாதித்துவிட்ட முதலாளி, மரம், வார்னீஷ் முதலியவைகளையும், தச்சன், பாலிஷ்காரன் முதலியவர்களையும் ஓரிடத்தில் கொண்டு சேர்ப்பித்தானே தவிர, வேறு எவ்வித உழைப்பையும் மேற் கொள்ளவில்லை. எனவே, ஏழு ரூபாய் லாபஞ் சம்பாதித்துக்கொடுத்தது, உண்மையில் தச்சனுடையவும் பாலிஷ்காரனுடையவும் உழைப்புத்தான். அதாவது நான்கு ரூபாய் பெறுமான உழைப்பு, ஆறு ரூபாய் பெறுமான சாமான்களை, பதினெட்டு ரூபாய் பெறுமான சாமானாக மாற்றிக் கொடுத்தது. அல்லது, உழைப்பு என்கிற ஒரு சக்தியானது, நான்கு ரூபாயைச் சாப்பிட்டுவிட்டு, பன்னிரண்டு ரூபாய் மதிப்புள்ள (18—6=12) ஒரு புதிய செல்வத்தை அல்லது பொருளைச் சிருஷ்டி செய்து கொடுத்தது. அதாவது உழைப்பை மேற்கொண்ட தொழிலாளிகள், தங்கள் ஜீவனத்திற்கென்று கூலியின் மூலமாக எவ்வளவு பெற்றுக் கொண்டார்களோ அதைவிட மூன்று மடங்கு அதிகமான மதிப்புள்ள பொருளைச் சம்பாதித்துக் கொடுத்தார்கள். எனவே, மிஞ்சிய மதிப்பைச் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய ஒரு தனிச் சக்தி, உழைப்பினிடத்தில் இயற்கையா யமைந்திருக்கிறது. இதுதான் மார்க்ஸின் சித்தாந்தம். ஒருவித உழைப்பும் மேற் கொள்ளாமல், சும்மாயிருந்து கொண்டு ஏழு ரூபாய் லாபஞ் சம்பாதித்த—அதாவது மிஞ்சிய மதிப்பைச் சம்பாதித்த—முதலாளி, தொழிலாளியின் உழைப்பின் பேரிலேயே பணக்காரனாகிறான். இந்த மாதிரியான நிலைமையை உண்டு பண்ணுகிற சமுதாய அமைப்புக்குத் தான் முதலாளித்துவம் என்று பெயர். இந்த முதலாளித்துவமானது, ஒரு பக்கம் ஏழைகளை இன்னும் ஏழ்மைக்குட்படுத்திக் கொண்டு போகிறது; பணக்காரர்களை இன்னும் அதிக பணக்காரர்களாக்கிக் கொண்டு போகிறது. இதனால் சமுதாய அமைப்பிலேயே, ஏற்றத்தாழ்வுகள் உண்டாகின்றன. ஏற்றத் தாழ்வுகளின் காரணமாக பலவித அநீதிகளும் ஏற்படுகின்றன. எனவே, முதலாளித்துவமே, மனித சமூகத்தின் நலனுக்கு விரோதியாய் நிற்கிறது. இதுவே கம்யூனிஸத்தின் சித்தாந்தம்.

இரண்டாவது, நிலத்தையும் தேசத்தின் செல்வத்தையும் தேசிய மயமாக்கும் விஷயத்தைக் கவனிப்போம். நிலத்திற்கும் செல்வத்திற்கும் சொந்தக்காரர்களா யிருக்கப் பட்டவர்கள், அவைகளை உபயோகிக்கிற முறையை மாற்றினாலன்றி, லாபஞ் சம்பாதிப்பதிலேயே கண்ணா யிருக்கும் முதலாளித்துவ உற்பத்தி முறையை மாற்ற

முடியாதென்பது கம்யூனிஸ்ட்டு களின் நம்பிக்கை. இதைச் சிறிது விளக்கமாகச் சொல்லப் போனால், நிலச்சுவான்தாரும், முதலாளியும், பிறருடைய உழைப்பின்மேல் வாழ்க்கையை நடத்தாமல் தொழிலாளர்களைப்போல், தாங்களும் பொருளுற்பத்திக்காக உழைக்க வேண்டும். இந்த நிலைமை ஏற்பட வேண்டுமென்பதற்குத்தான், நிலத்தையும் மூலதனத்தையும் தேசிய மயமாக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட்டுகள் கூறுகிறார்கள்.

தேசிய மயமாக்கும் இந்த முறையானது, ருஷ்யாவில் என்னென்ன பலாபலன்களை அளித்திருக்கிறதென்பதைச் சிறிது கவனிப்போம். இந்தத் தேசிய மயமாக்கும் முறையினால், சிலர் கருதுகிறபடி, அல்லது எதிர்பார்க்கிறபடி, ருஷ்யாவில் தீமைகள் ஒன்றும் உண்டாகவில்லை. தொழில்களையெல்லாம் தேசிய மயமாக— அதாவது அரசாங்க மயமாக—ஆக்கிவிட்டதனால், அரசாங்கத்தினிடந்தான் எல்லாரும் வேலைக்கமரவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ருஷ்யாவில் ஏற்பட்டிருக்கிறதென்று கருதுகிறார்கள் சிலர். இது சரியில்லை. ருஷ்யாவில் லட்சக்கணக்கான மக்கள், சுயேச்சையாகத் தொழில் நடத்துகிறார்கள். அல்லது பலருடன் சேர்ந்துகொண்டு கூட்டு முறையில் வேலை செய்கிறார்கள். தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை, பகிரங்கமாக மார்க்கெட்டில் விற்று, தங்களுடையவோ, தங்கள் குடும்பத்தினுடையவோ ஜீவனத்தை நடத்துகிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கென்று சொத்துக்கள் வைத்துக் கொள்ளலாம். எல்லாம் பொதுச் சொத்தாக இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எல்லாருக்கும் ஒரே விதமான வருமானமோ, சொத்துக்களோ இராது. இவற்றில் கூடுதல்கள் குறைச்சல்கள் இருக்கும். அரசாங்கத்தார் வாங்கும் கடன்களுக்கோ, தபாலாபீஸ்களில் போடப்படும் சேவிங்க்ஸ் பாங்கி டிபாசிட்டுகளுக்கோ வட்டி யுண்டு.

கம்யூனிஸம் நடைமுறையில் கொணரப் பட்டதன் காரணமாக மனிதனுடைய தனித்துவம் நசுக்கப் படுகிறதென்று சொல்லப் படுகிறது. ருஷ்யாவில் இப்பொழுதுள்ள சமுதாய அமைப்பை நோக்குமிடத்து, இது மிகத் தவறென்பது நன்கு புலப்படும். உடல் நலம் வாய்ந்த ஒவ்வொருவனும் அல்லது ஒவ்வொருத்தியும் ஏதேனும் ஒரு விதத்தில் உழைக்க வேண்டுமென்ற கட்டாயம் ருஷ்யாவில் உண்டு. இதனால் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல், அவரவருடைய திறமை, உழைப்பு, தேவை இவைகளை அநுசரித்துப் பணஞ் சம்பாதிக்க மார்க்கம் ஏற்படுகிறது.

ருஷ்யாவில் பொருளுற்பத்தி சாதனங்களையெல்லாம் தேசிய மயமாக்கி விட்டதனால், அங்குப் பொருளாதார அந்தஸ்தில் வேற்றுமைகள் இல்லாமலிருக்கிறது. இதனால், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள எல்லா வேற்றுமைகளும் அற்றுப்போய்விட்டன.

ருஷ்யாவில் பொருளாதார வேலைத் திட்டமொன்றை வகுத்துக் கொண்டு அதன்படியே வேலை செய்கின்றனர். இதைத்தான் முதலாவது ஐந்துவருஷ

வேலைத் திட்டமென்றும் இரண்டாவது ஐந்து வருஷ வேலைத் திட்டமென்றும் சொல்கிறார்கள். ருஷ்ய அரசாங்கத்தார், தங்களுடைய பல இலாகாக்களின் மூலமாக, குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு—உதாரணமாக ஐந்து வருஷத்திற்கு-ஜன சமுதாயத்திற்கு என்னென்ன தேவையென்பதைப் புள்ளி விவரங்களினால் தெரிந்து கொண்டு, ஒவ்வோர் உற்பத்தி சாலைக்கும், இன்ன காலத்திற்குள் இவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமாகத் தெரிவிக்கின்றனர். இந்த முறையினால் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமற் போகிறது. குறைந்த கூலி பெற்று அதிக உழைப்பை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. விவசாயம், கைத்தொழில், முதலியவற்றில் எல்லாருக்கும் சமமான வேலை கிடைக்கிறது.

அரசியல் கண் கொண்டு கம்யூனிஸத்தை நோக்குகிறபோது, அஃதொரு தத்துவமாகவும் நடைமுறையில் கொணரக் கூடிய அம்சமாகவும் தோன்றும். கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தப்படி, ஒரு சமுதாயத்தின் அரசியல் அமைப்பானது, அந்தச் சமுதாயத்தின் பொருளாதார நிலைமையையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தின முக்கிய ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம் இருந்த காலத்தில், செல்வமானது, நிலச் சுவான்தார்களின் மேற்பார்வையில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இப்படி உற்பத்தி செய்யப்பட்ட செல்வத்தில் பெரும் பகுதி, நிலச்சுவான்தார்களுக்கும் ஒரு சிறு பகுதி விவசாயிகளுக்கும் போய்ச் சேர்ந்தது. யாரிடத்தில் செல்வம் அதிகமாயிருந்ததோ அவர்களிடத்தில் அரசியல் அதிகாரம் வருவது இயற்கையல்லவா? இந்த மாதிரி நாளாவட்டத்தில் பணம் படைத்த நிலச் சுவான்தார்களிடத்தில் அரசியல் அதிகாரம் சென்றது. இதற்கு 'ப்யூடலிஸம்' என்று பெயர். பின்னர் விஞ்ஞான அறிவு, கைத்தொழில்கள் பெருகப் பெருக, கைத்தொழில் முதலாளிகளிடத்தில் அரசியல் அதிகாரம் வந்தது. சரித்திர ரீதியாக ஒரு சமுதாயம் எப்படி வளர்ச்சியடையவேண்டுமோ அந்தவளர்ச்சியில் 'ப்யூடலிஸம்' என்ற நிலச்சுவான்தார்களின் ஆதிக்கம் ஒரு பகுதி. அது மறைந்து போயிற்று. இப்பொழுது முதலாளிகளின் ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதுவும் விழுந்துபோக வேண்டியதுதான். ஏனென்றால், எந்த முரண்பட்ட பொருளாதார சக்திகளை முதலாளித்துவம் உண்டு பண்ணியதோ அதே சக்திகள் அந்த முதலாளித்துவத்தை அழித்து விடும். முதலாளித்துவமானது, வர்க்கப் போராட்டத்தை உண்டு பண்ணுவதற்கு மூல காரணமாயிருப்பதனாலேயே அதனுடைய அழிவை அதுவே தேடிக் கொள்கிறது. கம்யூனிஸத்திலோ, வர்க்கப் போராட்டத்தைத் தூண்டுகிற முரண்பட்ட சக்திகளெல்லாம் இல்லாமற் போய்விடுகின்றன.

முதலாளித்துவ முறைப்படி பொருள்களை உற்பத்தி செய்வதும் அவைகளை விநியோகிப்பதும், சமுதாய அமைப்பிலேயே ஒருவித அதிர்ச்சியை உண்டுபண்ணுகின்றன. முதலாளித்துவமானது, சதா போராடிக்கொண்டிருக்கும் இரண்டு முரண்

பட்ட வர்க்கங்களை உற்பத்தி செய்கிறது. ஒன்று, அதிகாரம், செல்வாக்கு முதலியவற்றையெல்லாம் தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டுள்ள முதலாளிகள் வர்க்கம். வாழ்க்கையின் எல்லா நல்ல அம்சங்களையும் இந்த வர்க்கம் அனுபவிக்கிறது. இன்னொன்று, தங்களுடைய ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்ளும் பொருட்டு, முதலாளிகளுக்குத் தங்கள் உழைப்பை விற்கக்கூடிய தொழிலாளி வர்க்கம். இந்தத் தொழிலாளி வர்க்கத்தின் கேவலத் தன்மையை அவர்களுக்கு—தொழிலாளர்களுக்கு—உணர்வித்து அவர்களை ஒரு புரட்சிகரமான கட்சியின் தலைமையில் பண்படுத்த வேண்டும். இதுதான் முதற்படி. ருஷ்யப் புரட்சியில் இந்தத் தலைமையை ஏற்றுக் கொண்டது போல்ஷ்வெக்கர் கட்சி. தொழிலாளர்கள் தன்னம்பிக்கை உணர்ச்சி அடைந்து, முதலாளிகளிடமிருந்து எல்லா அரசியல் அதிகாரங்களையும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். இந்த அரசியல் அதிகாரம் தங்கள் கைக்கு வராவிட்டால், சமுதாயத்திலும் பொருளாதாரத் திட்டத்திலும் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவற்றையெல்லாம் செய்ய முடியும் என்று கம்யூனிஸ்ட்டுகள் சாதிக்கிறார்கள். இது இரண்டாவது படி. ருஷ்யப் புரட்சியில், லெனின் தலைமையில் போல்ஷ்வெக்கர், இந்த இரண்டாவது படியைத் தாண்டினார்கள். அரசியல் அதிகாரத்தைக்கைப்பற்றிக் கொண்ட பிறகு, தொழிலாளிகளின் சர்வாதிகார ஆட்சி முறையை நிலை நிறுத்த வேண்டும். கம்யூனிஸத்தினுடைய லட்சியமாகிற, ஏற்றத் தாழ்வுகளில்லாத சமுதாய அமைப்பு ஏற்படுகிற வரையில் இந்தச் சர்வாதிகார முறை இருக்கும். சர்வாதிகார ஆட்சி முறை என்றால், ஒரு தனிப்பட்ட மனிதனோ, அல்லது ஒரு கட்சியோ அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு தங்கள் இஷ்டப்படி அதிகாரத்தைச் செலுத்துவதல்ல. சமுதாய ஏற்றத் தாழ்வுகளில்லாத ஒரு ஜன சமூகத்தை அமைப்பதற்கு அத்யாவசியமான என்னென்ன அதிகாரங்களை உபயோகிக்க வேண்டுமோ, அந்தந்த அதிகாரங்களையே இந்தச் சர்வாதிகார முறை உபயோகிக்கும். சோவியத் ருஷ்யாவில் இந்தச் சர்வாதிகார முறைதான் அமுலில் இருக்கிறது.

கம்யூனிஸம் ஒரு தனி மதம் என்று சிலர் சாதிக்கின்றனர். இதில் ஓரளவு உண்மையிருக்கிறது. ஏனென்றால், மனித வாழ்க்கையில் இது—கம்யூனிஸம்—ஒரு புதிய லட்சியத்தைச் சிருஷ்டித்துக் கொடுத்திருக்கிறதல்லவா? இதனால், மனிதன் ஒரு புதிய நம்பிக்கையைப் பெறுகிறானல்லவா? கடவுளின் ராஜ்யத்தைப் பூலோகத்தில் கொண்டுவர இந்த கம்யூனிஸம் விரும்புகிறது. கிறிஸ்தவ மதத்தைப்போல் கம்யூனிஸத்திலும் தேவாலயங்களும், பாதிரிகளும், சடங்குகள் முதலியனவும் இருக்கின்றன. இவைகளை மதப்பெயரிட்டு அழைக்காமல், வேறு பெயரிட்டு அழைக்கிறார்கள். அதுதான் வித்தியாசம். வேறொரு திருஷ்டியில் பார்க்கப்போனால், கம்யூனிஸம் ஒரு மதமல்ல. கம்யூனிஸத்தை ஒரு தத்துவமாகவோ, அல்லது அனுஷ்டானத்திலே கொண்டு வரக்கூடிய ஒரு

முறையாகவோ பார்த்தோமானால், அது மதத்திற்கு விரோத முடைய தாகும். அறியாமை, வறுமை, நோய் முதலியவற்றிலேதான் மதம் வாழ்கிறதென்றும், இவற்றை யெல்லாம் அகற்றி விட்டால், மதம் தானாகவே அழிந்துபோய்விடு மென்றும் கம்யூனிஸ்ட்டுகள் சாதிக் கிறார்கள்.

ஆனால், ருஷ்யாவில், போல்ஷ்வெக்கர் ஆட்சியின் ஆரம்பத்தில், மதத் துவேஷமும், மதத்தின் மீது கொடுந் தண்டனைகள் விதிப்பதும் சகஜமா யிருந்தன. ஆனால் பின்னர், இது தளர்த்தப்பட்டு குறைந்து போய் விட்டது.



ருஷ்யாவில் 'தொழிலாளிகளின் சர்வாதிகார ஆட்சி முறையை' நடத்தி வருகிற ஸ்டாலின்.

உலக சமாதானத்தை அளிப்பது எது?

—காந்தீயமே

—பரதன் குமரப்பா

உலகத்திலே சிலகாலமாக சமாதானத்தைப் பற்றி உரக்கப் பேசப்படுகிறது. இதோடு முன்னேற்றம், முன்னேற்றம் என்ற தொனியும் முழங்குகிறது. உலகத்திலேயே சமாதானம் நிலைக்க வேண்டுமானால், நாம் எதற்கும் தயாராய் முன்னேற்ற முள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று ஒவ்வொரு தேசத்து ராஜ தந்திரிகளும் ஓயாது வற்புறுத்துகிறார்கள். ஆனால் இதில் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், இவர்கள் முன்னேற்றம் முன்னேற்றம் என்று முழங்குகிறார்களே அதுவும், சமாதானமும் நேர் முரணான விஷயங்களாயிருப்பது தான். தற்போதைய முன்னேற்றம், யுத்த தேவதையின் சரணா விந்தைகளை நெருங்கி விட்டது. இந்த முன்னேற்றத்தைத் தான் நாம் இன்று காண்கிறோம்! இந்த முன்னேற்றம் உலகத்தையே நாசமாக்கி விடும். இந்த யுத்த பயத்திற்கும் படு கொலைக்கும் காரணம் என்ன? மஹாத்மா காந்தியடிகள் நமக்கு இயற்கையாயுள்ள தீர்க்க திருஷ்டியில் பொருளாதார பிரச்னையே இதற்கு முக்கிய காரணம் என்பதைத் தெரிந்தார். தற்போதுள்ள பொருளாதார அமைப்பை மாற்றாது, வெறும் வாய் வேதாந்தத்தில் மாத்திரம் இவைகளுக்குப் பரிகாரம் தேட முடியாது. அப்படியானால் அதை எப்படி மாற்றுவது? இதற்குக் காந்தியடிகளின் திட்டமென்ன?

தற்கால உலகின் பொருளாதார அமைப்புகளைக் கொஞ்சம் உற்று நோக்குங்கள். இரண்டு விதமான பாகுபாட்டை நீங்கள் கண்டு கொள்ளலாம். ஒரு பக்கம் பலம் பொருந்திய ஏகாதிபத்திய வல்லரசுகள். மற்றொரு பக்கம் அடிமை தேசங்கள். வல்லரசுகளிடம், மூலப் பொருள்களை எப்பொழுதும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய பெரிய பெரிய இயந்திரங்கள். இந்த இயந்திரங்களின் உதவி கொண்டு அந்த ஏகாதிபத்திய தேசங்கள் தங்களுடைய தேசத்தின் தேவைக்கு மிஞ்சிய பொருள்களைச் செய்து குவித்து விடுகின்றன. அப்படியானால், இவர்களுடைய இயந்திரங்களுக்குத் தேவையான மூலப்பொருள்களுக்கும், அந்த இயந்திரங்களால் செய்யப் படுகின்ற அளவுக்கு மிஞ்சிய

பொருள்களை விநியோகிப்பதற்கும், அதாவது விற்பனை செய்வதற்கும், சில தேசங்களை இந்த ஏகாதிபத்திய வல்லரசுகள் எப்பொழுதுமே தங்களுடைய ஆதீனத்தில் அடிமைகளாக வைத்திருக்க நினைக்கின்றன. இந்த நிலைமையில், இந்த அடிமை தேசங்கள் சுதந்திரம் பெறும் பொருட்டுத் தங்கள்உயிரையும் பலி கொடுத்தால் தான் என்ன? அந்த ஏகாதிபத்தியங்கள் கவனிக்குமா? அவர்களுடைய இயந்திரங்களுக்குத் தான் தீனி வேண்டுமே! ஏகாதிபத்தியத்தின் அடிப்படையே அதுதானே. தங்களுடைய சுயநல திருப்திக்காக கட்டாயம் சிலதேசங்களைத் தங்களுடைய ஆதீனத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய நிலைமையில் அந்த ஏகாதி பத்தியங்கள் இருக்கின்றன. இதனால் யுத்தம், படுகொலை அடிக்கடி நடப்பது சகஜமாகிவிட்டது. இதைப் பற்றி நாம் ஆச்சரியப்பட வேண்டியதே இல்லை. ஏகாதிபத்தியப்பொருளாதார அமைப்பில் இதற்கு மாறுபட்ட பலனை நாம் பார்க்கவே முடியாது. அபிசீனியாவை இத்தலி கைப்பற்றியிருப்பதற்கும், சைனாவை ஜப்பான் ஆக்கிரமித்திருப்பதற்கும் என்ன அர்த்தம்?

இவைகளை விட்டு விடுவோம். நம்மையே பார்ப்போமே. நம்முடைய பாரததேசத்தை, நம்முடைய எண்ணத்திற்கு விரோதமாக அடிமையாக்கி வைத்திருப்பதின் அர்த்தமென்ன? நாம் சுதந்திரத்தைப்பற்றி கூச்சல் போட்டால் என்ன? நம்முடைய ரத்தத்தை நாம் சிந்தினால் என்ன? நாம் சுரண்டப்பட்டு நித்திய தரித்திரர்களாய், தெருத்தெருவாய், தேசம் தேசமாய் அலைந்தாலென்ன? ஏகாதிபத்தியம் அதை லட்சியம் செய்கிறதா? தன்னுடைய இயந்திரங் களுக்குத் தேவையுள்ள ஏராளமான மூலப் பொருள்களுக்கும், உற்பத்தி செய்யப் பட்ட செயப்பண்டங்களை விற்பனை செய்வதற்கும் அந்த ஏகாதிபத்தியத்திற்கு மார்க்கெட் தேவையாயிருக்கிறதே. அப்படியிருக்க அவை அடிமைநாடுகளின் சுதந்திரத்தைப் பற்றி கவனிக்குமா? எங்கேயாவது ஏகாதிபத்தியம் தனக்குத்தானே தற்கொலை செய்து கொள்ளுமா?

இஃதிருக்கட்டும். ஒவ்வொரு தேசத்து உள்நாட்டுப் பிரச்சினைகளையும் நோக்குவோம். தொழிலாளிகள் தங்கள் முதலாளிகளை எதிரிகளாகப் பாவிக்கிறார்கள். அதேபோல் முதலாளிகளும் தொழிலாளிகளை விரோதிகளாக நினைக்கிறார்கள். முதலாளிகள் உற்பத்தி சாதனங்களை தங்களுடைய ஆதீனத்தில் வைத்துக்கொண்டு தொழிலாளர்களைத் தங்களுடைய அடிமையாக வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்புக்குத் தகுந்த கூலிகொடாது, தங்கள் லாபம் ஒன்றை மாத்திரமே பெரிதாக எண்ணி அதை ஏராளமாகப் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். இதனால் தொழிலாளிகள் கஷ்டப் படுகிறார்கள். வேலைநிறுத்தம் செய்கிறார்கள். வர்க்கப் போராட்டம் ஆரம்பிக்கிறது. சிலசமயம் இந்தப் போராட்டம், ரத்தப் பிரவாகம் வரை கொண்டு போய் விட்டு விடுகிறது. ஒருவரை மற்றவர் சந்தேகிக்கவே செய்கிறார்கள். சிநேக பாவம் அறுந்தே போய்விடுகிறது. இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் என்ன?

இதற்கெல்லாம் முதலாளித்துவத்தினுடைய கெட்ட தன்மைகளே காரணமென்று கூறப்படுகிறது. பொருள் உற்பத்தி சாதனங்கள் சில மனிதர்களுடைய ஆதீனத்தில் இருக்கும்வரை அவர்களுடைய பேராசை அடங்காது, சுயநலம் ஒழியாது. அப்படியானால் இதனுடைய முடிவு வர்க்கப் போராட்டமும் படுகொலையுமாகத் தானிருக்கும் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் நாம் இங்கு அபேதவாதத்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை. அதுவேறு விஷயம். அது, உற்பத்திச் சாதனங்களின் மேல் வைக்கப்படுகிற பேராசை, சுயநலம் இவற்றின் அடிப்படையையே கருவறுத்து விடுகிறது. அங்கு உற்பத்தி சாதனங்களின் மீது சிலருக்கு மட்டும் ஆதீனமே கிடையாது. அவைகள் சமூகம் பூராவுக்கும் சொந்தமாக்கப்படுகின்றன. அப்படியானால் வர்க்கப் போராட்டத்திற்கோ, படுகொலைக்கோ காரணமே இல்லையல்லவா? ஆனால் நாம் இங்குகொஞ்சம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும்.

இந்த அபேதவாத சித்தாந்தம், அதாவது அந்தக்கொள்கை தத்துவ ரீதியாகப் பார்க்கும்போது நிரம்பவும் கவர்ச்சி தரக்கூடியதுதான். ஆனால் அந்தத் தத்துவத்தை நடைமுறையில் அமுலுக்குக் கொண்டு வரும்போது ஒரு பெரிய ஹிம்சை, படுகொலை நடைபெற்றிருக்கிறது. இதைப்பற்றி நாம் ஆச்சரியப்பட வேண்டியதே இல்லை. ஏனென்றால் வர்க்கப்போராட்டமே அபேதவாத தத்துவத்தின் ஜன்மஸ்தானம். அபேதவாதம் உலகத்திலே அமைதியை நிலை நாட்டவில்லை. ஆனால் அது வர்க்கப் போராட்டத்தை விருத்தி செய்கிறது. இந்தப் போராட்டத்திற்கும் படுகொலைக்கும் அது காரணமாயிருக்கிறது. மற்ற எல்லா ஏகாதிபத்தியங்களினுடைய பொருளாதார அமைப்புக்கும் இந்த அபேதவாத பொருளாதார திட்டத்திற்கும் நேர்மாறான முரண்பாடு இருப்பதால் அந்த ஏகாதிபத்தியங்கள் இதைக் கட்டாயம் எதிர்க்கின்றன; அதோடு சிநேகம் செய்ய அறவே மறுக்கின்றன. அதுமட்டுமில்லை அந்த அபேதவாதத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் தேசத்தில் உள் நாட்டுக் கலகத்தைக் கிளப்பி விடுகின்றன. பலன் என்ன? போராட்டம், யுத்தம், படுகொலை. ஆனால், அபேதவாத தத்துவத்தின் முக்கியமான ஒரு அம்சமாக ஹிம்சை இருப்பதாகக் கூற முடியாது. ஆனால், அந்த அபேதவாதத் திட்டத்தை ஒரு தேசத்தில் அமைக்கும்போது, அதை எதிர்க்கும் சக்திகளை அடக்குவதற்கு ஹிம்சைதான் கையாளப்படுகிறது அதைக் கையாள வேண்டியது தடுக்க முடியாததாகவும் ஆகிறது. அப்படி யில்லையானால் அந்தத் தத்துவத்தை அந்தத் தேசத்தில் நிலை நிறுத்த முடியாது.

ஆனால் நாம் இந்த உலகத்திலே அனுபவ பூர்வமாக என்ன கண்டிருக்கிறோம்? யுத்தத்தினாலே சமாதானத்தை நிலை நாட்ட முடியவில்லை. சமாதானத்தை நாட்டவே 1914ம் வருஷத்தில் யுத்தம் துவங்கியிருப்பதாய் வல்லரசுகள் கூறின. முடிவில் 1918ம் வருஷத்தில் சமாதானத்தையும் நிலை நாட்டினார்கள்? ஐயோ, ஒரு ராட்சஸ யுத்த

விதையை அல்லவா அன்று அவர்கள் நட்டு விட்டார்கள். பலன் என்ன? இன்று அந்த விதை மரமாகி யிருக்கிறது. அப்படி யானால் யுத்தத்தின் மூலம் சமாதானத்தை உலகில் நிலை நாட்ட முடியாது என்பது நிச்சயமாகிறது. இது எப்படி நிச்சயமோ, அப்படியேதான் ஹிம்சை மூலமாக, அஹிம்சையையோ சமாதானத்தையோ உலகத்தில் நிலை நாட்ட முடியாததும் நிச்சயம். ஏனெனில் வாள் எடுத்தவன், கடைசியில் வாளிலேயே மரணமடைவதைப் பிரத்தியட்சமாக நாம் காண்கிறோம். பொருளாதார அமைப்பை மாற்றுவதில் ஹிம்சையைக்கைக் கொண்டு வேண்டுமானால் எதிர்சக்திகளை சில காலத்திற்கு அடக்கிவைக்கலாம். ஆனால் அவை கட்டாயம் கிளம்பி ஒருகாலத்தில் தங்களுடைய பலத்தை எல்லாம் காண்பித்து எதிர்க்கவே செய்யும். வெற்றி கொண்டால் அதிகாரத்தைக் கைப்பற்றியும் கொள்ளும். அப்பால் அது தன்னுடைய எதிர் சக்தியை அழிக்க முற்படும். இதனால் நாம் என்ன அறிகிறோம்? அபேதவாத தத்துவம் ஏதோ கவர்ச்சி தரக்கூடியதாயிருந்தாலும் ஹிம்சைப் படலமாகவே அது இருக்கிறது. அதிலும் மனிதனுக்கு வேண்டிய முக்கியமான அமைதி கிட்டாது. அப்படியானால் அந்தத் தத்துவம் முற்றிலும் குற்றமுள்ளது என்பதற்கு ஏதேனும் தடையுண்டோ?

இந்தத் தத்துவத்தின் இன்னொரு அம்சத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அபேதவாத தத்துவத்தின் அடிப்படையிலேயே ஹிம்சை நிறைந்திருக்கிறது. அந்தத்தத்துவத்தில், பொருள் உற்பத்தி சாதனங்கள்—அதாவது, இயந்திரங்கள், நிலங்கள் வகையரா—சிலபேருடைய ஆதீனத்தில் இல்லாமல், பொருளை யார் உற்பத்தி செய்கிறார்களோ அந்த ஜன சமூதாயம் யாவுக்கும் பொது வாக்கப் படுகிறது. அப்படி யானால், முதலாளித்துவ பொருளாதார அமைப்பில், வேலை செய்யத்தூண்டுவதற்குரிய தூண்டுதல் அபேதவாத பொருளாதார அமைப்பில் இல்லாமல் போகிறது. அதாவது செய்த வேலையின் பயனை, தான் அநுபவிக்க வகையில்லாத போது மனிதன் தன்னுடைய சக்தி பூராவையும் செலவழிக்க மனமில்லாதவனாகிறான். இதனால் அவனுடைய சக்தியோ, அறிவோ, மலர்வதற்கு வகை யில்லா தொழிகிறது. அப்படியானால் அபேதவாத திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கும் தேசங்களில் ஜன சமுதாயம் வேலையே செய்யவில்லையா என்று கேட்கலாம். செய்கிறார்கள். ஆனால் இயற்கையான தூண்டுதலால் அவாகள் செய்யவில்லை. தண்டனைக்குப் பயந்து அவர்கள் செய்கிறார்கள். இதனாலேதான், அபேதவாத தத்துவத்தின் முக்கிய அம்சமான பொருள் உற்பத்தி ஸ்தானத்திலேயே ஹிம்சை நிறைந்திருக்கிறது என்று நாம் கூறுகிறோம். ஹிம்சை அபேதவாத பொருளாதாரத் திட்டத்தின் பிரிக்க முடியாத ஒரு அம்சமாகும்.

இந்தவிதமாக பொருளாதார அமைப்பின், அது முதலாளித்துவமாயிருந்தாலும் சரி, அல்லது அபேதவாதமா யிருந்தாலும்சரி, இந்தஇரண்டிலும் ஹிம்சை, பிரிக்கமுடியாத ஒரு அம்சமாகப் பின்னிக்கிடக்கி

றது. இதனால் போராட்டமும் படு கொலையும் நிகழ்வது திண்ணம். சமாதானம் குதிரைக் கொம்பு தான்.

முதலாளித்துவ பொருளாதார திட்டத்திலோ, அல்லது, அபேதவாத திட்டத்திலோ உலகத்திலே சமாதானத்தை நிலை நாட்ட முடியாது என்பதை நாம் மேலே விளக்கியிருக்கிறோம். இனி, இந்தத் திட்டங்களால் உலகத்திலே முன்னேறியிருப்பதாகக் கூறுகிறார்களே அந்த முன்னேற்றத்தைப் பற்றிச் சற்று ஆராய்வோம்.

மேலே கூறப்பட்ட முதலாளித்துவ, அபேதவாத நாடுகள உலகத்திலேயே முன்னேறி யிருக்கின்றனவா என்று பார்த்தால் அதையும் காணோம். அதாவது, அவைகள் இயந்திர நாகரிகத்தில் வெகு தூரம் முன்னேறி யிருக்கலாம். ஆனால் அது உண்மையான முன்னேற்றமாகாது. மனிதன், மனிதத் தன்மையை அடைவதைத் தான் நாம் உண்மையான முன்னேற்றம் என்று வலியுறுத்துகிறோம். அஃதில்லாத முன்னேற்றம் முன்னேற்றமே ஆகாது. ஏனென்றால், இயந்திர நாகரிகத்திலே முன்னேறி யிருக்கும் அந்த தேசங்களிலுள்ள ஒவ்வொரு மில்களையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே வேலை செய்யும் இயந்திரங்களுக்கும் மனிதர்களுக்கும் ஏதேனும் வித்தியாசமிருக்கிறதா? ஆனால் மனிதன், கொஞ்சம் சிந்திக்கலாம்; யோசனை செய்யலாம். இதை நாம் மறுக்க வில்லை. இருந்தாலும், அவன் அந்த யோசனையையும் சிந்தனையையும் உபயோகிக்க முடியாதே. மேலதிகாரிகள் கட்டளைப்படி இவன் வேலை செய்ய வேண்டியது தானே. ஒரு இடத்திலே இருக்கும் ஒரு பொத்தானை அழுத்தினால் இயந்திரம் ஓடத் தொடங்குகிறது. மில்லின் சங்கு ஊதியவுடன் மனிதன் வேலைக்கு ஆரம்பிக்கிறான். அப்படியானால் உணர்ச்சியற்ற இயந்திரங்களுக்கும் உணர்வுள்ள மனிதனுக்கும் ஒன்றும் வித்தியாசத்தைக் காணோம். அப்படியானால், அந்த யந்திரங்கள் பண்டங்களைச் செய்து குவிக்க, அவற்றை மூட்டை கட்டி அதன் மீது விலாசங்களை ஒட்டிக் கொண்டிருக்கிறான் மனிதன். இப்படியே இவனுடைய நாட்களைக் கழித்துச் சாக வேண்டியது தானா? இது தான் மனித சமூகத்தின் முன்னேற்றமா? இல்லை. இது மனித சமூகத்தின் ஆத்ம ஹத்தியாகும். இப்படியாக மனிதனால் ஆக்கப்பட்ட இயந்திரமே அந்த மனிதனை இயந்திரமாக்கி விட்டது. நாகரிகம், அதாவது முன்னேற்றம், சுய முயற்சி, ஆத்மப்பிரகாசம் அற்றே போய்விட்டன. அப்படியானால், ஆத்மப் பிரகாசம் பெறுவதற்கு, ஒவ்வொருவரும் முயல வேண்டியது கடமை இல்லையா? ஆத்மப் பிரகாசம் இல்லையேல் மனிதன் மனிதத் தன்மையை எங்ஙனம் அடைவது? இந்த வாழ்க்கையிலேயே மனிதன் பூரண மனிதனாக வேண்டும். அவன் அமரனாக வாழ வேண்டும். இஃது ஒவ்வொரு மனிதனுடையவும் லட்சியமா யிருக்க வேண்டும். இதற்கு வகை செய்யாத எந்த ஒரு பொருளாதாரத் திட்டமும், அது முதலாளித்துவ மாயிருந்தாலும் சரி, அல்லது, அபேத வாதமாயிருந்தாலும் சரி, அவற்றால் ஏற்படும் முன்

னேற்றம் மனித சமூகத்தினுடைய சரியான முன்னேற்றமாயிராது.

ஆனால் இயந்திர அபிவிருத்தியை ஆதரிக்கும், முதலாளித்துவம், அபேதவாதம் இந்த இரண்டிலுமே, இயந்திரங்களின் சாதனத்தால் மனிதனுக்கு ஜாஸ்தியான நேரம் மிஞ்சுவதாகவும், அந்த நேரத்தை, அவன் நல்ல நூல்களை வாசித்தல் முதலிய நல்ல சத்காரியங்களில் ஈடுபடுத்தி ஆத்மப் பிரகாசத்தை அடையமுடியும் என்றும் கூறப்படுகின்றது. இந்த வாதமும் பிரயோசனமற்றது. ஏனென்றால் மனிதனுக்கு, அவனது ஆத்மாவைப் பிரகாசிக்கச் செய்வது, மனிதத் தன்மையை அடைவிப்பது, அவனுக்குக்கிடைக்கும் நேரம் அல்ல; அவன் செய்யும் வேலைதான். இதை ஒவ்வொருவரும் முக்கியமாகச் சிந்திக்க வேண்டும். மனிதனுக்கு வேண்டிய தனித்திறம், சொந்தமுயற்சி, உற்சாகம், உயர்ந்தகுணம், கெட்டித்தனம், அழகு, நல்ஞானம், திடம், சக்தி இவைகளை அவனுக்கு அந்த நேரம் கொடுத்துவிடாது. அப்படியானால் கிடைக்கும் நேரம் ஒருபிரயோசனமுமில்லாது கழிந்துபோகும். மற்றும், அந்த நேரத்தை மற்ற கெட்ட செய்கைகளில் ஈடுபடுத்தி விட்டானானால் அஃது அவனுடைய வாழ்க்கையையே பாழ்படுத்திவிடலாம். இதனால் நேரம் ஒருவனை மனிதனாக்கி விடாது என்பதும் அவன் செய்யும் வேலையும் அதற்கு பெரிதும் சாதனமாயிருக்கிறதென்பதும் புலப்படும். அவன் செய்யும் வேலை, அதிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடியதாயும் அதனால் தன்னுடைய சக்திமுழுதும் பிரகாசிக்கக் கூடியதாயும் மனிதத் தன்மை பிரதிபலிக்கக் கூடியதாயும் இருக்கவேண்டும். ஆனால் முதலாளித்துவம், அல்லது அபேதவாதம் இந்த இரண்டும் இயந்திர அபிவிருத்தியில் வாழ்கின்றன. இந்த இரண்டு தத்துவங்களினாலுமே மனிதன், மனிதனாக—ஆத்மபிரகாசமுடையவனாக ஆகவே முடியாது. ஆனால்இவற்றால் மனித ஜாதியின் அழிவுமட்டும் நிச்சயம்.

அப்படியானால், நாம் என்ன செய்யவேண்டும்? கையைக்கட்டிக் கொண்டு சும்மா இருந்து விடுவதா? உலகத்திலே நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டவேண்டாமா? மனித சமூகம் மனிதத்தன்மையோடு அமரர்களாக இவ்வுலகில் வாழவேண்டாமா? அவர்கள் உண்மையில் முன்னேற வேண்டாமா? இதற்காக யுத்தத்தின் பயங்கரத்தைப்பற்றி வெறும் பிரசங்கமாரி பொழிவதால் மாத்திரம் யுத்தத்தை நிறுத்திவிட முடியுமா? இயந்திரங்களைத் திட்டுவதினால் மாத்திரம் அந்த அபிவிருத்தியை தடுத்துவிட முடியுமா? அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? மனித வாழ்வுக்கு விரோதிகளாகிய அந்தப் பொருளாதார தத்துவங்களை அடியோடு கல்லி எறிந்து விட்டு, அந்த ஸ்தானத்திலே ஒரு புதிய பொருளாதார அமைப்பை அமைத்தல் வேண்டும். இதனால் மனித சமூகம் உண்மையிலேயே வாழ்வதற்கான ஏற்பாடு செய்யவேண்டும்.

ஃ ஃ ஃ

மேலே கூறப்பட்டிருக்கிற கஷ்டங்களுக்கெல்லாம் சரியான பரிகாரமார்க்கமாகத்தான் மகாத்மா காந்தியடிகள், கிராமக்கைத்

தொழில் சங்கத்தை ஸ்தாபித்திருக்கிறார். இதன் மூலமாக, முதலாளித்துவம், அபேதவாதம் இந்த இரண்டு திட்டங்களாலும் உலகமக்கள் நாச முறுவதைக் காப்பாற்றி யிருக்கிறார். மகாத்மாவினுடைய திட்டத்தில், பொருள் உற்பத்தி வேலை, அந்த தேசத்தின் ஜன சமுதாயத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருடைய கையிலும் இருக்கும். அதாவது, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில், பொருள்களை உற்பத்தி செய்யும் சாதனங்கள் சில பேருடைய ஆதீனத்திலிருக்கின்றன. அபேதவாதப் பொருளாதார அமைப்பில் அந்தச் சாதனங்கள் ஜன சமுதாயத்திற்குச் சொந்தமாக்கப் படுகின்றன. ஆனால் மகாத்மாவினுடைய பொருளாதார திட்டத்தில், பண்டங்களை அதாவது பொருள்களை உற்பத்தி செய்யும் வேலை ஜனசமுதாயம் ஒவ்வொருவருடைய கடமையாயிருக்கும். ஆனால் அவர்களை, இன்ன வேலைதான் செய்யவேண்டும், அதையும் இன்னபடிதான் செய்யவேண்டும் என்று ஒருவரும் நிர்ப்பந்தப் படுத்த மாட்டார்கள். இவ்விது அவரவர்களுடைய எண்ணத்திற்கும், தேவைக்கும் விட்டுவிடப்படும். ஏனென்றால் மனிதன் மனிதனாவதற்கு இதுதான் முக்கியமான மார்க்கம். ஆனால், உற்பத்திப் பொருள்களின்மீது அவர்களுக்கு மாத்திரம் தனித்த ஏகபோக உரிமை அளிக்கப் படமாட்டாது. அந்தப் பொருள்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் வித்தியாச மின்றிக் கிடைக்கப்பெறும். இந்தப் பங்கீடு முறையை, அதாவது உற்பத்தி செய்யப் பெறும் பொருள்களை ஏற்றத்தாழ்வில்லாது பகிர்ந்து கொள்ளும் வேலையை அவர்கள் உபயோகிக்கும் இயந்திரமே செய்து விடும். அதாவது அவர்கள் உபயோகிக்கும் இயந்திரம் சிறிதா யிருப்பதால் அதைக்கொண்டு அவர்கள் தங்களுடைய தேவைக்கும், மற்றும் தங்கள் அக்கம் பக்கத்திலுள்ள சில கிராம ஜனங்களின் தேவைக்கும் போதுமானபடிதான் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும். அப்படியானால் யாருடைய நிர்ப்பந்தமோ, அல்லது அதிகாரமோ இல்லாமல், பொருள்களின் பங்கீடு முறை இயற்கையாகவே ஏற்றத்தாழ்வில்லாது ஆகிவிடுகிறது.

இதுவரை உலகத்திலே, பெரிய, பெரிய இயந்திரங்களினால் விஞ்ஞான உதவிகொண்டு தேவைக்கு மிஞ்சிய சாமான்களை உற்பத்தி செய்து குவிக்கப்பட்டது. எந்தச் சாமானுக்கும், தேவைக்குத் தகுந்தபடிதான் விலை ஏறவோ இறங்கவோ செய்யும். அப்படியானால், தேவைக்கு மிஞ்சி குவிந்து கிடக்கும் இந்தச் சாமான்களின் மதிப்புக்குறையும். இதை ஈடு செய்வதற்கு, தொழிலாளருடைய சம்பளத்தைக் குறைக்கவோ, அல்லது அவர்களுடைய வேலைநேரத்தை அதிகமாக்கவோ, அல்லது, அவர்களை வேலையிலிருந்து விலக்கவோ வேண்டும். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுவது சகஜம்.

ஆனால் மகாத்மாவினுடைய திட்டத்தில், பொருள்கள் ஒரே இடத்தில் குவிவதற்கு இடமே கிடையாது. கிராமவாசி ஒவ்வொருவரும் உற்பத்தி செய்பவராயிருப்பார். இதனால் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரும். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை

உண்டாக்குவதற்கு உபயோகிக்கும் இயந்திரங்கள் சிறியதாயிருப்பதால், ஏராளமான பொருள்களை குவிக்கவோ, அதை விநியோகிப்பதற்கு மார்க்கட் தேடியலையவோ வேண்டியது ஏற்படாது. நாடுபிடிக்க அவசியமே யிராது. யுத்த பயம் இராது. இந்தச் சிறிய இயந்திரங்களினால், தொழிலாளிகளை அடிமைகளாக அடக்கி வைத்திருக்கவோ, அல்லது அவர்களுடைய கூலியைக் குறைத்து ஹிம்சிக்கவோ வேண்டிய அவசியமே இராது. இதனால், முதலாளித்துவத்தாலும், அபேத வாதத்தாலும் உலகத்திலே ஏற்படும் கொந்தளிப்பு, ஹிம்சை, யுத்தம், இந்த அநியாயங்கள் அறவே ஒழிந்து மனிதன் வாழ்க்கையில் சமாதானத்தைப் பெறுவான். உண்மையான முன்னேற்றத்தை அடைவான்; அப்போதுதான் உலகத்திலே சமாதானம் நிலவும். உண்மையான முன்னேற்றம் ஏற்படும்.

ஓ ஓ ஓ

ஒவ்வொரு பிரஜையும் சுதேசியத்தை ஆதரிக்க வேண்டுமாய் பிரசாரம் செய்ய வேண்டும்; அதாவது அவர்கள் முதலில் தங்களுடைய ஜில்லா, அல்லது மாகாணத்தில் உற்பத்தியான சாமான்களை அவர்கள் ஆதரிக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு கிராமத்திலும் தங்களுக்கும், தங்களது அக்கம் பக்கத்தேவைக்கும் போதுமான பொருள்களை உற்பத்தி செய்யப்படுவதால் இந்தப் பிரசாரத்தில் யாதொரு சிரமமுமிருக்க நியாயமில்லை. இவ்வித உற்பத்தியால், அதிக உற்பத்தி என்ற பேச்சுக்கே இடமில்லை. இதனால் இவர்கள் இந்தப் பொருள்களை விற்பதற்கு மார்க்கட்டைத் தேடியலைய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படாது. இந்த நிலைமையால், அதாவது பெரும்பாலாக ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்யும் போது, யாரும், பெரிய இயந்திரங்களை ஏற்படுத்தவோ, அதில் ஏராளமான சாமான்களைச் செய்து குவிக்கவோ முயற்சிக்க நினைக்கவோ முடியாது. ஏனெனில் அந்த இயந்திரங்களின் உதவியால் செய்துகுவிக்கும் பொருள்களை வாங்குவது யார்?

ஆனால் நாம் மேலே, ஒவ்வொருவரும், முதலில், தங்களுடைய ஜில்லா, அல்லது மாகாணத்தில் உற்பத்தியான சாமான்களைத்தான் முதலில் ஆதரிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோமல்லவா? இதனால் மாகாண, அல்லது ஜில்லா வேற்றுமை எண்ணம் ஏற்படுமே என்று நினைக்கக்கூடும். அப்படியில்லை. மகாத்மாவினுடைய திட்டத்திற்கு அர்த்தம் அதுவல்ல. அதாவது ஒவ்வொருவருக்கும், தங்களுக்கு அருகிலிருப்பவர்களுக்குச் சேவை செய்ய வேண்டியது முதலாவது கடமையாகும். இதன் மேல் அவர்கள் தங்களுடைய சக்திக்குத் தகுந்தவாறு உலகம் பூராவுக்கும் தங்களது சேவையைப் பெருக்கிக் கொள்ளலாம். அதாவது உதாரணமாக, ஒரு குடும்பத்தை எடுத்துக் கொள்ளுவோம். ஒரு மனிதன், மற்றவர்களைப் பார்க்கிலும், முதலில் தன்னுடைய குடும்பத்திற்குச் சேவை செய்யக் கடமைப் பட்டவனாயிருக்கிறான். தன் குடும்பத்தாரின் வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்ய

வேண்டிய சேவையைச் செய்வதனால் அதன் மூலயாக மனித சமூகத்திற்கும் உலகத்திற்கும் சேவை செய்தவனாகிறான். உலகமே இவ்விதப் பல குடும்பங்கள் சேர்ந்த ஒரு பெரிய ஸ்தாபனந்தானே. எப்பொழுதுமே, சிறிய சேவை, பெரிய சேவையின் விரோதியாகாது. சிறிய சேவை நாளடைவில் பெரிய சேவையாகவே பரிணமித்துவிடும். நாம் மேலே குறிப்பிட்டிருக்கிற சுதேசிப் பிரசாரமிருக்கிறதே அதற்கு, துண்டு துண்டு ஜில்லா ஜில்லாலாக, மாகாணம மாகாணமாக தனித் தனியே அறுபட்டுப் போகும் என்பது அர்த்தமில்லை. அதாவது, அவன் தனக்கும் தனக்குப் பக்கத்திலிருப்பவர்களுக்கும் அல்லாமல் அதற்கு வெளியே அவனுடைய சேவையை விசாலப்படுத்த வேண்டிய பொறுப்பு அவனுக்கு ஏற்படாது என்பதே அர்த்தம். உலகம் பூராவுமே இவ்விதம் சேவை செய்பவர்களது கூட்டமாகிவிடும் அல்லவா? இப்படியாக ஒவ்வொருவரும் தங்களுடைய சிறிய சேவையால் உலக சேவை செய்தவர்களாகிறார்கள்.

இன்று உலகத்திலே தோன்றி இருக்கும, யுத்த பயம், ஹிம்சை முதலிய அநியாயங்கள் உலகத்தை விட்டு அகல வேண்டுமானால், உலகத்திலே நிரந்தரமான சமாதானம் நிலவ வேண்டுமானால், மனித ஜாதியின் உண்மையான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், மனிதன், இவ்வுலக வாழ்க்கையில் உண்மையான மனிதத் தன்மை பொருந்திய மனிதனாக, அமரனாக வாழவேண்டுமானால் இவற்றை முதலாளித்துவ, பொருளாதார முறையோ, அல்லது அபேத வாதத் திட்டமோ கொடுத்துவிட முடியாது. மஹாத்மாவினுடைய திட்டம் ஒன்றால்தான் முடியும்.

யுத்த தேவதையை ஆலிங்கனம் செய்ய விரைந்து விரைந்து சென்று கொண்டிருக்கும் தற்கால உலகம் மஹாத்மா காந்தி யடிகளினுடைய இந்த உன்னதமான பொருளாதாரத்துவத்தை காதுகொடுத்துக் கேட்குமா? ஏ, எதிர்கால உலகமே! உன்னுடைய வாழ்வு நீ இதற்குக் கொடுக்கும் பதிலைப்பொறுத்தல்லவா இருக்கிறது? உன்னுடை பதில் என்ன?

(சர்வோதயம்)

காந்தீயம், ஒரு தனி மதமாக எதிர் கால உலகத்தில் அங்கீகரிக்கப் பெறுமானால், அதன் சிருஷ்டி கர்த்தா இவர்தான்.

நல்ல புத்தி

(சரத் சந்திர சட்டர்ஜி)

வங்காளி மூலத்திலிருந்து மொழி பெயர்த்தவர்
—எஸ். கிருஷ்ணன்

(சென்ற மாதத்தொடர்ச்சி)

'வயிறு வலித்தால் என்ன செய்வேன்?'

நாராயணி விசனத்துடன் மொழிந்தாள்— அதுக்காகத்தானே ரொட்டியைத் தின்ற பின் கொய்யாக்காய் தின்கிறாய்?

திகம்பரி சத்தம் கேட்டு ஓடியே வந்தாள். ஆரம்பித்தாள்—பாவியைப் பார். அப்பாவைக்கூட இழுத்து விட்டான். கேட்கிறான், ஏன் இறங்க வேண்டும் உங்கப்பன் வீட்டு மரமா? என்று.

நாராயணி அண்ணாந்து பார்த்து விட்டுச் சொன்னாள்—ஏண்டா நீ அப்படிப் பேசினாயா?

ராமன் முகத்தை வலித்துக் கொண்டு சொன்னான்—இல்லே மதனி, சொல்லவில்லே.

திகம்பரி கர்ஜித்தாள்—'சொல்லவில்லையா போக்கிரி' சொல்லவில்லே? நித்தோ கூட இதோ இருக்கிறாளே. பிறகு மிகக்கோபம் கொண்டு மூக்கினால் பேச ஆரம்பித்தாள்—அன்னிக்கு பொம்பு முதுகில் விழுவே கதினாள்—'இனி மாட்டேன். இனிச் செய்ய மாட்டேன்' என்று. பிடிபட்டால் கெஞ்சிக் கேட்பது; விட்டு விட்டால் குதித்துக்கொக்கரிப்பது. நாசமாய் போகிறது!'

ராமனால் இந்த வார்த்தையைத் தாங்க முடியவில்லே. கையிலிருந்த கொய்யாக்காயை ஓங்கி எறிந்தான். அது திகம்பரிமேல் விழவில்லே. ஆனால் நாராயணியுடைய வலது கண் புருவத்தில் போய் அடித்தது. அவளுடைய கண்கள் ஒரு நிமிஷம் இருண்டன. பாவம் அங்கேயே உட்கார்ந்து விட்டாள். திகம்பரி ஒரேயடியாய்க் கூச்சலிட்டாள். வேலைக்காரி கைக் காரியத்தை போட்டு விட்டு ஓடியே வந்தாள். ராமன் மரத்திலிருந்து குதித்து அடித்துப் புரண்டு ஓட ஆரம்பித்தான்.

மத்தியானம் சாய்வால் சாப்பிட வந்தபோது எல்லா விஷயத்தையும் தெரிந்து கொண்டார். நாராயணி கட்டிலில் சோர்வுற்றுக் கிடந்தாள். அவளுடைய வலது கண் புருவம் பெரிதாய் வீங்கி விட்டது. அதில் ஈரத் துணியைக்கட்டி நித்தியகாளி வீசிக்

கொண்டிருக்கிறாள். திகம்பரி கதவு மறைவுக்குக்கூடப் போகாமல் சாமலாலுக்கு எதிரில் வந்து நின்று அழுது கொண்டே சொன்னாள்—ராமன் நாராயணியைக் கொன்றே விட்டான்!

சாமலால் சந்தேகத்தால் நடுக்குற்றார். அருகேபோய் காயத்தை உற்றுப் பார்த்து விட்டு மனைவியிடம் சொன்னார்—என் ஆணை. அவனுக்கு நீ சாப்பாடு போடவோ அவனிடம் பேசவோ அவனைப் பற்றிய வேலையைக் கவனிக்கவோ செய்தால் அன்று என் தலை வெடிக்கும்.

நாராயணி கதிகலங்கிப்போய் விட்டாள். சொன்னாள்—பேசாமலிருங்கள், பேசாமலிருங்கள், இந்த மாதிரி பேசாதேயுங்கள்.

சாமலால் சொன்னார்—என் ஆணையைமீறினால் அன்று என் பிணத்தின் முகத்தில் கண் விழிக்க நேரும்.

இப்படிச் சொல்லி விட்டு அவர் வெளியே சென்றார்.

ராமன் நின்றும் உட்கார்ந்தும் நடந்தும் பற்பல கற்பனைகளும் மனதில் தோன்ற நாள் முழுதும் ஆற்றின் கரையில் திரிந்தான். அந்தி மயங்கியதும் வீட்டுக்கு வந்தான். பார்த்தான். வீட்டை மூங்கில் தட்டியால் இரண்டாய் பிரித்திருக்கிறார்கள். தட்டிகளை அசைத்துப் பார்த்தான். பலமான தட்டி. லேசில் அசங்காது. சமையல் அறையில் விளக்குஎரிந்து கொண்டிருந்தது. அந்தச் சமையலறையை எட்டிப் பார்த்தான். அங்கும் அப்படியே. யாரும் இல்லை. தரையில் பாத்திரங்கள் குவிந்து கிடந்தன. விஷயம் நன்கு புலப்படவில்லை யாகிலும் கால நிகழ்ச்சியுடன் இதை ஒப்பிட்டுப்பார்க்கையில் தொடர்பை ஒருவாறு உணர்ந்தான். அவன் மனம் துடித்து தன் அறையில் போய் உட்கார்ந்து கொண்டான். வீட்டின் மறுபாகத்தில் என்ன நடக்கிறதென்று அறிய அவாவுடன் மௌனமாய் கவனித்தான். இருந்த பசியும் பறந்து போய்விட்டது. மணி ஒன்பது அடித்திருக்கும். எழுந்து பின்கதவைத் தட்டினான். வேலைக்காரி கதவைத் திறந்து விட்டு ஒதுங்கி நின்றாள்.

ராமன் கேட்டான்—மதனி எங்கே?

'உள்ளில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறாள்.'

ராமன் அறைக்குள் போய் பார்த்தான்.

மதனி கட்டிலில் படுத்திருந்தாள். திகம்பரியும் பெண்ணும் பாயில் உட்கார்ந்திருக்கிறார்கள். கோவிந்தன் விளையாடிக் கொண்டிருந்தான். ராமனைப் பார்த்ததும் ஓடியே வந்து சித்தப்பா கையை ஆட்டிக்கொண்டுசொன்னான்:- சித்தப்பா, உன் வீடு அங்கே இருக்கிறது. இது எங்கள் வீடு. நீ இந்தப் பக்கம் வந்தால் உன் காலை வெட்டி விடுவதாக அப்பா சொன்னார்.

ராமன், மதனி காலண்டை போய் உட்கார்ந்தான். நாராயணி காலை மடித்தாள். ராமன் பேசாமல் உட்கார்ந்திருந்தான். திகம்பரி தன் அருமைப் புதல்வியை உதைத்துக் கொண்டு சொன்னாள்—அத்திம்பேர் என்ன சொன்னார் சொல்லு.

சுரதுனி மனப்பாடம் பண்ணி ஒப்பிப்பதுபோல் ஒப்பித்தாள்—அத்திம்பேர் சொன்னார்—நீ இங்கே வரக் கூடாதாம். நாளை காலை—மேல் என்ன சொன்னார் அம்மா?

திகம்பரி சொன்னாள்—சொத்து—

சுரதுனி சொன்னாள்—சொத்தைப் பங்கு பிரிப்பார்களாம்.

திகம்பரி சொன்னாள்—ஆணை யிட்டதை ஏன் சொல்லவில்லை? சனியனே!

சுரதுனி சொன்னாள்—உனக்கு அக்கா சாதம் கூட போடக் கூடாது என்று அத்திம்பேர் ஆணை யிட்டிருக்கிறார். பேசவும் கூடாதாம் உன்னுடன். —அத்திம்பேர் சொல்லியிருக்கிறார்—

நாராயணி வெடுக்கென்று குறுக்கே சொன்னாள்—சரி, சரி போதும். நீ பேசாமல் இரு.

பிறகு திகம்பரி சொல்ல ஆரம்பித்தாள்—சரிதானே அப்பா. நீ யாரையாவது கொன்று விட்டு வா. அவர் ஆணையிடாமல் என்ன செய்வார்? யார் என்ன சொன்னாலும் நான் அவரை தூஷிக்க மாட்டேன். இனிமேல் இந்த வீட்டுக்கு வந்து போய்க் கொண்டு சாப்பிட்டுக் கொண்டும் இருக்க முடியாது. கணவனுடைய ஆணையை மதிக்காமல் இருக்க முடியுமா?—

சுரதுனி சொன்னாள்—பசிக்கிறது அம்மா. சாதம் போடு வா.

திகம்பரி கோபமாய் சொன்னாள் —இருடீ கொஞ்சம்.

ராமன் வீட்டில் இருக்கையில் வீடு நெருப்புப் பற்றி எரிகிறதானால் கூட எழுந்திருக்க முடியாது. ராமனுடைய உள்ளத்தில் அடங்கிக்கிடந்த அழுகை வெளியே வர ஆரம்பித்தது. ஆனால் திகம்பரி காலையில் எரி-து விழுந்ததை நினைக்கவே அவள் மனம் கல்லாய் மாறிற்று. அவனால் அழ முடியவில்லை. 'இனிச் செய்ய மாட்டேன்' என்று சொல்லவும் முடியவில்லை. இந்த வாக்கியம் அவனை எவ்வளவோ பலவித விபத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறது. ஆனால் இன்று அதையும் சொல்ல நா எழவில்லை. ஆனால் உள்ளம் வெந்து நொறுங்கிக் கொண்டிருந்தது.

இதற்குள் நாராயணி ஈன ஸ்வரத்தில் சொன்னாள்—ஸாரோ, அவனைப் போகச் சொல்லு.

அவன் அழுகையை அடக்கிக் கொண்டே சொன்னான்—அவனைப் போகச் சொல்லணுமா? எனக்குப் பசி துடித்தால்? அப்போதிருந்து சாப்பிடவில்லை.

நாராயணி ஆவேசத்துடன் பதிலளித்தாள்—ஒரே யடியாய் கொன்று விடுவதுதானே. அப்போது வாரி வாரிச் சாப்பிடலாம். எனக்குத் தெரியாது—இஷ்டம் போல் செய்யட்டும். நிர்த்திய காளி கிட்ட போகட்டும்.

'அவள் கிட்டப் போக மாட்டேன். யாரிடமும் போக மாட்டேன். பசியோட தூங்கிவிடப் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டு கால் அடி எடுத்து வைக்கும் போது வீடே நடுங்கும்படியாக வெளியே சென்றான். பேசாமல் தன் கட்டிலில் வந்து படுத்தான். வேலைக்காரி கொஞ்சம் ஆகாரம் கொண்டு வந்து சொன்னாள்— 'சின்ன ஐயா! சாப்பிடுங்கள்.'

ராமன் குதித்தெழுந்து அலறினான்—இங்கிருந்து போ—சிடு மூஞ்சி—போய்விடு.

நிர்த்தியகாளி உணவை வைத்து விட்டுச் சென்றாள். ராமன் தட்டை வீசி முற்றத்தில் எறிந்தான்.

காலையில் சாமலால் தன் வேலைக்குச் சென்றார். ராமன் முற்றத்திலிருந்தபடியே கர்ஜித்தான்—ஆணை கீணை யொன்றும் எனக்குத் தெரியாது. பெரிய ஆணையிட்டு விட்டாராம். அவர் ஆணையிடுவதற்கு யார்? கேட்கிறேன். நான் மதனியை அடித்தேனா? அந்தக் கிழட்டுப் பிசாசை அறைந்தேன். ஆனால் அது கை தவறி மதனி மேல் விழுந்தது. அவர் பின்னும் ஏன் ஆணையிட்டார்?

இதற்கெல்லாம் யாரும் பதிலளிக்கவில்லை. கொஞ்சம் நேரத்துக்குப்பின் அவன் குரல் மாற்றிக் கொண்டு சொன்னான்—அதுவும் நல்லதுதான். பேச வேண்டாம். என் கையாலே நானே சமைக்கிறேன். நன்றாச் சமைப்பேன். சாதம் பருப்பு நல்ல நல்ல கறி—எல்லாம் தனியே நன்றாகச் சாப்பிடுகிறேன். எனக்கு என்ன குறைவு?

இதுக்கும் யாரும் மறு மொழி கூறவில்லை. பிறகு அவன் சமையல் அறைக்குள் சென்று சடசட வென்று பாத்திரங்களை அங்கும் இங்கும் ஆகப் பரப்பினான். வேலை ஆரம்பித்தான். போலாவை அரிசி கழுவி கறிக்கு நறுக்கக் கட்டளை யிட்டிருந்தான். நிர்த்தியகாளி வேண்டியதை யெல்லாம் கொண்டு வைத்துப் போயிருந்தாள். போலாவிடம் உத்தர விட்டான்—நீ என் வேலைக்காரன். அந்தப் பக்கம் போகக் கூடாது. அங்கிருந்து இங்கு யாராவது வந்தால் காலை அடித் தொடித்து விடு தெரியுமா? நிர்த்தியகாளி மட்டும் வந்தால் இந்தப் பக்கம்!

நாராயணி சமையல் அறைத் திண்ணையில் உட்கார்ந்தபடி இந்தப் பேச்சைக் காதில் வாங்கிக் கொண்டாள். திகம்பரி சந்தோஷத்துடன் சுவர் ஓட்டை வழியாய் எட்டிப் பார்த்தாள். கொஞ்சம் நேரத்துக்குப் பிறகு நாராயணி யருகே வந்து சிரிப்பை அடக்கிக் கொண்டு பேச ஆரம்பித்தாள்—குழந்தையுடைய மூளையைப் பார். நன்றாய் சமையல் செய்யப் போகிறானாம். பானையில் மூக்கால் பங்கு அரிசியைப் போட்டு கொஞ்சமா ஜலம் வைத்திருக்கிறாள். —சாதம் ஆகிக் கொண்டிருக்கிறதாம். சாப்பிடப் போகிறவன் ஒருவன். பத்துப் பேருக்கு அரிசி எடுத்திருக்கிறான். அரிசி எப்படி வேகப் போகிறதாம்? கரிஞ்சு போகும். இந்தப் பானையில் இவ்வளவு அரிசி வைக்கலாமா? அரிசியை வறுத்து விடத்தானே. சமைத்துச் சாப்பிடுவேன் என்று சொல்வது மட்டும் மாரைத் தட்டிக்கொண்டுதான். நாமும்தான் சமைக்கிறோம். இவ்வளவு பெருமை புட்டுக் கொண்டு போகவில்லையப்பா! நான் அடுப்பில் பானையை ஏற்றினால் அப்புறம் அதை இறக்க வந்தால் போதும். சாதம் நன்றாக வெந்திருக்கும். நானும் சமைக்கிறேன்—அவனும் சமைக்கட்டும். சாப்பிட்டுப் பார்க்கிறவர்கள் யார் சமையல் நன்றாயிருக்கிறதென்று சொல்லட்டும்.

நாராயணி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அருகே உட்கார்ந்திருந்த நிர்த்தியகாளி சொன்னாள்—பாட்டியம்மா நீங்கள் சொல்வது அழகாய்த் தானிருக்கிறது. ஒரு டம்ளர் ஜலம் ஒரு நாள் எடுத்துச் சாப்பிடாதவன் எப்படி சமைப்பான்?

பல விருஷமாக இருந்தவேலைக்காரி. ஆகவே விஷயம் நன்கு அறிந்தவள். அவளுக்கு திகம்பரி பேசியது பிடிக்கவே யில்லை.

அம்மாவைப் போல் சுரதுனியும் அடிக்கடி ஓட்டை வழியாய் எட்டிப் பார்த்துக் கொண்டு நின்றாள். ஒரு மணி நேரத்திற்குப் பின் ஓடியே வந்து அக்காள் கையைப் பிடித்துக் கொண்டே சொன்னாள்—அக்கா—போய்ப்பாரு. அவன் பச்சை அரிசியைத் தின்று கொண்டிருக்கிறான். கறியில்லை, குழம்பில்லை. சாதம் மட்டும். வேகாதசாதம் சாப்பிட்டால் வயிற்றை வலிக்காதா?

நாராயணி அவள் கையை உதறி விட்டு படுக்கையில் போய்ப்படுத்தாள். இன்று என்ன கொடும்பசியுடன் என்ன வருத்தத்துடன் இதை சாப்பிடுகிறான் என்று நாராயணிக்கா தெரியாது? மத்தியானம் சாமலால் சாப்பிட்டபிற்கு திகம்பரி நாராயணியைக் கூப்பிட்டுச்சொன்னாள்—குழந்தாய்—இரண்டு வாய் சாப்பிட்டு விட்டுப்போ. ஜுரமும் இல்லை. காயத்தால் வரும் ஜுரம் சாப்பிட்டதினால் அதிகமாகி விடாது. நான் சொல்கிறேனே ஒரு கேடும் வராதென்று.

நாராயணி போர்வையை இழுத்துப்போர்த்துக் கொண்டு நன்றாகப் படுத்துக்கொண்டு சொன்னாள்—என்னைத் தொந்தரவு பண்ணாதே. நீங்கள் சாப்பிட்டு விட்டுப் போங்கள்.

திகம்பரி சொன்னாள்—வேறொன்றும் சாப்பிடா விட்டாலும் வேண்டாம். ஏதாவது ஒரு ரொட்டித் துண்டோ—

நாராயணி சொன்னாள்....இல்லை. எனக்கு ஒன்றும் சாப்பிட வேண்டாம்.

திகம்பரி ஆச்சரிய மடைந்தவளாய் கேட்டாள்....அப்படி என்ன இருக்கிறது? நேற்றிலிருந்தே சாப்பிடவில்லை. இப்படி யிருந்தால் உடம்பு என்னத்துக்காகும்?

நாராயணி பதில் சொல்லவில்லை. நித்தியகாளி வந்து சொன்னாள்—நீங்கள் ஏன் இப்படி ஊறிக் கொண்டிருக்கிறீர்கள்? தலை கீழாக் தலையாய் நின்று கூப்பிட்டால் கூட வர மாட்டாள். காய்ச்சலாய் இருக்கிறது. கொஞ்சம் தூங்கட்டுமே.

திகம்பரி முணு முணுத்துக் கொண்டே சென்றாள்....என்ன சமாசாரமோ ஈசனுக்குத் தான் தெரியும். காயமேற்பட்டால் ஜுரம் அடிப்பதோ சகஜம். அதுக்காக சாப்பிடாமல் கிடப்பார்களா? எங்களால் முடியாது.

மாலையில் நாராயணி எழுந்து சமையல் அறைத் திண்ணையில் போய் உட்கார்ந்தாள்....நித்திய காளியைப் பார்க்கும்போது ஏதோ கேட்க வாயெடுப்பாள். ஆனால் மொழி வெளியே வராது.

ராமன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்து கை கால் கழுவி விட்டுக் கடைக்குப் போய் சாமான் வாங்கி வந்தான்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கத்தினான்....எனக்கென்ன கெட்டுப் போய் விட்டது! சாதம் சாப்பிட்டு விட்டு 'ஜோர்' ஆய் பள்ளிக்கூடம் போனேன். இப்போ சந்தோஷமாய் சாப்பிடுகிறேன்.

தட்டிக்கு மறு பக்கம் எல்லோரும் இருப்பதை அவன் அறிவான். ஆனால் அவன் சொன்னதுக்குக் காலையில் எப்படி பதிலே வரவில்லையோ அதேபோல் மாலையிலும் வரவில்லை. இதனால் அவன் இன்னும் பொறுமை இழந்தான். கத்தினான்.... இந்தப் பக்கம் எங்கள் அதிகாரத்திலிருக்கிறது. நிர்த்தியகாளியாகட்டும் இந்தப் பக்கம் வந்தார்களோ காலை ஒடித்து விடுவேன்.

காலை யொடிப்பேன் என்று முன்னும் பயமுறுத்தி யிருக்கிறான். முன் அதற்கு என்ன பலன் கிடைத்ததோ அது தான் இப்பொழுதும் கிடைத்தது. யாராவது பயந்தார்களா இல்லையா என்பது ஈசனுக்குத் தான் தெரியும். அத்தியில் விளக்கேற்றி விட்டு சமையல் அறைக்குள் நுழைந்தான். பிறகு கூச்சல் போட ஆரம்பித்தான்....விறகு எங்கே? நான் எப்படிச் சமைப்பேன்? எந்திரம் எங்கே? எப்படிப் பொறிப்பேன்?

அந்தப் பக்கத்திலிருந்து வேலைக்காரி சொன்னாள்—நாளைக்கு வாங்கித் தருகிறேன் என்றிருக்கிறாள் அம்மா!

வேண்டாம் விலைக்கு வாங்கினது'; எனக்கு வேண்டாம் என்று சொல்லி அழுது கொண்டே ராமன் சமையல் அறையை விட்டு வெளியேறினான்.

கொஞ்சம் நேரத்துக்குப் பின் திரும்பி வந்து சொல்ல ஆரம்பித்தான்- என் கனேசனை ஏன் பிடிக்கச் சொன்னாள்? கிழவி என்னை கேலி செய்து கோபமூட்டினாள்?—நான் வைவேன்: இன்னும் வைவேன். கிழவி இறந்து போய் மறு ஜன்மத்தில் பேய் ஆகிவிடுவாள்.

திகம்பரி கண் சிவந்த நாராயணியிடம் சொன்னாள்—கேள். வழியே போகிற சண்டையை விலைக்கு வாங்குகிறான் பார்.

நாராயணி பேசாமல் எந்தப் பக்கமோ பார்த்துக் கொண்டிருந்தவள் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரண்டாம் தினத்திலிருந்து ராமனுடைய பேச்சு தினுசே மாறி விட்டது. இரண்டு நாட்களாகின்றன—மதனி பேசவில்லை. அதட்டவில்லை, கோபிக்கவில்லை—நினைவு வந்த நாளிலிருந்து இதற்கு முன் இப்படியிருந்ததில்லையே. அவன் பயந்து போய் விட்டான். தன் சமையல் அறைத் திண்ணையில் • 'உட்கார்ந்தபடியே பலவித சமாதானம் சொல்ல ஆரம்பித்தான். ஒரு முறை சொன்னான்—பூனைமேல் கொய்யாக்காய் எறிந்தேன். பிறகு 'கை தவறிப் போய் மதனிமேல் விழுந்தது.' என்றான். இன்னொரு முறை 'பிஞ்சாயிருந்ததை எறிந்தேன். யார் மேலும் எறியவில்லை' என்றான். மேலும் சொன்னான்–நான் யாரையும் வையவில்லை. இந்தச் சமாதானம் ஒன்றும் பிரயோஜனப் படவில்லை. மறுபுறத்திலிருந்து 'ஆம்' என்றோ 'அல்ல' என்றோ பேச்சு வரவில்லை. ஒரு முறை வெட்கம் சங்கோசம் எல்லாம் விட்டுவிட்டுச் சொன்னான்—இனி அப்படிச் செய்ய மாட்டேன். சொல்லிய பின்பும் பயனில்லாமல்

போகலே, பேசாமல் அழ ஆரம்பித்தான். எந்த வித்தையால் எந்தப் பொருளால் மதனியை சாந்தப் படுத்துவது? மதனி அவனை ஒதுக்கி விட்டாள். அவன் எங்கே சாப்பிடுவது? யாருடன் இருப்பது? எப்படி இருப்பது? ஒரு வழியும் கரைகாணவில்லை. சமையல் செய்ய முயலவுமில்லை. படிக்கவும் போகவில்லை. அறையில் போய் படுத்தான்.

யாருக்கும் தெரியாமல் அழுது கொண்டே இருந்ததால்தான் நாராயணிக்கு காய்ச்சல் வந்தது தோன்றுகிறது. மத்தியானம் கிண்ணத்தில் பால் எடுத்துக் கொண்டு நாராயணியிடம் வந்து திகம்பரி சொன்னாள்—குடித்துத்தான் ஆக வேண்டும். சாப்பிடாமல் சாகப்போகிறாயா? நாராயணி வேண்டாம் என்று சொல்லாமல் கொஞ்சம் பாலே வாங்கிக் குடித்து விட்டுத் திரும்பிப் படுத்தாள். அடிக்கடி 'வேண்டாம் வேண்டாம்' என்று சொல்லி வெறுத்துப் போய்விட்டாள்.

இரவு ஒன்பது மணி யிருக்கும். நித்திய காளி வந்து மெதுவாய் சொன்னாள்—அம்மா சின்ன ஐயாவுடைய சத்தமே கேட்கவில்லை—இரவாகி விட்டது.

நாராயணி பயந்து போய் எழுந்து உட்கார்ந்தாள். கண்களி லிருந்து கண்ணீர் முத்து உருந்தது. அழுது கொண்டே சொன்னாள்—போ அம்மா. வீட்டில் இருக்கிறானா இல்லையா போய்ப்பார்.

நித்திய காளியுடைய கண்களிலும் நீர் நிறைந்தது. கைகால் கண்ணை துடைத்துக் கொண்டு சொன்னாள்—போகப்பயமாயிருக்கிறது. வெளியே போய் போலாவை அழைத்து வந்தாள். போலா சொன்னான்—அண்ணா தூங்கிக் கொண்டிருக்கிறார். நாராயணி கை குவித்து விட்டுத் தலை வழி போர்வை போர்த்திக் கொண்டு படுத்தாள்.

மறுநாள் விடியும் முன் எழுந்து குளித்து விட்டு வந்து நாராயணி அடுப்பில் பானை யேற்றிச் சமையல் செய்ய ஆரம்பித்தாள். திகம்பரி எழுந்து மகளுடைய வேலையைப் பார்த்துத் திகைத்துப் போனாள். நீரஸமாய் சொன்னாள்—உனக்கு ஜுரமல்லவா நாராயணி? மூன்று தினங்களாக நீ ஆகாரம் செய்யவில்லை. இவ்வளவு காலே எழுந்து குளித்துவிட்டு என்ன செய்கிறாய்?

'சமைக்கிறேன். தெரியவில்லையா?' என்றாள் நாராயணி சகஜமான அமைதியுடன்.

அதுதான் தெரிகிறதே. ஆனால் எதற்காக? நான் சமைத்தால் சாப்பிடமாட்டாயா?'

நாராயணி பதில் சொல்லாமல் தன் வேலையைக் கவனித்தாள்.

'நேற்று முழுதும் மதனிக்கு எவ்வளவு பெரிய காயமோ?' என்று யோசித்துக் கொண் டிருந்தான் ராமன். ஒரு கொய்யாக்காயை எடுத்து தலையில் போட்டுக் கொண்டு மதனி ஏற்பட்டிருக்கும் வலியை மதிப்பிட்டான். இந்தக் கொடுங் குற்றத்திற்கு பிராயச்சித்தம் என்ன? நினைத்துக்கொண்டு வருகையில் மதனி சில தினங்களுக்கு முன் இங்கிருந்து தன்னைப் போய்விடச் சொன்னது ராமனுக்கு நினைவு வந்தது. இங்கிருந்து தான் எங்காவது போய்விட்

டால் மதனி மனம் சந்தோஷமடையும் என்று தீர்மானித்தான். தாரகேஸ்வரத்திற்கு அருகே தன் பாட்டி வீடு இருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறான். ஆனால் எந்த இடத்திலிருக்கிறதென்று தெரியாது. போய் விசாரித்துக் கொண்டால் போகிறது என்றெண்ணி ஒரு சிறு மூட்டை கட்டிவிட்டுப் பொழுது விடியக் காத்துக் கொண்டு உட்கார்ந்தான்.

நாராயணி சமையல் செய்து விட்டு எல்லாம் தட்டில் பரிமாறினாள். இதற்குள் போலா வாசலில் வந்து கூப்பிட்டான். 'அம்மா!'

நாராயணி திரும்பிப் பார்த்து போலாவை கேட்டாள்—என்னடா போலா?

சென்ற சில நாட்களாக அவன் தான் மாட்டைப் பார்த்து வந்தான். ஆனாலும் ராமனைப் பயந்து உள்ளே போகவில்லை. போலா மெதுவாய் சொன்னான்—அம்மா—காதில் ஒரு சமாசாரம் சொல்ல வேண்டும்.

நாராயணி அருகே வந்ததும் சொன்னாள்—நீ முன் சொன்னாய் பார். அதே போல் நடக்கும். இரண்டு ரூபாய் கொடு.

நாராயணிக்கு ஒன்றும் விளங்கவில்லை. கேட்டாள்—'எது போல நடக்கும்? யாருக்கு ரூபாய் கொடுக்க வேண்டும்?

போலா ஆச்சரியத்துடன் சொன்னான்—'அண்ணாவைப் போகச் சொன்னாய் அல்லவா? அவன் போகப் போகிறான்—சரி இரண்டு இல்லாவிட்டாலும் ஒரு ரூபாய் ஆயினும் கொடு.

நாராயணி திகிலடைந்து போய் கேட்டாள்—அவன் எங்கே போகப் போகிறான்? எங்கே அவன்?

போலா சொன்னான்—வெளியே அரசமரத்தடியில் நிற்கிறான். அவனுடைய பாட்டிவீடு இருக்கிறதாமே எங்கோ?

'போலா நீ போய் அவனை உடனே அழைத்துவா. நான் கூப்பிட்டேன் என்று சொல்லு.

போலா ஓடிப்போனான். நாராயணி சிலைபோல் அங்கு நின்றாள். கையில் சிறு மூட்டையொன்றுடன் ராமன் எதிரே வந்துநின்றான். நாராயணி பேசாமல் அவன்கையைப் பிடித்திழுத்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

ராமன் சமயல் அறைக்குள் நுழைவதை தூரத்திலிருந்தே கவனித்த திகம்பரிக்கு உயிரே போய்விட்டால் போலிருந்தது. நாராயணி சந்தேகத்துடன் சமையல் அறைக்குள் ஓடியே வந்தாள். பரிமாறியிருந்த தட்டின் முன் நாராயணி ராமனை மடியில் உட்காரவைத்துக் கொண்டு அவன் தலைமேல் கண்ணீர் வடிக்கிறதைக் கண்டாள் திகம்பரி. ராமன்முகத்தை மதனியுடைய மார்பில் சாத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

திகம்பரி கோபம்தாங்காமல் சற்றுத்தயங்கிவிட்டுப் பேச ஆரம்பித்தாள்—இதுக்காகத்தான் காலையில் எழுந்து சமையல் செய்கிறாய் என்று எனக்குத்தெரியுமா? ஊட்டப் போகிறாய்போலிருக்கிறது. உன் கணவன் இட்ட ஆணையை மறந்து விட்டாயா? அது முழுகிவிட்டதா?

நாராயணி தலைநிமிர்ந்து சொன்னாள்—ஏன் முழுகிப்போகிறது? அவர் சொல்லை நான் தட்டவில்லை. மூன்று நாள் நானும் சாப்பிடவில்லை; ராமனையும் ஊட்டவில்லை.

திகம்பரி கடுப்புடன் சொன்னாள்—இதுதான் சொல்லை மதிப்பதோ? இப்போ என்ன நடக்கிறது? ஆணையிட்டவரைப் போய்க்கேட்டுப்பார்!

நாராயணி காயம் ஏற்றவள்போல் மனம் நோக சுருக்கமாய் மறுமொழியளித்தாள்—நான் கேட்டுவிட்டேன்.

திகம்பரிக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. இன்னும் வெகுண்டவளாய் சொன்னாள்—நான்பால்குடிக்கிற பச்சைப்பிள்ளையல்ல. நீ கேட்டது எனக்குத் தெரியாமல் போய்விடுமா?

நாராயணிக்குப் பொறுக்க முடியவில்லை. அவள் உள்ளம் குமுற மொழிந்தாள்—அம்மா! நான் யாரிடம் என்னகேட்டேன் என்று உனக்கு எப்படித் தெரியும்? நாவுள்ளோன் ஆணையிடுவான். ஆனால்—இவ்வளவு சொல்லி நிறுத்தி ராமனுடைய வெட்கிய முகத்தைத் தன் மார்பில் அன்புடன் அணைத்துக்கொண்டு நெற்றியை முகர்ந்து கொண்டேசொன்னாள்—ஆனால் மார்பில்அணைத்து வளர்த்தச் சின்னக் குழந்தையிலிருந்து பெரியவனாக்கியவனுக்குத் தானே அனுமதி கேட்கத்தெரியும்? நீ கவலைப்படாதே. எதிரிலிருந்து கொஞ்சம் தள்ளிப்போ. இவனை ஊட்டட்டும். என்குழந்தை மூன்றுநாளாய் ஒன்றும் சாப்பிடவில்லை.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உதிர்ந்தன.

திகம்பரி சற்றுத் தயங்கி விட்டுச் சொன்னாள்—இங்கே இனி நான் எப்படி இருப்பேன்? இனி என்னால் இந்த வீட்டில் இருக்க முடியாதென்று தீர்மானமாய் சொல்லிவிட்டேன்.

நாராயணி சொன்னாள்—நானும் அதைத்தான் உன்னிடம் சொல்ல முடியாமல் தயங்கினேன். உண்மையாய் இனி நீ இங்கே இருக்க முடியாதுதான். நீ பார்த்துக் கொண்டிருக்கையிலே என்னுடைய இவ்வளவு பெரிய பையன் பாதியாய் இளைத்துப் போய் விட்டான். இவன் பொல்லாதவனாயிருந்தாலும் சரி இல்லாதவனாயிருந்தாலும் சரி என் வீட்டில் என் கண் முன் இவனைக் கண்டிக்க அனுமதிக்க மாட்டேன். நீ இன்று இங்கேயிரு. நாளைக்கு உன் வீட்டுக்குப் போ. உன் செலவுக்கு அவசியமான பணம் நான் தவறாமல் அனுப்பித் தருகிறேன். ஆனால் இனி நீ இங்கே இருக்க முடியாது.

திகம்பரி சிலை போல் நின்று விட்டு பிறகு வெளியே சென்றாள். ராமன் முன் போல் மார்பில் முகத்தைச் மூடிக் கொண்டு சொன்னான்—இல்லை மதனி, அவள் இங்கே இருக்கட்டும். நான் இப்போ நல்லவனாய் விட்டேன். எனக்கு நல்ல புத்தி வந்து விட்டது. இனிமேல் நீயே பாரேன்!

அவன் முகத்தைத் தூக்கி நெற்றியில் முத்தமிட்டு விட்டு அழுகைக்குள் சிரிப்பும் கலந்து வர நாராயணி சொன்னாள்—இப்போ சாப்பிடு?

முற்றும்.

ஞானக்களஞ்சியம்

ஜோதி

வேதாந்த ரகசியங்கள்

——ரா. ஸ்ரீனிவாசன்
(அன்னார் மகன் ஸ்ரீ ராமசந்திரன் உதவியது)

விதிவாசனை :—

ஒரு தோட்டக்காரனும் அவன் செய்த தந்திரமும்

மூங்கில் தோட்டக்காரனொருவன் ஒரு மூங்கில் மரத்தை அதனிஷ்டம் பர்வத்தில் சுயேச்சையாய் வளரும்படி விட்டு விட்டுப் பின்னர் அது முற்றும்பொழுது வெட்டியெடுத்து அதனை 3 அணாவுக்கோ அல்லது அதற்குக் குறைத்தோ விற்று வருவது எங்குஞ் சர்வசாதாரணம். ஆனால் அத்தோட்டக்காரன் ஏதாவதொரு மூங்கிலை—அது—இளம்பருவமாக விருக்கும்பொழுதே வேறொரு மரத்துடன் (பல்லக்குக் கொம்பு போல்) வளைத்துக் கட்டி அதன் போக்குப்படி வளருவதற்கு இடங்கொடாமல்—அது—போதுமானவரை—நன்குமுற்றி வளர்ச்சியுறும்வரையில் நன்றாகப் பாதுகாத்து வருவானேயானல் அம்மூங்கிலுயர்ந்த கினுஸிலுள்ள பல்லக்கின் கொம்புக்கு உபயோகப்படுவதற்கும் அப்பொழுது அதன்விலை 50 அல்லது 100 வரை மதிப்பேறுவதற்கு இடமாகும். இது போலவே மானிடர்களால் தத்தம் பூர்வ ஜன்மங்களிற் செய்யப்பட்ட புண்ணிய பாபங்களாகிய பற்பல கர்மங்களின் பயன்களை யனுபவிப்பதற்காகக் கிடைத்திருக்கின்ற இச்சென்மத்தில்

விதி விஹிதம் புத்தி ரநுஸாரதி !
'விதி விதித்ததை மதி
யனுசரிக்கின்றது'

என்ற நியாயப்படி அவரவர் ஜன்மாந்தர வாசனையின் வண்ணம் (மனம்போன வழியே) வாழ்நாளைக் கழிப்பவர்கள், இந்திரியங்களுக்கு அடிமைகளாகியும் துன்மார்க்கத்தில் செல்பவர்களாகியும் முடிந்து, கடைசியில் அவர்கள் இச்சம்சாரமாகிய பாழுங்கிணற்றிற் கிடந்து இடைவிடாது துன்பத்தை யனுபவித்து வருந்துவார்கள்.

ஆனல் தோட்டக்காரன் மூங்கிலை வேறோர் மரத்துடன் சேர்த்து வளைத்

துக்கட்டி அது முற்றிவாரும்வரை காப்பாற்றி வந்த பொழுது அதன் வில் எவ்வித முயர்ந்து வந்ததோ அவ்விதமாகவே மனிதர்களை அவர்களின் இளம்பருவத்திலேயே அநாசார வெள்ளத்தில் துள்ளிக் குதித்து அதன் போக்கிலே செல்வதற்காரம்பிக்கின்றன. மனோவாக்குக்காயங்களாகிய மூவிதகரணங்களையும் தனது முயற்சியினால் (அதாவது விதியை மதியினால்) அடக்கியாண்டு கர்மம், பக்தி, யோகம், ஞானம் இவைகளாகிய கயிற்றினால் பரமாத்துமாவோடு சேர்த்துக் கட்டி (குரு குல வாசஞ் செய்து) மூவித கரணங்களுக்கும் விஷய வாசனை அடியோடு நீங்கி பரமாத்துமாவினுடன் ஐக்கியஞ் சித்திக்கும் வரையில் எவன் மிகுந்த சிரத்தையுடன் காத்துக் கொண்டிருக்கிறானோ அவன் எல்லோராலும் பூஜிப்பதற்குரிய யோக்கியதை வாய்ந்தவனும் புண்ணியத்துமாவாயும்செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவனும் ஆகின்றான்.

ஆனந்தம் பெறுதல்:—

நள்ளிரவில் நடுக்காட்டைக்கடந்த நாரீமணி.

ஒரு காட்டுப்புறத்திலுள்ள பூமியைச் சீர்திருத்தி விவசாயஞ் செய்வதற்காக அங்கு வீட்டினைக்கட்டிக்கொண்டு ஒரு சதிபதிகள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் மனைவியானவள் இரவு நேரங்களில் சரீர பாதை தீர்த்துக்கொள்ளவேண்டி நேரும் பொழுது கூடத் தனது கணவனைத் துணையாக உடன் கூட்டிப் போவது வழக்கம். அவ்விதம் நடந்து வரும்பொழுது ஒரு நாள் வழக்கம்போல் அந்த ஸ்திரீயானவள் தனது கணவனை யெழுப்பும் பொழுது அவன் இறந்து கிடப்பதாகத் தெரிந்து கொண்டனள். உயிர் நீங்கிய புருஷனது — கோரமான — பிணத்தைக் கண்டவுடன் அவள் பயத்தால் மிக மனம் குழம்பியவளாகி செந்நாய், கரடி, வெங்கைப்புலி, யானை, சிங்கம், முள்ளம் பன்றி, காண்டா மிருகம் முதலிய துஷ்ட மிருகங்களால் நிறையப் பெற்றும் பேரிருள் சூழ்ந்து மிகப் பயங்கரமாயு மிருக்கின்ற அந்நெருங்கிய கானகத்திற்குள் வெகு விரைவாய்ப் பயமின்றி யோடிப் பட்டணத்திலுள்ள தனது பெற்றோரின் வீட்டினையடையப் பெற்றாள்.

வீட்டிலிருந்து வெளியே இறங்கி ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய உபாதிகளைத் தீர்த்துக்கொள்வதற்குக் கூடப் பயந்து நடு நடுங்கியிருந்த அம்மாது சிரோமணியானவள், தனதின்னுயிர்க் காதலனது பிணவுடலைப் பார்த்த பயமிகுதியினால், முன்புண்டாயிருந்த அரணிய பயத்தை யலக்ஷியஞ் செய்வதற்குச் சக்தி பெற்றவளாயினாள்.

அதுபோல் (1) மனுஷியானந்தம். (2) மனுஷியகந்தர் வானந்தம். (3) தேவகந்தர்வானந்தம் (4) பித்ரானந்தம் (5) ஆஜான தேவானந்தம். (6) கர்ம தேவானந்தம். (7) தேவானந்தம் (8) இந்திரானந்தம். (9) பிருஹஸ்பதியானந்தம். (10) பிரஜாபதியானந்தம். (11) பிருஹ்மானந்தம். (பிருஹ்மாவினுடைய ஆனந்தம்) எனும் இப்பதினொருவித ஆனந்தங்களில் மனித ஆனந்தம் முதல் பிருஹ்மாவின் ஆனந்தம் வரையுள்ள ஒவ்வொரு ஆனந்தமும் முறையே

ஒன்றைக் காட்டிலும் நூறு பங்கு அதிகமுள்ளதாகும். அதாவது மானிடனது • ஆனந்தத்தைக் காட்டிலும் பிர்ம்மாவினுடைய ஆனந்தம் ஒரு மஹா சங்கம். அதாவது 10000000000000000000000 பங்கு பெரிதாகும். இந்தப் பிரம்மாவினுடைய ஆனந்தமானது ஸர்வ ஜீவராசிகளாலும் மோஹிக்கத் தக்கதும் ஸர்வ ஆனந்தங்களுக்கும் மேற்பட்டிருப்பதுமாகும். இத்தகைய ஆனந்தமானது ஒருவனுடைய பிரம்மஞானத்தால் உண்டாகின்ற பரப்பிரம்மானந்தத்தினுடைய லக்ஷம் கோடி ஆயிர அம்சத்திற்கு ஒரு திவலைகூட நிகரில்லாததாயிருப்பதால் பரப்பிரம்மானந்தமே தனது சிவரூப நிலையாக அமையப் பெற்ற ஒரு மஹாத்துமாவிற்கு மனுஷ்யாநந்தம் முதல் பிரம்மாநந்தம் வரையிலுள்ள எல்லாவிதமான ஆனந்தங்களும் முன் சொல்லப்பட்ட ஸதிரீக்குப் புருஷனுடைய பிணத்தினிடத்தில் உண்டாயிருந்த பெரும் பயங்கரமாக, காட்டினுடைய பயம் மிகச் சிறிதாயும் அலக்ஷியஞ்செய்யத் தக்கதாயும் ஆனது போல தள்ளத் தக்கவைகளாகின்றன. பெரிய பயம் வந்தபொழுது சிறிய பயம் ஒழிந்துவிட்டதுபோல் பேராநந்தமாகிய பரப்பிரம்மாநந்தம் கிடைத்த பொழுது, மிக அற்பமாகிய விஷயாநந்தம் (சிற்றின்பம்) நசித்துவிடுகின்றது.

பக்திப் பெருக்கம்:—

ஒரு விநோதமான நெடுங்கணக்கு.

ஒருவன் முதலில் இரண்டு சிறிய தொகைகளைக்கொண்டு பெருக்க ஆரம்பிப்பதாக நினைப்போம். உதாரணமாக:—இரண்டைக் கொண்டு இரண்டைப்பெருக்குவதாக வைத்துக் கொள்ளுவோம். அது இப்பொழுது நான்காயிற்று. அந்த நான்கைக் கொண்டு நான்கையும் அதனாற் கிடைக்கின்ற பதினாறைக் கொண்டு பதினாறையும் பெருக்கும் பொழுது 256 என்னும் தொகை கிடைக்கின்றது. இதுபோல் கிடைக்கின்ற தொகையைக் கொண்டு பெருக்கிக் கொண்டே போகும் பொழுது மேற்படி தொகையானது முறையே பெருகிவரத் தொடங்கும். பின்னர் அவன் அப்பெருந் தொகையைக் கொண்டு மீண்டும் கிரமமாக ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், பத்து லக்ஷம், கோடி, பத்துகோடி, அர்புதம், மஹார்ப்புதம், கர்வம், மஹா கர்வம், பதமம், மஹா க்ஷோணி, மஹாசேக்ஷாணி, சங்கம், மஹாசங்கம், க்ஷிதி, க்ஷோபம், மஹா க்ஷோபம், நிதி, மகா நிதி, ஸாகரம், மகா ஸாகரம், ஹரி, மகாஹரி, சங்கம், மகா சங்கம், பணி, மகாபணி, மகா ரிது, என்னும் இந்த ஸ்தானங்களைப் பெருக்கி வாசித்துக் கொண்டே போவான். இனி அம்மகா ரிதுவெனும் பெருந் தொகையையும் திரும்ப முன்போல் பெருக்க ஆரம்பிக்கும் பொழுது அது வெகு நீளமுள்ளதாகியும் அதுபோல் அந்நெடுங் கணக்கை வாசிப்பதற்கு வெகு பிரயாசமாகியும் போய்விடும். ஆனாலும், அந்த நெடுங்கணக்கை வாசிப்பதற்குமட்டும் முடியாதே யன்றி மீண்டும் பெருக்குவதற்கும் கூட்டுவதற்கும் நன்றாக முடியும். இதுபோல சச்சிதானந்த சுவரூபனும் பரமாத்துமாவினிடத்தில் மேலான விசுவாசமும் அன்பும்பூண்டு அதனால் மனத்

தகத்தின் கண்ணேயுள்ள அழுக்குகளை நீக்கி நிர்மல சித்தர்களாகிய பக்தர்கள் பரமப்பிரேமை(அதாவது ஆதிமத்திய அந்தமும் உள் வெளியென்ற வேற்றுமையுமின்றிய பரிசுத்த பக்தி யாகிய ஒருசிறிய (பீஜ) பக்தி எனும் சிறு தொகையைக் கொண்டே பக்திக் கணக்கைப் பெருக்கத் தொடங்குகின்றார்கள். இங்ஙனம் சிலநாட் செய்யும்பொழுது அவ்வன்பனுடைய பக்தியானது பெருகி பல்லாயிரக்கணக்கான லோகங்களடங்கிய இப்பிரமாண்ட கோடியிலுள்ள சகல சராசரப்பிராணி வர்க்கங்களுடைய ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்களின் ஒவ்வொரு அணு தோறும் பரவி உள் வெளியென்ற வேற்றுமையின்றி ஆகாசத்தைப் போலும் வியாபித்து இளங்காற்றைப்போலும் இன்பமளித்து தடையற்ற வெள்ளம்போல் கரை புரண்டோடி, சூரியனைப்போல் பிரகாசித்து சந்திரனைப்போல் குளிர்ச்சி பெற்றதாய் இருக்கின்ற அப்பேரானந்தத்தைப் பெறுவான். இதன் பெயர் அபர பக்தி யென்பதாம். இனி முற்புகன்ற மகா நிதியினை அநேகந் தடவை திரும்பத் திரும்பப் பெருக்கி வரும்பொழுது அப்பெருந் தொகையை எண்ணுவதற்கு இயலாதது போல மேற்படி பக்தியை மீண்டும் மீண்டும் பன்மடங்கு பெருக்க (விருத்தி செய்ய) ஆரம்பிக்கும் பொழுது அது சிருஷ்டி கோடியின் முடிவிலுள்ள வரம்பினையும் தட்டி உடைத்து சிருஷ்டியைக் கடந்து அப்பால் விளங்கும் அந்த பரமாத்மாவையும் தைரியத்துடன் தன் பக்தி வெள்ளத்துள் அழுத்திவிடுகின்றது. அப்பொழுது மெய்யன்புக் கடலில் ஆழ்ந்துவிட்ட பக்தனுடைய கண், செவி, நாசி, நாவு, கை, கால், உடல், உயிர், ஆகிய யாவும் அந்த மகாபக்தியாகிய ஜலத்தில் கரைந்துருகித் தேய்ந்து மாய்ந்துபோய்விடும். அந்த மகா பக்த சிகாமணி இந்நிலையடையும் பொழுது தனது பக்தியினுடைய மகாத்மியத்தையாவது அதன் எல்லையையாவது அளவையாவது அறிவதற்கு அவனால் சிறிதும் சாத்தியமாவதன்று. இதுவே பரபக்தியாம். ஆகா! என்னே பக்தியின் பெருமை!

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள்

இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு இந்தியாவில் வேலைசெய்வன	—232
வெளிநாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டு இந்தியாவில் வேலைசெய்வன	—147
மொத்தம்	379

இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்ட கம்பெனிகளில் மாகாண வாரியாக வருமாறு:—

பம்பாயில்	—	69
வங்காளத்தில்	—	50
சென்னையில்	—	41
பஞ்சாபில்	—	30
ஐக்கியமாகாணத்தில்	—	12
டெல்லியில்	—	10
மத்தியமாகாணத்தில்	—	5
பீஹாரில்	—	4
டெல்லியில்	—	3
ஆஜ்மீர் மீர்வாரா	—	3
பர்மா	—	2
அஸ்ஸாம்	—	2
வடமேற்கு எல்லைப்புற மாகாணம்	—	1
மொத்தம்		232

நான்கு பரிசுகள்

—ஸ்ரீ. ராமச்சந்திரன்

ஸ்கிதியா என்றொரு நாடு உண்டு. அது பாலைவன நாடு. அதன் குடிகளான ஸ்கிதியர்கள் மிக்க எளிய வாழ்க்கை நடத்துபவர். தேக மனோ பலத்தில் மிகச்சிறந்தவர். குதிரை யேற்றத்தில் அவர்களை மிஞ்சினவர்கள் உலகத்திலேயே கிடையாது. ஜனங்கள் கடலினின்று வெகு தூரத்தில் வசித்துவந்தனர். ஒரு நிரந்தர இடத்தில் இல்லாமல் ஸ்கிதியர்கள் தேசசஞ்சாரிகளாய் இருந்தனர். ஆடு மாடுகளே அவர்களின் செல்வங்கள். சிறு குடிசைகளே அவர்களின் வாசஸ்தலங்கள். இப்படியாக ஸ்கிதியர்கள் எளியவாழ்க்கையை நடத்திவந்தனர். ஆனால் அந்த வாழ்க்கையே அவர்களை உயர் நிலைக்குக்கொண்டுவர ஏதுவாயிருந்தது. வீரத்திலும் தீரத்திலும் அவர்களை மிக்காரில்லை என உலகத்தோர் சொல்லும்படி செய்தது.

இந்த வீரஸ்கிதியர்கள் சுதந்திர மனிதர்கள். இவர்களை எதிர்த்து வந்தவரை, புறமுதுகோட்டும்படி அடித்து விரட்டுபவர். அப்படி விரட்டப் பட்டவர்களில் ஒருவன் டேரியஸ் என்ற பெர்ஷிய சக்கரவர்த்தி. ஸ்கிதியர்கள் அவனை தோற்றோடச் செய்த வரலாறு மிக்க ஸ்வாரஸ்யம் கொண்டது. அதைக் கீழே தருவோம்.

டேரியஸ் (Darius) தான் பெர்ஷிய சாம்ராஜ்ஜியத்தின் ஏகசக்கிராதிபதி என்ற கர்வத்தினால் ஸ்கிதியர்களை அடக்கி அவர்கள் நாட்டைக் கைக்கொள்ள எண்ணி மிகப் பெரிய ஒரு சேனையுடன் ஸ்கிதியா நாட்டை நோக்கிப் புறப்பட்டான். ஸ்கிதியர்கள் தங்கள் குடும்பங்களை யெல்லாம் நாட்டின் உட்புறத்திற்கு அனுப்பிவிட்டு தாங்கள் பயந்தோடுவது போலப் பாசாங்கு செய்து பாலைவனப் பிரதேசத்திற்குள் ஓடிவிட்டனர். டேரியஸ் வெற்றி மமதை மிகக்கொண்டு அவர்களை விரட்டிக் கொண்டுவந்தான். திடீரென்று டேரியஸ் தானும் தன் சைன்யங்களும் ஸ்கிதிய பாலைவனங்களின் மத்தியில் அகப்பட்டுக்கொண்டதை அறிந்தான். உணவுப்பொருள்கள் இல்லாமல் குடிக்கத்தண்ணீரும் கிடையாத அந்த அடர்ந்த பாலைவனத்தினின்றும் தப்பும்வழி யாதென்று யோசித்தான். பின்வாங்கினால் ஸ்கிதியர்கள் அவன்மேல்விழுந்து அவன் சேனையை நாசம்பண்ணி விடுவர். முன்சென்றாலோ பட்டினியால் சாக நேரிடும்.

டேரியஸ், தாங்கள் விரித்தவலையில் நன்றாகச் சிக்கிக்கொண்டதை அறிந்த ஸ்கிதியர்கள் படைகளைக் கூட்டி பெர்ஷியர்களைத் தாக்கினர். இவர்களின் தொடர்ந்த கொரில்லா சண்டையைச் சமாளிக்க மாட்டாதவனாய் டேரியஸும் அவன் படைகளும் திண்டாடினர். டேரியஸ் தன் முடிவு நெருங்கி

விட்டதெனவே கருதினன். அப்பொழுது பின்கண்ட சம்பவம் நிகழ்ந்தது:—

ஒரு ஸ்கிதிய வீரன் மிக மூர்க்கமான ஒரு குதிரையின் மீது இவர்ந்து நினைக்கமுடியாத வேகத்துடன் பெர்ஷியர்களின் கூடாரங்களை நோக்கி வந்தான். அவன் மிக்க தைரியம் உள்ளவனாகக்காணப்பட்டான். வாயிற் காப்போனையும் மற்றவர்களையும் சட்டைபண்ணாது நேராக டேரியஸின் கூடாரத்தைச் சமீபித்தான். அப்பொழுது அரசன் டேரியஸ், தன் பிரபுக்களுடன் ஆலோசனை செய்து கொண்டிருந்தான். ஸ்கிதிய வீரனைக் கண்ட அனைவரும் அவனுடைய வீரத்தையும் தைரியத்தையும் குறித்து ஆச்சரியமடைந்தனர். ஆனால் வந்த வீரனோ ஒருவரையும் பார்க்காமல் நேரே டேரியஸ் உட்கார்ந்திருந்த இடத்திற்குப்போய் அவன் பக்கத்தில் ஒரு பொட்டலத்தை வைத்து விட்டு கண்மூடித் திறப்பதற்குள் திரையைத் தட்டி விட்டு வெளிச் சென்று விட்டான். டேரியஸ் அடைந்த ஆச்சரியத்திற்கோர் அளவில்லை. உடனே பொட்டலத்தை அவிழ்க்கும்படி தன் வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டான். பொட்டலத்தில் அவர்கள் பார்த்தது என்ன? நான்கு பரிசுகள். ஒரு எலி, ஒரு பட்சி, ஒரு மீன், சில அம்புகள், இவைகளே எல்லோரும் மௌனமாய் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கினர். பின்னர் டேரியஸ் பேச லுற்றான்:—

“சரி, சரி, எனக்குத் தெரிந்து விட்டது. இந்த ஸ்கிதியர்கள் அனுப்பிய பரிசின் தாத்பரியம் இது தான். இவர்கள் நமக்குப் பணிந்து விட்டார்கள் என்றான்.

பிரபுக்களும் மற்றவர்களும் ஆச்சரிய மடைந்தனர். ‘அதன் தாத்பரியத்தைத் தாங்கள் எப்படி அறிந்தீர்? என்று டேரியஸைக் கேட்டனர்.

டேரியஸ் சொன்னான்:—‘இந்த எலி பூமியில் வளை தோண்டி வசிப்பதால் நிலத்தைக் குறிக்கிறது. பட்சி ஆகாயத்தில் சஞ்சரிப்பதால் வெளி நிலமாகிய ஆகாயத்தைக் குறிக்கிறது. மீன் நீரில் வசிப்பதால் நீர் நிலங்களைக் குறிக்கிறது. அம்புகள் ஸ்கிதியர்களின் சேனைகளைக் குறிக்கிறது. ஆக, இவை எல்லாவற்றையும் சேர்த்து நமக்கு அனுப்பியதன் அர்த்தம் ஸ்கிதியர்கள் தங்கள் நிலங்கள், ஆகாய வெளிகள், நீர் நிலையங்கள்•படைபலங்கள் முதலியவைகளைக் கொடுத்து விட்டு நம்மைச் சரணடையப் போகிறார்கள் என்பதாம்’.

டேரியஸின் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அவனைச் சுற்றி யிருந்தோர் அனைவரும் குதூகல மடைந்தனர். தாங்கள் சௌக்கியமாக வீடு போய்ச் சேரலாம் என நினைத்து மகிழ்ந்தனர். ஆனால் டேரியஸின் மந்திரிகளில் ஒருவனான கோப்ரயஸ் (Gobrias) என்பவன் மட்டும் மற்றவர்களின் களியாட்டங்களில் கலந்து கொள்ளாமல்மௌனமாக இருந்தான். இதைக் கண்ட டேரியஸ் கோப்ரயஸிடம் அவன் அபிப்பிராயத்தைக் கூறும்படி வற்புறுத்தினன். அதன் பேரில் கோப்ரயஸ் தன் எண்ணத்தைக் கூறினன் :—

‘அரசே, ஸ்கிதியர்கள் அனுப்பின பரிசின் தாத்பரியம் தாங்கள் சொல்

லும் தாத்பரியத்திற்கு முற்றிலும் முரணாக இருக்குமென அஞ்சுகிறேன். ஏனெனில் இப்பொழுது திடீரென்று அவர்கள் நமக்குப் பணிந்து விட காரணம் ஒன்றும் இல்லை. ஏன், இத்தனை நாள்வரை எதிர்த்துப் போராடி நம் பலத்தைக்குறைத்து விட்டார்கள்? மற்றும் அவர்கள் பெரிய வீரர்கள். போரில் புறங்கொடாததிடநெஞ்சினர். இப்பொழுது நாம் அவர்கள் பூமியில் சிறையில் அடைபட்டாற்போல் இருக்கிறோம். அவர்கள் மனது வைத்தால் நம்மை நாசம் செய்திருக்கலாம். இதை அவர்கள் அறியாமலா இருப்பார்கள்? ஆகவே அவர்கள் நமக்குப் பணிந்து விட்டார்கள் என்று எண்ணுவது சுத்தமுட்டாள் தனமாகும். அவர்கள் அனுப்பின பரிசின் தாத்பரியம் இதுவாகஇருக்கலாம்.'

'எலியைப்போல பூமியைக் குடைந்து, அல்லது பட்சியைப்போல் ஆகாயத்தில் பறந்து உங்கள் நாட்டிற்குத்தப்பி ஓடுங்கள். அல்லது மீனைப் போல் நீருக்குள் முழுகி மறைந்து செல்லுங்கள். அன்றேல் எங்கள் அம்புகளுக்கு நீங்கள் இரையாக நேரிடும்' என்பதே.

கோப்ரயஸ் சொன்னது உண்மையாகவே நேர்ந்தது. ஸ்கிதியர்கள் டேரியஸின் சேனையைச்சின்னா பின்னப் படுத்தினர். டேரியஸ் உயிர் தப்பி பெர்ஸியா போய்ச் சேருவது பிரம்ம பிரயத்தனமாய் விட்டது.

உலகத்தில் உற்பத்தியாவதென்ன?

பிரதிவருஷம் உலகத்தில் சராசரி என்னென்ன பொருள்கள் எவ்வளவு எவ்வளவு உற்பத்தியாகின்றன வென்பதைப்பின் வரும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன:—

நிலக்கரி	....	1,440,000,000	டன்
சிமெண்ட்	....	70,000,000	,,
உப்பு	....	31'000,000	,,
தகரம்	....	170,000	,,
செம்பு	....	1'900,000	,,
வெள்ளி	....	220,000,000	அவுன்ஸ்
தங்கம்	....	35,000,000	,,
வைரவகைகள்	....	7,400,000	வெண்ட்
மின்சாரம்	....	360,000,000,000	கிலோவாட்
ரப்பர்	....	870,000	டன்
பெட்ரோலியம்	....	245,000,000	டன்
அலுமினியம்	....	350,000	,,
இரும்பு	....	90,000,000	,,
நாகம்	....	120,000,000	,,
ப்ளாடினம்	....	500,000	,,
பட்டு	....	55,000	,,
இமிடேஷன் பட்டு	....	460,000	,,
பஞ்சு	....	6,800,000	,,
கம்பளி	....	1,700,000	,,
ரேடியம்	....	3	அவுன்ஸ்

கம்பர்

— நா. லக்ஷ்மீநரசிம்மம்

2. உவமைப் பகுதி

எப்பொருளையும் உவமை கூறி விளக்குவதுதான் சரியான விளக்கமாகும். அத்துறையில் கை தேர்ந்தவர் கம்பர். மிகப்பழைய உவமைகளும் இவர்பால் புதுமைபெற்று விளங்கும். இவரது சொந்தக் கற்பனையால் வந்த புதிய உவமைகள் ஆழம் காணமுடியாத அற்புதமாய் விளங்கும். சிறந்த உவமைகளைப்பல இடங்களில் எடுத்தாள்வதும், முன்னோர் கூறிய உவமையைப் பின்னர்ச் செப்பம் செய்தமைப்பதும் இவர்க்குச் சிறப்பியல்பு.

வேலும் கனலும்

விஸ்வாமித்திரர் வேள்வி காவலுக்காகத் தசரதனிடம் இராமனைக் கேட்கிறார். அப்பொழுது தசரதன் நிலையைக் கவி இவ்வாறு கூறுகிறார்.

> எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய
> சொல் மருமத்தின் எறிவேல் பாய்ந்த
> புண்ணிலாம் பெரும்புழையிற் கனல்
> நுழைந்தாலெனச் செவியிற் புகுதலோடும்

விஸ்வாமித்திரர் வேண்டுகோள் தசரதன் காதில் வேல்பாய்ந்த புண்ணில் கனல்புகுந்ததுபோல் விழுகிறது. எம்போல் மகன்பிரிவால் இறந்திடுக என்று முன்னொரு சமயம் முனிவர் ஒருவர் இட்டசாபம் தசரதனுக்கு என்றும் ஆறாத எறிவேல்பாய்ந்தபுண்ணாக இருக்கிறது. அந்த முனிவர் சாபத்தை நிறைவேற்ற வந்த காலதூதர் போல் தோன்றிய விஸ்வாமித்திரர் வேண்டுகோள், புண்ணில் நுழையும் கொடுங்கனலாய்த் தசரதனை வாட்டுகின்றது. இவ்வாறு பழைய சாபத்தை நினைந்து நினைந்து நைந்த நெஞ்சினனாய் நிற்கும் தசரதன், விஸ்வாமித்திரர் வேண்டுகோளால் அடைந்தநிலையினை 'மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தாலென' என்று எவ்வளவு பொருத்தமான உவமையால் கவி விளக்குகின்றார் பாருங்கள். இதே உவமையைக் கைகேயி இராமனைக் காட்டிற்கனுப்ப வேண்டும் என்று கூறும் பொழுதும் மாற்றியமைக்கின்றார்.

> இந்த நெடுஞ் சொலவ் வேலை கூறுமுன்னே
> வெந்த கொடும்புணில் வேல் நுழைந்த
> [தொப்ப

விஸ்வாமித்திரர் வேண்டுகோளை நிறைவேற்றி இராமன் மீண்டுவந்து விட்டான். அதனால் தசரதனுக்கு முனிவர் சாபமாகிய வேல்பாய்ந்தபுண் ஆறத் தொடங்கியது. கைகேயியின் வேண்டுகோள் மீண்டும் அந்தச்சாபத்தை நினைவூட்டிற்று. முனிவர் சாபப்பலனைத் தடுக்க விஸ்வாமித்திர முனிவர் வல்லவராயிருந்தார். இப்பேதைப் பெண்ணால் அதுமுடியுமோ? ஆதலால் இட்டசாபம் கிட்டியது என்றெண்ணி ஏங்கினான். அந்த மனோநிலையை வெந்தகொடும் புண்ணில்

வேல் நுழைந்த தொப்ப என விளக்குகிறார் கம்பர்.

மாரியும் வாரியும்

பெய்யும் மாரியால் பெருகுவெள்ளம் போய்
மொய் கொள் வேலைவாய்முடுகுமாறுபோல்
ஐய நின்மகற் களவில் விஞ்சைகள்
தெய்துகாலமின்றெதிர்ந்த தென்னவே

விஸ்வாமித்திரர் வேண்டு கோளுக்கிசையுமாறு தசரதனை வசிஷ்டர் வற்புறுத்துகிறார். மாரியாற் பெருகிய வெள்ளம் கடலிற் சேர்வதுபோல் அளவில்லாத விஞ்சைகள் நின்மகனை அடையப் போகின்றன என்கிறார். இவ்வுவமையின் ஆழம் அளவிட முடியாதது. இராமனது உண்மை நிலை இவ்வுவமையால் விளக்கப்படுகின்றது. பேரறிஞராகிய வசிட்ட முனிவர் இவ்வுண்மையை உவமை மூகத்தான் வெளிப் • படுத்துகின்றார். மாரியாற் பெருகிய வெள்ளம் வேலைவாய் முடுகுவது இயற்கை. மாரி அவ்வெள்ளத்தை எங்கிருந்து பெற்றது? கடலிலிருந்தேயன்றே. ஆகவே தோன்றிய இடத்தை மீண்டும் அடைவது இயற்கைதானே. கடலிற் றோன்றி மீண்டும் கடலிற் புகுவதற்குள் மாரி செய்யும் தொழில் என்ன? உலகமெங்கணும் பரந்து அதனை உய்யச் செய்வதே. இராமனே எல்லாப் பொருளும் தானேயாகி நிற்கும் எம்பெருமான்; விஞ்சைகள் அவனிடம் தோன்றிப் பெரியார்களின் மூலம் உலகை உய்வித்து விஸ்வாமித்திரரால் மீண்டும் அவனையே வந்தடைகின்றன என்ற தத்துவப்பொருளை இவ்வுவமையால் எவ்வளவு எளிதாக விளக்குகின்றார் பாருங்கள்! இராமன் பிறரிடம் பெறவேண்டியது ஒன்றும் இல்லாதிருந்தும் உலகிற்கு நன்னடைநல்கவே இன்னோரன்ன ஒழுங்கில் நிலைநின்று விஞ்சை முதலியனபெற்றானென்பதும் தன்னிடம் நன்மையடைய நிற்பார்பால், தான் நன்மையடைந்ததாகக் காட்டி அவருக்குப் பெருமை தரும் பெருந்தகைமை உடையான் என்பதும் ஈண்டுணரக் கிடக்கின்றன. கடலும் மாரியும் இராமனுக்கு நிறத்தாலும் குணத்தாலும், நிலையாலும் தொழிலாலும் உவமைகளாகக் கூறப்படுவதை எண்ணினால் இவ்வுவமையின் ஆழம் அளவிட முடியாதது என நாம் முன்னர்க் கூறியது முற்றும் பொருத்தமேயாம்.

பரம்பொருளும் நுண்ணிடையும்

பல்வியல் நெறியிற் பார்க்கும் பரம்
பொருளென்னயார்க்கும்
இல்லை உண்டு என்னநின்ற இடையினுக்
கிடுக்கண் செய்தார்

சீதா தேவி திருமணத்திற்காக அலங்கரிக்கப்படுகின்றாள். அழகுக்கு அழகு செய்கின்றார்கள். மிகவும் நுண்ணிய இடையினை அணிகலன் முதலியவற்றால் வருத்துகின்றனர். அவ்விடையின் நுட்பம் எத்தகையது? நூலினும் கொடியினும் துடியினும் நுண்ணிது எனப் பிறபுலவர் புனைந்துரைப்பது போலல்லாமல் புதிய உவமையால் புதிய முறையில் விளக்குகின்றார் கம்பர். பலதிறப்பட்ட மதங்களாலும் ஆராயப்படுகின்ற பரம்பொருள் நிலை போல் யார்க்கும் இல்லையென்றும் உண்டென்றும் எண்ணி ஐயமுறத நிலையிலுள்ளது தேவியின் இடை என்று கூறுகிறார். 'பொய்யோ எனும் இடை' என்று வேறோர் இடத்திலும் கூறியுள்ளார். பல சமய வாதிகளும் தெளிந்து கூற முடியாத நிலைமைத்தாய இது இல்லை

இது இல்லை என்று கூறுவதாயுள்ளது பரம்பொருள். கண்ணாலும் கருத்தாலும் கண்டு சொல்ல முடியாததாயினும், இல்லையென்று சொல்வது எங்கணும் பெரு வழக்காயிருத்தலின் அறிய முடியாத பரம்பொருளை தேவியின் இடைக்கு உவமை கூறுகிறார். ஆதலின் சாதாரணமாகத் தெரிந்த ஒரு பொருளுக்குத் தெரியாத ஒன்றை உவமை கூறும் குற்றம் ஈண்டு எழவில்லை என்பதை யறிக. இவ்வுவமை யொன்றே அவர் திறத்தை விளக்கப் போதிய சான்றாகும். கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர் என்று கூறப்படும் நிலையிலுள்ளது பரம்பொருள். ஆகவே மதங்கள் பரம்பொருளைக் கூறுமாயின் இல்லை உண்டு என்ற வாதப் பிரதிவாதங்களால் ஐயத்துள் மூழ்கி தெளிவற்ற வகையிலேயே கூறிக் கொண்டிருக்கும். அது எங்கும் கண்டவுண்மை. அந்த எங்கும் கண்டவுண்மையையே உவமை கூறுகின்றார். கண்டால் கூற முடியாத. வுண்மையாயுள்ளது பரம்பொருள். அஃதே போல் அறிந்தால் இத்தன்மைத் தென்று சொல்ல முடியாத நிலையிலுள்ளது தேவியின் இடை. இதனை ஆயிரக் கணக்கான செய்யுட்களுக்குப் பிறகும் மறவாது வைத்து விளக்குகின்றார். இராமன் தேவியைப் பிரிந்த பின் வானர சேனையின் உதவி கொண்டு தேடப் புறப்படுகின்றான். அப்பொழுது அநுமானைத் தனியே அழைத்து தேவியின் அங்க லக்ஷணங்களைக் கூறுகின்றான். கூறி வருகையில் இடையினைப் பற்றி

இட்டிடை யிருக்கும் தன்மை
இயம்பக் கேட்டுணர்தி என்னில்
கட்டுரைத்துவமை காட்டக் கட்
பொறிகளுவாகையில்
தொட்ட எற்குணரலாம்
மற்றுண்டெனும் சொல்லும் இல்லை

எனக்கூறுகின்றான். கையால் தொட்டனுபவித்த நான் இடையின் உண்மையை உணரலாம், ஆனால் நானும் பிறர்க்கு உண்டு என்று சொல்லிக் காட்ட முடியாது எனக் கூறுகின்றான். இவ்வாறு உவமையால் உவமிக்கப்படும் பொருளையன்றி உண்மைத் தத்துவத்தையும் விளக்கும் திறத்தை எங்கும் காணலாம்.

மரமும் மனமும்

கைகேயி, தான் பெற்றிருந்த இரு வரங்களில் ஒன்றால் இராமனை காடேக வேண்டும் எனத் தசரதனிடம் கேட்கிறாள். மைந்தனலாது உயிர் வேறிலாத மன்னன் அதற்கிசைவனோ? கண்ணே வேண்டினும் ஈவேன், என் உண்ணேர் ஆவி வேண்டினும் இன்றே உனதன்றோ. பெண்ணே! கேகயன் மாதே! மண்ணை கொள். மற்றைய தொன்றும் மற எனக் கெஞ்சுகின்றான். வாழ்த்துகின்றான். வைகின்றான். ஒன்றாலும் இரக்கம் கொண்டிலள் கைகேயி. அப்பொழுது அவள் மனநிலைக்குக் கம்பர் கூறும் உவமையைப் பாருங்கள்.

இரந்தான் சொல்லும் இன்னுரை
கொள்ளாள் முனிவெஞ்சாள்
மரந்தான் என்னும் நெஞ்சினள்
நாணாள் வசைபாராள்

எதற்கும் இரங்கா வன்னெஞ்சத்திற்குக் கல்லையும் இரும்பையும் உவமை கூறுதலே சாதாரணமாகவுள்ளது. கம்பரோ தாடகையின் நெஞ்சத்திற்கு

வயிரக்குன்றக்கல் என்று உவமை கூறுகிறார். இப்படி ஒன்றின் மேல் ஒன்றடுக்கிக் கூறிவன்மையை விளக்க வல்ல அவர், கைகேயின் நெஞ்சத்திற்கு மரத்தை உவமை கூறுகிறார். அதுதான் அவரது தனிப் பெருமை. கல்லும் இரும்பும் எப்பொழுதும் ஒரே படித்தாய்த் திண்மை வாய்ந்தன. கைகேயியின் நெஞ்சம் முதலில் இராமன் பால் அன்பு கொண்டிருந்து மந்தரையின் சூழ் வினையால் வன்பு கொண்டது. ஆகவே பசுமையுடன் விளங்கிய மரம் பிறிதோர் காரணத்தால் வற்றியுலர்ந்து பட்டுப்போய் நின்ற தன்மையில் கைகேயியின் நெஞ்சத்துக்கு உவமையாகிறது. கல்லும் இரும்பும் ஒருபால் சூடேற்றியவிடத்து மற்றொரு புறம் வெளிப்படுத்தும் தன்மையுடையது. மரமோ என்னில் தீப்பற்றிய பொழுது பற்றிய இடம் அற்று விழுமேயன்றி உணர்ச்சியைவெளிப்படுத்தாது. கைகேயியின் நெஞ்சமும் தசரதன் எவ்வளவு வேண்டியும் உணர்ச்சியற்ற தன்மையை விளக்கி நின்றது.

சித்திரத் தாமரை

எவ்விதத்தாலும் கைகேயி இணங்காதது கண்ட தசரதன் மூர்ச்சித்து விழுகின்றான். உடனே கைகேயி இராமனை அழைத்து தான் வரத்தால் பெற்ற பேற்றைத் தசரதன் ஆணையாகக் கூறுகின்றாள். இராமன் அது கேட்டுத் தந்தையால் வந்த அரசபாரம் தாயின் அருளால் நீங்கித் தான் விடுதலை பெற்றதாக அகமகிழ்கின்றான். அப்பொழுது இராமன் திருமுகத்தை

ஒப்பதே முன்புபின்பவ் வாசகம்
உணரக் கேட்ட
அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை
வென்றதம்மா

என்று உவமை கூறிச் சிறப்பிக்கிறார் கம்பர். தசரதன் ஆணையைக் கேட்பதற்கு முன் அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை ஒத்திருந்தது இராமன் திருமுகம். ஆணையைக் கேட்ட பின் மகிழ்ச்சியால் வென்றது. இப்படிக் கூறிய பின் கம்பருக்கே ஒரு ஐயம் தோன்றி விட்டது. இராமன் பரம்பொருள் என்றன்பு செலுத்துபவர் கம்பர். பரம்பொருளிடம் தாழ்வையோ சமானத்தையோ ஏற்றத்தையோ கற்பிப்பது பொருந்தாது என்று எண்ணலானார். மேலும் அப்பொழுதலர்ந்த செந்தாமரையாயினும் எப்பொழுதாவது வாடிவிடுமல்லவா? அது போல் இராமன் திருமுகமும் காடுபுக்க பின் வாட்டம் கொண்டது என்ற பொருள் தோன்றிவிடுமே என்று சிந்தனை செய்யலானார். சுமார் மூவாயிரம் செய்யுட்களுக்குப் பிறகு அப்பொழுதலர்ந்த செந்தாமரைதனை வென்றது என்ற கூறிய குறையைத் தீர்த்துக் கொள்கின்றார். சீதை அசோகவனத்தில் சிறை யிருந்து வாடும் பொழுது இராமனை எண்ணிப் புலம்புகின்றாள். அப்பொழுது அவள் மனக் கண்ணில் தோன்றும் திருமுகத்தைக் கம்பர் சித்திரிக்கின்றார்.

மெய்த்திருப்பதம்மே வென்றபோழ்தினும்
இத்திருத்துறந்தே கென்றபோழ்தினும்
சித்திரத் தினலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்

சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரைக்கு வாட்டமேது? எங்கும் எதற்கும் ஒன்றாய் விளங்கும் இராமன் இன்பமும் துன்பமும் எண்ணுவதில்லை.

அவன் திருமுகத்திற்கும் வாட்டமும் வளர்ச்சியும் எப்பொழுதும் இல்லை.

கன்றும் பசுவும்

கன்றையும் பசுவையும் உவமை கூறுவது ஓர் அற்புதக் கற்பனை. அது தத்துவ போதனையாகவும் விளங்குகிறது. இவ்வுவமையைப்பல இடங்களிற் கூறுகிறார் கம்பர்:

இரண்டதோளினன் இப்படிச் செப்பலும் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகையராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்
இரண்டுகன்றினுக் கிரங்குமோர் ஆவென இருந்தார்

தசரதன் அரசுப் பொறுப்பை இராமனிடம் கொடுத்து விட்டுத்தான் தவம் செய்யப்போவதாகக் கூறிய பொழுது அமைச்சர் முதலாயினோர் இராமன் வருகைக்கு மகிழ்ச்சியும் தசரதன் பிரிவுக்கு வருத்தமும் கொண்டு நின்ற நிலையை விளக்குதற்காக இவ்வுவமை கூறப்படுகிறது. ஈண்டு இராமனும் தசரதனும் கன்றுகளாகவும் அமைச்சர் தாய்ப்பசுவாகவும் உவமிக்கப் படுகின்றனர்.

கன்றுபிரிந்தழைக் கறவையொப்பக் கரைந்து கலங்கினள்.

இராமன் வனம் செல்லுமாறு ஆணையிடப்பட்டதை அறிந்த கோசலை இவ்வாறு வருந்துகின்றாள். ஈண்டும் இராமன் கன்றாகவும் கோசலைத் தாய்ப் பசுவாகவும் உவமிக்கப் படுகின்றனர்.

இருவரும் தொழுதனர் இரண்டுகன்றொரீஇ
வெருவரும் ஆவினின்றாயும் விம்முவாள்.

இராமலக்ஷ்மணர் பிரிவுக் காற்றாத சுமித்திரையின் நிலை இவ்வாறு கூறப்படுகிறது. இவ்விடத்தும் இராமனும் இலக்குவனும் இரண்டு கன்றுகளாகவும் சுமித்திரை தாய்ப் பசுவாகவும் உவமிக்கப் படுகின்றனர்.

கன்று பசு இவ்விரண்டுள் தலைமையுடையது தாய்ப்பசு. ஆனால் மூன்றிடங்களிலும் இராமன் கன்றாகவே உவமிக்கப்படுகிறான். தலைமை பெற்றிராத அமைச்சர் தாய்ப்பசுவாகவும் தசரதனும் இராமனும் கன்றுகளாகவும் உவமிக்கப் பட்டிருத்தல் கருதத்தக்கது. கொள்வோர் கையினும் கொடுப்போர் கை தாழநின்று கொடுப்பதே குணம் எனக் கூறுவர் பெரியோர். அத்தக்குணச் சிறப்பைவிளக்கவே எவர்க்கும் அருள் செய்ய வந்த பரம்பொருளான இராமன் கன்றாக உவமிக்கப் படுகின்றான். மேலும் 'பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று வல்லதாம் தாய் நாடிக் கோடலை' என்றபடி கன்று தாய்ப் பசுவை அறியவல்லது. அது போல் இராமன் யாரையும் அறியவல்லவன். இராமனை அறியார் யாரும் இலர். உண்மை யறியாதார்க்கு இராமன் கன்றாக விளங்குகின்றான். இராமனது அருளால் இராமனை உணர்ந்த விராதன் தன் சாபம் நீங்கிய வுடன்

தாய்தன்னை அறியாதகன்றில்லை அக்கன்றை
யாயும் அறியும் உலகின்றாயாகி ஐய
நீயறிதி எப்பொருளும் அவையுன்னை [நிலையறியா
மாயம் இது என்கொலோ வாராதே வர [வல்லாய்

எனத் தோத்திரம் செய்கின்றான். தாயை அறியாத கன்றில்லை. அக் கன்றைத் தாய்ப்பசுவும் அறிந்து கொள்ளும். உலகத்தின் தாயாகிய நீ எல்லோரையும் எல்லாப் பொருளையும் அறிகின்றாய். நன்றாய் அறிந்திருக்க வேண்டிய கன்றுகள் போன்ற உலகத்துயிர்கள் உன்னை அறியாதிருக்கின்றன. இது என்ன மாயம் எனக் கூறுகின்றான். இந்த மாயமே இராமன் கன்றாக உவமிக்கப்படுதற்குக் காரணம்.

பூபேந்திரநாத் வசு

ஜனனம் 1856—மரணம் 1926

—"ஒரு காங்கிரஸ்வாதி"



ஐரோப்பிய மகா யுத்தம் தொடங்கி, மகா கோரமாக நடக்கிற வருஷம். 1914ம் வருஷம் செப்டம்பர் மாதம் 'எம்டன்' என்ற ஜெர்மானியக் கப்பலொன்று வங்காளக் குடாக் கடலில் பெரிய ஆர்ப்பாட்டஞ் செய்ததோடு அல்லாமல் சென்னையின் மீதும் வெடி குண்டுகளை வீசி யெறிந்தது. இதனால் சென்னை வாசிகள் அனைவரும் பயந்து போயிருந்தார்கள். ஆனாலும் அந்த வருஷம் 1914–டிஸம்பர் மாதம் 28, 29, 30ந் தேதிகளில் இருபத்தொன்பதாவது காங்கிரஸ் கூடியது. சென்னை வாசிகளின் காங்கிரஸ் பக்தியானது சிறிது கூடத் தளர்ச்சி யடையவில்லை. நுங்கம் பாக்கத்திலுள்ள 'டவ்டன் ஹவுஸ்' என்ற கட்டிடத்தைச் சேர்ந்த விசாலமான மைதானத்தில் காங்கிரஸுக்கென்று பெரிய கொட்டகை போடப் பட்டிருந்தது. இதில்தான் இருபத்தொன்பதாவது தேசிய காங்கிரஸ் கூடியது. மொத்தம் 866 பிரதிநிதிகள் விஜயஞ் செய்திருந்தார்கள். ஜஸ்டிஸ் மணிஐயர் என்று சொல்லப் பட்ட ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் வரவேற்புக கமிட்டி தலைவராயிருந்தார். ஸ்ரீ பூபேந்திரர், வங்காள மாகாணத்தைச்சேர்ந்த கிருஷ்ண நகர் ஜில்லாவில் காயஸ்த ஜாதியில் 1856-ம் வருஷம் ஜனவரி மாதம் பிறந்தார். பாலியத்தில் வங்காளி

பாஷையை எல்லாரையும் போல் கற்று, பின்னர் 1875ம் வருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சையிலும் 1880வது வருஷம் பி. ஏ. பரீட்சையிலும் தேறினார். பிறகு, கல்கத்தாவில் அப்பொழுது சொலிஸிட்டர்களாயிருந்த நிமாயி சரண்வசு என்பரிடம் வக்கீல் தொழில் கற்றுக் கொண்டார். அதே சமயத்தில் எம். ஏ. பரீட்சைக்கும் பி. எல் பரீட்சைக்கும் படித்து அவற்றில் தேறினார். இதனால், இவரே சுயமாக 1884ம் வருஷம் மார்ச் மாதம் 16ந்தேதி வக்கீல் தொழிலை நடத்தத் தொடங்கினார். இந்தத்தொழிலிலேயே தம் கவனமனைத்தையும் செலுத்தினாராதலின், நல்ல வருமானம்இவருக்குக்கிடைத்து வந்தது. கட்சிக்காரர்களிடம் இவர் பரம விசுவாசத்தோடு நடந்து கொண்டதோடு கூட, அவர்களுடைய வழக்குகளையும் அதிக சிரத்தையோடு கவனித்து வந்தார். பணவருவாய் இவருக்கு ஏராளமாகக் கிடைத்ததோடு இவருடைய செல்வாக்கும் பெருகிக் கொண்டு வந்தது.

வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சியின் போது, இவர் அதில் பூர்ண பங்கெடுத்துக் கொண்டார். வீடு வீடாகப் பிரிவினையை எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்தார். இதனோடு தேசிய சம்பந்தமான ஸ்தாபனங்கள் பல ஏற்படுவதற்கும் இவர் துணை செய்து வந்தார். கல்கத்தா நகரசபை, வங்காள சட்டசபை, இந்திய சட்டசபை ஆகிய இந்தச் சபைகளில் இவர் அங்கத்தினராயிருந்து தமது நாவன்மையையும் விஷய ஞானத்தையும் துணை கொண்டு அதே காரியங்களைச் செய்தார். இந்தியா சட்டசபையில் இவர் அங்கத்தினராயிருந்தபொழுது தான், 'விவாக வயது நிர்ணயச் சட்ட மசோதா'வைக் கொண்டு வந்தார். இஃது அந்தக் காலத்தில் நாடெங்கணும் பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

காங்கிரஸ் ஆரம்பகாலத்திலிருந்தே இவர் அதில் ஈடுபட்டு வந்திருக்கிறார். 1886ம் வருஷம் கல்கத்தாவில் இரண்டாவது காங்கிரஸ் கூடிய போது, இவர் தொண்டர் படைத் தலைவராயிருந்தார். 1911ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸுக்கு உபசாரணைக் கூட்டத் தலைவராயிருந்தார். இந்த மாதிரி, பல காங்கிரஸ்களிலும் இவர் அதிகமான சிரத்தையெடுத்துக் கொண்டிருக்கிறார்.

1914ம் வருஷத்துக் காங்கிரஸில் தலைமை வகித்து இவர் செய்த பிரசங்கம் மிகவும் பிரசித்தி பெற்றது. இந்தியாவின் பரிதாப நிலையை மிக அழகுபட எடுத்துக் கூறியிருக்கிறார். மாதிரிக்காக சில வாக்கியங்களை எடுத்துக் காட்டுகிறோம்.

ஆயுதங்களை உபயோகிக்கும் உரிமை, ராணுவத்தில் உயர்தர உத்தியோகங்களை வகிக்கும் உரிமை, தற்காப்பு நிமித்தம் தொண்டர் படைகளை அமைத்துக் கொள்ளும் உரிமை இவையெல்லாம், இந்தியர்களுக்கு எவ்வளவு காலத்துக்குத் தான் மறுக்கப்பட்டிருக்கும்? இங்கிலாந்துடன் இணைக்கப்பட்ட ஒரு குழந்தையாக, இந்தியா எவ்வளவு காலத்துக்குத் தான் தவழ்ந்து கொண்டிருக்கும்? தானே, சுயமாக நிற்கவேண்டிய காலம் அதற்கு இன்னும் வரவில்லையா?

பூபேந்திரர், அரசியலில் பெரிய மித வாதியாயிருந்தார். இதனால் இவர், தமது வாழ்க்கையின் பிற்காலத்தில் ஜனங்களின் அபவாதத்தைப் பெற்றுவிட்டதில் ஆச்சரியமில்லையல்லவா? மாண்டேகு—செம்ஸ்போர்ட் சீர் திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு முன்னர், ஸ்ரீ மாண்டேகு, பூபேந்திரருடைய துணையைப்பெரிதும் நாடினார். இவரும், மாண்டேகுவின் முயற்சியில் பெரிதும் கலந்து கொண்டார். பிற்காலத்தில், இவர் இந்தியா மந்திரி சபையில் ஓர் அங்கத்தினராக நியமனம் பெற்றதுகூட இதுகாரணத்தினால்தான் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

கல்வி விஷயத்தில் பூபேந்திரர் அதிகசிரத்தை எடுத்துக் கொண்டார். ஸர் அஷுடோஷ் முகர்ஜிக்குப் பிறகு இவர் கல்கத்தா சர்வகலாசாலை உப அத்தியட்சகராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

வயோதிக காலத்தில் பூபேந்திரர் அதிகமான மனோவேதனைக் குட்பட்டார். இவருடைய புத்திரர்கள், புத்திரிகள் யாவரும் ஒருவர் பின்னொருவராக இறந்து போய்விட்டனர். இந்தச் சந்தான சோகத்தின் காரணமாகவே இவர் 1924ம் வருஷம் டிசம்பர் மாதம் பதினோராந்தேதி இறந்து போனார்.

இருவகை மனிதர்

உலகினில் இருவகை மனிதருண்டு;
இருவகையினர்தான்; வேறு பிரிவில்லை.

அவர் யார்?

பாவியுமல்ல; ஞானியுமல்ல.
ஏழையுமல்ல; பணக்காரனுமல்ல.
அகங்காரியுமல்ல; அடங்கியவனுமல்ல.
இன்பம் அநுபவிப் போனுமல்ல; துன்பமநுபவிப்போனுமல்ல.

ஆனால் யார்?

பிறரைக் கைகொடுத்துத் தூக்குவோர் ஒரு வகையினர்;
அவரால் தூக்கப்படுவோர் மற்றொரு வகையினர்.
உலகெங்கணும் சுற்றிப்பார்; இந்தஇருவகையினரையே காண்பாய்.
ஆயினும் ஒருவிநோதம் உண்டு அறிவையோ நீ?
தூக்குவோர் ஒருவராயின் தூக்கப்படுவோர் இருபதின்மர்.
நீ எவ்வகையினன் கொல்?
பிறருடைய சுமையை இறக்கப் போகிறாயா?
அல்லது பிறருக்குச் சுமையா யிருக்கப் போகிறாயா?

புராதன எகிப்து

(காப்பிரைட்)

—"துரோணன்"

1. முதல் வம்சாவளிக்கு முன்னர்

2

சித்திரக்கலையில் தேர்ச்சி பெற்று வந்ததோடு பூர்விக எகிப்தியர்கள் திருப்தியடையவில்லை. நாகரிகத்தின் பல துறைகளிலும் அபிவிருத்தியடைந்து வந்தார்கள். வெளிநாடுகளின் தொடர்பும் இவர்களுக்கு ஏற்பட்டது. சிறப்பாக, எகிப்தின் கிழ்ப் பக்கத்திலிருந்த பிரதேசங்களுடன்தான் அதிகமான போக்குவரத்து இருந்ததாகத் தெரிகிறது. பர்ஷியா தேசத்திலிருந்து நீலநிறக் கற்களும், ஆசியாவிலிருந்து வெள்ளியும் எகிப்துக்கு வந்தன. கிழ்ப் பக்கத்து மலைகளிலிருந்து கற்கள் கொண்டு வரப்பட்டு, பலவித பாத்திரங்களாகச் செய்யப் பட்டன. இந்த மாதிரியான கிழைப் பிரதேசங்களின் தொடர்பு இருந்ததனால், எகிப்தியர்களின் நாகரிகத்தில் அநேகவித மாற்றங்கள் ஏற்பட்டன. ஒரு முகப் பட்ட இந்த மாற்றங்கள் நிகழ்ந்தது ஏறக்குறைய கி. மு. 8000ம் வருஷங்களுக்கு முந்தி யிருக்கலாமென்று கருதுகிறார்கள் அறிஞர்கள்.

இந்தக் காலத்தில் அதாவது கி. மு. 8000 வருஷங்களுக்கு முன்னர் பெரிய படகுகளை உபயோகித்து வந்தார்கள். இவைகளை நைல் நதியிலேயே உபயோகித்தார்களா அல்லது செங்கடல், மத்திய தரைக்கடல் பிரதேசங்களில் உபயோகித்தார்களா என்பது தெரியவில்லை. ஆனால், எகிப்திய சவக் குழிகளில் செதுக்கப் பட்டிருக்கும் சின்னங்களைப் பார்க்கிறபோது, இந்தப் படகுகள் சுமார் அறுபது அடிக்குமேல் நூறு அடி நீள முள்ளன வாயிருந்தன வென்று தெரிகிறது. படகைச் செலுத்துவதற்குத் துடுப்புகள் வேண்டுமல்லவா? படகின் ஒவ்வொரு பக்கத்திலும் ஐம்பது, அறுபது துடுப்புகள் விகிதம் மேற்படி சின்னங்களிலுள்ள படகுகளில் காணப் படுகின்றன. அப்படியானால், குறைந்த பட்சம் நூறு அடி நீளமாவது ஒவ்வொரு படகும் இருந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு படகிலும் இரண்டு அறைகள் இருந்தன. இவை பெரும்பாலும் கப்பலின் மத்திய பாகத்திலேயே அமைக்கப் பட்டிருந்தன. இரண்டு அறைகளும் ஒன்றுக்கொன்று சேர்ந்தாற் போலிராது.

இடை வெளி கொஞ்சம் இருக்கும். ஆனால் இரண்டு அறைகளுக்கும் நடுவே, பாலம் போன்ற தொரு தொடர்பு இருக்கும். சாமான்கள் யாவும், இந்த அறைகளின் மேல் தட்டில் வைக்கப் பட்டன வென்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது. அப்படியானால், இந்த மேல் தட்டுகள் வலிவுள்ள மரத்தினால் கட்டப் பெற்றிருக்க வேண்டும். படகின் முன்புறமாயுள்ள அறையின் முன்னர், உயர்ந்ததொரு ஸ்தம்பம் நிறுத்தப் பட்டிருந்தது. எந்தத் துறைமுகத்திலிருந்து படகு புறப்பட்டதோ அந்தத் துறைமுகத்தின் பெயர், அந்த ஸ்தம்பத்தின் மீது பொறிக்கப் பட்டிருந்தது. ஆனால் எழுத்துக் களினாலல்ல. ஏதோ ஓர் அடையாளம், சித்திர ரூபமாக வரையப்பட் டிருக்கும். உதாரணமாக ஒரு மலை, அல்லது வரிசையாக நாலைந்து மலைகள், ஏதேனும் ஒரு பிராணி அல்லது ஏதோ ஒரு தெய்வத்தின் உருவம், இப்படிப் பலவிதமாக எழுதப் பட்டிருக்கும். இந்த உருவத்தைப் பார்த்து, இன்ன ஊரிலிருந்து இந்தப் படகு புறப்பட்டதென்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டு விடலாம். இந்த மாதிரியான படகுகளின் மூலம், பூர்விக எகிப்தியர்கள், அநேக வெளி நாடுகளுடன் வியாபாரஞ் செய்து வந்தார்கள்.

ஜன ச்மூதாயமானது, ஒரு வித ஒழுங்குக்கும் கட்டுப் பாட்டுக்கும் உட்பட்டிருந்தது. இந்த ஒழுங்கும் கட்டுப் பாடும், நாளா வட்டத்தில் விருத்தியடைந்து வந்தன வென்றே சொல்ல வேண்டும். ஆஸ்தி யென்று, பூர்விக எகிப்தியர்கள் எதை எதைக் கருதி வந்தார்களோ, அவை எல்லாவற்றையும் சேர்த்து வைக்க வேண்டுமென்ற ஆவல் ஒவ்வோர் எகிப்தியனுக்கும் இருந்ததாகத் தெரிகிறது. கற்களைக்குடைந்து அவைகளை அழகிய பாத்திரங்களாகச் செய்து அவற்றின் மீது சித்திரங்கள் வரைவதில் எகிப்தியர்கள் அதிக சிரத்தை காட்டினார்கள். பாத்திரங்கள் மட்டு மல்ல; இன்னும் அநேக உருவங்களையும் சமைத்தார்கள். முதல் வம்சாவளிக்கு முன்னர் எந்தெந்த மன்னர்கள் எகிப்தில் ஆண்டார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இவர்களால் செய்யப் பட்டு இப்பொழுதும் உருக் குலையாமல் இருக்கிற அநேக அரசர்களின் உருவங்களைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

நாகரிகம் விருத்தியடைய யடைய, செம்பின் உபயோகம் அதிகமாகிக் கொண்டுவந்தது. இந்த உலோகத்தினால், தச்சனுக்குரிய அநேக ஆயுதங்கள் செய்யப்பட்டன. சிறப்பாக, செம்பைக் கொண்டு, கூர்மையான ஈட்டிகள் பல செய்து உபயோகித்து வந்தார்கள். செம்புடன் வெள்ளி, பொன், ஈயம் முதலிய உலோகங்களும் உபயோகிக்கப் பட்டன. இரும்புக்குப் பொன்னைக் காட்டிலும் அதிகமான மதிப்பு இருந்தது. இதனை, ஜப மாலைகளாகச் செய்து, பொன்னோடு உபயோகித்து வந்தார்கள்.

மனிதன், இறந்துபோய் விட்ட பிறகு, வேறோர் (உலகத்தில்) பழைய மாதிரி வாழ்க்கையை நடத்துகிறானென்ற நம்பிக்கை பூர்விக எகிப்தியர்களுக்கு இருந்தது. இதனாலேயே, இறந்து போனவர்களுடைய

சவக்குழிகளில், அவர்கள் உயிருடனிருந்த போது என்னென்ன பொருள்களை விரும்பி அநுபவித்தார்களோ அவைகளையெல்லாம் கூடவே வைத்துப்புதைத்தார்கள். இதற்காகச் சில சடங்குகளும் அநுஷ்டானத்தில் இருந்தன.

இந்தக் காலத்தில் தான்—ஏறக்குறைய கி. மு. 3800ம் வருஷத்தில்—எகிப்தியர்கள் எழுத்துக்களை உபயோகிக்க ஆரம்பித்தார்கள். ஏதேனும் ஒரு பொருளைக்குறிக்க வேண்டுமானால் அந்தப்பொருளை எழுதிக் காண்பிக்கிற முறையிலேயே, இந்த எழுத்துக்கள் ஆரம்பத்தில் தோன்றின.

பூர்விக எகிப்தியர்கள் உபயோகித்து வந்த சில முத்திரைகள் இப்பொழுது காணப் படுகின்றன. அவைகளைக் கொண்டு நாம் ஆராய்ந்து பார்க்கிற போது, பூர்விக எகிப்தில் அரச முத்திரையை உபயோகிக்கிறவன், ஆஸ்தான சிற்பி, அரண்மனை அதிகாரி, அந்தரங்கக் காரியதரிசி, கால்வாய்களின் பரிசோதகர், புரோகிதர் முதலிய பல அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இருந்ததாகத் தெரிகிறது. பொதுவாகவே, அரசனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு, ராஜகாரியங்களை நடத்தி வந்த ஓர் உத்தியோக வருக்கம் இருந்து வந்ததென்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

பொதுவாக முதல் வம்சாவளிக்கு முன்னிருந்த பூர்விக எகிப்தை நாம் நோக்குகிற போது, சித்திரக்கலை வெகு துரிதமாக அபிவிருத்தியடைந்து வந்திருப்பதையும், இதைப் போலவே அநேக கைத்தொழில்கள் அபிவிருத்தியடைந்திருப்பதையும் பார்க்கிறோம். ஒரே மன்னனுடைய ஆட்சியின் கீழ் எகிப்து முழுவதும் இருந்து வந்திருக்கிறது. நைல் நதியின் வெள்ளப் பெருக்கை உபயோகமுள்ள பல வழிகளில் திருப்ப அரசர்கள் முயன்று வந்திருக்கிறார்கள். அரசாங்கக் காரியங்களை நடத்த, ஒழுங்கான ஓர் உத்தியோக வருக்கம் ஸ்தாபிக்கப் பட்டது.

எனவே, முதல் வம்சாவளிக்கு முன்னர், எகிப்தியர்கள் ஒழுங்கானதொரு நாகரிகத்தை யடைந்திருந்தார்களென்பதும், அந்நிய நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்களென்பதும் நன்கு புலனாகின்றன.

உலகத்தில் இதுகாறும் தோன்றிய தத்துவ ஞானிகள் தங்களுக்குத் தோன்றிய வண்ணமெல்லாம் உலகத்தினை வியாக்கியானம் செய்தார்கள். அவ்வளவுதான் ஆனால் இப்பொழுது நம்முன் எழுந்துள்ள பிரச்னை, உலகத்தினை எப்படி மாற்றி யமைப்பது என்பது தான்.

—கார்ல் மார்க்ஸ்

ஒழுக்கத்திற்கு உயர்வு கொடு

—வ. பார்த்தசாரதி

உழைப்பதாக உறுதி கொண்டு விட்ட என்மகனே! நீ செய்து கொண்ட சங்கல்பம், இருதய பூர்வமானதுதானே? நான் இந்தமாதிரி சந்தேகப் படுவதற்குக் காரணங்கள் அநேகம் உண்டு. ஏனென்றால், நான்கு பேரோடு சேர்ந்து கொண்டு பேசுகிறபோதோ, அல்லது ஒரு காரியத்தைச் செய்கிறபோதோ ஒரு வித உற்சாகம் ஏற்படும். அந்த உற்சாகத்தின் விளைவாக, சில பிரதிக்ஞைகளைச் செய்துகொண்டு, காரிய சாதனைக்குக் கச்சை கட்டிக் கொண்டு விடுகிறோம். ஆனால் அந்த நான்கு பேருடைய கூட்டுறவு இல்லாமல் போய், உற்சாகமும் குறைந்துவரும் சமயத்தில், நாம் செய்து கொண்ட பிரதிக்ஞைகளை மறந்து விடுகிறோம். நாம் வரிந்து கட்டிக் கொண்ட கச்சையும் தளர்ந்து போகிறது. நீ பிரத்தியட்சமாகப் பார்க்கலாமே, தேசியத் தலைவர்களில் யாராவது நம்மிடையே வந்து பிரசங்கம் செய்து விட்டுப் போனவுடனே, கதராபிமானம், அல்லது காங்கிரஸ் பற்று, என்றுமில்லாமல் நம்மிடத்தில் அதிகமாக உண்டாகி விடுகிறது. கதர் கடைக்குச் சென்று பத்து, இருபது ரூபாய்க்குக் கீதர் வாங்குகிறோம். காங்கிரஸ் பிரசாரம் செய்யும் ஓரிண்டு பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்துகிறோம். சிறிது காலமானவுடனே, நாம் வாங்கின கதர்துணி கிழிவதற்கு முன்னேயே, நம்முடைய கதராபிமானமும், காங்கிரஸ் பற்றும் காற்றாய்ப் பறந்தோடிப் போகின்றன. அதோடு மட்டுமல்ல; கதரையும் காங்கிரஸையும் கூட தூஷிக்க ஆரம்பித்து விடுகிறோம். பழிதீர்க்கிற மனப்பான்மையோடு, மேனாடுகளிலிருந்து இறக்குமதியான அசல் பட்டுத் துணிகளையே உபயோகிக்கிறோம். இந்த விபரீதங்களுக்கெல்லாம் என்ன காரணமென்று நினைக்கிறாய்? இருதய சுத்தமில்லாமைதான். இதனாலேயே, நீ செய்துகொண்ட சங்கற்பம் ஸ்திரமானது தானே என்று முதலில் கேட்டுக் கொண்டேன். ஆனால் உன்னிடத்தில் இருதய சுத்தம் உண்டு என்பது எனக்குத் தெரியும். இல்லாவிட்டால் உனக்கு இந்த உபதேசங்களையெல்லாம் செய்ய முன்வருவேனா?

எவனொருவன், தனது கடமையை உணர்ந்துவிட்டானோ, அவன் உடனே அதனை— அந்தக் கடமையைச்—செயலில் கொணர்வான். கடமையை உணராதவன்தான், எதைச் செய்யலாம், எப்படிச் செய்யலாம், எப்பொழுது செய்யலாம் என்ற ஆராய்ச்சி உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி விடுவான். நாம் செய்யக் கூடியதெல்லாம் என்ன? நம் சக்திக்

யன்ற கடமையைச் செய்வதுதான். அப்படிச் செய்து கொண்டு போகிற கடமைகள், நமக்கு நாளாவட்டத்தில் பழக்கமாகி விடுவதோடல்லாமல், அவைகளே, நம்மைப் பிறர்க்கு அளந்து காட்டும் கருவிகளாய் அமைகின்றன. நாம் செய்கிற காரியங்களைக் கொண்டுதான், 'இவன் இத்தகைய மனிதன்' என்று மதிக்கத் தொடங்குவர் பலரும்.

ஆனால் மகனே! கடமையைச்செய்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல. எதிர்ப்புகளும் இடையூறுகளும் ஏராளமாக உனக்கு ஏற்படலாம். அவைகளை நீ சமாளித்துக் கொண்டு போக வேண்டும். உனக்கு, ஒரு விஷயத்தை நுண்மையாகப் பார்க்கிற சக்தி இருக்கலாம். ஆனால் அதனைச் செயலில் கொண்டுவரக்கூடிய மனோபலம் இல்லாமற் போய்விடலாம். எனவே திடமான சித்தம் உனக்கு வேண்டும். திடசித்தமில்லாதவன், ஒரு விஷயத்தைப்பற்றித் தத்துவ ஆராச்சி செய்து கொண்டிருக்கலாம்; கனவு கண்டு கொண்டிருக்கலாம். ஆனால் அவனால் ஒன்றுஞ் செய்யமுடியாது. உழைப்பிலே இன்பங்கண்ட ஓர் அறிஞன் கூறினான் :—"பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? வெகு சொற்பந்தான். செய்வதற்குத்தான் என்ன இருக்கிறது? அதுவும் மிகச் சொற்பமே. ஆனால் செய்யத்தான் வேண்டும்." ஆகையால் ஒரு காரியத்தைப் பற்றி யோசிக்காதே; அதைச்செய்து விடு.

முதலில் நீ விருப்பு வெறுப்புகளை வென்றுவிட வேண்டும். இந்த வெற்றிகூட அவ்வளவு கடினமானதல்ல. நமக்குவிரோதமாக ஏற்படும் அபகீர்த்தியைச் சமாளிப்பதுதான் மகாகடினம். நன்மை பயக்கக் கூடிய ஒருகாரியத்தைச் செய்ய ஒருவன் துணிந்து விட்டபிறகு, 'நான் செய்கிற இந்தக் காரியத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன சொல்வார்கள்' என்று சிந்திக்கத் தொடங்கி விடுவானாகில், அவனால் அந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்ய முடியாதென்று நீ உறுதியாக நம்பலாம். ஆனால் அவனே, இவைகளை யெல்லாம் பொருட்படுத்தாமல், பொதுஜனங்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப்பற்றிக் கவனியாமல், காரியத்தில் இறங்கிவிடுவானாகில், அவன் தான் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். "நல்ல காரியங்களைச் செய்வதற்காக நாம் நம்பிக்கை கொள்வோம். நம்மிடமுள்ள அவநம்பிக்கைகளை யெல்லாம் கெட்ட காரியங்களுக் கென்று ஒதுக்கி தள்ளி விடுவோம். பிறரிடம் நாம் அவநம்பிக்கை கொள்வதைவிட, பிறரால் நாம் ஏமாற்றப்படுவது நல்லதல்லவா?" என்று ஓர் அறிஞன் கூறியது இங்கே ஞாபகத்திற்கு வருகிறது.

கடமை எங்கிருந்து ஆரம்பிக்கிறது தெரியுமா? குடும்பத்தி லிருந்து. ஒரு குழந்தையானது, நிராதரவாய், மற்றவர்களுடைய தயவை எதிர் பார்த்து பூமியிலே பிறக்கிறது. தன்னுடைய உணவுக்கும், போஷணை முதலியவைகளுக்கும் பிறருடைய தயவை எதிர்பார்க்கிறது. பின்னர், மெது மெதுவாக அதற்குச் சில எண்ணங்கள் தோன்றுகின்றன. அதற்குப் பிறகு, பிறருக்குக் கீழ்ப்படியவும், தன் கடமையைச் செய்யவும்,

சந்தோஷமாக இருக்கவும் கற்றுக் கொள்கிறது. அதற்கென்று தனியான ஒரு மனோசக்தி ஏற்படுகிறது. அந்தச் சக்தியை நல்ல வழியில் செலுத்துவதும் கெட்ட வழியில் செலுத்துவதும், பெற்றோர்களின் சுபாவத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகையால், உன்னுடைய மனோ சக்தியை விருத்தி செய்து கொள். அப்படி விருத்தி செய்து கொள்ள, வயதைக்கடந்து விட்டதாக நீ கருது வாயானால், உன் சந்ததிகளுக்காவது, அந்த மனோ சக்தியை விருத்தி செய்து வை.

நன்றாக எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டு விடுவது அவ்வளவு முக்கியமல்ல. ஆனால் இந்தக் காலத்தில், பலர், படிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, குணத்தைக் கை சோர விடுகின்றனர். படிப்புக்கும் ஒழுக்கத்திற்கும் சம்பந்தமேயில்லை. படித்தவரெல்லாரும் சந்தோஷத்தையும் பெறுகிறார்களில்லை. அதற்கு மாறாக, குணமில்லாத படிப்பு கர்வத்தைக்கொடுத்து விடுகிறது. தவிர, படித்தவர்கள் சிந்தனை உலகத்தில் தான் சஞ்சரிக்க முடியுமே தவிர, கர்ம க்ஷேத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லையல்லவா? ஒழுக்க ஹீனனாயிருக்கப்பட்டவன், எவ்வளவு படித்திருந்தாலும், அவன் பாதி மனிதன் தான். மனிதத் தன்மையில் அவன் போற்றப் படுவதேயில்லை. ஆகையால், மகனே! ஒழுக்கத்திற்கு முதல் ஸ்தானமும், படிப்புக்கு இரண்டாவது ஸ்தானமும் கொடு.

இந்தியாவில் தொழில் வாரி

தொழில் வாரியாக	1911ம் வருஷ ஜனகணிதம்	1921ம் வருஷ ஜனகணிதம்	1931ம் வருஷ ஜனகணிதம்
	ஆயிரம்	ஆயிரம்	ஆயிரம்
நிலச்சுவான் தார்கள்	2,845	3,727	3,257
விவசாயிகள்	71,096	74,665	61,180
விவசாயக் கூலிகள்	25,879	21,676	31,480
விவசாய சம்பந்தமான மற்றத் தொழிலாளர்கள்	5,196	4,608	6,536

கண்ணன் என்று ஏன் கூறினர்!

—எஸ். கே. நாராயண ஐயர்
B. A., B. L.,

அத்தி முதல் எறும்பு ஈறான உயிர் அத்தனையும், சித்த மகிழ்ந்து தம்மை ரக்ஷிக்கும் கடவுளை வணங்குகின்றன. அறிவும் ஆற்றலுமுடைய மக்களும் அப்படி தெய்வ வழிபாடு செய்கின்றனர். மக்களினுமுயர்ந்தோர் என்னும் தேவர் கூட தேவ தேவனைத் தொழா நிற்பர். கடவுளில்லை யென்னும் நாஸ்திகர்கள் கூட முதலாகி முடிவிலாத மூலமதாகிய மூர்த்தியை வேறு பெயரால் வணங்குவர். ஜீவகோடிகளெல்லாம் அன்பே உருவாகிய ஐயனுக்கு அவ்வன்பினையே மனப்பூர்வமாகச் சமர்ப்பிக்கும்.

நல்லொழுக்க மிக்க மாது ஒருத்தி தன் கணவனிடம் கொண்டுள்ள அன்பைப் பதி பக்தி யென்றழைக்கிறோம். உண்மைக் குணமுள்ள ஒருவன் தன்நாட்டின் மாட்டு வைத்துள்ள அன்பைத் தேச பக்தி யென்கிறோம். அப்படியே கடவுளிடத்தே மக்கள் கொண்டுள்ள அன்பிற்கு தெய்வபக்தி யென்று சொல்லப்பெறுகிறது. ஆனால் அறிவு ஒழுக்கங்களில் சிறந்த பெரியாரெல்லாம் தெய்வ பக்தியைப் பெரிதும் பதி பக்திக்கே உவமையிடுவர். குணவதியான கோதைக்குக் கொழுநன் பதியாவது போன்று பசுக்களாகிய ஜீவகோடிகளுக்குக் கடவுள் பசுபதியாவர். முன் பின்னறியா ஸ்திரீ புருஷர்கள் முன்னை வினைப்பயனாலும் தெய்வ சம்மதத்தாலும் காதலன் மனைவியாகின்றனர். ஒருவர்க்கொருவர் சொல்ல முடியாத ஒருவகை உழுவலன்பு தோன்றுகிறது. உயிரொன்று உடலிரண்டு என்னும் நிலையில் ஒருவர் கஷ்டம் மற்றவர்க்கு நேர்ந்ததாய் நைந்து, மற்றும் அவர்க்கு இன்பம் வந்துழி தனதேயாய் உவந்து இருவருமநுபவிப்பர். அப்படியே பரமாத்மாவினிடமிருந்து வந்த ஜீவாத்மாக்கள் முன்னை வினைப்பயனின் மேன்மையால் பரம்பொருளிடத்தே ஆர்வமிக்க அன்பு கொண்டு தன்னை மறந்து ஈசன் கருணையில் திளைக்கின்றன.

இத்தகைய் காரணங்களாலேயே தெய்வ வழிபாடு நூல்களில் அடியார்கள் கடவுளைத் தம் கணவனாய்க் கொண்டு மனைவியர் போல் அன்புடன் என்புருகப் பாடுகின்றனர். மாணிக்கம் போன்ற வாசகமுடைய திருவாதவூரர் தம் திருவாசகத்திலும் திருக்கோவையிலும் மற்றும் ஏனைய நூல்களிலும் இவ்விதமே பாடியுள்

ளார். வேதத்தைத் தமிழிற் பாடிய சமயகுரவர்களும் ஆழ்வார்களும்கூட தம்மைத் தலைவனிடத்தே தனிப்பட அளவிலா ஆர்வமிக்கப் பிரேமை கொண்ட காதலிகளே போல் உளம் கொண்டு உண்மையன்பால் பாடியுள்ளார். காளமேகப் புலவரும் கடவுளை வணங்கும் போது இத்தகைய கருத்தே தோன்றும்படி

எட்டொருமா எண்காணி
மீதே யிருந்தகலை
பட்டொருமா நான்மாவில் பாய்ந்ததே—
சிட்டர் தொழும்
தேவாதி தேவன் திருவொற்றி
யூருடையான்
மாவேறி வீதிவரக்கண்டு

என்றார். அதாவது கடவுளிடத்தே தான் கொண்ட அளவிலா பிரேமையின் காரணமாகத் தன்னிடையிலேயிருந்த கலை நழுவித் தன் பாதங்களில் வீழ்ந்த தென்றார். அன்புமிக்கும் போது தைந்து போவதும் கலைகளும் ஆபரணங்களும் சரிந்து வீழ்வதும் சகஜமன்றோ? கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பரும் ஸ்ரீராமன் எழில் கண்டானந்திக்கும் மங்கையர்கள் நிலையைக் கூற வந்த போது

விரிந்து வீழ்கூந்தல் பாரார்
மேகலையற்ற நோக்கார்
சரிந்த பூந்துகில் கண் தாங்கார்
இடை தடுமாறத்தாழார்

என்றும் குறிப்பிடுவதோடு அவர்கள் மனத்தில் தோன்றும் நிகழ்ச்சியைக் 'கண்ணிணுற் காதலென்னும் பொருளையே காண்கின்றோ' மென்றும் கூறுகின்றன வென்றும் விவரித்தார்.

நிஷ்காமியமான காதல் சாலச் சிறந்த தெனினும் பெரும்பாலும் எத்தகைய அன்பும் ஒரு சிறிது ஆசை காரணமாக நேர்வது. தெய்வ வழிபாடு உலக சுகத்தின் மேன்மைக்காகக் கொண்டாடப் பெறுமல் முக்தியடைவதற்குச்சாதகமாகக்கொள்வது தான் சிலாக்கியம். ஆனால் இம்மைச் சுகங்களுக்காக இறைவனருள் தேடத்தகாத தல்ல. துஞ்சும் போதழைத்தாலும் துயர் வந்துழி நினைத்தாலும் துயரில்லாத போது சொன்னாலும் ஈசன் அன்பு எப்போதும் நன்மையே பயப்பதாகும். குலமக்கட்குத் தன் கொழுநனே தெய்வமென்பது போல் உலக ஜீவராசிகளுக்கெல்லாம் ஈசனே பதி. அத்தகைய எண்ணம் கொண்டு வழிபடுவதே நேர்மை யென்பதனைக் குறிக்கும் இக்கூற்றுக்கள்.

அறிவு பக்குவமடையாமல் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் போது சிற்சில சமயங்களில் கடவுள் கருணையில்லை யென்றும் வஞ்சகம் தீர்க்கவே நேர்ந்துள தென்றும் கொள்ளக்கூடிய நிலையில் நிகழ்ச்சிகளிருக்கும். உண்மையில் அவை அவ்விதமிரா. என்றாலும் மனக் கசப்படையாது 'ஈசன் கோவிலிடிய' வென்று வெகுண்டுரையாது கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானையல்லால் அறியாக்குல மகள் போல் விண்தோய்மதில்புடை சூழ் வித்துவக் கோட்டு அம்மான் கொண்டாளாவிடினும் அவர் குறை கழலே கூறியிருத்தலே உண்மையன்பைக் காட்டும். பரிபக்குவமடைந்த மனத்தினருக்கன்றி மற்றவர்க்கு இந்நிலை வாராது. ஆனால் எங்கும் போய்க் கரை காணாது எரிகடல் வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்று மனத்திற்குத்

தூய்மையும் சாந்தியும் ஈசனிடமன்றி மற்றெங்கும் எவ்வளவு தூரம் திரிந்தலைந்தாலும் கடைசியில் அவனிடமே வர வேண்டுமென்பதும் தோன்றினால் விரக்தி வாயிலாக வேனும் உண்மையன்பு உண்டாகும். அதாவது அரிசினத்தாலீன்றதாய் அகற்றிடினும் மற்றவன் தன் அருள் நினைந்தே அழும் குழவி அதுவே போன்று ஜீவகோடிகள் ஈசன் மட்டு அன்பு கொண்டிருக்கும்.

கோபிகளோடு கிருஷ்ணன் செய்ததாகக் கூறும் லீலைகள் இக்கருத்துக்களையே விளக்க வந்தவையாகும். சாதாரணமாய்ப் பார்க்கும் போது கோபிகளாகிய ஸ்திரீகள் கிருஷ்ணனைத் தத்தமக்குரிய கணவன் என்னும் மன நிலை கொண்டு அவனோடு இணைத்து விளையாடுகின்றனர். அக்கோபியர் மனத்தே எப்போதுமுள்ளது கிருஷ்ணனிடம் கொண்ட அளவிலாப்பிரேமை. கிருஷ்ணன் சிற்சில சமயங்களில் அவர்களுக்கு இடுக்கணும் துக்கமும் தோன்றுமாறு போல் செய்திடினும் அவர்கள் வெண்ணெய் பால் தயிர் முதலியவற்றைச் சிதைத்து வருத்தினும் அவர்கள் உள்ள நிலை மாறுபடாமல் திரும்பத் திரும்பக் கிருஷ்ணனிடமே பாய்கின்றது. கிருஷ்ணனோடு இவர்கள் சேர்ந்து விளையாடும்போது 'ஆரமுந் துகிலுங் கலன்யாவையும் சோர இன்னுயிரும் சோர நிற்பர். அதன்றியும் சரிந்தபூவுள மழையோடு கலையுறத்தாழ்வ பரிந்தபூவுள பனிக்கடை முத்தினம் படைப்ப எரிந்த பூவுள இளநகில் இழையிடை நுழைய விரிந்த பூவுள இத்தன்மைத்தாய் அவர்கள் மெய்மறந்து அன்பு கொண்டுள்ள போது, அம்மாதரார் கண்களூடே வாவுமான் 'போன்றே செல்வன் யாதினு முயர்ந்தோன் யாவர்க்கும் முதல்வன். அவ்விதம் தோன்றுவதனாலேயே எல்லாரும் அவனைக் கண்ணனென்றே ஓதினர். அக்கோபியராகிய பெண்களும் தம் மின் தொடர்ந்து பேதுறுகின்றனர்.

இவ்வாறு தெய்வ வழிபாட்டின் உண்மையை விளக்க வந்த ஒரு லீலையை உட்பொதிந்துள்ள கருத்தைக் கொள்ளாது கடவுளுக்கு மனைவி யென்றும், மகனென்றும், உற்றாரென்றும் மற்றாரென்றும் இருப்பதாய்க் கொண்டு வகையறியாதின்னலுழல்வது பாமரமே யாகும்.

கடவுள், எல்லாப் பொருள்களையும் நல்லதாகவே படைக்கிறார். ஆனால் மனிதன், அவைகளில் தலையிட்டு, அவற்றைக் கெடுத்து விடுகிறான்.

—ரூஸோ

ஜப்பானுடைய வியாபாரப் போட்டி

—மா. ரெ.

சென்ற இருபது வருஷகாலமாக ஜப்பானுடைய வியாபார நிலைமையை நாம் ஆராய்ந்து பார்த்தால், உலக மார்க்கெட்டுகளில் அது அபரிமிதமான போட்டியைச் சமாளித்து வருகிறதுஎன்பதை நன்கு உணரலாம். உலகத்தின் எந்த மூலை முடுக்குக்குச் சென்று பார்த்தாலும், வியாபாரிகள் திகைத்துப் போகக்கூடிய மாதிரி ஜப்பான்சாமான்கள் மிகக்குறைவான விலைக்கு விற்கப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன?

ஜப்பானுடைய வியாபார அபிவிருத்தியை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால், கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் நமக்கு வழிகாட்டியாயிருக்கும்:—

ஜப்பானின் வியாபார அபிவிருத்தி

வருஷம்	ஜனத்தொகை	மொத்த வியாபாரம் யென்	ஒவ்வொருவருடைய சராசரி வியாபார யென்
1868	28,111,600	2[illegible],000,000	0.90
1870	32,000,000	47.000,000	1.50
1884	37,500,000	53,000,000	1.43
1894	41,000,000	230,000,000	5.60
1899	43,[illegible]00,000	433,000,000	10.00
1904	46,200,000	690,000,000	15.00
1912	52,750,000	1,145,000,000	22.00
1915	52,700,000	1,240,009,000	23.50
1918	54,500,000	1,580,000,000	[illegible]0.00
1923	58,000,000	3,0[illegible]0,000,000	52.60
1931	65,300,000	2 380,000,000	31.80
1933	67,200,000	3,932,000,000	58.50
1937	70,000,000	7,300,000,000	104.00

மேற் காட்டப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து, ஜப்பானுடைய அதிகமான வியாபார அபிவிருத்தி நன்கு புலனாகும். வியாபார அபிவிருத்தி விஷயத்தில் ஜப்பானியர்கள் காட்டும் ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் போட்டி போடும் விதத்தையும் கண்டு நாம் அவர்களைப் பாராட்ட வேண்டியது அவசியமே. ஆனால் இந்தப் போட்டியானது, வியாபார விஷயத்தில் இப்பொழுதுதான் தலை தூக்கப் பார்க்கும் தேசங்களுக்கு எவ்வளவு தீமையை உண்டுபண்ணி யிருக்கிறது? உதாரணமாக இப்பொழுதுதான், தன் கைத்தொழில்களை ஒருவித ஒழுங்குக்குக் கொண்டுவர விரும்பும் இந்தியாவை எடுத்துக் கொள்ளுங்கள். ஜப்பானுடைய போட்டி, இந்தியக் கைத்தொழில்களை எவ்வளவு பாதித்திருக்கிறது! ஜப்பான் சாமான்களுடைய குறைவான விலையை நாம் பார்க்கிறபோது, நாம் எவ்வளவு திறமையாக நமது கைத்தொழில்களை அமைத்துக் கொண்டாலும், ஜப்பானுடன் போட்டி போட முடியாதென்ற அவநம்பிக்கை நமக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் ஜப்பானுடைய போட்டி, நியாயமான போட்டி என்று சொல்ல முடியாது.

ஜப்பானுடைய ஏற்றுமதிப் பொருள்களை நாம் இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒன்று, ஜப்பானிலேயே ஏராளமாகக் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு செய்யப்படும் பொருள்கள். மற்றொன்று அந்நிய நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் மூலப்பொருள்களிலிருந்து தயார் செய்யப்படும் பொருள்கள்.

முதலாவது வகுப்பில், பட்டு, பட்டுத்துணிகள், மட்பாண்டங்கள், பீங்கான் சாமான்கள், கண்ணாடிகள், சிமெண்ட், மீன் எண்ணெய், செயற்கைப்பட்டு முதலியவற்றைச் சேர்க்கலாம்.

இரண்டாவது வகுப்பில் பருத்திச் சாமான்கள், கம்பளி நூலினால் தயாரிக்கப்பட்ட சாமான்கள், எஃகு, இரும்புச் சாமான்கள், பூமியிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்கள் முதலியன.

ஜப்பானிலேயே கிடைக்கிற மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிற சாமான்களை மலிவாக விற்கிற விஷயத்தில், ஜப்பான் சாதகமான நிலைமையிலிருக்கிறது. ஏனென்றால் ஜப்பானில் பொதுவாகவே, கூலி விகிதம் மிகக்குறைவு. தவிர, அங்குள்ள தொழிலாளர்கள் படிப்புள்ளவர்கள். திறமை சாலிகளுங்கூட. தவிர, ஜப்பானில் முக்கியமான அனுகூலம் என்னவென்றால், பொருள்களை மலிவாக உற்பத்தி செய்வதற்கும், அவற்றை விரைவில் விநியோகிப்பதற்கும் சௌகரியமாக, ஏராளமான போக்குவரத்து வசதிகள் இருக்கின்றன. மிகக் குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து விநியோகிக்கக் கூடிய சாதனங்கள் ஜப்பானில் இருக்கின்றன. உலகத்திலேயே இந்த மாதிரியான சாதனம் வேறெங்கும் இல்லை. இந்த மலிவான மின்சார வசதியினால், ஜப்பானில் குடிசைத் தொழில்கள் செழுமையான நிலைமையில் இருக்கின்றன.

மற்றும், இறக்குமதியாகிய வெளிநாட்டுப் பொருள்களின் மீது அதி

கமான வரி விதித்து விடுவதனால், உள் நாட்டில். உள் நாட்டுப் பொருள்களையே உபயோகிக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும், பொருள்களை விநியோகிக்கக் கூடிய சௌகரியங்களை ஏற்படுத்திக்கொடுக்க வியாபார நிபுணர்களைக் கொண்ட பல சங்கங்கள் இருக்கின்றன. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்கள் மலிவான விலைக்கு விற்கக் கூடியவாறு உள்நாட்டில் விற்கப்படும் பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கப் படுகிறது. ஜப்பானிலே விற்கப்படும் பொருள்கள் ஒரே ரகத்தைச் சேர்ந்தவைதான். இவை, அந்தந்தப் பொருள்களில் வியாபாரஞ் செய்யும் சங்கங்களினால் நிர்ணயிக்கப்படுகிற விலைக்கே விற்கப் படுகின்றன. எந்த நாட்டுப் பொருள்களும் வியாபாரம் செய்யப் படலாமென்ற நிலைமையுள்ள இந்தியா போன்ற நாடுகளில் பொருள்களில் பல ரகங்கள் வகுக்கப் பட்டு குறைந்த விலைக்கென்றும் அதிக விலைக்கென்றும் பல மாதிரியாக விற்கப்படுகின்றன. தவிர, தேவைக்கதிகமான பொருள்கள் இருக்கிறபோது, அவற்றை எந்த விலைக்காவது எப்படியாவது விற்று விட வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அந்நிய மார்க்கெட்டுகளில், ஜப்பானிய சாமான்கள் மலிவான விலைக்கு விற்கப் படுவதற்கு இஃதொரு முக்கிய காரணம். எந்த நாட்டில் இந்த ஜப்பான் சாமான் விற்கப்படுகிறதோ, அந்த நாட்டிலேயே அந்தச் சாமான் உற்பத்தி யாவதற்கு ஏற்படும் செலவை விடக் குறைவான விலைக்கு விற்கப்படுகிற தென்று சொன்னால் அஃது ஆச்சரியப் படத்தக்கது தானே.

ஜப்பான் சாமான்கள் மலிவான விலைக்கு விற்கப்படுவதன் முக்கிய காரணம் நாணயமாற்று விகிதத்திலே ஜப்பானுக்குள்ள சௌகரிந்தான். அதாவது ஜப்பானிய நாணயமாகிய யென் என்பதன் மதிப்பு மிகக் குறைந்து போனதுதான். இங்கிலாந்தில் தங்கநாணய மாற்று விகிதம் எடுபட்டுப் போனவுடனே, ஜப்பானின் ஏற்றுமதி வியாபாரத்திற்கு ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. சிறப்பாக 1931—32ம் வருஷங்களில் ஜப்பானிய வியாபாரம் மிகவும் பாதிக்கப் பட்டு விட்டது. மலிவான விலையில் சாமான்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடிந்ததே தவிர மலிவானவிலையில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியவில்லை. இதனால் ஜப்பான், தன்னுடைய நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டி இருந்தது. இதனை அது திறமையாகச்செய்து முடித்தது. ஐரோப்பிய யுத்தகாலத்தில், ஜப்பான் நாணயமாகிய யென்னினுடைய மதிப்பு, இரண்டு ஷில்லிங்கிலிருந்து இரண்டு ஷில்லிங் இரண்டுபென்ஸ் வரையில் இருந்தது. ஆனால் இதனை மெது மெதுவாக ஒரு ஷில்லிங் இரண்டு பென்ஸுக்குக் குறைத்துக் கொண்டு வந்து விட்டனர். இந்த விகிதமே சென்ற சில வருஷங்களாக இருந்து வருகிறது. சீனவில் யுத்தம் தொடுக்க ஆரம்பித்த பிறகு கூட, இந்த விகிதத்தை நிலைநிறுத்தி வந்திருக்கிறது ஜப்பானிய அரசாங்கம். 1938ம் வருஷத்திலிருந்து தங்க ஏற்றுமதியை நிறுத்தி யிருக்கிறது.

அரசாங்க உத்திரவின்றி நூறு யென்னுக்கு அதிகமாக வெளி நாடுகளுக்கு எடுத்துக் கொண்டு போகக் கூடாதென்றும் விதி ஏற்படுத்தியிருக்கிறது.

இதனுடைய பலாபலன்களை நாம் சிறிது கவனிப்போம். இங்கிலாந்தில் தங்க நாணயச் செலாவணி ரத்து செய்யப் படுவதற்கு முன்னர் அந்த நாட்டில் பத்து யென் மதிப்புள்ள ஒரு பொருள் ஒரு பவுனுக்கு விற்கப் பட்டது. தங்க நாணய மதிப்பு ரத்து செய்யப்பட்ட பிறகு, மேற்படி பத்து யென் மதிப்புள்ள சாமானை ஒரு பவுன் ஐந்து ஷில்லிங்காயிற்று. இதனால் இங்கிலாந்தில் ஜப்பானியச் சாமான்கள் விலையாவது குறைந்து போயிற்று. இனி, ஒரு யென்னின் மதிப்பு ஒரு ஷில்லிங் இரண்டு பென்ஸாகக் குறைக்கப் பட்டபிறகு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்பதைப் பார்ப்போம். முன்னர் பத்து யென் மதிப்புள்ள சாமான்—அதாவது ஒரு பவுன் ஐந்து ஷில்லிங்குக்கு விற்ற சாமான்—இப்பொழுது பதினொரு ஷில்லிங் எட்டுபென்ஸுக்கு விற்பனை செய்ய சௌகரியமாகிவிட்டது. ஆனால் ஜப்பானிய நாணயத்தில் விற்பனை விலை யென்னவோ அதேமாதிரியாகத்தான் இருந்தது. இதனால் இங்கிலீஷ் மார்க்கெட்டில், ஜப்பான சரக்குகள் அதிகமாக விலையாக ஏதுவுண்டாயிற்று.

இந்தியாவிலுள்ள நிலைமையைச் சிறிது ஆராய்வோம். 1917-18ம் வருஷத்தில், ஒரு யென்னின் மதிப்பு ரூ-1-10-0 ஆக இருந்தது. எனவே, ஜப்பானில் பத்து யென் மதிப்புள்ள சாமான், இந்தியாவில் ரூ-16-4-0 ஆக இருந்தது. இப்பொழுதோ, ஒரு யென்னின் மதிப்பு, ரூ-0-12-6 தான். எனவே, முன்னர் ரூ-16-4-0 கொடுத்து வாங்கின சாமானை இப்பொழுது ரூ. 7-13-0 க்கு வாங்கலாம். அதாவது பழைய விலைக்குப் பாதிவிலைதான். இந்தியாவில் செலாவணியிலிருக்கும் ரூபாய்க்குத் தனி மதிப்புக் கிடையாது. ஸ்டர்லிங் விகிதத்தோடு இணைக்கப் பட்டிருக்கிறது. இதனால் இந்தியாவில் வியாபாரம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக முன்னர் நான்கணாவுக்கு விற்ற ஒரு ஜப்பான் சோப்புக் கட்டி இப்பொழுது இரண்டணாவுக்கு விற்கப்படுகிறது. ஆனால் அதே குறைந்த விலைக்கு ஒரு இந்திய வியாபாரி விற்க முடிகிறதில்லை. இதனால் இந்திய வியாபாரி திகைத்துப் போய்விடுகிறான். வியாபாரப் போட்டியைச் சமாளிக்கக் கூடிய சக்தியும் வியாபாரத் திறமையும் தனக்கில்லையோ வென்று உணர ஆரம்பிக்கிறான். இந்தத் தன்னம்பிக்கையற்ற உணர்ச்சி அவனையும் அவனுடைய வியாபாரத்தையும் சீர்குலைத்து விடுகிறது.

ஜப்பான், வேறொரு விதமான வியாபார தந்திரத்தையும் கையாள்கிறது. பீங்கான் சாமான்களை எடுத்துக் கொள்வோம். ஜப்பானிலுள்ள க்யோடோ, நகோயா என்று இரண்டு பெரிய நகரங்களில், பீங்கான் சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இங்குத் தயாரிக்கப்படும் சாமான்களைப் பலவிதமாகப் பிரிக்கிறார்கள். உள்நாட்டு மார்க்கெட்டுகளென்றும்,

அமெரிக்க மார்க்கெட்டுக்கென்றும், இங்கிலீஷ் மார்க்கெட்டுக்கென்றும், இந்தியா மார்க்கெட்டுக்கென்றும், பலவிதமாகப் பிரிக்கிறார்கள். ஜப்பான் மார்க்கெட்டுக்கென்று தயாரிக்கிற சாமான்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதேயில்லை. அமெரிக்கா மார்க் கெட்டுக் கென்று தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிற சரக்குகள் அதிக விலையுள்ளவை. மத்திமதரமான விலையுள்ளவை, இங்கிலீஷ் மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகின்றன. கள்ளுபடியான சரக்குகளை குறைந்த விலைக்கு இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். கப்பல் கூலிக்குமேல் கொஞ்சம் லாபம் வைத்துக் கொண்டு சரக்குகளை விற்பனை செய்யக் கூடிய விதமாக இந்தியாவுக்கு அனுப்பி விடுகிறார்கள். இந்தியாவில் சரக்கு நயம் முக்கியமில்லையென்பதும், மலிவான விலை தான் முக்கியமானதென்பதும் ஜப்பானியர்களின் அபிப்பிராயம். அமெரிக்கா மார்க்கெட்டுக்கும் இங்கிலீஷ் மார்க்கெட்டுக்கும் அனுப்பப்படுகிற சரக்குகளில், அதிகமான லாபம் கிடைத்து விடுகிறபடியால், இந்தியா மார்க்கெட்டுக்கு அனுப்பப்படும் சரக்குகளில் குறைந்த லாபம் கிடைத்தாலும், அஃது ஈடுபடுத்திக் கொண்டு விடுகிறது. ஏனவே, ஜப்பானியர்களால் மட்டமான சரக்குகள்தான் தயாரிக்க முடியும் என்ற எண்ணம் இந்தியாவில் பரவியிருப்பது தவறாகும்.

இந்தியர்களுக்குக் கலையுணர்ச்சியே இல்லையென்றும், இதனால் அங்கு எந்தச் சாமானை ஏற்றுமதி செய்தாலும் பாதகமில்லையென்றும் ஜப்பானில் கருதப்படுகிறது. ஏற்கனவே உபயோகிக்கப்பட்டு இரண்டாந்தரமாகிவிட்ட சாமான்களையெல்லாம் வெளிநாடுகளிலிருந்து வரவழைத்து அவைகளைப் புதிதாகச் செய்து இந்தியா மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகிறது.

இன்னும் சில சாமான்கள், தேவைக் கதிகமாகத் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக சிமெண்ட், பட்டு, கண்ணாடி, மீன் எண்ணெய், மின்சார பல்ப் முதலியன. இந்தச் சாமான்கள் வெளிநாடுகளிலிருந்து ஜப்பானுக்குள் இறக்குமதியாகக் கூடாதென்று தடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, தயாரிக்கப்படுகிற சாமான்கள் யாவும் உள்நாட்டிலேயே செலவழிய வேண்டும். செலவழிந்தது போக, மிகுதியுள்ள சொற்பத்தையே இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். 1933ம் வருஷத்தில் மொத்தம் 4,800,000 டன் சிமெண்ட் தயாரிக்கப்பட்டது. இதில் 4,500,000 டன், ஜப்பானிலும், அதன் குடியேற்ற நாடுகளிலும் செலவழிந்தது. மிகுதியுள்ள 300,000 டன் தான், சீனா, ஹாங்காங், இந்தியா, பிலிப்பைன் தீவு முதலிய பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது, 1933ம் வருஷத்தில் இந்தியாவில மொத்தம் இறக்குமதியான ஜப்பான் சிமெண்ட் 39,000 டன். எனவே, ஜப்பானில் உற்பத்தியான மொத்த சிமெண்டில் நூற்றுக்கு ஒரு சத விகிதந்தான் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. 1936—37ம் வருஷத்தில் 8000 டன் தான் ஜப்பானிலிருந்து இறக்குமதியாயிருக்கிறது. அதாவது ஜப்பானின்

மொத்த உற்பத்தியில் கால் சத விகிதமே இந்தியா இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது. [இனி, ஜப்பானிலும் இந்தியாவிலும் இந்த சிமெண்டின் விலை விகிதத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம். சென்ற சில வருஷங்களாகவே ஜப்பானில் சிமெண்டானது ஒரு டன் இருபது யென்னிலிருந்து இருபத்தோரு யென் வரையில் விற்கப்பட்டு வந்திருக்கிறது. அதாவது ஒரு டன் 16 ரூபாய் விலை. ஆனால் இதே சிமெண்ட், இந்தியாவில் வந்து விற்கப்படுகிறபோது 33 ரூபாயாக ஆகிறது. இதில் இந்தியா அரசாங்கத்திற்குச் சுங்க வரியாக ரூபா 18—4—0 சென்று விடுகிறது. அதாவது ஒரு டன்னுக்கு விலையாகக் கிடைக்கிற ரூபா 34ல் ரூபா 19 சுங்க வரியாகவும் இறக்குமதி செய்கிற செலவாகவும் போய் விடுகிறது. கப்பல் கேழ்வை ஒரு டன்னுக்கு ரூபா 6—6—0 ஆகிறது. இது தவிர, தரகர்கள், வியாபாரிகள் முதலியோருடைய லாபம் இருக்கிறது. எனவே, ஒரு டன்னுக்கு ரூபா 6 வீதமே கிடைக்கும். அதாவது ஜப்பானில் ஒரு டன் சிமெண்ட் ரூபா 16 ஆக இருந்தால், அதே ஒரு டன் சிமெண்ட் இந்தியாவில் ரூபா 6 தான் ஆகிறது. இப்படியே தான் மற்றெல்லாச் சாமான்களும்.

ஜப்பானிலுள்ள பஞ்சு மில்கள் மூலதனம் அதிகமாக வுடையவை. பஞ்சின் விலை ஏறு முகத்திலிருந்தாலும் இறக்கு முகத்திலிருந்தாலும், இவை முன் கூட்டியே அதிகமான பஞ்சைவாங்கி ஸ்டாக் செய்து கொள்கின்றன. இதனால் சராசரி விலையைப் பார்க்கிற போது, மில்களுக்குச் சாதகமே ஏற்படுகிறது. இப்படியே தான், இந்த மில்களில் தயாரிக்கப்படுகிற நூலும் மார்க்கெட்டின் விலை விகிதத்திற்குத் தகுந்த படியும், ஆனால் இவைகளுக்கு நஷ்டமுண்டாகாத படியும் விற்கப்படுகின்றன.

ஜப்பானியச் சரக்குகள் வெளிநாடுகளில் மிகமலிவான விலையில் விற்கப்படுவதற்குக் காரணம், அரசாங்கம், பல கைத்தொழில் ஸ்தாபனங்களுக்குப் பணஉதவி யளித்து வருகிறதெனச் சொல்லப் படுகிறது. சில தொழில்களுக்கு அரசாங்கம் உதவி செய்து வருவது உண்மையேயெனினும், மேலே கூறப்பட்ட புள்ளி விவரங்களைக் கொண்டு எல்லாத் தொழில்களுக்கும் உதவி யளிப்பதில்லையென்று நன்கு சொல்லலாம். மோட்டார் வண்டி உற்பத்தித் தொழில், புகைப்படத்தொழில், கப்பல்கட்டுந் தொழில், நிலக்கரியிலிருந்து பெட்ரோல் உற்பத்தி செய்வது முதலிய தொழில்களுக்கு அரசாங்கத்தார் உதவி செய்கின்றனர்.

கப்பல் வியாபாரத்திற்கு அரசாங்கத்தின் உதவி அதிகமாக இருப்பதால் வெளிநாடுகளுக்கு ஜப்பானியச் சரக்குகளை ஏற்றிச்செல்கிற போதும், வெளி நாடுகளிலிருந்து சரக்குகளை இறக்குமதி செய்கிற போதும், கப்பல் கம்பெனிகள் குறைந்த கட்டணத்தை வாங்கிக் கொள்கின்றனர். அதாவது இந்தியாவில் ரெயில் மூலமாக ஒரு சாமானை 300 மையில் தொலைவுள்ள ஓரிடத்திற்கு அனுப்ப என்ன கட்டணம் ஆகுமோ அந்தக் கட்டணத்தையே, ஜப்பானியக் கப்பல்கள் ஐயாயிரம் மைல் பிரயாணத்திற்கு வாங்கிக் கொள்கின்றன. தவிர ஜப்

பானில் உள்நாட்டுப் போக்கு வரத்தி லும், சாமான்களை மிகக் குறைவான கட்டணத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பச்சௌகரியம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஜப்பான் சாமான்கள் மலிவாகக் கிடைப்பதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், ஒருவன் ஒரு பொருளையே உற்பத்தி செய்வதில்லை. உதாரணமாக ஒரு சைக்கிள் வண்டியை எடுத்துக் கொள்வோம். ஆங்காங்குக் கிராமங்களிலுள்ளவர்கள், ஐந்துபேர் பத்துபேராகச் சேர்ந்து கொண்டு, மேற்படி சைக்கிளின் ஒவ்வொரு பாகத்தையும் தயார் செய்கின்றனர். இவர்களுக்கு இந்த ஒரு பாகத்தைத்தான் தயார் செய்யத் தெரியும். இவர்களால் தயாரிக்கப் படும் இந்தப் பொருள்களை ஒரு மொத்த வியாபாரி வாங்கிக்கொண்டு, அவற்றை ஒரு சைக்கிள் வண்டியாகச் சேர்த்து விற்பனைக்காக வியாபாரிகளுக்கு அனுப்பி விடுகிறான். இப்படியாக, ஒவ்வொரு பிரிவினரும் குறிப்பிட்ட ஒரு தொழிலையே செய்கின்றனராதலினாலேயே, தொழிலில் திறமையும், பொருளில் மலிவும் ஏற்படுகின்றன. இதே மாதிரிதான் எல்லாத் தொழில்களும் செய்யப் படுகின்றன.

பொதுவாகவே ஜப்பானியர்கள் தொழில் திறமை நிரம்ப உடையவர்கள். அந்நிய நாட்டு மார்க்கெட்டுகளை எப்படிக் கைப்பற்றுவதென்பதை இவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்நிய நாடுகளிலிருந்து சில இயந்திர வகைகளை வரவழைத்துக் கொண்டு அதேமாதிரி தாங்களும் செய்து கொண்டு உபயோகிக்கிறார்கள். சிறந்த ஆகாய விமானங்களைக் கட்டுவதில் கூட இவர்கள் இப்பொழுது நிபுணர்களாகி விட்டார்கள்.

ஜப்பானின் ஜனத்தொகை பிரதி வருஷமும் பத்து லட்சத்திற்கு அதிகமாக அபிவிருத்தியடைந்து கொண்டு வருகிறது. இதனைச் சமாளிக்கும் பொருட்டு, ஜனங்களின் உற்பத்தி சக்தியை அதிகப் படுத்த வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம். வேலையில்லாதவர்களுக்கு அரசாங்க பொக்கிஷத்திலிருந்து உதவியளிப்பதென்பதில் அரசாங்கத்திற்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. இதனாலேயே, தொழில்களைத் திறமையாக நடத்த வேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள். இந்தத்திறமையும், இவர்கள் அனுஷ்டிக்கும் வியாபார தந்திரங்களும், இவர்களுக்கு உலக மார்க்கெட்டுகளில் ஓர் ஆதிக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

முதல் தர்த்து மனிதர்கள், இரண்டாந் தரத்து வேற்றுமைகளைச் சமரஸப்படுத்திக் கொண்டு செல்கிற விஷயத்தில் காலத்தை வீணுக்கக் கூடாது.

—ஹாப்பார்ட்

பூமி அசைவதேன்?

—"விஞ்ஞான போதகர்"

சூரியன் ஓர் பிரமாண்டமான நட்சத்திரமாக விருந்த போது அதினின்று பூலோகம் பிறந்ததென அறியக்கிடக்கிறது. ஓர் சமயம் சூரியனைவிட மிகப் பெரியதாயிருந்த மற்றொரு உருவம் சூரியனை யடுத்துப் போய்க் கொண்டிருந்த பொழுது, ஒன்றுக்கொன்று இழுக்குஞ் சக்தியினால் உருவத்திற் கொஞ்சம் சிறிதாயிருந்த சூரியன் ஜ்வாலையுடன் விளங்கும் அதன் உருவம் அகன்று கொடுக்க ஏற்பட்டு, அப்பெரும் நட்சத்திரம் கடந்து சென்றபின் சூரியன் முன்போலத் தனது உருவத்தை யடைந்ததால், அதினின்றுஞ் சிறிய பாகங்கள் பிரிந்து அந்தரத்திலேயே சுழன்று கொண்டு தனியாகத் தங்கிவிட ஏற்பட்டதாக ஊகிக்கப்படுகிறது. அவ்விதம் புதிதாக ஏற்பட்ட பாகங்களில் ஒன்று பூலோகமெனக் கருதப்படுகிறது. இப் பூலோகம் முதன்மையில் தகிக்கக் கூடிய வாயு பதார்த்தமாயிருந்து அதின் உஷ்ணம் பல பக்கங்களிலும் பறந்து செல்லச் செல்ல உஷ்ணமான ஜல பதார்த்தமாக மேற்பாகம் மாறிக் கடைசியில் அதிகம் குளிர்ந்து திடபதார்த்தமாக மாறியதெனக் கூறப்படுகிறது. ஆகவே பூமியின் உட்பாகம் இன்றும், பெரும் உஷ்ணம் பொருந்தியதாகவே காணப்படுகிறது. பூமியின் குளிர்ந்த திடபதார்த்தம் மேல் பரப்பிலிருந்து சுமார் 40 மைல் ஆழம் வரையிருக்கும். அதற்கப்பால் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டே போய் மத்தியில் ஜ்வாலை கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கிறதென அறியக் கிடக்கிறது.

பூமியின் வயது *

ஆறுகள் வருடா வருடம் உப்புகளைச் சமுத்திரத்தில் கொண்டு சேர்க்கும் அளவையும், சமுத்திரங்களிலிருக்கும் மொத்த உப்பின் அளவையுங் கொண்டு சமுத்திரங்கள் உண்டான காலம் அதாவது பூமியின் மேற் பாகம் குளிர்ந்து சென்ற காலம் சுமார் 1,800,000,000 வருஷங்களெனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலேயே இது வரையறிந்துள்ள அமெரிக்கா ஏல் சர்வ கலாசாலையிலுள்ள 'யுரேனிய'ப் பாறையின் நவீன சாஸ்திர ஆராய்ச்சிப்படி கணக்கெடுத்ததில் 1,852,000,000 வருஷங்களென 1930 வருடம் ஆகஸ்ட் மாதம் சாஸ்திர நிபுணர் ஏ. எப். கோவரிக் தெரிவிக்கிறதால் அதனையே பூமி

*ஜோதி சுடர் 2, கதிர் 3 (மார்ச் 1938) பக்கம் 77-ல் பார்க்க.

உண்டாகி முடிந்த காலமெனக் கொள்ளலாம். ஹிந்து வேத நூற்படி 28வது கலியுகங்கள் நடந்து இது வரை உலகந்தோன்றி முடிந்த மொத்த வருடங்கள் 1,960,853,036 எனக் கூறப்படுகிறது. ஆகவே மேற் கூறிய மூவகை ஆராய்ச்சிகள் ஏறக் குறைய ஒத்திருப்பதால் பூமியின் வயதின் அளவைத் தெரிந்துகொள்ள ஏதுவாயிருக்கிறது.

பூமி தன்னைத்தானே சுற்றுவதோடு சூரியனையும் சுற்றி வருகிறது. அது தன்னைத்தானே சுற்றும் போது விநாடிக்கு 18½ மைல் வீதம் சுற்று கிறது. சூரியனைச் சுற்றும் போது மணிக்கு 66,000 மைல் வீதம் சுற்றிச் செல்லுகின்றது. பூமி 6,590,000,000,000,000,000,000டன் கனமான தென்று நவீன சாஸ்திர ஆராய்ச்சி களின் மூலம் கணக்கிடப்பட்டிருக் கிறது.

பூமியின் உட்பாக உஷ்ணம்

பூமியானது பெரும்பாகம் தண்ணீ ராலும் பனிக்கட்டியாலும் மூடப் பட்டுக் கண்ணுக்குத் தோன்றுமலி ருக்கிறது. ஆகவே பூமியின் மேற் பாகத்தில் அமைந்துள்ள மண், பாறை முதலிய வஸ்துகளைப்பற்றி அவ்வளவு அதிகமாய்த் தெரியாமலிருக்கும் போது பூமியின் உட்பாகத்தின் உண்மை நிலைமையை நாம் எவ்வளவு தூரம் தெரிந்திருக்கக் கூடும் என்ப தைக் கூறுவானேன்? பூமியின் உட்பாகத்தை நேரே பார்த்து அறிய வேண்டுமானால் கிணறுகள், சுரங் கங்கள் முதலியவை தோண்ட வேண்டும். பூமியைச் சுமார் ஒரு மைல் தூரத்திற்கு மேல் துளைப்பது கூடாமையால் பூமியின் உட்பாகத்தை நேரில் அறிவது அசாத்தியமாயிருக் கிறது. பூமியின் ஒரு புறத்திலிருந்து நேராக மறுபுறம் வரையிலுள்ள தூரம் சுமார் 8000 மைல். ஆகவே பூமியின் மத்திமம் சுமார் 4000 மைல் தூரத்திலிருக்கிறது. இதனால் பூமியின் சுற்றளவு சுமார் 25,000 மைலாகிறது. ஆழமான சமுத்திரத்திலிருந்து வெகு உன்னதமான மலை உச்சிவரை தூரம் சுமார் 12 மைல். இத்தூரம் பூமியின் மத்திய தூரத்திற்கு மிக மிக அற்ப



பூமியின் சதுர அளவையும் சமுத்திரப் பரப்பையும் குறிக்கிறது இந்தப் படம்

மானதாகையால் இத் தூரத்தின் அமைப்பைக் கொண்டு பூமியின் உட்பாகத்தை ஊகிப்பது முடியா தல்லவா?

நாம் பூமியைத் துளைத்துக் கொண்டே சென்றால் சுமார் 60 அடிக்கு, ஒரு டிகிரி வீதம் உஷ்ணம் அதிகரித்துக்கொண்டே போகிற தாம். அவ்வாறுனல் சில மைல் தூரத்திற்கெல்லாம் பூமியின் உஷ்ணம் கடினமான பாறைகளையும் உருக்கக் கூடிய தன்மை பொருந்தியதாயிருக்க வேண்டுமல்லவா? இவ்வாறு அதிக உஷ்ணமிருப்பினும் நாம் எதிர் பார்ப்பதுபோல் அவ்வளவு இலகுவில் பாறைகள் உருகிவிடாது. ஏனெனில், பூமியின் மேலுள்ள பாறை முதலியவைகள் அமிழ்த்திக் கொண்டிருப்பதால் பாறைகள் உருகுஞ் செயலற்று விடுகின்றன. நாம் ஓர் மலை உச்சியில் தண்ணீர் காய்ச்சினுல் தகிக்கும் உஷ்ணம் அதிகமில்லாமலே வெகு சீக்கிரத்தில் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கிறது. ஆனுல் ஒரு சுரங்கத்தில் காய்ச்சினுல் உஷ்ணம் அதிகம் வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் வாயு மண்டலம் பூமியின் மீது தாக்கி அமிழ்த்திக் கொண்டேயிருக்கிறது. இவ்வாறு அமிழ்த்தும் சக்தி பூமியிலிருந்து மேலே செல்லச் செல்ல குறைந்து விடுகிறது. ஆகவே பூமியின் மீது சுமார் 212 டிகிரி உஷ்ணத்தால் தண்ணீர் கொதிக்கிறது. மலை உச்சிகளில் இதற்குக் குறைந்த உஷ்ணத்தாலேயே கொதிக்கிறது. இவ்விதமாகவே பூமியின் கீழ் உஷ்ணம் அதிகமாயிருப்பினும் மேலே ஏற்பட்ட கனத்தால் பாறைகள் உருக முடியாமலிருக்கின்றன. ஆனுல் மேற்பாகத்தின் கனங்குறைந்தோ அன்று பூமியில் பிளவோ ஏற்பட்டால் கீழ் பாகத்திலுள்ள பாறைகள் திடீரென்று உருகத் தொடங்கிப் பெரும் பிளவுண்டாக்கி அதன்வழியாக மிகுந்த உஷ்ணம் பொருந்திய திராவகமாகவெளிக் கிளம்புகிறது.

எரிமலை

இதற்கு எரிமலை எனப் பெயர். எரிமலைகள் எவ்விடத்தில் உற்பத்தியாகின்றனவோ அவ்விடத்திலேயே விட்டு விட்டு உண்டாகின்றன. அநேகமாய் புதிதாக ஏற்படுவது அபூர்வம். பூமியின் கீழ் உஷ்ணத்தால் உருக்கப்படும் பாறை முதலியவைகள் வெளிக் கிளம்ப ஓர் மார்க்கம் ஏற்பட்டுவிட்டால் அம்மார்க்கத்துக்கே பூமியின் பலபாகங்களிலிருந்து உஷ்ணச்சுவாலையும் தகித்த பாறைக்கற்களும் வெகு வேகமாய் வெளிப்போந்து வழிந்தோடுகின்றன. உஷ்ணத்தாலுருகிய வஸ்துக்கள் யாவும் வெளியேறிவிட்டால் எரிமலை அடங்கிவிடுகிறது. உருகிய பாறைகளும் முதலாவது வெகு வேகமாய் பெரும் சப்தத்துடன் வெளியேற முயல்வதால் துவக்கத்தில் அதனருகிலுள்ள பாகங்கள் சிறிது அசைய ஏற்படும். இது பூகம்பம் ஆகாது.

நீர் எழுச்சி

பூமியின் கீழ் ஏற்பட்டிருக்கும் உஷ்ணத்தாலேயே நீர் எழுச்சிகள் ஆங்காங்கு எரிமலைகள் போல உயர வெகு வேகமாய் எழும்புகின்றன. மழைத் தண்ணீர் முதலியவை சிறிது சிறிதாக பூமியில் சுரந்து கீழிறங்கிக் கொண்டேயிருக்கிறது. அத்தண்ணீர் வெகுதூரம், சில சுலபமான வழிகள்

மூலம் சென்றுவிட்டால் பூமியின் உஷ்ணத்தால் தகிக்கப்பட்டு உஷ்ணம் பொருந்திய நீராவி யாக மாறி அதிகரித்ததும் அதற்கு முன்னிருந்த இடத்தைவிட அதிக விசாலமான இடம் வேண்டியதால் பூமியின்கீழ் அங்கு மிங்கும் ஓட முயன்று கடைசியாக பூமியில் மிகவும் இலேசான பாகத்தைப் பிளந்து அல்லது முன்னதாகவே சிறிய பிளவுபட்ட வழிகள் மூலம் நீராவியுந் தண்ணீருமாய் வெகு தூரம் எழும்புகிறது. இவைகள் முக்கியமாய் அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலும் நியூஜீலந்திலும் ஏற்படுகின்றன.

பூகம்பம் ஏற்படுவதற்கு எரிமலைகள் தான் காரணம் என்று கற்றோரும் நம்புவது சகஜம். இது முற்றிலும் தவறாகும். எரிமலை திடீரென்று உண்டாகும் சமயத்தில் மாத்திரம் சிறிது அசைவு ஏற்படுவதுண்டு. ஆனால் அவ்வசைவு சுமார் 200 சதுர மைல்களுக்கப்பால் செல்லுவதே யில்லை. மேலும் எரிமலை உண்டாகும் போது அதனாலேற்படும் ஆட்டம் பெரும்பாலும் பூமியின் மேற்பாகத்திலேயே எரிமலை கிளம்பும் நேர் பாதையில் மாத்திரம் உண்டாகிறது. ஆனால் பூகம்பம் ஏற்படுவதற்கு பூமி உண்டாகிக் குளிர்ந்த போது இடையில் அங்குமிங்கும் மேடும் பள்ளமும், வளைவும், மடுவும் ஏற்பட நேர்ந்து மூடப்பட்டுப் போனதே காரணம்.

பூமி சூரியனின்று பிரிந்து கொஞ்சங் கொஞ்சமாகக் குளிர்ந்து, ஓர் ஆப்பிள் பழம் வாடி வதங்கினால் எவ்வாறு சுருங்கல் ஏற்படுமோ அவ்வாறே பூமியின் மேற்பாகத்தில் மேடும், பள்ளமும் உண்டாகி முறையே மலையும், சமுத்திரமும் ஏற்பட்டன. இவ்வாறே பூமியின் உட்பாகம் படிப்படியாகக் குளிர்ந்து கெட்டியாகிக் கொண்டே போகும் போது உட்பாகங்களிலும் சுருங்கல், மேடு, பள்ளம், மடுவு முதலிய தாரதம்மியங்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமல்லவா! இவ்வாறு ஏற்பட்டிருக்கும் பள்ளம், மடுவு முதலியவைகளின் மேற்பாகங்கள் கனமுள்ள பாறை, மண் இவைகளால் மூடப்பட்டிருப்பதால் இக் கனம் பொருந்திய பாறைகள் அவைகளுக்குக்கீழ் ஏற்பட்டுள்ள சுருங்கல்கள், மடுவுகள், பிளவுகள் இவைகளில் சில சமயம் மெதுவாகவும், சில சமயம் திடீரென்றும் இறங்கி விடுவதை எதிர்பார்க்கலாமல்லவா? அவ்வாறு ஒரு பக்கம் இறங்கும்போது மற்றொரு பக்கம் திடீரென்று ஏறி விடுவதும் இயல்பு. பூமியின் உட்பாகம் முழுவதும் இவ்வித காரணங்களால் ஆங்காங்கு சமயா சமயங்களில் திடீரென்றோ அல்லது மெதுவாகவோ இறுகிய பாறை மண்கள் ஏறவும் இறங்கவும் அல்லது பூமியின்கீழ் ஏற்பட்டிருக்கும் வெகு மிருதுவான மண் மேற் கனத்தால் திடீரென்று இறுகி இறங்கி விடுவதாலும் ஏற்படும் அசைவானது தண்ணீரின் அலைகள் போல நாலா பக்கங்களிலும்ஓடி உணர்த்துகின்றன.

பூகம்பப் பாகங்கள்

உலகம் குளிர்ந்த நாள் தொட்டு காற்றாலும், மழையாலும், பெரிய பிரவாகங்களினாலும், பூபாகம், ஜல பாகமாகவும், ஜல பாகம், பூபாக மாகவும், மேடு சமதளமாகவும், சமதளம் மேடாகவும் ஆக்கப்பட்டு வந்

திருக்கின்றன. பூமியில்மிகவும் பாரமான பாகம் முக்கியமாக மலைப் பிரதேசங்களாயிருப்பதால் அலைகளின் கீழோரங்களி லேற்பட்டு மறைந்து நிற்கும் பிளவு, மடுவு, மிருதுவான மண் முதலிய பாகங்கள் திடீரென்று இறங்க ஏதுவுண்டு. முற்காலத்து மலைகள் இவ்விதமாக ஏறி இறங்கி பூகம்பங்களையுண்டாக்கி மடுவுபள்ளங்கள் நிறைவுற்று சமதளத்திற்கு வந்து இப்பொழுது பேசாது அடங்கி விட்டன. இவைகளுக்கு இந்தியாவில் விந்திய மலை, அரவல்லி மலை, தென்னிந்திய மலைத் தொடர்கள் திருஷ்டாந்தமாகும். ஆகவே அதிகமான பூகம்பங்கள் புதிதாக ஏற்பட்டிருக்கும் மலைப்பிர தேசங்களில் ஏற்படுவதை எதிர்பார்க்க வேண்டு மல்லவா? புதிதாக ஏற்பட்டிருக்கும் மலைப்பாகங்கள் வட தென்னமெரிக்கா தேசங்களின் மேலோரமாக "ஆண்டிஸ்—ராக்கி" மலைத் தொடராக ஆசியாக் கண்டத்தில் ஜப்பான் தேசத்து வழியாக சைனு, மலேயா தேசங்கள் வரை வந்தடைகிறது. இதனைத் தொடர்ந்தாற்போல் மற்றொரு வட இந்தியா, ஆப்கன், பெலுசிஸ்தானம் இவைகளில் ஹிமாலயம் என்ற நாமத்துடனும், பெர்ஸியா, அரேபியா தேசங்களில் 'காக்கேஸியா' எனப் பெயருடனும், இத்தாலி, ஸ்பெயின் தேசங்களில் "ஆல்ப்ஸ்" மலைத் தொடராக வந்தும் முடிவடைகிறது. பெரும்பாலும் இப்பாகங்களிலேதான் அடிக்கடி பெரும் பூகம்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பழம் பெரிய பூகம்பங்கள்

உலகத்திலேயே பெருஞ் சேதங்களை விளைவித்து பூகம்பங்கள் ஏற்பட்ட இடங்களைச் சுருக்கமாகப் பார்ப்போம். 1703-ம் ஆண்டில் ஜப்பான் தேசத்தில் பெரிய பூகம்பம் ஏற்பட்டு சுமார் 200,000 ஜனங்கள் சேதமடைந்தனர். 1737-ல் இந்தியாவில் டில்லிக்கருகில் ஏற்பட்டு டில்லி நகரில் அதிக சேதம் உண்டாயிற்று. 1755-ல் போர்த்துக்கல் தேசத்தில் இரண்டு நிமிஷம் ஆடி லிஸ்பன் நகரும் 50,000 ஜனங்களும் முத்திரத்தில் விழ்த்தப் பட்டனர். 1783-ல் கலேபிரியா பூகம்பங்கள் ஒன்றரை மாதத்தில் ஆறு தடவை பலமாக ஆடியிருக்கின்றன. 1830, 1847 இவ் வருடங்களில் ஜப்பான் தேசத்திலேயே மறுபடியும் ஏற்பட்டிருக்கிறது. 1857-ல் இத்தலி தேசத்து நேப்பில்ஸ் நகரத்தை யடுத்துண்டாகி இத்தாலி தேசத்தையே ஆட்டி சுமார் 12,000 ஜனங்களுக்குமேல் மாண்டனர். 1880-ல் ஜப்பான் தேசத்தில் உண்டாகி யோக்கோகாமாநகரை பாழ் படுத்தி விட்டது. 1891-ல் திரும்பவும் ஜப்பானில் மினோஓவாரியில் ஏற்பட்டு சுமார் 10,000 பேர் மாண்டனர். 1896-லும் ஜப்பானிலேயே ஏற்பட்டிருக்கிறது. 1897-ல் இந்தியாவில் அஸ்ஸாம் மாகாணத்தில் பூகம்பம் உண்டாகி சுமார் 12 மைல் தூரம் பூமியில் அகன்ற பிளவு ஏற்பட்டது. 1905-ல் இந்தியாவில் மறுபடியும் சிம்லாவுக்கருகில் காங்காரா கணவாயில் ஏற்பட்டு சுமார் 20,000 பேருக்கு மேல் சேதம். 1906-ல் அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் உண்டாகி அந்நகரையே அழித்து சுமார் 200 மைல் தூரத்திற்குப் பிளவுகள் ஏற்பட்டன. 1908-ல் இத்தலி தேசத்து மெஸ்ஸீனு நகரில் இரண்டு நிமிஷத்தில் சுமார் 100,000 ஜனங்கள்

சேதமடைந்தனர். 1920 டிசம்பர் 16உ சீன தேசத்தில் பூகம்பம் ஏற்பட்டு சுமார் 100,000 உயிர்ச்சேதம். 1930 மேமீ 5உ பர்மாவில் பூகம்பம் ஏற்பட்டு இரங்கூனிலிருந்து மாந்தலேவரை அசைவு ஏற்பட்டது. பீகு என்ற ஊர் அதிக நஷ்டமடைந்தது. 1933—ல்மறுபடியும் ஜப்பானைச்சுற்றி பூகம்பத்தால் சமுத்திரக்கொந்தளிப் பேற்பட்டு பெருத்த சேதங்கள் உண்டாயின. 1934 ஜனவரிமீ 15உ பகல் இரண்டு மணிக்கு வடஇந்திய பீகார் மாகாணத்தில் என்றுமில்லா ஆட்டம் ஏற்பட்டு கண்ணுக்குத் தென்பட்டவரை சுமார் 15,000 பேர் மறைந்தனர். 1934 டிசம்பர்மீ 15உ இமய மலைச்சாரலிலும், 17உ துருக்கிதேசத்தில் அனடோலியா பிரதேசத்திலும் ஏற்பட்டு இவண் 25 கிராமங்கள் நாசமாயின. 1936 இந்தியாவில் குவெட்டாவில் பெருத்த பூகம்பம் வெகுநேரம் வரை ஏற்பட்டு அளவற்ற சேதம் உண்டாயிற்று. 1939ல் தென் அமெரிக்காவில் சில்லி என்ற தேசத்தில் பூமிஆடி லட்சக்கணக்கில் உயிர்ச் சேதமடைந்தன. ஆகவே மேற்குறிப்பிட்டபடி பலமான பூகம்பங்கள்மலைப்பிரதேசங்களிலேயே ஏற்பட்டிருப்பது நாம் முன் கூறிய வற்றிற்குப் போதிய சான்றாகும்.

பூகம்ப அதிர்ச்சி

எவ்விடத்திலாவது பூகம்பம் ஏற்பட்டால் அவ்விடத்திலிருந்து அதிர்ச்சி பல பாகங்களில் அலைகள் போலப் பறந்தோடுகின்றன. சில பூமியை ஊடுருவியும், சில பூமியின் மேற்பாகமாகவும் அசைந்தோடுகின்றன.



பூகம்பம் உண்டான A இடத்திலிருந்து அதிர்ச்சியின் அலைகள் பூமியை ஊடுருவி ஓடும் பலவேறு விதங்கள்.

பூமியின் மத்தியிலிருந்து சுமார் 2000 மைல்வரை நாலா பக்கமும் ஜ்வாலையுடன் பொருந்திய இரும்புப் பாறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. படத்தில் DE அதனைக் குறிக்கிறது. பூகம்பம் பூமியில் A என்ற ஓர் பாகத்தில் ஏற்படுவதாக இருந்தால் படத்தில் காட்டிய வண்ணம் அதிர்ச்சியின் அலைகள் பூமியை ஊடுருவி ஓடுகின்றன. பூமியின் மத்தியில் செல்லும்போது அவ்வலைகள் நேர்முகமாகச்செல்லாது வந்த வழி மாறியாவது அல்லது வந்த வழியே திரும்பியும் வர ஏற்படுகின்றன. B குறிக்கும் அலை அதற்கு மேலேயுள்ள அலையைப்போல அதிக அதிர்ச்சியை உணர்த்தாது. C குறிக்கும் அலை பூமியின் மத்தியிலுள்ள சுவாலை பொருந்திய திராவக மயத்தை ஊடுருவிச் செல்லும் அலை

களிலொன்றுகும். பூகம்பம் ஏற்பட்ட A இடத்திற்கு அருகிலுள்ள இடங்களுக்கு அலைகள் வெகு பலமாகப் போய்ச் சேர்வதால் அவ்விடங்களில் அதிர்ச்சி பலமாகவும், தூரமான இடங்களுக்கு அலைகள் சேருமுன் பலம் குறைந்து அதிர்ச்சியை அதிகம் உணர்த்த முடியாமலும் போய் விடுகிறது. பூகம்ப அதிர்ச்சியின் அலைகள் படத்திலே நேராகக் காட்டாமல் சிறிது வளைவாகவே காட்டியிருப்பதானது பூமியில் ஒரேவிதமான வஸ்துக்களின் சேர்க்கையில்லாமல் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லச் செல்ல பூமியின் பாகங்கள் கனத்திலும் குணத்திலும் வேறுபடுவதால் பறந்தோடும் அலைகள் ஒவ்வொரு பாகத்தையுங் கடந்து செல்லும் போது சிறிது சிறிதாக வளைய ஏற்படுகிறது.

பூகம்பம் ஏற்பட்ட இடத்திலிருந்து புறப்பட்டு மற்றோரிடத்திற்கு அதிர்ச்சியை உணர்த்த அலைகள் பூமியை ஊடுருவியும், பூமியின் மேற்பாகமாகவும் ஓடுகின்றன வென்று முன்பே குறிப்பிட்டோம். இவைகளில் பூமியை ஊடுருவி வரும் அலைகளே முன்னதாக வந்து சேருகின்றன. சப்த அலைகள் காற்றில் செல்லுவதைவிட தண்ணீரில் 4 பங்கு வேகமாகவும், இருப்பு முதலிய உலோகங்களில் 16 பங்கு வேகமாகவும், செல்லுவதாயிருப்பதால் பூமியை ஊடுருவிச் செல்லும் அலைகள் பூமியைச் சுற்றிவரும் அலைகளைவிட வேகமாய்ச் செல்லுகின்றன. ஆனால் பூமியைச் சுற்றி வந்து சேரும் அதிர்ச்சி பலமானதாக விருப்பதால் அவைகளால்தான் அதிர்ச்சி அதிகமாக உணர்த்தப்படுகிறது.

பூமியை ஊடுருவிச் செல்லும் அலைகள் இருவித மானவைகள். ஒன்று நேர்முகமாகவே அசைந்து அசைந்து ஓடி வரும். மற்றொன்று வளைந்து அசைந்தாடி வரும். இவைகளில் முதல் குறிப்பிட்ட அலையே முன்னதாக வந்து சேரும்.

பூகம்பக் கருவி

பூமியின் ஆட்டத்தைக் குறிப்பிட வேண்டுமானால் முதலாவது ஓர் பேனா வேண்டும். பூமியாடும்போது அதையொட்டிய சகலவஸ்துக்களும் அசைவதால் அசைவதைக் குறிப்பிடும் பேனா மாத்திரம் ஆடாமலிருக்க வேண்டிய அவசியமல்லவா? இப்பொழுது, ஓர் மெல்லிய உறுதியான நீண்டதோர் நூலில் அதிகக் கனமான இரும்புக் கட்டியைப் பிணித்து நூலை மெதுவாக விரைவாய் அசைத்தால் அந்நூலில் கட்டியிருக்கும் இரும்பு வெகு நேரம் வரை அசையாமலிருக்கும். இவ்வாறு தொங்கவிட்ட உலோகக் கட்டியில் ஓர் பேனாவை வைத்து அப்பேனா ஒரு காகிதத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும்படி செய்தால் பூமியாடும்போது காகிதம் பூமியோடு ஆடும். அப்பொழுது பூமியாட்டத்தால் அசையாமலிருக்கும் பேனா காகித ஆட்டத்திற்குத் தகுந்தவாறு பாம்புக்கோட்டைப் போன்றதாகக் காகிதத்தில் கீறுமல்லவா? காகிதத்தை ஓர் மெல்லிய கட்டைச் சுருளில் சுற்றி எப்பொழுதும் ஒரே முகமாய் ஒரே அளவுடன் சுற்றிக் கொண்டிருக்கச்செய்து அதேசமயத்தில், சுழலும் சுருள் ஒருபக்கத்திலிருந்து மறுபக்கம் நகன்று கொண்டே போய்க்கொண்டிருந்தால் அதனைத் தொட்டுக் கொண்டிருக்கும்

பேனா கோட்டைக்கீறிக் கொண்டே போகும். இவ்வாறு கீறிச்செல்லும் போது பூகம்ப அதிர்ச்சியின் அலைகள் வந்தால் பேனா அசைவின் பலத்திற்கும், பூகம்பம் உண்டான தூரத்திற்குந் தகுந்தவாறு மெல்லிய வளைந்த கோட்டைக் கீறி அசைவு முடிந்தவுடன் மறுபடியும் முன்போல நேர்முகமான கோட்டைக் கீறிச் செல்லும்.



பூகம்பக் கருவி. ஓமாரி என்னும் ஜப்பானியரின் அமைப்புக் கருவி.

மேற் கூறியவாறு தொங்க விடப் பட்ட கட்டியானது ஒருமுழு அசைவு அசைய பூமி ஒரு அசைவு அசைய ஏற்படும் நேரத்தைவிட அதிகம் ஏற்படவேண்டியதவசியம். ஆகவே கட்டியிருக்கும் நூல் சுமார் 3000 அடி நீளமாயிருக்க வேண்டும். இவ்வளவு நீளமுள்ளதாக அமைப்பது அசாத்தியமாகும். ஆகவே பூகம்பக் கருவி மேலே படத்தில் காட்டியவாறு அமைக்கப்படுகிறது. AB ஒருகனமான இரும்புத்தூண். இது பூமியின் கீழ் சுமார் 30 அடி ஆழத்திலிருந்து கட்டப் பட்ட 'சிமென்ட்' தூண் மீது நிறுத்தப் பட்டிருக்கிறது. இத்தூணைத் தொட்டுக் கொண்டிருக்கும் BC இரும்புக் கட்டப்பாரையுடன் சேர்ந்திருக்கும். C சுமார் 100 பவுண்ட் கனமான ஈயக்குண்டு. இருமெல்லிய AC கம்பிகளால் அந்தரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறது. Cயின் மீது ஒரு சுற்றாணியால் அமைக்கப்பட்டிருக்கும் பேனா D, காகிதத்தை மேலே போர்த்தி யுள்ள சுருள் G யைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. E யின் சாரத்தால் மணியைக்குறிக்கும் கம்பி. இது மின்சாரத்தால் பெரியதோர் கடிகாரத்தோடு சம்பந்தப் பட்டு ஒரு மணிக்கு அல்லது அரைமணிக்கொரு தரம் கம்பி E யின் முனை சுருளின் காகிதத்தில் வரைந்துள்ள கோட்டின் மீது அடித்து அடித்து மணி அடையாளத்தைக் குறிப்பிட்டுக் கொண்டே யிருக்கும். G, E இவை மற்றொரு

உறுதியான 'சிமென்ட்' தூணின் மீது அமைக்கப் பட்டிருக்கின்றன.

சில இடங்களில் இக் கருவியைப் போல இரண்டு அமைத் திருக்கின்றனர். தென்வடக்காய் ஓடிவரும் பூகம்ப அலைகளைக்காட்ட கீழ்மேலாய் ஒரு கருவியையும் அமைத்து வைக்கின்றனர். இதன்றியும், பூமியில் நேர் முகமாய் மேல்நோக்கி அலைகள் புறப்பட்டு வருவதால் அவைகளைக் குறிக்க A C கம்பிகளுக்குப் பதிலாக ஒரு உறுதியான 'ஸ்பிரிங்' வைத்துத் தொங்க விட்டிருப்பதோடு சுழலும் சுருள் தலைகீழாய் அமைக்கப்பட்டிருக்கும். இக் கருவிகள் காற்று முதலியவை சென்று ஆட்டிவிடா வண்ணம் ஒரு சிறிய கட்டத்தில் அமைத்து வைக்கப் படுகின்றன. இவண் விளக்கியிருக்குங் கருவி ஜப்பானியர் உபயோகிப்பது போன்றது. இதைவிட இலேசான கருவிகளுமுள. அவைகளில் சுருளில் பேனா கொண்டு கோடு வரையாமல் புகைப்படக் காகிதத்தால் வெளிச்சக் கதிர்களால் கோடுகள் உண்டாக்கச் செய்கின்றனர்.

எல்லா மலைப் பிரதேசங்களிலும் முக்கியமாய் பூகம்பக் கருவிகள் அமைத்திருக்கின்றனர். இந்தியாவில், கோடைக்கானல், பம்பாய், ஆக்ரா, டேராடூன், கல்கத்தா இவ்விடங்களிலுமிருக்கின்றன. இரங்கூனில் சர்வ கலாசாலையின் ஆதரவில் 1923ல் இரண்டு பூகம்பக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பூகம்பம் உண்டானால் பூகம்பக் கருவிகள் படத்தில் காட்டியுள்ளபடி அலைகளை வரைந்துகாட்டும்.



பூலோகத்தில் அ என்றவிடத்தில் பூகம்பம் உண்டாகிறதென்றும், ஆ என்ற இடத்தில் பூகம்பக் கருவி கொண்டு ஆட்டத்தைக் கவனிப்பதாக வைத்துக் கொண்டால் அ இடத்திலிருந்து மூன்றுவித அலைகள் ஓடி வந்து ஆட்டத்தை உணர்த்துகின்றன.

1 நேர் முகமாகவே அங்கு மிங்கும் அசைந்தோடி வரும் அலைமார்க்கம். இஃது விரைவினில் வருவது.

2 நேர் மார்க்கத்துக்குக் குறுக்காக அசைந்தோடி வரும் அலை மார்க்கம். இது சிறிது குறைந்த விரைவுடன் வருவது.

1-ம், 2-ம் ஓரே வழியில் பூமியை ஊடுருவி ஓடிவரும்.

3 பூமியின் மேற்பாகத்தில் மிகவும் குறைந்த வேகத்துடன் நீண்ட அலையின் மார்க்கம்.

பூமியை ஊடுருவி வரும் அதிர்ச்சியின் அலைகள் இருவிதமென முன்பு கூறியுள்ளோம். அவைகளில் முன்னதாக வருவது P. அதைப்பின் தொடர்ந்து வரும் அலை S. பூமியைச் சுற்றி நீண்ட சக்தி வாய்ந்த அலைகள் L. இந்த அலைகளின் பலத்தைக் காட்டுவது M. பிறகு அசைவு நின்றவுடன் எப்பொழுதும் போல நேர்முகத்தோடு உண்டாகும் P வந்து சேரும் நேரத்திற்கும், S வந்து சேரும் நேரத்திற்குமுள்ள வித்தியாசத்தைக் கொண்டும்

அக



பூகம்பம் உண்டான இடத்திலிருந்து மூன்றுவித அலைகள் ஒன்றின் பின் ஒன்றாய் ஓடி வந்து பூகம்பக் கருவியை நேர் கோட்டினின்று குறுக்காக அசைத்துக் குறிப்பிடும் விதம், 1வது அலை வந்துசேரும் நேரத்திற்கும், 2-வது அலை வந்து சேரும் நேரத்திற்கும் உள்ள வித்தியாசத்தைக் கொண்டு பூகம்பம் உண்டான இடத்தின் தூரத்தை கணக்கிட முடிகிறது.

அல்லது S-L இவைகளுக்கேற்படும் வித்தியாசத்தைக் கொண்டும், அந்தக் கருவியின் அசைவுக் கணக்குகளைக் கொண்டும், பூமியின் சுற்றளவைக் கொண்டும் பூகம்பம் ஏற்பட்ட சுற்றளவு தூரம் கணக்கெடுக்கப் படுகிறது. இவ்வாறு பல கருவிகளில் குறிப்பிடும் தூரங்களையெல்லாம் ஒன்று சேர்த்து வரைந்து பூகம்பம் ஏற்பட்ட சரியான இடத்தைக் காட்ட முடிகிறது.

பூகம்பத்தை முன்னறிய முடியுமா?

இவண் விளக்கியுள்ள கருவிகளைக் கொண்டே பூகம்பத்தை முன்னதாக அறிய முடியும். பெரிய பூகம்பங்கள் உண்டாவதற்கு முன் வெகு அற்பமான அசைவுகள் ஏற்படுவதுண்டு. ஆங்காங்குள்ள பூகம்பக் கருவிகளில் குறிப்பிடும் அசைவுகளைக் கணக்கிட்டு பெரிய பூகம்பம் உண்டாகப் போகும் இடத்தைத் தெரிவிக்க முடியும். மேலும் ஹங்கேரி தேசத்து சாஸ்திர நிபுணரொருவர் கண்டுபிடித்த பூமியின் இழுக்குஞ் சக்தியை அளவிடும் கருவியைக் கொண்டு பூமியின் உட்பாகத்தின் தன்மையை அறியலாம். அதிகமாக இழுக்கும் சக்தியிருந்தால் அடியில் பாறைகள் போன்ற உறுதியான வஸ்துக்களிருக்க வேண்டும். இவ்விதமாக மடுவுகள் பிளவுகள் உள்ள இடங்களைக் கண்டுபிடித்து அவ்விடங்களில் பூகம்பங்கள் ஏற்படுவது நிச்சயமானதால் அவண் விட்டகன்று செல்லவேண்டும். ஜப்பானில் இவ்விதமாகவே ஆராய்ந்து வருகின்றனர்.

கடந்த பூகம்பக் கணக்குகளைக் கொண்டு 11,22,33,19 வருஷங்கள் வீதம் மூடிய பூகம்பங்கள் வட துருவத்தில் அடிக்கடி ஏற்படுமென்பதாகக் கூறுகின்றனர். எப்படியானாலும் பூகம்பம் உண்டாகப்போகும் இடத்தை முன்னறிந்துரைக்க முடிந்தாலும் எந்நேரத்தில் ஏற்படப் போகுமென்பதை உரைக்க முடிகிறதில்லை.

சோதிட ஆராய்ச்சிக் காரர்கள் சிற்சில சமயம் பூகம்பம் ஏற்படப் போகும் பாகங்களைக் கூறுகின்றனர். இவர்கள் பூகம்பம் உண்டாகும் இடத்தை நறுக்காகக் குறிப்பிடாது பொதுவாக பல இடங்களைச் சேர்த்து சில காலத்தையும் குறிப்பிடுவது வழக்கம். அவ்வாறு குறிப்பிடுவதில் ஒரு சமயம் அதிர்ஷ்ட வசமாய் அசைவு ஏற்பட்டுவிடுகிறது. பல சமயம் உண்மையற்றுப் போய் விடு

பூகம்பம் உண்டான காலத்தில் பூமியின் மேற்பாகம் திடீரென்று விரிந்து கொடுத்துப் பிளவுகள் வெகுதூரம் வரை யுண்டாவதுமுண்டு.

கின்றது. முன்னறிந்து கூறுவதே துர்லபம். அவ்வாறுரைப் பவைகளில் 100-க்கு ஒன்றிரண்டு எப்படியோ பொருந்தி விடுவதே யல்லாது பெரும்பாலும் அவர்கள் குறிப்பால் சரியான இடத்தையும் நேரத்தையும் தெரிந்து தப்பிப் பிழைத்தவர் ஒருவருமில்லை. மேலும், சமீபத்தில் எத்தனையோ பூகம்பங்கள் ஏற்பட்டன. அவைகள் அனைத்தையும் அறிவித்தார் ஒருவருமில்லை. ஆனால் சாஸ்திரக் கருவிகள் மூலம் பூகம்பம் உண்டாகும் இடத்தையாவது முன்னறிந்து திட்டமாகக் கூறமுடிகிறது. சாஸ்திர ஆராய்ச்சியின் முன்னேற்றம் வெகு ஆச்சரியப் படத்தக்கதா யிருந்து வருவதால் பூகம்பம் உண்டாகப் போகும் நேரத்தைக்கூட முன்னறியக்கூடிய காலம் சீக்கிரம் வந்துவிடலாம் என்பதைத் துணிந்து கூறலாம்.

பூமியாட்டத்தினால் வீடுகள், கோபுரங்கள் முதலியவைகளும் ஆடி விழுந்து மனிதர்களுக்கு ஆபத்துகளை விளைவிக்கின்றனவே யொழிய பூகம்பத்தாலே மாத்திரம் சேதம் ஏற்படுவதில்லை. ஆனால் பூமியாடி வெடிப்புகள் ஏற்பட்டாலுண்டு. இது அடிக்கடி நேருவதில்லை. ஆதலால் மனிதர் வீடுகளை சரியான உறுதியான தரையின் மீது ஆழத்தில் 'கான்கிரீட்' போட்டு பலமான வீடுகளைக் கட்ட வேண்டும். அவ்வாறில்லா விட்டால் இலேசான மர வீடுகள் அமைக்க வேண்டும். மர வீடுகள் சில சமயம் பூகம்பத்தால் நெருப்புப் பிடித்துக் கொள்ளுவதால் 'கான்கிரீட்' வீடுகளே தகுந்தவென ஜப்பானியர் அறிந்து அதன்படி நடந்து வருகின்றனர்.

பூகம்பக் கதைகள்

பூகம்பம் உண்டாவதற்கு அனேகர் பல கட்டுக் கதைகளை நம்பி வருகின்றனர். அஸ்ஸாம் நாட்டில்வசிக்கும் காரோஸ் ஜாதியார்களின்படி உலகம் ஓர் சதுரமான சமதளம். இச்சதுரமான உலகம் அந்தரத்தில் நான்கு கயிறுகளால் நான்கு மூலையிலும் கட்டித்



தூண்கள் இரும்புக் கம்பிகளுடன் சேர்த்துக் கட்டி யிருந்த போதிலும் செங்கல், சாந்து, முதலியவைகள் நல்ல விதமாகச் சேர்த்து ஒழுங்காய் கட்டாமலும், வண்டல் தரையிலும் கட்டியிருந்தால் பூகம்ப காலத்தில் அவைகள் மேல் காணும் விதம் முறிக்கப் பட்டு விடுகின்றன.



ஜப்பான் தேசத்தில் உண்டான பெரிய பூகம்ப காலத்தில் பலமாகக் கட்டப் பட்டிருந்த இரும்புப் பாலங்கள் தூண்களிலிருந்து கீழே தள்ளப் பட்டிருக்கின்றன.

தொங்க விடப்பட்டிருக்கிறது. சில சுண்டெலிகள் இக்கயிறுகளைக் கடித்து அறுத்துவிட யத்தனித்து வருவதை ஒரு பிரமாண்டமான குருட்டு மனிதன் தடுத்துக் கொண்டேயிருக்கிறனும். அவன் குருடனுதலால் சில சமயம் அவ்வெலிகள் அவனுக்குத் தெரியாமல் கயிரை நறுக்கிவிட முடியும். இவ்வாறு ஒரு கயிற்றை நறுக்கி விட்டதால்தான் பூமி திடீரென்று கீழிறங்கி 897-ல் அஸ்ஸாம் மாகாணத்தில் பூமி ஆடியதென்று நம்பி வந்தனர்.

கொம்பை விட்டு மறு கொம்பிற்கு மாற்றும்போது பூமி அசைவு ஏற்படுவதாகவும் கூறுகின்றனர்.

முற்காலத்து கிரீக் தேசத்தார்களின்படி பூகம்பக் கடவுள் ஒருவர் இருப்பதாயும், அக்கடவுளுக்கு சதா பலி முதலியவை கொடுத்து வணங்கி வந்தனர். எப்பொழுதாவது பூமியாடினுல் பூகம்பக் கடவுள் தூங்கி விட்டார் என்று நம்பி "நாங்கள் இங்கே இருக்கிறோம், இங்கே இருக்கிறோம்" என்று பெருஞ் சப்தங்கள் போடுவார்



1906ஷ காலிபோர்னியாவில் (அமெரிக்கா) உண்டான பெரிய பூகம்பத்தில் ஓர் புகை வண்டித் தொடர் அப்படியே சாய்க்கப் பட்டுவிட்டது.

இந்துக்கள் கதையின்படி உலகமானது ஆயிரம் சிரசுகளை யுடைய ஆதிசேஷனை பெரிய சர்ப்பத்தால் தாங்கப்பட்டு வருகிறதாம். இப்பாம்பு சமயா சமயம் ஒரு தலை விட்டு மறு தலைக்கு பூமியை மாற்றும்போது பூமி அசைந்தாடுகிறதாம். சிலர், சர்ப்பத்திற்குப் பதிலாக ஒரு பசு தனது கொம்பினுல் தாங்கி வருவதாகவும், கனம அதிகமாகி விட்டால் ஒரு

களாம். இவ்வாறு செய்வதில் பூகம்பக் கடவுள் நித்திரை விட்டெழுந்து பூமி ஆட்டத்தை நிறுத்தி விடுவாராம்.

1755ல் போர்த்துகல் தேசத்தில் பூகம்பம் உண்டாகி ஜனங்கள் மாண்டதற்கு அத்தேசத்துக் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் சில புரோடெஸ்டெண்ட் மதத்தினரைத் தங்களிடையே வைத்திருப்பதினுல் பரமண்டலத்தி

னுள்ளபிதா பூமியை ஆட்டி தண்டித்து தக்க பாடம் கற்பித்தார் என்று கத்தோலிக்க சுவாமியார்கள் கூறினர்களாம்.

ஆதிசிவக் கடவுள் பூமியை அசைத்துத் தனது கோபாக்கினியைக் காண்பித்தாரென்று பல வட இந்தியர் கூறினர்களாம். இக்கதைகளை விரி



1934ல் ஜனவரிமீ 15உ இந்தியாவில் (பீஹார், ஒரிஸ்ஸா, நேப்பாளம்) உண்டான பூகம்பத்தில் மணல் குமிழி கசிந்து வந்து சிறிய எரிமலைபோன்று மேடே பள்ளத்துடன் தோன்றிய விதம்,

1934 ஜனவரி மாதம் வட இந்தியாவில் ஏற்பட்ட பூகம்பம் ஹூஸ்டன் வெள்ளைக் கூட்டத்தார் ஆகாயக் கப்பலில் இமயமலை எவரெஸ்ட் சிகரத்திற்கு மேல் பறந்து சென்றதால் ஏற்பட்டதாம். அவ்வாறு மேலே பறந்து போனதால் அங்கு வசிக்கும்

க்கில் பெருகும். பூகம்பங்கள் அடிக்கடி ஏற்படுவதையும், அவைகள் ஏற்படும் தன்மைகளையும் நன்றாய் விளங்கிக் கொண்டவர்கள் இவைகள் யாவும் மூட நம்பிக்கைகளென்று கூசாமற் கூறிவிடுவர்.

தமயனின் கடிதம்-5

—"தேவிதாசன்"

(வாழ் மனை.)

தளர்நடை மைந்தர்களின்—நல்ல
தண்டை சிலம் பொலியும்
வழங்கும் மழல் மொழியும்—இன்ப
வானைப் பிளந்து செல்லும். 1

அமுதமனைத் தாட்டும்—பெற்ற
அன்னையர் கைவளைகள்
தமிழின் இன்னொலியும்—இந்தத்
தரணியெலா முழங்கும். 2

முல்லைக் கொடி படரும்—வீட்டு
முன்றிலில் வேம்புயரும்
கொல்லைப் புறத்தினிலே—கண்கள்
துளிரும் பசும் பயிர்கள்! 3

பள்ளிக்குச் செல்சிறுவர்—இன்பப்
பச்சை மொழிக் குழந்தை
துள்ளித் திரிகாட்சி—ஆ!
தொடுத்திடப் போத மோட்டர். 4

காலை மனை எழிலும்—நல்ல
கருமங்கள் தம்விரிவும்
மாலையின் இன்பங்களும்—ஆ!
மட்டுக் கடங்காவே. 5

இரவுப் பொழுதினிலே—காயும்
இன்ப நிலவினிலே
சிறுவரை யருகமர்த்தி—அன்னை
செப்புங் கதை இன்பம். 6

பாட்டியின் கதைப் பெருக்கும்—பச்சைப்
பாலரின் சொற்பெருக்கும்
கூட்டவ ராட்டங்களும்—நெஞ்சைக்
கொள்ளையுங் கொள்ளுமடா. 7

வறுமைப் புயலெழுந்து—அம்மனை
வாழ்வை யலைத்திடினும்
சிறுமைகள் இல்லையடா—அந்த
சிறக்கும் திருக்களடா. 8

அழியும் வறுமையெலாம்—அந்த
அடிக்கும் களி மழையால்
வழியும் இன்ப வெள்ளம்—நல்
வண்ண மலர் சொரியும். 9

இந்த மனை போல—தம்பியுன்
எண்ணந் தனை யுயர்த்தி
சிந்தைக் களிப்புடனே—சிவ
சக்தியை வழி படுவாய். 10

நாலடி வள்ளுவர்

—மு. முத்துராமலிங்கம்

பூமாது புல்கும் புயல் வண்ணப் புத்தேள் தன் திருவுந்தி பூத்த திசை முகத்தோனே யிப்படியிசை போந்து பரிவொடு நல்கிய செந்தமிழ் மறையாம் திருக்குறளொன்றே நந்தமிழணங்கின் நளிர் மணி முடியாம். வானுயர் நீதியை வையத்திற் கோதுமித் தெய்வத் திருமறையோடொப்ப உன்னுந்தரத்ததாய் முந்தையோர் மதித்தவற்றுள் சங்கமோர் மூன்று கண்ட தனிப்பெருமைக் கூடல் நகர் தன்னில் வாழ்ந்த சமண முனிவர்களருளிய நாலடி நானூறுமொன்றாகும்.

இவ்விரு பெரு அரும்பெறல் நூல்களும் நீதியின் கலங்கரை விளக்கமாய் வாய்ந்தமை தமிழணங்கு நோற்ற தவப் பயனேயன்றோ! இவற்றின் பொருள் நயந் தெரிந்து சுவைத்த பெற்றியராம் முந்தையோர் இவ்விரு நூலும் அளவும் குறியும் வேறுபடினும் பொருளும் நோக்கும் ஓர் வழியினவெனப் புகன்று போந்தனர். இதனையோர் உவமையாகக் கொண்டு கவிஞரொருவர் கழறிய செய்யுளொன்றீண்டு நோக்குவாம்.

மின்னலிடையும் அன்னநடையும் பொன்னொளிர் மேனியும் வாய்ந்த கன்னல் மொழியினள் ஓர் காரிகை, பூக் கொய்வான் ஓர் நாட்போது ஓர் பூம் பொழிற்புக்க, அங்ஙனே, பரந்த மார்பினன் திரண்ட தோளினன் பாவையருளங்கவரெழிலான் பலகலை வல்லான் ஓர் இளவல் அவ்வழிப் போதர ஒத்த உருவுந் திருவும் நலனுங் குலனும் வாய்த்த இருவர் தம் உள்ளமும் ஒன்றி உணர்வும் ஒன்றி ஓருயிர் ஈருடலாயினர் பண்டு. அந்நாள் தொட்டிது காறும் களவின் வழியதாய் நிலவிய இவர்தம் காதற் பயிர் நாடொறும் நாடொறும் மேலோங்கி வளர்வதாயிற்று. அண்டை அயலார் அறிந்தனர் இக்களவொழுக்கம். அஃதுணர்ந்தனர் இக்காதலர். அவர் தூற்றும் இப்பழியினின்று நீங்கிச் சேண்புகுந் துறைவாம் எனத் தேறிய, இக்காதலரிருவரும் ஓர் நாள் வைகறைப் போழ்தில் வழி நடந்தனர். முல்லையுங் குறிஞ்சியுங் கடந்து பாலை நண்ணினர். முட்களும் பருக்கைக் கற்களும் நிறைந்த இக்கடுஞ்சுரம் தனது காதலியால் கடத்தல் கடிதெனத் தேறிய காதலன், தனது காற்றடத்தின் மீதே கால்வைத்து நடந்து வருமாறு தனது காதலிக்குப் பணித்துத் தான் முன்னேகினன். அம்மெல்லியல் நங்கையும் தனது காதலன் காற்றடத்தின் மேலேயே தானும் காலடி வைத்து நடந்து அவ்வருஞ் சுரங்கடந்தாள். முட்கள் தைப்பினும் முன்னர் நமது காலிலேயே தைப்பதாகுக; நமது காதலியின் மஞ்சினும் மெல்லிய பாதம் இந்த நோவு பொருதென நினைந்த அவ்விளங் காதலன்றன் காதற் பெருக்கு 'உள்ளுவோர் உள்ளங்களி கூரும்.

இதிங்ஙனமாகப் பொழுது புலர்ந்ததும் தனது செல்வியைக் காணாச் செவிலி அலமந்து பதறி உசாவிடலும் தனது செல்வியின் உயிர்ப்பாங்கியால் உற்றதுணர்ந்து உலகியல் நெறியிற் களவின் வழிமுற்றிக் கற்பின்வழிக் கொண்டாள் நங்காரிகை யெனக்களி துளும்பினளேனும் நற்றாய் வினவிடில் நவில்வதியாதென நடுக்க மெய்தினளாகித் தனது செல்வியின் சிற்றடிச் சுவடு பற்றிச் சென்றனள்.

செவ்வேள் நிகர்க்கு மதிரு மைந்தன் சென்ற அடிச்சுவடும் அதன் பக்கலில் தன் செல்வியின் பைந்தளிர் போன்ற பஞ்சின் மெல்லடிப் பாதம் பதிந்த சிற்றடிச் சுவடுங்கண்டு என்னே! என தருஞ் செல்வி என்னையும் மறந்து ஏகினளன்றோ எனச் சஞ்சலமுடையும் போழ்து மீட்டுமோருணர்வு, பேதாய்! கவின்பெறு பருவக் கன்னியர்க்கெல்லாம் தக்கம் காதலனன்றி இம்மண்ணிலும் விண்ணிலும் மற்றுமொன்றுளதோவென வினுதலும் மனந்தேறி மீட்டும் வழிக்கொண்டாள். பேரடியிரண்டும் சிற்றடியிரண்டும் ஆக நாலடியே தனது நல்வழித் துணையாய் நடந்தனள் பேதை. நடந்து நண்ணினள் பாலை. ஹா! என்னே மாயம்! நாலடியும் இரண்டடியாய் மாறிப் போயிற்று. திகைத்தனள் சிந்தை. பதைத்தனள் நொந்து புலம்பினள் பலவாறு. எனதருமைச் செல்வி, இது காறும் தனது தலைவனைத்தொடர்ந்து நடந்து வந்தவள் இவ்விவல்லை நண்ணியதும் யாண்டுற்றிருப்பள்! ஆழியே போம் அல்லலெல்லப்பினும், அகலுவரோ தம் மன்பனை விட்டு! என எண்ணுதலெல்லாம் எண்ணியெண்ணி யேங்கிய அச்செவிலி நீர்மல்கிய தனது நெடுவிழி துடைத்து மீட்டுமோர்முறை அப்பதச் சுவடிரண்டையும் கூர்த்து நோக்குதலும் கண்டனள் விந்தை. களித்தனள் சிந்தை. ஆம்; விந்தையே கண்டாள். நாலடியாக நடந்து வந்த அத்தடங்கள் இரண்டடியாக மாறிய நுட்பமுந்தேர்ந்தாள்.

தனது காதலியின் மென்மலர் முட்களால் உறுத்தல் பொறுஅத்தலைமகன் தான் முன்னாக நடந்து காட்டித் தனது பதச் சுவட்டிலேயே தனது காதலியை நடந்து வரும்படி பணித்து ஏகிய சூழ்ச்சி எண்ணுந்தோறும் அவளுக்கிறும்பூது விளைவித்தது.

மகிழ்துளும்பிய மனத்தினளாம் அம்மாதாசி நாலடியும் ஒன்றியியைந்து நடந்த இவ்வதிசயத்திற்கோர் உவமை நாடுவாளாயினள். நகமும் சதையும் பாலும் நீரும் பூவும் மணமும் என்னும் உவமையெலாந் தேடித் தோற்றமும் பொருளும் நோக்கமும் பயனும் ஒவ்வாதது கண்டு அவ்வுவமை யெலாம் ஒதுக்கிவிட்டு, வேறு ஆய்வாளுக்கு அகப்பட்டதோருவமை. அதுவே நாலடி வள்ளுவர்.

ஆம். பழந்தமிழ்ச் சொல்லருமை நாவிரண்டில் எனவும் நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி யெனவும் வரும் ஒற்றுமை பொதிந்த இவ்வுவமை அன்னாள் மனக்கண் முன் தோன்றியதோடு அவைதம் பொருளும் பயனும் ஒருமித்த ஓர் வழியினதான இலக்கிய இன்பக் காட்சியும் தோன்றியது.

காதலர் இருவர்

—சங்கர குமாரன்

வில்லியம் ஷேக்ஸ்பியர், ஆங்கில நாட்டு மகா கவி, வாடும் மனித இதயத்துக்கு இன்னமுதூட்டும் இங்கித நண்பன். மூக்காட்டைத் திறந்து, முகமூடியைக் கிழித்து, மனித உள்ளத்தில் ஓட்டி, அதை வெளிப்படுத்தும் சிறந்த அன்பன். காதலர் ஊடலைக் கவலை கொண்டு வருணிக்கும் அருமையான ஆசிரியன். இந்த மகான் 37 நாடகங்கள் எழுதி யிருக்கிறார். அவைகள் பல்வேறு வகையுள்ள வாழ்வை விளக்கிக் காட்டியிருக்கின்றன. அவைகளிலே காதலின் சிறப்பையும், கொடுமையையும், பயங்கரத்தையும், இனிப்பையும், துயரத்தையும், தூய்மையையும், படுகுழியையும், மணமண்டபத்தையும் ஒருங்கே கூட்டி விளக்கிக் காட்டும் நாடகங்கள் மூன்றே. அவைகள் 'ஹாம்லெட்' என்றும் 'ஒதெல்லோ' வென்றும் 'ரோமியோ ஜூலியத்' என்றும் பெயர்கள் தாங்கியவை. நமது நாட்டு ஹிந்து—முஸ்லிம் கலைகளை நான் நினைக்குங்கால், அந்த மூன்று நாடகங்களும் என் மனக் கண்ணில்

சொல்லால் பொருளால் நயத்தால் நடையால் ஒத்த இவ்விரு நூற்களும் போன்றே உருவால் உயர்வால் குலத்தால், நலத்தால் கல்வியால் கேள்வியால் ஒத்த இந்நங்கையும் நம்பியும் இருவரும் ஒருவராய் ஈருடலும் ஒருயிராய் இவர் தம் நாலடியும் இரண்டடியாய்த் தோன்ற நடந்து சென்ற காட்சியை அச்செவிலி உன்னுந்தோறும் உன்னுந்தோறும் கழிபேருவகை வெள்ளம் பொங்கிக் கரைகடந்து செல்ல அந்நாலடிவள்ளுவருக்கு இத்தம்பதிகளோர் இலக்கியமாயும் இத்தம்பதிகளாம் இலக்கியத்திற்கு அந்நாலடி வள்ளுவர் ஓர் இலக்கணமாயுமமைந்த இனிய காட்சியை மனத்தரங்கினில் கண்டு வாய்விட்டுச் சொற்ற பாடலே யிஃது.

நாலடி வள்ளுவராமேயிப்பாலே நடந்தபெருங்
காலடி மேலடி மானடியே கட்டுரலிற்பட்டும்
பாலடியில் வெண்ணெயுண்டோன் அரங்கன்
[பணிவரையில்
வேலடி முன்னுக்கு உபாயமிட்டேகும் விழைவு
[என்றே

மலர்மாதும் பூமாதும் அடிவருடச் சேடன்மிசை மணியரங்கத் திருக்கோவில் மண்டபத்திற் கண் வளரும் பைந்துளாய் முகில் வண்ணப் பரந்தாமன் உவந்துறையும் திருவரங்கத் திருநாட்டின் ஓர் பால் நிகழ்ந்த செய்தியிது.

தோன்றுமே விருப்பமில்லை. அதிலும் 'ஒதெல்லோவும்' 'ரோமியோ ஜூலியத்தும்' என் மனதைக் கொள்ளை கொள்ளுகின்றன.

ரோமியோ ஜூலியத்து நாடகத்தின் கதைச் சுருக்கம் பின்கண்டவாறு:— இதாலியா தேசத்து ஒரு நகரில் இரண்டு குடும்பங்கள் வசித்து வந்தன. அவை இரண்டுள்ளும் தீராப்பகை. எனவே, அந்நகரம் ஆறாத்துயர ஆழ்கடலில் அமிழ்ந்து நின்றது. 'மாண்டேகு' என்று ஒரு கூட்டத்தாருக்குப் பெயர். 'காபுலெட்' என்று வேறு வகுப்பார் அழைக்கப் பட்டனர். இரு வகுப்பாரில் இருவர் எப்போதேனும் தெருவில் சந்தித்து விட்டால் உடனே பூசல்; பின்னர் சண்டை; இறுதியில் குத்தும் கொலையும் நேருவது மிக மிகச் சாதாரணம். மாண்டேகு வமிசத்தில் ரோமியோ பிறந்தான். காபுலெட் குலத்தில் ஜூலியத் உதித்தாள்.

இவர்கள் இருவருக்குள்ளும் ஒளி மறைந்த காதல். ஆனால் நிறைந்து ததும்பும் அன்பு மணம் என்றால் இருவருக்குள்ளும், இல்லாவிடில் மரணம் என்பது காதலர்களின் தீர்ப்பு. இதை அறிந்த இரு குடும்பத்தாரும் திகைப்பும் வருத்தமும் கோபமும் பூண்டு, மரணத்தைத் தடுக்க அரும் பாடுபடுகிறார்கள். ஜூலியத்துக்கு வேறு வரன் பார்க்கப் பட்டான். காதலர் இருவருக்குள்ளும் ஒரு பாதிரியார் தூது. ஜூலியத்தின் மண நாள் நெருங்குகின்றது. இதற்குள் காதலர்கள் இருவரும் மறைந்து, ஒளிந்து சமயம் பார்த்து, பெரியவர்கள் அறியாமல் வீட்டுப் புறக்கடைச்சுவரிலும், தோட்டத்தின் மறைவிலும் முத்தமிட்டு, காதல் மிகுந்து, கனிமொழி பகர்ந்து, கட்டித்தழுவி, கண்ணீர் சொரிந்து, சிந்தை கலங்கி ஏக்கமுற்றுப் பிரிகின்றனர். ரோமியோ நகர் விட்டு அகல்கின்றான்.

ஜூலியத் தன் மண நாள் அன்று மயக்கம் தரும் மருந்தொன்றை பாதிரியாரின் விருப்பத்திற்கிணங்கிக்குடிக்கிறாள். அவள் செத்துப்போனாள் என்று கொண்டு, அவளை உற்றார் உறவினர் அடக்கம் செய்கின்றனர். பாதிரியார் ரோமியோவிடம் சென்று அவனை அழைத்து வருகின்றார். ஆனால் மயக்க மருந்தைப் பற்றி சொல்ல மறந்து விடுகிறார். ரோமியோ வந்தான். ஜூலியத்இறந்து அடக்கமாயிருப்பதாகக் கொண்டு, அந்த இடத்திலேயே தன்னைக் குத்திக் கொண்டு இறக்கிறான்.

ஜூலியத் மயக்கம் தெளிந்து விழித்துக் கொள்ளுகிறாள்! காதலன் தனது காலடியில் மாண்டு கிடப்பதை காண்கின்றாள். வாழ்வே உயிர்; காதலே வாழ்வு என்ற உண்மைப் பித்தை, மண்டையில் ஏற்றிக் கொண்ட உத்தமி ஜூலியத், தன் காதலன் சவத்தை மார்புடன் அணைத்து இறுகத் தழுவி, அரை நொடியில் இறக்கிறாள். பாதிரியார் தனது தவறை உணர்ந்து, தனது உயிரை மாய்த்துக் கொள்ளுகிறார். காதலின் இனிமையும் கொடுமையும்தான் என்ன? ரோமியோவும், ஜூலியத்தும் காதல் சித்திரங்கள். அவர்களைப்போல் மனம் பூரித்து, மணம் நாடும் ஹிந்துவும் முஸ்லீமும் உளம் வாடும்படி தவிக்கவிடும் மனிதர்கள் மனிதர்களாவார்களா?

'ஒதெல்லோ' மொரோக்கோ நாட்டு வீரன். 'டெஸ்டிமோனு' கன்னல் மொழியாள். ஒரு கிறிஸ்தவப்பெண். ஒதெல்லோ, டெஸ்டிமோனு வீட்டுக்கு வருவான். போர்க்கிறனைக் காட்டும் வீரச்செயல்களை டெஸ்டிமோனுவுக்கு விரித் துரைப்பான். ஒதெல்லோவின் இயற்கை வீரமும், டெஸ்டி மோனுவின் இளகிய நெஞ்சமும் காதல் கூடத்தில் கலந்து பேசின. அவர்கள் இருவரும் இரண்டு உருவமாய், ஆனால் ஒருயிராய் அன்று முதல் விளங்கினார்கள். நடுவே வந்தான் 'அயாகோ'. அயாகோ சுயநலம் கொண்டவன். அவன் கெட்டவன் என்று மற்றவர் சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. புருஷனைத் தங்கள் வசப்படுத்த மருந்து கொடுக்கும் மனைவியர்களும் நம்மவர்களில் உண்டு என்பார்கள். அதிகாரத்தில் ஆசை கொள்ளுவது தவறுயிருக்கலாம். ஆனால் அது குற்றமல்ல. தேளுக்குக் கொட்டாமலிருக்க முடியாது; அது அதன் இயற்கை.

அதுபோல், அதிகாரத்தில் பற்றுக்கொண்ட சுயநலப் பிரியனான அயாகோவுக்கு, காதலர்களின் இதயம் கண்ணுக்குப் புலப்படவில்லை. காதலைக் காணமல் அவர்கள் இதயத்தில் காமம் ஒன்றை மட்டுமே அயாகோ கண்டான். அதற்கேற்றவாறு சூழ்ச்சி செய்ய லானான். ஒதெல்லோ மூர்க்கன், முரடன், முன்கோபி என்றும், எனவே எப்பொழுதும் அவள் ஆபத்துக் குள்ளிருக்கிறாள் என்றும் டெஸ்டிமோனுவிடம் அயாகோ சொன்னான். டெஸ்டிமோனு நயமொழியினள்; ஆனால் நஞ்சு மனத்தினள் என்று ஒதெல்லோ விடம் சொல்லி, அவளுடைய கற்பைப் பற்றித் தூற்றினான் அயாகோ. சுருக்கம் என்னவெனில், ஒதெல்லோவின் பெருமை, கோபமாக மாறி, கொழுந்து விட்டு எரிந்தது. டெஸ்டிமோனுவின் இளகிய நெஞ்சம் தடுமாற்ற மடைந்தது. ஒதெல்லோ பழிவாங்க நினைத்து டெஸ்டிமோனுவைக் கொடூரமாய் கொல்லுகிறான். கொன்ற பிறகு அயாகோ தன்னிடம் சொன்னது யாவும் பொய் என்று காண்கின்றான். பின்னர் தற்கொலை புரிந்து கொள்ளுகிறான். காதலின் பயங்கரத்தை கண்கொண்டு பார்க்கமுடியாது. ஹா!

ஹிந்து முஸ்லீம் காதலைப் பற்றித்தானே, ஷேக்ஸ்பியர் இவ்விரு நாடகங்களையும் எழுதிவைத்தார் என்று எண்ணும்படி நமக்கு அவ்வளவு பொருத்தமாயுள்ளன. அவ்விரு நாடகங்களும், 'காதல், காதல், காதல், காதல் போயின்—சாதல், சாதல், சாதல்' என்று மனித வாழ்வைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லிமுடித்தார் கவி பாரதியாரும். ஹிந்து—முஸ்லீம் காதல் என்பது கடவுளின் கட்டளை. இதை அறிந்தவர்கள் உணர்வார்கள். இயற்கை வீரமும் இளகிய உள்ளமும் ஒன்றுசேர்ந்து வாழ்வது இறைவனுடைய கொடிய விதியாகும். இதை மறுப்போர் மனமின்றி, மானமின்றி, மாண்பு குன்றி மரிப்பவர்களே யாவார்கள். இந்த விதியின் வேதத்தையோ, வேகத்தையோ, போக்கையோ தடுக்க முயலுவோர்கள் காதலை அறியாதவர்கள்; காதலர்களுக்குச் சவக்குழி தோண்டுபவர்கள். காதலர்களுக்குள் ஒருவர் மரித்து மற்றவர் உயிர்வாழுவது என்ற அற்ப வழக்கமில்லை. காதலர்களுக்கு உறவினர் என்று ஓங்கிப்பேசி நடிக்கும் மனிதர்கள் இதை உற்று நோக்குவார்களாக!

ஆங்கிலோ—ருஷ்ய ஒப்பந்தம் நிறைவேறுமா?

—ஹென்ரி உல்ப்

ஆங்கிலோ—ருஷ்ய ஒப்பந்தம் நிறைவேறுமா நிறைவேருதா என்ற கேள்விக்குச்சரியான விடை அகப்படுவதற்கு, ஒரு திறவு கோல் போன்றது இந்தக்கட்டுரை. இந்தக் கட்டுரையைப் படிப்பதற்கு முன்னர், பால்டிக் நாடுகளைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது நல்லதல்லவா? பால்டிக் கடலோரமாக வுள்ளதால், லிதூனியா, லாட்வியா, எஸ்டோனியா ஆகிய நாடுகள் பால்டிக் நாடுகள் என்று அழைக்க படுகின்றன. ஜெர்மனிக்கு வடகிழக்கில் ஒன்றன் மேலொன்ருய் வரிசைக் கிரமமாக உள்ளன லிதூனியா, லாட்வியா, எஸ்டோனியா என்ற மூன்று நாடுகளும், இவற்றின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும் வருமாறு;—

பெயர்.	விஸ்தீரணம். சதுரமைல்		ஜனத்தொகை.
லிதூனியா	21,600	—	2,250,000
லாட்வியா	25,000	—	1,867,000
எஸ்டோனியா	18,400	—	1,117,000
பின்லாந்தி	150,000	—	3,5o8,000

கிழக்கு ஐரோப்பா பக்கம் ஹிட்லர் செல்லக்கூடாதென்று சுவர் போட நாம் (பிரிட்டன்) முனைகிறபோது, போலந்து, • ருமேனியா துருக்கி ஆகிய இந்த நாடுகளின் மீது நமது கவனத்தைச் செலுத்துகிருேம். போலந்தின் மீதும் ருமேனியாவின் மீதும் நாஜிபடையெடுப்பு ஏற்படாமல் செய்து விட்டோமானல், ஐரோப்பாவில் சமாதானம் ஏற்பட்டுவிடுமென்று நாம் நினைத்தோமானல் அது தவருகும்.. போலந்தும் லாட்வியாவும் சந்திக்கிற எல்லைப்புறத்திற்கும், பின்லாந்தின் வடக்கு எல்லைப்புறத்திற்கும் ஏறக்குறைய ஆயிரம் மைல் மேலுக்கு இருக்கிறது. லாட்வியா, எஸ்டோனியா, பின்லாந்து ஆகிய நாடுகளுக்கு நாம் பாதுகாப்பளியாமற் போனல், கிழக்குப் பக்கம் ஜெர்மனியின் படை செல்லா வண்ணம் நாம் போடுகிற சுவரில் ஒரு குறையை விட்டதாகவே ஆகும். ஹிட்லர், இந்தக்குறைவான பாகத்தைச் செளகரியம்போல் தாக்கலாம். பால்டிக் கடலோரமாயுள்ள நாடுகளின் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதாக நாம் உறுதிமொழி

கொடுக்க மறுப்பது, இந்த நாடுகளைத் தாக்க ஹிட்லரை நாமே வலிய அழைப்பது போலாகும்.

1939ம் வருஷம் மார்ச்சு மாதம் ஜெர்மானியர்கள் மெமல் பிரதேசத்தை ஆக்ரமித்துக்கொண்டபோது, பின்லாந்து வளை குடாவுக்கும் லெனின் கிராட்டுக்கும் தாங்கள் செல்லக்கூடிய நீண்ட பாதையைச் செப்பனிட்டுக் கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும். இப்பொழுது, ஜெர்மனியின் கிழக்கு எல்லைப்புறத்தையும், லாட்வியா தேசத்தின் எல்லைப்புறத்தையும் பிரித்துக் காட்டுகிற பிரதேசம் பன்னிரண்டு மைல் அகலமாயுள்ள பிரதேசமாகவே யிருக்கிறது. இந்தச் சொற்ப விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை, ஜெர்மனி, தன் இஷ்டப்படிக்குச் சுவாதீனப்படுத்திக் கொள்ளலாம். எனவே, ஜெர்மானியர்கள் மெமல் பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டது, நாஜி ஏகாதிபத்தியத்தை விஸ்தரித்துக் கொள்வதற்கு அமைந்த முதற்படியே யாகும். லாட்வியா, எஸ்டோனியா ஆகிய நாடுகளின் ராணுவப் பாதுகாப்பைப் பலப்படுத்தவோ, அல்லது அதனைக் குலைக்கவோ உரிய ஸ்தலமாக அமைந்திருக்கிறது.

என்ன காரணத்தினாலோ, லாட்வியா—எஸ்டோனியா எல்லைப்புறத்தைப்பாதுகாக்கக்கூடிய ஏற்பாட்டை பிரிட்டன் செய்யவில்லை. ஆனால் அதற்கு மாறாகத் தங்களுடைய சமாதான முன்னணியில் சோவியத் ருஷ்யாவைச் சேர்த்துக் கொள்வதற்குப் பிரயத்தனம் செய்கிறது. ருஷ்யாவோ, பால்டிக் நாடுகளைப் புறக்கணித்து விடுவதனால் ஏற்படுகிற பாதகங்களை நன்குணர்ந்து, பின்லாந்து, லாட்வியா, எஸ்டோனியா, பின்லாந்து முதலிய நாடுகளைச் சேர்த்துக் கொள்ளாத எந்தச் சமாதான வட்டத்திலும் தான் சேர்ந்து கொள்ள விருப்பமில்லாததா யிருக்கிறது. இது விஷயத்தில், ருஷ்யா ஒரு படித்தான கொள்கையையே அநுஷ்டித்து வருகிறதென்று சொல்ல வேண்டும். இந்தக் கொள்கையைத்தவிர, ருஷ்யா, வேறு கொள்கையை அநுஷ்டித்திருந்தாலும் அது ஆபத்தாகவே இருக்கும். கிழக்குப் பக்கமாக ஹிட்லர் செல்லக் கூடாதென்ற பிரயத்தனத்தை நிறுத்துவதற்குச் செய்யப்படும் எந்த ஒப்பந்தத்திலும் பால்டிக் நாடுகளைச் சேர்த்துக் கொள்ளாமலிருக்க முடியாது.

ராணுவப் பாதுகாப்புச் சம்பந்தமான சாதகங்கள் ஒருபுற மிருக்கட்டும். லாட்வியாவையும், எஸ்டோனியாவையும் அவைகள் சுதந்திர நாடுகளாக இருக்க வேண்டு மென்பதற்காகவே காப்பாற்ற வேண்டுவது அவசியமாகும். இரண்டு சிறிய நாடுகளும் வலிவுள்ள குடியரசு நாடுகள். நிலச் சீர்திருத்தங்கள் பல இங்குச் செய்யப்பட் டிருக்கின்றன. இங்குள்ள ஜனங்களின் வாழ்க்கை அந்தஸ்து உயர்ந்திருக்கிறது. ஐரோப்பிய யுத்தத்தின் போது, மேற்குப் போர் முனையில் யுத்த ஆர்ப்பாட்டங்களெல்லாம் ஓய்ந்து போன பிறகு, லாட்வியாவையும் எஸ்டோனியாவையும் ஜெர்மானியர்கள் தாக்கிச் சூறையாடினார்கள். இந்த இரண்டு நாடுகளும், ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர் ருஷ்யாவின் ஆதிக்கத்தின்

கிழிருந்தன. தவிர, ஜெர்மன் நிலச்சுவான்தார்களின் செல்வாக்கு இங்கு நிரம்பி யிருந்தது. இதனால் லாட்வியர்களும், எஸ்டோனியர்களும் தங்கள் மனதிலுள்ள அபிப்பிராயங்களைச் சொல்ல முடியாதவர்களா யிருந்தார்கள். இதனால் இவர்கள், ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு, புதிய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்து, எல்லா வற்றையும் புதிய முறையிலேயே அமைக்க வேண்டியவர்களானார்கள்.

லாட்வியா அரசாங்கமும் எஸ்டோனியா அரசாங்கமும், முதன் முதல் நிலப் பிரச்னைக்குத்தான் பரிகாரந் தேட முயன்றன. ருஷ்யாவின் ஆளுகைக்கு இந்த இரண்டு நாடுகளும் உட்பட்டிருந்த காலத்தில், ஜெர்மானிய பணக்காரர்கள்தான், இந்த இரண்டு நாடுகளிலுள்ள வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றை யெல்லாம் தங்கள் வசப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ட்யூடானிய ஜாதியைச் சேர்ந்த இவர்கள் (ஜெர்மானியர்கள் ட்யூடானிய ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பது இங்குக்குறிப்பிடத்தக்கது.) ட்யூடன் ஜாதியைச் சேராதவர்களை ஒருவித வெறுப்புடனேயே நடத்தி வந்தார்கள். மற்றும், ட்யூடானிய ஜாதியைச் சேராத ஏழை விவசாயிகளைச் சுரண்டி வந்தார்கள். எஸ்டோனியா என்ற நாட்டில் மட்டும், ஜெர்மன் ஜாதியைச் சேர்ந்த அறுநூறு நிலச்சுவான்தார்களே மொத்த சாகுபடி நிலத்தில் பாதிபாகத்தைத் தங்கள் சுவாதீனத்திற்கு உட்படுத்திக் கொண்டிருந்தார்கள். லாட்வியா நாட்டிலும் ஏறக்குறைய இதே நிலைமைதான். எனவே இந்த இரண்டு நாடுகளும் சுதந்திர நாடுகளாக உருக்கொண்டதும் முதன் முதலாகச் செய்த வேலை, நிலச்சுவான்தார்களிட மிருந்த நிலங்களை யெல்லாம் பகிர்ந்து, எல்லாருக்கும் சமமாக வழங்கியதே யாகும். உதாரணமாக, லாட்வியாவில் ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர் ஜெர்மானியர்களுக்குச் சொந்தமாக சுமார் 2,700,000 ஏக்ராக்கள் இருந்தன. லாட்வியா சுதந்திர நாடான பிறகு, ஜெர்மானியர்களுக்குச் சுமார் 60,000 ஏக்ராக்களே கிடைத்தன. இந்த நிலச் சீர் திருத்தம், ஜெர்மானியர்களிடையே பெரிய பரபரப்பை உண்டு பண்ணியது; எதிர்ப்பும் உண்டாயிற்று.

லாட்வியா, எஸ்டோனியா முதலிய பால்டிக் பிரதேசங்களில் 248,000 ஜெர்மானியர்கள இருக்கிறார்கள். ஹிட்லர், 1933ம் வருஷம் ஜெர்மன் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னரேயே, நாஜி கட்சியின் கொள்கைகள் இங்குப் பரவலாயின. இக்கட்சிக்கு ஒரு செல்வாக்கும் ஏற்பட்டது. ஹிட்லரின் செல்வாக்கு, ஜெர்மனியில் அதிகரிக்க அதிகரிக்க பொதுவாக பால்டிக் பிரதேசங்களில்—சிறப்பாக லாட்வியா, எஸ்டோனியா நாடுகளில்—நாஜீயம் உரத்துச் சப்தமிட ஆரம்பித்தது. இந்த நாஜி கட்சிகளோடு, தங்கள் நிலங்களையும், பரம்பரை பாத்தியங்களையும் இழந்து விட்டிருந்த ஜெர்மன் நிலச் சுவான்தார்கள் சேர்ந்து கொண்டார்கள். எனவே, ஜெர்மனியின் ஏகாதிபத்தியம், கிழக்குப் பக்கமாக விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு இவர்கள் முன்னணிப் படைபோல் இருந்தார்கள்.

எனவே, இந்த நாடுகளில் நாஜீயத்தின் எதிரொலி அடிக்கடி கேட்கப்படுவதில் ஆச்சரியமில்லையல்லவா?

பொருளாதார விஷயத்திலும் ராணுவ விஷயத்திலும், தனக்கு அதிகமான சாதகங்கள் கிடைக்குமென்பதற்காகவே, ஹிட்லர், இந்த பால்டிக் பிரதேசங்களின் ஆதிக்கம் தன்னிடம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறான். லாட்வியாவிலிருந்தும், எஸ்டோனியாவிலிருந்தும், உணவுப் பொருள்களும், கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களும் கிடைக்குமென்று ஜெர்மனி எதிர்பார்க்கிறது. வாத்து, கோழி முதலிய பட்சி சாதிகள், கால் நடைகள், பன்றிகள், காய்கறிகள் முதலியவை தனக்கு அவசியம் தேவையென்பதை ஒவ்வொரு ஜெர்மானியனும் உணர்கிறான். இந்த இரண்டு நாடுகளிலும், ஜெர்மானியர்களின் முக்கிய உணவுப் பொருள்களில் ஒன்றாகிய வெண்ணெய் ஏராளமாகக் கிடைக்கிறது. மரம், தோல், சணல் முதலிய மூலப் பொருள்களும் இங்கு உண்டு. இவைகளையெல்லாம் தான் வாங்கிக் கொண்டு, தன்னால் தயாரிக்கப் பட்ட மற்றப் பொருள்களை, இந்த நாடுகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஜெர்மனி விரும்புகிறது. இத்தியாதி காரணங்களுக்காகவே, இந்த பால்டிக் பிரதேசங்களை ஜெர்மனி அவாவுகிறது.

தவிர, லாட்வியாவையும், எஸ்டோனியாவையும் தன் சுவாதீனத்திற்குட்படுத்திக் கொண்டு விட்டால்; தனக்கு ராணுவ சாதகங்கள் அதிகம் உண்டு என்று ஜெர்மனி கருதுகிறது. ருஷ்யாவை எதிர்த்துப் போராடுவதற்கு இந்த இரண்டு நாடுகளையும் பாசறைகள் மாதிரி உபயோகித்துக் கொள்ளலாம். லெனின்கிராட்டுக்கு நூறு மைல் தொலைவில் ஜெர்மனியின் ஆகாய விமானப்படைகள் தங்குவதற்குரிய இடங்களை லாட்வியாவிலும் எஸ்டோனியாவிலும் ஏற்படுத்திக் கொள்ளலாம். பின்லாந்து, ஜெர்மனியின் ஆதிக்கத்துக் குட்பட்டு விடுமானால், பின்லாந்து வளைகுடாவும் அதன் ஆதிக்கத்துக்குட்பட்டு விடும். இதன் மூலமாக, ருஷ்யக்கப்பற் படையை ஓரிடத்திலேயே அமுக்கி விடலாம்.

இந்த மாதிரியான நோக்கங்களோடுதான், லாட்வியா, எஸ்டோனியா முதலிய பால்டிக் நாடுகளில் ஜெர்மன் பிரசாரம் நடைபெறுகிறது. இரண்டு நாடுகளிலுமுள்ள ஜெர்மானியரிடையே ரேடியோ மூலம் தீவிரமான நாஜி பிரசாரம் நடைபெறுகிறது. ஜெர்மானியர்கள் அனைவரும் முக்கியமான நகரங்களிலேயே இருப்பதால், இந்த நாஜி பிரசாரம் சுலபமாகவும் திறமையாகவும் நடைபெறுகிறது. இதனால் ஜெர்மானியர்கள், தங்கள் செல்வாக்கையும் அதிகப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஹிட்லரின் ஏகாதிபத்தியக் கொள்கைப்படி, லாட்வியாவிலும், எஸ்டோனியாவிலும் ஜெர்மானியர் முக்கிய ஒரு சிறு பான்மைத் தொகுதியினராக வசிப்பதால், இந்த நாடுகளின் அரசியல் நிருவாகத்தில், அவசியம் நேரிடுகிறபோது தலையிட ஹிட்லருக்கு ஓர் சந்தர்ப்பமுண்டு. பால்டிக் நாடுகளைக் கைப்பற்றிக்கொள்ள ஹிட்லர் விரும்பினால், ஜெக்கோஸ்லோவேகியாவில் நடித்த நாடகத்தையே

அவன் திருப்பி நடிக்கவேண்டும். லாட்வியர்களும், எஸ்டோனியர்களும், பரிதபிக்கத் தக்க ஜெர்மானியர்களைப் பெரிதும் துன்புறுத்துகிறார்களென்றும், ஜாதிய சம்ரட்சணைக்காகவே இந்த இரண்டு நாடுகளையும் ஆக்ரமித்துக் கொள்ள வேண்டுவது அவசியமாயிருக்கிறதென்றும் சாக்குச் சொல்லி, ஜெர்மானியக் கொடியை லாட்வியாவிலும் எஸ்டோனியாவிலும் நிலை நாட்டலாமல்லவா? அல்லது, ருஷ்யாவோடு சேர்ந்து கொண்டு, தனக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்கின்றன வென்று, லாட்வியா மீதும் எஸ்டோனியா மீதும் ஜெர்மனி குற்றப்பத்திரிகை படிக்கலாம். காரியங்கள் எப்படி நடைபெறுமோ தெரியாது.

லாட்வியர்களையும் எஸ்டோனியர்களையும் பொறுத்தமட்டில், தங்களைச் சுற்றியுள்ள நாடுகள், தங்கள் மீது அநுதாபங் காட்டாமல் ஒதுங்கி இருந்தாலே நல்லது என்று கருதுகிறார்கள். இவர்கள், மிகுந்த சிரமப் பட்டுத்தான், தங்கள் சுதந்திரத்தைச் சம்பாதித்தார்கள். எனவே, அந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் விஷயத்திலும் சிரமப்படத் தயாராயிருக்கிறார்கள். மற்ற நாடுகள் இவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யாமல் ஒதுங்கி யிருந்தால், நாஜி துருப்புகளோடு கைகலந்து போராட இவர்கள் தயார் தான். ஆனால் ஆஸ்திரியா, ஸ்பெயின், ஜெக்கோஸ்லோவேகியா ஆகியநாடுகள் விஷயத்தில் பிரான்ஸும் பிரிட்டனும் நடந்து கொண்டது, இவர்கள் மனத்தில் நன்றாகப் பதிந்திருக்கிறது. ஆகையால், மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள், பாசிஸ சக்தியைச் சமாதானப் படுத்திக் கொண்டு செல்கிற முறையானது, எங்கே பால்டிக் கடலோரமாகவும் வந்து விடப் போகிறதோ வென்று இவர்கள் கவலையுட னிருக்கிறார்கள். இ. இ.

மோட்டார் உற்பத்தி

1938ம் வருஷத்தில்

எந்தநாட்டில்?	எத்தனை வண்டிகள்?
அமெரிக்கா	2,490,000
கிரேட்பிரிட்டன்	445,000
ஜெர்மனி	342,000
பிரான்ஸ்	223,000
ருஷ்யா	215,000
கானடா	166 000
இத்தலி	69,000
மொத்தம்	3,950,000



1939

ஜூன்

29 பால்டிக் பிரதேசத்தில் போலந்துக்குள்ள கௌரவஸ்தானத்தை விட்டுக் கொடுக்க அது தயாராயில்லை யென்பதைக் காண்பிக்கும் பொருட்டு இன்று கிட்னியா என்ற துறைமுகப் பட்டினத்தில் ஒரு பெரிய அணிவகுப்பு நடை பெற்றது. சுமார் 70000 போலிஷ்காரர் இதில் கலந்து கொண்டார்கள்.

ஜெர்மனி முதலிய சர்வாதிகார நாடுகள், இனியும் மற்ற நாடுகளை ஆக்ரமித்துக் கொள்ள முயற்சி செய்யுமானால், பிரிட்டிஷ் அரசாங்கம் தனது படை பலமனைத்தையும் உபயோகிக்கும் என்று பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியான லார்ட் ஹாலிபாக்ஸ் ஒரு கூட்டத்தில் பேசினார்.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் நிருவாக சபையினின்று தாங்கள் விலகிக் கொண்டதற்குக் காரணங் காட்டி அச்சுத பட்டவர்த்தன், ராம் மனோஹர லோஹியா, அசோக மேத்தா, எம். ஆர். மஸானி ஆகியோர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

30 டான்ஸிக் பிரதேசத்தில் ஜெர்மனியிலிருந்து யுத்த ஆயுதங்கள் முதலியன வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

பெங்களூரிலுள்ள இந்தியன் ஸைன்ஸ் இன்ஸ்டிடியூட்டுக்கு டாக்டர் கோஷ் டைரெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜூலை

1 டான்ஸிக் பிரதேசத்தில் நாஜி கட்சியினர் யுத்த முஸ்தீப்புகள் பலமாகச் செய்து வருகின்றனர்.

டான்ஸிக் விஷயத்தில் பிரிட்டனும் பிரான்ஸும் தலையிடுமானால், பெரிய ஐரோப்பிய யுத்தம் உண்டாகும் என்று இத்தலி தேசத்துப் பத்திரிகைகள் கூறுகின்றன.

ஒரு மனிதனுடைய எதிர்ப்பு இருந்தால் கூட, வந்தே மாதர கீதத்தைப் பாடவோ, தேசீயக் கொடியை நாட்டவோ கூடாதென்று காந்தியடிகள் தமது 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதி யிருக்கிறார்.

முன்னணிக் கட்சியின் பம்பாய்க் கிளையை இன்று சுபாஷ் சந்திர போஸ் திறந்து வைத்தார். அப்பொழுது அவருக்குப் பதினாயிரம் ரூபாய் கொண்ட ஒரு பண முடிப்பு அளிக்கப்பட்டது.

பர்ஷியா தேசத்து அரசர் முடி துறந்து விடுவாரென்றும் அவருடைய மகன் —தற்போது எகிப்திய ராஜ குமாரியை விவாகஞ் செய்து கொண்டவர்-பட்டத்துக்கு வருவாரென்றும் டெஹ்ரான் செய்தியொன்று கூறுகிறது.

2 பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் ஏற்பட்டால், இந்தியா அதில் கலந்து கொள்ள வேண்டுமென்றும், பிரிட்டிஷ் படைகளும் பிரெஞ்சுப் படைகளும், ஒரு தலைமையிலேயே யுத்தஞ் செய்யுமென்றும் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆங்கிலோ

பிரெஞ்சு தளகர்த்தர்கள் மகா நாட்டில் முடிவு செய்யப்பட்டதென்று ஒரு சிம்லா செய்தி கூறுகிறது.

1939ம் வருஷம் ஜூன் மாதம் 30ந் தேதியோடு முடிவாகிற அரை வருஷத்தில் பாலஸ் தீனத்தில் 643 பேர் கொல்லப்பட்டனர். 700 பேர் காயமடைந்தனர்.

3 முன்னணிக் கட்சியின் காரியக் கமிட்டி அமைந்து விட்டது. ஐ. சி. எஸ். பதவியிலிருந்து ராஜீநாமா செய்த எச். வி. காமத், இதற்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

டான்ஸிக் பிரச்னையைப் பற்றி காமன்ஸ் சபையில் ஸ்ரீ சேம்பர்லேன், ஒரு யாதாஸ்து சமர்ப்பித்தார்.

ஜெயப்பூர் சிறையிலுள்ள சேத் ஜமுனாலால் பஜாஜ், சிறைச் சாலையில் தமக்கேற்படும் செலவுகளுக்காக சமஸ்தான அரசாங்கத்தாரிடமிருந்து ஒரு காசு உதவி கூடப் பெற முடியாதென்று கூறிவிட்டார்.

ஸர். மோர் வினியோகத்தோடு, லாகூரில் ஒரு சீர் திருத்தக் கல்யாணம் நடை பெற்றது.

4 டைன்ஸ்டின் நகரத்து முற்றுகை விஷயத்தில் ஜப்பானிய அரசாங்கத்தார் பலமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று டோக்கியோ நகரத்தில் ஜப்பானியர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

அபிசீனியாவில் வசிக்கும் 1300 இந்தியர்களை, இத்தாலிய அரசாங்கத்தார் கேவலமாக நடத்துகிறார்களென்று அ. இ. கா. கமிட்டி காரியாலயத்திலிருந்து ஒரு செய்தி கூறுகிறது.

சுபாஷ் சந்திர போஸ், சென்னைக்கு விஜயஞ் செய்கிறபோது அவருக்கு ஒரு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்க வேண்டுமென்று சென்னை நகர சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

5 ருஷ்ய-மஞ்சூகோ எல்லைப்புறத்தில், 14 சோவியத் ஆகாய விமானங்களை ஜப்பானியர்கள் சுட்டு வீழ்த்தி விட்டார்கள்.

பாலஸ்தீனத்து மாண்டேட் அதிகாரத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் விட்டுக் கொடுக்கப் போவதில்லையென்று காமன்ஸ் சபையில் கூறப்பட்டது.

சீன, ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானியர்கள், இத்தாலியர்கள் சிலரைத் தங்கள் படையில் சேர்த்துக் கொண்டு வருகிறார்களென்று ஒரு செய்தி கூறுகிறது.

6 தனிப்பட்ட காங்கிரஸ் வாதிகள், சத்தியாக்கிரகம் தொடங்கக் கூடாதென்றும், மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும் மாகாண மந்திரிச் சபைக்கும் எவ்வித தொடர்பும் இருக்கக் கூடாதென்றும் அ. இ. கா. கமிட்டி நிறைவேற்றிய தீர்மானங்களைக் கண்டித்து 9-7-39ல் அகில இந்தியா வெங்கணும் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று சுபாஷ் சந்திர போஸ் விடுத்துள்ள அறிக்கையைக் கண்டித்து பாபு ராஜேந்திர பிரசாத் ஓர் அறிக்கையை விடுத்திருக்கிறார்.

ருஷ்யப் படைகளுக்கும் ஜப்பானியப் படைகளுக்கும் மஞ்சூகோ எல்லைப் புறத்தில் யுத்தம் ஏற்பட்டதென்றும், ஜப்பானியர்களில் சுமார் 800 பேர் கொல்லப் பட்டார்கள் என்றும் ஒரு ருஷ்ய செய்தி கூறுகிறது.

7 ஆங்கிலோ-ருஷ்ய ஒப்பந்த சம்பந்தமான பேச்சுகள் மாஸ்கோ நகரத்தில் நடை பெற்று வருகின்றன.

சீன-ஜப்பானிய யுத்தம் ஆரம்பித்து இரண்டு வருஷங்கள் முடிந்து மூன்றாவது வருஷம் பிறக்கிறது.

இன்று, பம்பாயில் போஸூம் ஜின்னாவும் சந்தித்துப் பேசினார்கள்.

காந்தியடிகள், தமது பரிவாரத்துடன் வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தின் சுற்றுப் பிரயாணத்தை முன்னிட்டு

இன்று அப்பாடாபாத்தில் வந்திறங்கினார்.

சீன-ஜப்பானிய யுத்தத்தின் இரண்டாவது வருஷக் கொண்டாட்டம் ஜப்பான் முழுவதும் கொண்டாடப்பட்டது.

8 தேசத்தின் தற்போதைய நிலைமையில் அஹிம்சா தர்ம முறையில் பொதுஜன இயக்கத்தை ஆரம்பித்தல் கூடாதென்று காந்தியடிகள் 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார்.

ஜப்பான் விஷயத்தில் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்ரீமதி சியாங்-கை ஷேக் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

வங்காள மாகாணத்துச் சிறைகளிலுள்ள அரசியல் கைதிகள், தங்களை விடுதலை செய்யாததன் காரணமாக உண்ணாவிரதம் அநுஷ்டிக்கத் தொடங்கி யிருக்கின்றனர்.

டான்ஸிக் பிரதேசமானது, ஜெர்மனிக்கு அப்புறப்பட்டதாயும், போலந்தின் நிருவாகத்திற்குட் பட்டதாயும் இருக்க வேண்டுமென்று போலந்து அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் இன்று ஹரிஜனங்கள் பிரவேசித்தார்கள்.

9 அ. இ. கா. கமிட்டி தீர்மானங்களைக் கண்டித்து இந்தியாவின் பல பாகங்களிலும் கூட்டங்கள் நடைபெற்றன. சுபாஷ் போஸ் பம்பாயில் கூடிய கூட்டத்தில் பேசினார்.

10 போலந்தின் சுதந்திரத்திற்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமானால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதனைக் காப்பாற்றிக் கொடுப்பர் என்று சேம்பர்லேன் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் கூறினார்.

பிரபல உடற்கூறுவல்லுநரான ஹாவ்லக் எல்லிஸ் என்பார் இறந்து போனார்.

தம்மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாலும் தாம் அதற்காகத் தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்கப் போவதில்லை யென்று புனாவில் ஒரு கூட்டத்தில் சுபாஷ் போஸ் பேசினார்.

11 இத்தலியின் ஆதிக்கத்திலுள்ள டைரோல் என்ற நகரத்திலுள்ள எல்லா அந்நிய நாட்டார்களும் உடனே வெளியேறி விடவேண்டுமென்று இத்தாலிய அரசாங்கம் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறது. இது காரணமாக இருநூறு பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். மற்ற வல்லரசுகள், இதனைக் கண்டித்து இத்தாலிய அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கின்றன.

12 ஸர் ஸர்வேபல்லி ராதா கிருஷ்ணன். பிரிட்டிஷ் அகாடமியில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

ஆங்கிலோ-ருஷ்ய ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சுகள் இன்னும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன வென்று சேம்பர்லேன் காமன்ஸ் சபையில் கூறினார்.

பூகியன் மாகாணத்திலுள்ள துறைமுகங்களை ஆகாய விமானக் குண்டுகள் போட்டுத் தாக்கப் போவதாக ஜப்பான் எச்சரிக்கை செய்திருக்கிறது.

13 டான்ஸிக்கில் நாஜி கட்சித் தலைவர்களாயுள்ள ஹெர் பாரஸ்டர், ஹெர் ஜாஸ்கே என்ற இரண்டு பேரையும் ஹிட்லர் இன்று பெர்லினில் சந்தித்துப் பேசினார்.

அலெக்ஸாண்ட்ரெட்டா துறைமுகத்தை, தன்னைக் கேளாமல் துருக்கிக்குக் கொடுத்து விட்டதைப்பற்றிக் கண்டித்து, இத்தாலிய அரசாங்கம் பிரெஞ்சு அரசாங்கத்திற்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறது.

எந்த விதமான சட்ட சபைத் தேர்தலிலும் பள்ளிக்கூட ஆசிரியர்கள் கலந்து கொள்ளக் கூடாதென்று சென்னை அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

14 டோக்கியோ நகரத்தில் பிரிட்டிஷாருக்கு விரோதமான கிளர்ச்சிகள் நடைபெற்றன. பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்திற்கு முன்னர் நாலாயிரம் ஜப்

பானியர்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஐரோப்பிய யுத்தம் நடைபெறுமானால் ஸ்பெயின் நடுநிலைமை வகிக்கும் என்று தளபதி பிராங்கோ கூறினார்.

15 நைஜாம் சமஸ்தானத்தில் புதிய சீர்திருத்தங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. இதன்படி 85 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு சட்டசபை அமைக்கப்படும். இதில் உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தினர்களே பெரும்பான்மையோராயிருப்பர்.

பண்டித நேரு இன்று புனாவிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்டார். வழியில் சென்னையில் தங்கினார். இலங்கை இந்தியர்களுக் கேற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்குப் பரிகாரந்தேடிக் கொடுக்க, அ. இ. கா. கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை யொட்டியே இவர் சென்றிருக்கினார்.

டீன்ஸ்டீன் முற்றுகை சம்பந்தமாக பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கும் ஜப்பானியப் பிரதிநிதிகளுக்கும் டோக்கியோவில் சமரஸப் பேச்சுகள் நடைபெறுகின்றன.

சமஷ்டியில் தங்களுக்குச் சேர விருப்பமில்லை யென்று சுமார் முப்பது சமஸ்தானங்கள், மன்னர் பிரானின் பிரதிநிதிக்குத் தெரிவித்திருக்கின்றன.

16 இன்று பண்டித நேரு, கொழும்புவில் வந்திறங்கினார். உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மன்னருடைய ஆதீனத்திலிருக்கும் சுமார் 90 கோயில்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப் பட்டிருக்கிறது.

பம்பாய் மதுவிலக்குத்திட்டத்தைக் கண்டித்து சுபாஷ் போஸ் விடுத்திருந்த அறிக்கைக்கு சர்தார் படேல் ஒரு மறுப்பு அனுப்பியிருக்கிறார்.

17 இத்தலியின் அந்நிய நாட்டு மந்திரியான தளபதி சியானோ, ஸ்பெயினுக்கு விஜயஞ் செய்து விட்டு இன்று திரும்பினார்.

பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளும் போலந்து ராணுவ அதிகாரிகளும் வார்ஸா நகரத்தில் கலந்து பேசினார்கள்.

பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் பொதுப் படையாயுள்ள பாதுகாப்பு அம்சங்களைப் பற்றி சிம்லாவில் ராஜப் பிரதிநிதியுடன் பர்மா கவர்னரான ஸர் ஆர்ச்பால்ட் காக்ரேன் கலந்து பேசினார்.

யூகோஸ்லேவியாவின் ரீஜெண்டான பால் அரசரும் அவர் மனைவியும் இன்று லண்டனுக்கு விஜயஞ் செய்தனர்.

18 பூகியன் மாகாணத்தில் இன்னும் மூன்று துறை முகங்களை மூடிவிடப் போவதாகவும், இவற்றில் எந்த அந்நிய நாட்டுக் கப்பல்களும் பிரவேசிக்கக் கூடாதென்றும் ஜப்பானிய அரசாங்கத்தார் எல்லா அந்நிய அரசாங்கங்களுக்கும் ஓர் எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

இரண்டு வருஷத்து யுத்தத்தின் பயனாக, சீனாவின் ஆள்பலம் சிறிதுகூடக் குறையவில்லை யென்று சீனாவின் உதவி தளகர்த்தர் கூறினார்.

19 லண்டனில் அடிக்கடி வெடி குண்டுகள் எறியப்பட்டு பல சேதங்கள் உண்டாகின்றன. ஐரிஷ் குடியரசு சேனையினால் ஏற்படும் இந்தப் பலாத்கார இயக்கத்தை அடக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பார்லிமெண்டில் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கின்றனர்.

டீன்ஸ்டீன் முற்றுகை சம்பந்தமாக பிரிட்டிஷ் ஸ்தானீகருக்கும் ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரிக்கும் இன்று மீண்டும் பேச்சு வார்த்தைகள் தொடங்கப் பட்டன.

பாலஸ்தீனத்தைப் பற்றிப் பல பொய்ச் செய்திகள் வெளி வருகின்றன வென்றும், இவையனைத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மறுப்பதாகவும் மால்கோம் மக்டோனல்ட் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் கூறினார்.

20 போலிஷ்கார சுங்கவரி உத்தியோகஸ்தர் ஒருவரை, டான்ஸிக் சுங்கவரி உத்தியோ

கஸ்தர் ஒருவர் போலந்து எல்லையில் சுட்டுக் கொன்று விட்டார்.

ருஷ்ய அரசாங்கத்தின் கோரிக்கைகளை ஒருவிதமாகப் பூர்த்தி செய்து ஆங்கிலோ-பிரெஞ்சு-ருஷ்ய ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டுமென்று பிரெஞ்சு அரசாங்கத்தார் தீர்மானத்திருப்பதாகத் தெரிகிறது.

21 ஜப்பானிய கடற்படையை இன்று ஜப்பானிய சக்கரவர்த்தி பார்வை யிட்டார்.

போலந்தின் சுங்கவரி உத்தியோகஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டதைக் குறித்து போலந்து அரசாங்கம், டான்ஸிக் நிருவாக அதிகாரிகளுக்குக் கண்டன அறிக்கை யொன்று விடுத்திருக்கிறது.

ஸ்பெயின் யுத்தத்தில் தளபதி பிராங்கோவின் முக்கிய தளகர்த்தர்களில் ஒருவரா யிருந்த டிலானே என்பார், ஏதோ தவறான வார்த்தைகள் சொன்னா ரென்பதற்காக உத்தியோகத்தினின்று விலக்கப்பட்டார்,

22 ஜெக்கோஸ்லோவேகியாவின் ஒரு பாகமாயிருந்த ஸ்லோவேகியா இப்பொழுது குடியரசாக்கப்பட்டது,

23 டான்ஸிக்கில் யுத்த முஸ்தீப்புகள் நடைபெறுவதாக மேற்படி பிரதேசத்தின் நாஜி கட்சித் தலைவரான ஹெர் பாரஸ்டர் கூறினார்.

ரஜாவில் சென்றுள்ள பர்மா கவர்னர் ஸர் ஆர்ச்சி பால்ட் காக்ரேன் லண்டன் வந்து சேர்ந்தார்.

24 காங்கிரஸின் சார்பாக இலங்கைக்குத் தூது சென்ற பண்டித நேரு இன்று திரும்பி சென்னை மார்க்கமாகச் சென்றார். இந்தோ-சிலோன் சம்பந்தம் சமரஸமாக முடியுமென்று தாம் நம்புவதாக இவர் கூறினார்.

இந்திய அரசாங்கத்தின் ஏஜெண்டாக பர்மாவில், திரு. ஹட்சிங் என்ற ஓர் ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

25 வங்காளச் சிறைகளில் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகள் உடம்பு அசௌகரிய மொன்றுமில்லாமல் இருக்கிறார்கள் என்று வங்காள மாகாண அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

25 பிரிட்டிஷ் லார்ட்ஸ் சபையில், காலஞ்சென்ற லார்ட்சின்ஹாவின் புத்திரருக்கு ஒரு ஸ்தானம் உண்டா இல்லையா வென்பது இதுகாறும் வழக்கிலிருந்தது. இப்பொழுது ஸ்தானம் உண்டு என்று தீர்ப்புச் செய்யப்பட்டது.

26 வங்காள மாகாண அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் பொருட்டு அகில இந்திய தினம் ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சுபாஷ் போஸ், பாபு ராஜேந்திர பிரசாத்துக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

லண்டன் ரெயில்வே ஸ்டேஷனொன்றில் ஒரு வெடி குண்டு வெடித்தது. பதினைறு பேருக்குச் சேதம்.

1911ம் வருஷம், ஜப்பானுடன் தான் செய்துக் கொண்டவியாபார ஒப்பந்தத்தை ரத்துசெய்து விட்டதாக அமெரிக்கா அரசாங்கம் அறிவிக்கிறது.

சட்டம்

—நா. ல. சி.

1 மக்கள் மனத்தினிலே வாழ்ந்த என்னையே
மதியிழந்தேயவர்கள் விலக்கியதால்
பக்கம் பல்லாயிரம் படைத்தபெரும்
பாரமுள்ள புத்தகங்களாகிவிட்டேன்.

2 வேதங்களென்னினும் விளங்கிவிடும்
மேதாவிகள் இருவர் சேர்ந்துவிட்டால்
வாதங்கள் செய்தென்னைக் காண்பதற்கே
மாதங்கள் வருடங்கள் ஆகிவிடும்.

3 வழக்கை விலக்கவந்த என்னை எடுத்தே
வாய்ச்சண்டை போடுவதைக்கண்டதிலையோ
வழக்குப்பேசித் தலைவலி யெடுக்கும்
மண்டை வறண்டு மேஜையுடைந்து விடும்.

4 வாசலில் நிற்குமொரு சேவகன் முதல்
வக்கீல் எழுத்தாளர் யாவருக்குமே
பேசியும் பேசாதும் கொடுத்து விடும்
பெரும்பொருள் என்னை நீங்கள்பெறும்விலையே.

5 மனத்தில் உணர்ந்தவர்கள் என்னை மறுத்தால்
மக்கள் நலம்பெருக வாழ்ந்திடவே
நினைப்பிலாதெதிர்த்து நின்று விட்டால்
நிலை குலைந்தேயுலகம் அழிந்துவிடும்.

6 நெஞ்சில் இருந்த என்னை விலக்கி விட்டீர்
நீதியுணர்ச்சியிலை நேர்மையுமில்லை.
கொஞ்சமேனும் குறையென்னைக் கூறுவதேன்
குற்றம் புரிந்தவர்கள் நீங்களேயா!

ஹைதர் அலியின் உயரிய தன்மைகள்

—வி. எம். நாகேசுவர சாஸ்திரி

மைசூர் இராஜ்யத்தைத் திறமையாக ஆண்ட ஹைதர் அலி (1728—1782)யைப்பற்றி பல தவறான எண்ணங்கள் ஏற்பட்டிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். ஹைதரிடத்தில் நிருவாகத்திறமையும் சமரஸ ஞானமும் சிறந்து விளங்கின என்பதற்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. தமது சுய முயற்சியினாலே அனைவரும் வியக்கத்தக்க வண்ணம் முன்னேற்றத்தை யடைந்தவர் ஹைதர் அலி.

ஹைதர் மிகுந்த தாழ்ந்த நிலையிலிருந்து தம்முடைய சுய முயற்சியினால் உயர்ந்த நிலைக்கு வந்தவர். இவ்விஷயத்தில் இவருக்கு இணையாவார் ஒருவரும் இல்லையென்று சொல்லலாம். இராஜ்ய நிருவாகத்தை ஏற்றுக்கொண்ட பிறகு இவர் முழுப்பெயர் 'ஷம்ஸ்-உல்-முல்க், அமீர்-உத்-தௌலா, நவாப் ஹைதர் அலி கான் பஹதூர் ஹைதர்ஜங், கர்நாடக பாலகாட் நவாப்' என்பதாகும். கூரிய அறிவிலும் உலக அனுபவத்திலும் ஹைதர் மிசமிஞ்சியவராக இருந்தார். ஹைதருக்கு எழுதவோ படிக்கவோ தெரியா விட்டாலும் தம்முடைய ஞாபக சக்தியினாலும், நிருவாகத் திறமையினாலும் எல்லா விஷயங்களையும் ஒழுங்காகக் கவனித்துக் கொண்டு வந்தார். இவர் சபையிலிருந்த பேரறிஞர்களெல்லாரும் இவரிடத்தில் விளங்கிய புத்தி கூர்மையை வியந்து பாராட்டினார்கள். ஹைதர் அநாவசியமான விஷயங்களைப்பற்றித் தம் ஆஸ்தானிகர்களுடன் பேசுவது வழக்கமில்லை. ஆனால் பேசுகிற வரை, மிகுந்த ஒழுங்காக அழகான பாஷையில் பேசுவார். அரசாங்க சம்பந்தமான தஸ்தவேஜுகளில் ஹைதருடைய கையெழுத்து அவசியம் வேண்டியிருந்ததால, மிகுந்த சிரமப்பட்டு ஒரே ஓர் எழுத்தைக் கற்றுக்கொண்டார் என்று சொல்லப்படுகிறது. ஹைதர், தாம் எழுதப்படிக்கத் தெரியாதவரா யிருந்த போதிலும், தம் பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் அதிக கவனஞ் செலுத்தி வந்தார். அவர்களுக்குத் தகுந்த ஆசிரியன்மார்களையும் சரியான ஊழியர்களையும் நியமித்து, அவர்கள் கல்வி, ஒழுக்கம், இராஜநீதி முதலிய எல்லா அம்சங்களிலும் விருத்தியாகும்படி கவனித்து வந்தார்.

* * *

ஹைதர் மிகுந்த சுறுசுறுப்புள்ளவர்; விடா முயற்சியுடையவர். காலை

முதல் இரவுவரை ஒருகணமாவது அவர் சோம்பேறித் தனத்துடன் இருந்ததில்லை. எல்லாம் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்பதில் அவர் கண்ணுங் கருத்துமாயிருந்தார். இங்ஙனமே தம் இலாகா தலைவர்களும் பிற உத்தியோகஸ்தர்களும் சுறு சுறுப்பாகவும் விடா முயற்சியுடனும் நடந்து கொள்ள வேண்டுமென்று எதிர் பார்த்தார். எந்த உத்தியோகஸ்தராவது தங் கடமையில் கவனக் குறைவாக இருப்பதாகத் தென்பட்டால், அவர்களை வரவழைத்து, அவர்கள் செய்த குற்றத்திற்குத் தகுந்தபடி தண்டனையளிப்பார். 'உங்களுடைய நாணயத்திலும், சத்தியத்திலும் நம்பிக்கை கொண்டு உங்களிடத்தில் இந்த வேலையை ஒப்புவித்தோம். அதை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்?' என்று சொல்லியே சவுக்கடி தண்டனை செய்வது வழக்கமாம். இங்ஙனம் பல உத்தியோகஸ்தர்கள் இந்தத் தண்டனைக் குட்பட்டார்கள். ஒரு தரம், ஓர் உத்தியோகஸ்தன் தன் பொறுப்பை உணராமல், ஊழலாக நிருவாகத்தை நடத்தி, அதனால் பல கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது ருஜுவாகிவிடும் பட்சத்தில், திரும்பவும் அதே ஸ்தானத்திற்கு அந்த உத்தியோகஸ்தன் நியமிக்கப்படுவதில்லை. அறிஞர்களும், நாணயஸ்தர்களாகவுமுள்ளவர்களைப் பார்த்தே அவர்களுக்குப் பொறுப்பான உத்தியோகங்களைக் கொடுத்தார்.

* * *

அரசாங்கத்தினுடைய பெரிய சிறிய முதலிய எல்லா விஷயங்களும் ஹைதருடைய நேரான மேற்பார்வையிலேயே நடைபெறும். துருப்புகளுக்குக் கொடுக்கப்படும் தோற்சாமான்கள், கூடார வகையறாக்கள் முதலிய யாவும் அவருடைய அங்கீகாரம் பெற்ற பிறகே கார்க்கானாவில் வைக்கப்படும். ஹைதருக்குக் கைரேகை சாஸ்திரத்திலும் சாமுத்திரிகா லட்சண சாஸ்திரத்திலும் பூரண ஞானமிருந்தது. இதனால், சேனையில் வந்து சேருகிறவர்களுடைய யோக்கியதை, திறமை, அவர்கள் உண்மையாக விசுவாசத்துடன் இருப்பார்களாவென்பது முதலியவற்றை அறிந்து கொள்ளச் சௌகரியமாயிருந்தது. மற்றும் குதிரைகளை வாங்கும்போதும், அவைகளில் உத்தம ஜாதிக்குதிரைகளைப் பொறுக்கி எடுத்து வாங்குவதற்கும் இந்த ஞானம் சௌகரியமாயிருந்தது. நவரத்தினங்கள் முதலியவற்றைப் பொறுக்கி வாங்குவதற்கும் அவைகளுக்குச் சரியான மதிப்பிடுவதற்கும் ஹைதருக்கு நல்ல ஞானமிருந்தது. ஒரே சமயத்தில் பல விஷயங்களைக் கவனிக்கும் ஆற்றல் ஹைதருக்கு மிகுந்திருந்தது. ஆயுதங்கள், யுத்தக்கருவிகள் முதலியவற்றின் தன்மையையும், அவைகளை எவ்வெப்பொழுது எப்படி உபயோகிக்க வேண்டுமென்ற ஞானமும் ஹைதருக்குப் பூரணமாக இருந்ததால், யுத்தகாலங்களில் இவர் அதிக திறமையாக நடந்து கொண்டான் என்பதில் ஆச்சரியமில்லை.

ஹைதர் ஊர்வலமாகச் செல்வது மிகக் கம்பீரமாக இருக்கும். பல ஐரோப்பியர்களைக் கொண்ட குதிரைப் படையானது முன்னே செல்லும். பிறகு ஐக்

நூறு ஒட்டகங்களின் மீது வீரர்கள் செல்வார்கள். பிறகு அழகாக அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானைகள் செல்லும். பிறகு தீப்பறவையின் சிவப்பு, கறுப்பு நிறமுள்ள இறகுகளை அலங்கரித்துக் கொண்டும், ஈட்டிகளை எடுத்துக் கொண்டும் இரண்டு ரெஜிமெண்டு அபிசீனியர்கள் செல்வார்கள். பிறகு, மணிகள் கட்டப்பட்ட ஈட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மிக அழகான உடுப்புகளுடன் காலாட்படைகள் செல்லும். பிறகு, பிரபுக்கள், ஆஸ்தானிகர்கள் முதலியோர் அழகான உடையுடன் வருவார்கள். பிறகு ஹைதரின் சொந்தக் குதிரைகள், தத்தம் குசினிக்காரருடன் வரும். பிறகு அரண்மனையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், தத்தம் மார்புகளில் பொன் சங்கிலி தரித்தவர்களாய் வருவார்கள். பிறகு பெத்னூர் பிரதேசத்தில் பிடிக்கப்பட்ட ஒரு வெள்ளை யானை, அழகாக அலங்கரிக்கப்பட்டு அதன்மீது ஹைதர் வருவார். பின்னடி யானைகளும், அரச சின்னங்களைக் கொண்ட ஐந்து யானைகளும், அதன் பின்னடி இரண்டு ரெஜிமெண்டு அபிசீனியக் குதிரைப் படைகளும், அதன் பிறகு காலாட் படைகளும் வரும்.

* * *

ஹைதரின் தர்பார் மிகுந்த ஆடம்பரமாக இருந்தது. தர்பாரின்போது, ஹைதர் தவிர மற்றவர் பேசுவதற்கு அஞ்சுவார்கள். அவர் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்ய விரும்பினால், அவரே உத்திரவு செய்வார். மற்றவர்கள், சரியென்று சொல்ல வேண்டியதைத்தவிர வேறு வழியில்லை. அதிகமாகப் பேசுகிறவர்களைக் கண்டால் ஹைதருக்குப் பிடிக்கிறதில்லை. இராஜ்ய நிருவாக விஷயத்தைப் பற்றியும், யுத்தத்தில் உபயோகிக்கப்படும் ஆயுதங்கள், குதிரைகள், யானைகள் முதலியவைகளைப் பற்றியும், உற்சாகத்தை உண்டு பண்ணக் கூடிய மருந்துகளைப் பற்றியுமே அவர் சபைகளில் அதிகமாகப் பேசப்படும். சபையில் இன்னின்னார் இன்னின்ன நோக்கத்துடன் பேசுகிறார்களென்பதையும், அவர்களுடைய மனோபாவம் இன்னதென்பதையும் அவர் சுலபமாக அறிந்து கொள்வார். அவரவருடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி அவரவர் இருக்க வேண்டுமென்பது ஹைதரின் அபிப்பிராயம். ஹைதர், தம் ஆஸ்தானிகர்களில் எவரேனும் அநாவசியமாகவோ, அல்லது மரியாதையற்ற விதமாகவோ வார்த்தையாடினால் அதைப் பொறுத்துக் கொண்டு போவது வழக்கம். ஆனால் அநாவசியமான அல்லது மூடத்தனமான பெருமையாவது, கர்வத்தையாவது அவர் கொண்டிருக்கவில்லை. தம்முடைய இராஜ்யத்தின் எல்லா முக்கிய நகரங்களிலும் இரகசிய ஒற்றர்களை வைத்து இராக்காலந் தோறும் வீதிகளைச் சுற்றி வரும்படி உத்தரவு செய்திருந்தார். இவர்கள் மூலமாக எல்லா ஊர் விஷயங்களையும் இவர் அறிந்து கொண்டிருந்தார். ஹைதர் சில சமயங்களில், இராக் காலங்களில் ஒரு கம்பளியை மேலே போர்த்துக் கொண்டு இரகசியமாக வீதிகளுக்குச் சென்று, ஜனங்களுடைய உண்மையான நிலைமையை அறிந்து வருவார். இதே மாதிரி வெளியூர்களுக்குச் செல்லும்போதும் செய்வார். ஹைதருக்கு சஞ்சாரம்

செய்வதில் அதிகப்பிரியம். எப்பொழுதும் பிரயாணம் செய்து கொண்டேயிருப்பார்.

* * *

ஹைதரின் தர்பார் ஆடம்பரமாக இருக்கும் என்று சொல்லப்பட்டதே தவிர, ஹைதர் தம்முடைய உடையில் மிகுந்த சாதாரண மனிதனாகவே இருந்தார். ஆடம்பர மற்ற உடைகளையே அணிவார். இவர் தலையில் அணிந்து கொண்டிருந்த தலைப்பாகையானது சிவப்பு அல்லது ஊதா வர்ணத்தில் இருக்கும். இந்தத் தலைப்பாகை நூறுமுழுநீளம் இருக்கும். இவர் சிம்மாசனத்தில் ஏறி உட்காரும் போது வைரக்கற்கள் பதித்த பிடிகொண்ட ஒரு சிறு கத்தியாவது, ஈட்டியாவது இவர் எதிரே இருக்கும்

* * *

ஹைதர் யுத்த வீரர்களிடத்தில் அதிகப் பிரீதியுள்ளவர்களாக இருந்தார். அவர்கள் விஷயத்தில் மிகுந்த தாராளமாகவும் நடந்து கொண்டார். அவர்கள் எச்சாதியினராயினும், எம்மதத்தினராயினும், யுத்தகளத்தில் காட்டும் வீரத்துக்குத் தகுந்தபடி அவர்களைப் பாராட்டியும் கௌரவித்தும் வந்தார். இங்ஙனமே, வியாபாரிகள், ரொக்க வியாபாரிகள் முதலியவர்கள் எப்பொழுதும் சந்தோஷமாகவே இருக்கும்படிசெய்து வந்தார். அவர்களுக்கு அடிக்கடி சன்மானங்கள் கொடுத்து வந்ததுடன், அவர்களுடைய சாமான்களையும், நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொள்வார். இங்ஙனமே குதிரை வியாபாரிகளுக்கும், அவர்களுடைய குதிரைகளைத் தகுந்த விலை கொடுத்து வாங்கிக் கொள்வதைத் தவிர, அவர்களுக்கு வேண்டிய சன்மானங்களையும் கொடுப்பார். அவர் இராஜ்ய வழியாக, குதிரை வியாபாரிகள் குதிரைகளை ஓட்டிக் கொண்டு செல்லும் போது, அகஸ்மாத்தாக ஏதேனும் ஒரு குதிரை இறந்து விட்டால், எந்த ஜில்லாவில் இந்தக்குதிரை இறந்து போயிற்றோ அந்த ஜில்லா அதிகாரியின் அத்தாட்சிப் பத்திரத்துடன் இறந்து போன குதிரையின் வாலையும், பிடரி மயிரையும் எடுத்து அனுப்பினால், அக்குதிரையின் விலையில் பாதியை ஹைதர் கொடுத்துவிடுவார்.

* * *

முஸல்மான்களில் ஷியாக்கள் சுன்னிகள் ஆகிய இருதரப்பாரும் சண்டையிட்டுக் கொள்வதை ஹைதர் வெறுத்து, அங்ஙனம் சண்டையிட்டுக் கொள்பவர்களைக் கண்டித்து வந்தார். ஹைதர் ஆகாரத்திலும் மிதமுள்ளவராகவே இருந்தார். உப்பு புளிப்பு இவை சேர்ந்த வஸ்துக்களில் அவருக்கு அதிகப் பிரியம். தித்திப்பு அதிகமாகப் பிடிப்பதில்லை. இராக்காலங்களில் அரிசிச் சோறும், பட்டாணியும் சாப்பிடுவார். ஹைதருக்குக் கோபம் வந்து விட்டால், யார்மீது கோபித்துக் கொள்கிறாரோ அவனைப் பார்த்து 'லௌண்டிகன்' என்று அழைப்பார். லௌண்டிகன் என்றால் 'அடிமைப் பிள்ளை' என்று அர்த்தம். ஆனால் இதே பதத்தை தமக்குப் பிரியமாயுள்ளவர்களிடத்திலேயும் உபயோகிப்பார்.

* * *

யுத்தத்துக்காகப் படைகளை

அனுப்பினால், அந்தப் படைகளைப் பற்றி, ஹைதர் எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார். அப்படைக்கு வேண்டிய பணம், சாமான்கள், உணவுப் பொருள்கள் முதலியவற்றை வேண்டியபோது தாமதம் செய்யாமல் அனுப்பி வருவார். மைசூர் இராஜ்யத்தின் பல பாகங்களிலும் கோட்டை கொத்தளங்கள் கட்டுவதில் ஏராளமான பணம் செலவழித்தார். ஹைதருடைய ஆட்சிக் காலத்தில், அவருடைய இராஜ்யத்தில் கொள்ளை, களவு முதலிய ஒன்றும் நடைபெறும விருந்தன. அப்படி ஏதேனும் கொள்ளை நடந்தால், அப்பிரதேசத்துக் காவற்காரன் உத்தியோகத்தினின்று நீக்கப்பட்டு அவனுக்குப் பதிலாக ஆண்டவனிடத்தில் பயபக்தி யுடையவனும், இளகிய மனதுடைய வனுமான ஒருவன் நியமிக்கப்படுவான். தசரா காலத்தில், பத்து நாட்களும் தர்பார் நடத்துவார். அப்பொழுது, மைசூர் ஹிந்து மன்னருடைய பரம்பரையினரை வரவழைத்து அவர்களிட மிருந்து மரியாதை பெற்றுக் கொள்வார். அந்தத் தசரா பத்து நாட்களிலும் தர்பாரின் போது, யானைச் சண்டை, மல்யுத்தம், வாண வேடிக்கை முதலியன நடைபெறும். துப்பாக்கிப் பிரயோகத்தில் குறி பார்த்துச் சுடுவதில் ஹைதர் மிகுந்த சமர்த்தர். சில சமயங்களில் தசரா தர்பாரின்போது ஒரு சதுக்கமமைத்து அதற்குள் ஒரு வாழை மரத்தை நட்டு, ஒரு புலியையோ அல்லது சிங்கத்தையோ அதில் பிரவேசிக்கச் செய்து, அதனுடன் யுத்தம் செய்யும் படி பலமுள்ள வீரனை விடுவார். மேலே குறிப்பிட்ட வாழை மரத்தைச் சுற்றிச் சுற்றியே அம்மிருகத்துடன் யுத்தம் செய்யும்படி அம்மனிதனுக்கு உத்தரவு இருக்கும். அந்த மனிதன், தன்னுடைய வீரத்தினாலும் தைரியத்தினாலும், அம்மிருகத்தைவென்று விட்டால் அவனுக்கு ஏராளமான சன்மானங்கள் கிடைக்கும். அதற்குப் பதிலாக, அக்கொடிய மிருகமானது, அவனைக் கொன்று விடும் என்று தெரிந்தால், உடனே, ஹைதர், தம் துப்பாக்கியெடுத்துக் குறி பார்த்துச்சுட்டு, அம்மிருகத்தைக் கொன்று விடுவார். மனிதன் எவ்வித காயமுமின்றி வெளிவந்து விடுவான்.

ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் மைசூர் ராஜ்யத்தை நிருவாகம் செய்து வந்தபோது, ஸ்ரீரங்கப்பட்டணம், மேற்படி ராஜ்யத்தின் தலை நகரமாயிருந்தது. இதில் இப்பொழுது திப்புவின் அரண்மனை, 'தர்யா தௌலத்' என்ற கோடை கால வாசஸ்தலம், 'கும்பஸ்' என்கிற ஹைதர், திப்பு இவர்களின் அடக்க ஸ்தானம் முதலியன இருக்கின்றன.

மனிதனுடைய வருங்கால வாழ்க்கை எப்படி இருக்கும்?

—ச. முனிஸ்வாமிப் பிள்ளை

பௌதிக சாஸ்திரிகளுள் ஒருவரான புரொபஸர் ஏ. எம். லோ என்பவர் தாம் எழுதியுள்ள 'வருங்காலம்' என்ற ஆங்கிலப் புத்தகத்தில் பின் வருமாறு கூறுகிறார்—

வருங்கால வாழ்வைப் பற்றி நான் கூறுவன அடிப்படையும் ஆதாரமுமற்ற கனவென நினைக்காதீர்கள். நவீன நாகரிகம் இதுகாறும் அடைந்துள்ள பலவித மாறுதல்களையும் மிக ஆழ்ந்து யோசித்தே நான் வருங்கால வர்த்தமானத்தைச் சொல்லுகிறேன்.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர்தான் கம்பி யில்லாத தந்தியைக் கொண்டு கொஞ்ச தூரமே பேச முடிந்தது. ஆனால் இப்பொழுது அது அளவற்ற தூரம் செல்லக்கூடியபடி ஆச்சரியமான விதமாய் மாறுதலடைந்திருப்பதைக் கவனியுங்கள். இப்பொழுது சந்திர மண்டலத்திற்கும் பூ மண்டலத்திற்கும் உள்ள எல்லா வித்தியாசங்களையும் ரஸாயன பண்டிதர் கண்டு பிடித்திருக்கின்றனர். ஆச்சரியம் பயக்கத்தக்க விஷயங்கள் பல மேன் மேலும் இப்பொழுது நடந்து வருகையில் அடுத்த நிமிஷத்திலோ அல்லது வருடத்திலோ நடக்கவிருப்பதை நாம் ஆச்சரிய மென்றோ ஆகாத காரிய மென்றோ எப்படிக் கூற முடியும்?

மனிதன் ஓய்வு கொண்டு உறங்கும் நேரம் வீணாக உபயோகமின்றிக் கழிக்கப்படுகிறதே யன்றோ? ஈயும் எறும்பும் ஒருபோதும் தூங்குவதில்லை. அப்படி யிருக்கும்போது மனிதன் மட்டும் ஏன் தூங்க வேண்டும்? அதிக உழைப்பினால் தளர்ந்து போயிருக்கும் தனது அவயவங்களுக்கு ஓய்வு கொடுத்து, தான் எழுந்தவுடன் ஊக்கத்துடனும் புதிய சக்தியுடனும் எழுந்திருக்க வேண்டு மென்றன்றோ மனிதன் உறங்கச் செல்லுகிறான்? நமது தேகத்திலுள்ள சக்தி ஒருவிதமான மின்சார சக்தி யென்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். ஆகவே இச்சக்தி தளர்வடைந்த போதிலும் புது ஊக்கத்துடன் கூடிய சக்தியை வேறு வழிகளால் பெற மனிதனுக்கு மார்க்கம் ஏற்பட்டு விடுமாயின் அவன் ஒரு தினத்தின் மூன்றில் ஒரு பங்கைத் தூக்கத்தில் செலவழிக்க வேண்டி யிராதன்றோ? இவ்விதமான புது உணர்ச்சியையும் ஊக்கத்தையும், நம்மிடம் எப்பொழுதும் உண்டாக்கிக் கொண்டிருக்குமாறு அதற்குத் தக்க

விதமாய் நமது ஆடைகளும் எதிர்காலத்தில் அமைக்கப்படும்.

தற்போது முகத்தில் மயிரிருந்தால் அதனை அவலட்சணமெனக் கருதும் ஸ்திரீகள் இப்பொழுதிருந்து ஆயிரம் வருடங்கள் கழிந்த பிறகு தங்கள் தலையில் மயிரிருப்பதையும் அங்கபங்கமென்றெண்ணுவர். எதிர்காலத்தில் ஆண் பெண் இருபாலாரும் வழுக்கைத் தலையராயிருப்பர். சுமார் இருநூறு முன்னூறு வருடங்களுக்கு முன்னர் இருந்ததைவிடத் தற்பொழுது நம்முடைய மயிர் மெல்லியதாயும் மிகக் குறைவாயுமிருப்பதே இதற்கு அத்தாட்சியாகும். மனிதன் ஆதியில் தனது சரீர முழுதும் ரோமமே நிறைந்த மர்க்கடமாயிருந்தான் என்பது சிலர் அபிப்பிராயம். அதன் பிரகாரமே பார்ப்போமானால் தற்போது மனிதன் தேகத்தில் அடியோடு மயிரில்லையே? எப்படிக் காலக்கிரமத்தில் தனது தேகத்திலுள்ள மயிரை இழந்து விட்டானோ அங்ஙனமே இன்னும் கொஞ்ச காலத்தில் அவனது தலையிலுள்ள மயிரும் அடியோடு மறைந்து போக, ஆண் பெண் ஆகிய இருவகையினரும் தலைமயிரின்றி இருப்பர் என்று கூறலாமல்லவா?

எதிர்காலத்திய கடிகாரங்கள் இருபத்து நான்குமணி நேரத்திலிருந்து நாற்பத்து நான்குமணி நேரம் வரையில் மாற்றக்கூடிய சீதோஷ்ண ஸ்திதியின் மாறுதலை மிகச்சரியாக முன்னடியே காண்பித்து விடும். இருந்த போதிலும் மனிதன் அப்பொழுது சீதோஷ்ண ஸ்திதியின் மாறுதலைப் பற்றிக் கொஞ்சமேனும் கவலை கொள்ளான். ஏனென்றால் அப்பொழுது சீதள மற்றதும் சுகாதாரத்திற்கேற்றதுமான சீதோஷ்ணமே எப்பொழுதுமிருக்கும்.

செயற்கையாக உண்டாக்கப்படும் சூரிய வெளிச்சமே போன்ற வெளிச்சத்தில், இயற்கையான சூரிய வெளிச்சத்தில் மட்டுமே சொஸ்தமாகக் கூடிய வியாதிகள் பல இது காறும் குணமடைந்திருக்கின்றன. ஆயிரம் வருடங்கள் கழிந்த பின்னர் சூரிய வெளிச்சமும், வெப்பமும் எப்பொழுதும் வீசும்படியான செயற்கை வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருஷம் முழுமையும் ஆரோக்கியமான சீதோஷ்ணமே நிறைந்திருக்குமாறு ஏற்பாடுகள் செய்யப்படும்.

பனியாலும் பனிக்கட்டியாலும் மூடப்பெற்ற அதிக குளிர் தேசங்களான வடதென் துருவங்களுக்கும் செயற்கை உஷ்ணம் வீசப்பட்டு மனிதர் சுலபமாய் வசிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். அதனால் அவ்விடங்களில் ஜனசங்கியை அதிகமாகும். இதேமாதிரி அதிக உஷ்ணம் பொருந்திய பாலை வனங்களில் மின்சார சக்தியைக் கொண்டு மழை பெய்வித்து அப்பாலை வனங்கள் பலன் தரும் பூமிகளாக்கப்படும்.

வருங்காலத்திய மனிதன் தான் உணவு உட்கொள்ள வேண்டுமானால், மின்சார விளக்கு எரிய ஒரு பொத்தானை அழுத்துவதேபோல, ஒரு பொத்தானை அழுத்துவான். மறு நிமிஷமே அவன் விரும்பிய உணவு குழாய்களின் வழியாய் அவன் வாயை அடையும். இங்ஙனம் எல்லோருக்கும் உணவு அளிக்குமாறு ஒரு இடத்தில்

அதிகமாகச் சேகரம் செய்யப் பட்டிருக்கும்.

தவிர ரஸாயன பண்டிதர்கள் எதிர் காலத்தில் பயிர்களை மின்சார சக்தியின் வாயிலாக அதி சுலபமாயும் செழிப்பாயும் சீக்கிரத்தில் வளரச் செய்வர். இரவும் பகலும் பயிர்கள் வளர்ந்து கொண்டே யிருக்குமாதலால் வருஷத்தில் இப்பொழுது விளைவதைப்போல் இரண்டு மடங்காக இரண்டு போகங்கள் விளையும். ரஸாயன முறைகளின் மூலமாக ஏற்கனவே பயிர்கள் பதினாறடி உயரம் வளர்க்கப்பட்டிருப்பதே இதற்கு அறிகுறி. இத்தகைய ஆச்சரியமான விஷயங்கள் இப்பொழுதே நிகழ்வதால் எதிர் காலத்தில் பின்னும் ஆச்சரியமான சம்பவங்கள் என்னென்ன நிகழுமோ?

உலகப் போக்கை அறிய நாம் இக்காலத்தில் தினசரி வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிக்கிறோம்; ஆனால் எதிர்காலத்தில் மனிதர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். ஒரு குமிழியைச் சுற்றுவதால் உலகத்தின் எப்பாகத்தில் நடப்பதென்பதையும் வருங்காலத்திலிருக்கும் மனிதன் கண்ணாரக் காணவும் காதாரக் கேட்கவும் முடியும். தூர தரிசனம் நாளுக்கு நாள் அதிகமாகி வருவதால் எதிர் காலத்தில் மனிதர் உலகப் போக்கை படிக்க பத்திரிகை அவசியமில்லையென்றும், தாங்களே எல்லாவற்றையும் கண்டு கேட்கவும் முடியுமென்றும் கூறுவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

இக்காலத்தில் மனிதனை அதிகமாய் அவஸ்தைப்படுத்தும் வியாதிகள் பல எதிர்காலத்தில் அதிசுலபமாய் அதி சீக்கிரத்தில் சொஸ்தம் செய்யப் படும்.

மேல்கூறிய விதமாக புரொபஸர் லோ தமது புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

இவர் கூறியிருப்பவை அனைத்தும் நமக்கு ஆகாத காரியங்களென்றோ ஆச்சரியமான ஆகமங்களென்றோ தோன்றலாம். ஆனால் நாளுக்கு நாள் அதி அற்புதமான விஷயங்கள் நம் கண் முன்னமே பிரத்தியட்சமாய் நிகழ்வதால் நாம் இவற்றை உண்மை என்றே நம்ப வேண்டியிருக்கிறது.

எந்தச் சம்பவங்களும் எவ்வளவு விநோதமாயும், அசம்பாவிதமாயும் ஆச்சரியமாயும் மாறிய போதிலும் அவை யனைத்தையும் எங்கும் நிறைந்துள்ள எம்பெருமானது திருவிளையாடல்களென்று கூறுவதைத் தவிர நாம் வேறு என்னென்று சொல்ல முடியும்?

இதயமும் அறிவும் ஒத்துழைத்தாலன்றி, அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படும் எந்தக் காரியமும் கோரிய பலனைக் கொடாது.

மஹாத்மா காந்தி.

'ஜோதி' ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா எழுதியவை.

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—6.

கமால் அத்தா துர்க்

விலை ரூ. 1-8-0

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—7.

பாலஸ்தீனம்

விலை 8 அணு.

பல ஐரோப்பிய யாத்ரீகர்களும், இலக்கிய கர்த்தாக்களும் ஆங்கிலத்தில் கமாலின் சரிதையை எழுதி யிருக்கிறார்கள். ஆனால், தமிழில் இதுதான் கமாலைப் பற்றி நல்ல ரீதியில் எழுதப்பட்டுள்ள முதல் புத்தகம். எளிய, உணர்ச்சி நிரம்பிய தமிழ் பாஷையில் எல்லோரும் புரியக் கூடிய விதமாக ஸ்ரீ சாமிநாத சர்மா கமாலின் கதையைச் சொல்லுகிறார். இன்றைய இந்தியாவின் அடிமைத்தனத்தை ஓட்டி வீரத்தை அளிக்க உதவும் நூல்களின் ஜாபிதாவில் இதுவும் சேர்க்கப்பட வேண்டும்—ஹனுமான்,

ஸ்ரீ சர்மாவின் மற்ற வெளியீடுகளுள் அத்தா துர்க்கைப் பற்றியதே மிகச் சிறந்தது எனலாம்—கலைமகள்.

புத்தகத்தைப் படித்தால் மகா அலெக்ஸாந்தர் காலம் முதல் அராபிய துருக்கியில் ஒரு பகுதியாயிருந்த வரையில் இந் நாட்டின் கதி இப்படியே இருந்து வந்திருப்பதைக் காணலாம். மகா யுத்த சமயத்தில் துருக்கிக்கு எதிராக அராபியர்களை பிரிட்டிஷ்காரர் தூண்டியதிலிருந்தும் அரபு நாடுகளுக்கு சுதந்திரமளிக்கப்படும் என்று ஸர் மக்மோஹன் கூறியதிலிருந்தும் தங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என பாலஸ்தீன அராபியர்கள் நம்பி ஏமாந்த கதையை ஆசிரியர் ஸ்ரீ சர்மா அழகாக வர்ணிக்கிறா—ஹிந்துஸ்தான்.

திரு சர்மா அவர்களால் எழுதப்பட்டுள்ள மற்ற புத்தகங்களைப் போன்றே இதுவும் சிறந்து விளங்குகிறது. பாலஸ்தீனத்தைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாத சந்தர்ப்பம் இதுவே யாகும். இப்புத்தகம் ஒன்பது பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பாலஸ்தீனத்தின் தற்கால நிலைமையை உள்ளங்கை நெல்லிக்கனியாக விளக்கி நிற்கிறது. அரசியல் உலகில் ஆர்வமுற்று நிற்கும் தமிழ் மக்கள் உணர்ச்சியை எழுப்பும் இந்நூலைப் படிக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர்—குமரன்.

பிரபஞ்ச ஜோதி வரிசையில்.	ரூ. அ. ப.
1— முஸோலினி	1—4—0
2— அபிசீனிய சக்ரவர்த்தி	0—8—0
3— ஹிட்லர்	2—4—0
4— ஸ்பெயின் குழப்பம்	0—10-0
5— ஜெக்கோ ஸ்லோவேகியா	1—0—0

கிடைக்கும் இடங்கள்:—

1. சென்னை 'சண்டே டைம்ஸ்' புக்ஸ்டால்கள்
2. பாரதி பிக்சர் பாலேஸ், காரைக்குடி.
3. சுதேசி நிலையம். 38, மார்க்கெட் ஸ்ட்ரீட் சிங்கப்பூர்.
4, P. சிவகுரு பிரதர்ஸ், தபால் பெட்டி 225, கோலாலம்பூர்.
5. வேதம் கம்பெனி, மொகல் தெருவு, இரங்கூன்.

பாரத பந்தர், புத்தக வியாபாரிகள்,
47, 31வது வீதி, இரங்கூன்.

கலப்பற்றது

அறுசுவை உண்டிக்கு அவசியமானது.

ரோஜா மார்க்கு

அசல் அன்ன சுத்தி

சுத்தம் புதிய வெண்ணெயில் உத்திர வாதத்துடன் கைபடாமல் தயாரிக்கப்பட்டது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்.

நிகரற்றது

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

பர்மா சோல் ஏஜெண்டுகள் :—

வேதம் அண் கோ.,

89, முகல் வீதி, ரங்கூன்.

விலையோ சரசம்!
வாடையோ அதி உன்னதம்!!
பேயர் பெற்றதோ அதிகம்!!!

அது யாது?

மேல் நாட்டு பிரன்ச் சென்டுகளில், வாடையிலும், பெயராலும், விலையிலும், சிறு பிள்ளைகள் முதல் வயோதிகர் வரை நன்குணர்ந்த செட்டியார் மயில் மார்க்கு சென்டுகளை உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

குறிப்பு:—மயில் மார்க்கும் செட்டியார் என்ற பெயரையும் கவனித்து வாங்கக் கேட்டுக் கொள்கிறோம்.

சிங்கப்பூர், பினுங், முதலிய மலாய் பிரதேசங்களுக்கும் பர்மாவைச் சேர்ந்த ஜில்லாக்களிலும் தக்க திறமையுள்ள ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரத்துக்கு எழுதவும்.

பர்மா சோல் ஏஜண்டு:—

பெங்களூர் அகர்பத்தி வாசனை சாலை,

119 மொகல் வீதி, இரங்கூன்.